030365

ORIENTAL RESEARCH INSTITUTE
LIBRARY

ACCESSION No. 1586/2
(365)

CALL No. T 24.073/K37

SRI VENKATESWARA UNIVERSITY
TIRUPATI

திருவள்ளுவர்

365

அல்லது

வாழ்க்கை விளக்கம்

1586/2

மு. வரதராசன்

(தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி;
மொழிநூல், தமிழ் நெஞ்சம் முதலியவற்றின் ஆசிரியர்)

வெளியிடும் விற்பனையும் :

பொதிகைப் பதிப்பகம் லிமிடெட்

கடலூர், என். டி.

ரூ.

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1948

உரிமை ஆசிரியர்க்கு

1586/2

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை (P. I. C. M. S. 115)

அணிந்துரை

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'—திருமூலர்.

திருவள்ளுவர் பிறப்பு வளர்ப்பு முதலியவற்றைப் பற்றிய உண்மை வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. அவரது வரலாறு பலவாறு பகரப்படுகிறது. இந்நாளில் வழங்கிவரும் அவர்தம் வரலாறுகளெல்லாம் புனைந் துரைகளே. திருவள்ளுவர் தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்தவர் என்பதும், இல்வாழ்க்கையில் நின்று ஒழு கினவர் என்பதும், மக்களை ஈன்றவர் என்பதும், தெய்வப் புலவர் என்பதும், அறவோர் என்பதும் அவர் அருளிய நூலால் இனிது விளங்குகின்றன.

நாடும் நூலும்

திருவள்ளுவர் தமிழ் நாட்டில் தோன்றியவர்; திருக் குறள் என்ற நூலை யாத்தவர். இங்கே அவர் தோன்றிய நாட்டுக்குச் சிறப்பளிப்பதா? அல்லது அவர் யாத்த நூலுக்குச் சிறப்பளிப்பதா? நூலுக்குச் சிறப்பளிப்பதே சால்பு. ஏன்? திருக்குறள் தமிழ்நாட்டுக்கு மட்டும் பயன்படுவதாய் அமையவில்லை. அஃது உலகுக்குப் பயன் படுவதாய் அமைந்துள்ளது. நாட்டினும் உலகம் பெரி தன்றோ?

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை ஈன்ற பெருமை தமிழ் நாட்டுக்கு உண்டு. இது குறித்துத் தமிழ் மக்கள் இறும்பூதெய்தலாம்; இறுமாப்படைய லாம். ஆனால் திருவள்ளுவரைத் தமிழ் நாட்டளவில் கட்டுப்படுத்தலாகாது. அது தளையாகும்; சிறையாகும்.

உலகுக்கென்று ஒரு நூலை அளித்த ஒருவரை உலகவர் என்று கோடலே சிறப்பு. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து - வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று பாரதியார் பாடியதும் ஈண்டுக் கருதற்பாலது.

உலக நூல்

திருவள்ளுவர் நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற முப்பாலால் ஆக்கப்பட்டது. அறமும் பொருளும் காதலும் ஒரு வகுப்பார்க்கோ, ஒரு மதத்தார்க்கோ, ஒரு நிறத்தார்க்கோ, ஒரு மொழியார்க்கோ, ஒரு நாட்டார்க்கோ உரியன அல்ல. அவை மன்பதைக்கு - உலகுக்குப் - பொது. திருக்குறளில் - எழுவாய் முதல் இறுவாய் வரை - உலகு என்னுஞ் சொல்லும், பொதுமைப் பொருளுணர்த்தும் சொற்களும் சொற்றொடர்களும் தக்க இடங்களில் திகழ்கின்றன. இன்னோரன்ன குறிப்புக்கள், திருக்குறள் உலக நூல் என்பதை வலியுறுத்துவன.

தமிழ்நாடும் உலகமும்

திருவள்ளுவர் தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்த காலத்தில் தமிழ் நாடு உலகுடன் தொடர்பு கொண்டிருந்ததா? இல்லை; பெரிதும் இல்லை. அக்காலத்தில் தமிழகத்தில் அவர் வாயிலாக உலக நூல் ஒன்று எவ்வாறு மலர்ந்தது?

நாம் வாழும் இவ்வுலகம் தோன்றிச் சுமார் இருநூறு கோடி ஆண்டுகளாயின. முதல் ஒரு நூறு கோடி ஆண்டு, இவ்வுலகம் அழற்பிழம்பாய், அனலாவியை உமிழ்ந்து கிடந்தது. பின்னே அது படிப்படியே தணியத் தொடங்கிற்று. அனல் தணிந்து தணிந்து, இதுபோழ்து ஏறக்குறைய நாற்பது கல் தொலைவில் கனன்றுகொண்டிருக்கிறது. தணிவு உற உற, ஆங்காங்கே, அனல்

நின்று நின்று, வெம்மை அலைகளைக் கொழித்துச் சென்றது. அலைகள் யாண்டும் ஒரே விதமாகக் கொழிக்கவில்லை ; சில இடங்களில் வன்மையாய், சில இடங்களில் மென்மையாய், சில இடங்களில் இடைமையாய்க் கொழிக்கலாயின. வன்மை மென்மை இடைமைக் கேற்ற வண்ணம் நிலத்தில் தட்ப வெப்பம் தவழும்.

அனல் முதல் முதல் தணியத்தொடங்கிய இடம் தமிழ் நாடு. இஃது ஆராய்ச்சியாளர் கண்ட உண்மை. தமிழ் நாட்டின் தட்ப வெப்ப நிலையோ வன்மையதும் அன்று ; மென்மையதும் அன்று ; இடைமையது. தமிழ்நாட்டின் முதன்மைத் தணிவும் தட்ப வெப்ப நிலையும் அதைப் பல வழியிலும் பண்படுத்தின. அதனால் தமிழ் நாட்டின் பண் பாடு தொன்மையதாயிற்று. முதன்மையும் தொன்மையும் வாய்ந்த பண்பாட்டில் உலக வாழ்க்கைக் கூறுகள் கருக் கொண்டன. கருக்கொள்ளல் இயல்பு. அக்கரு, தெய்வப் புலவராகிய திருவள்ளுவருக்குப் புலனாயிற்று. ஆகவே, அவர்பால் உலக நூல் ஒன்று மலர்ந்ததென்க.

திருக்குறளின் உயிர்ப்பு

திருக்குறளின் உள்ளக் கிடக்கையைப் பலபடக் கூற லாம். அவற்றுள் உயிர்ப்பாய் ஒளிர்வது ஒன்று. அஃது 'உலகம் ஒரு குலம்' என்பது.

'உலகம் ஒரு குலம்' என்பது பழந் தமிழர் பண் பாட்டினின்றும் முகிழ்த்த ஒரு பெருங் குறிக்கோள். அக் குறிக்கோள் திருவள்ளுவருள் படிந்து நின்று வளர்ந்து ஒரு சீரிய உலக நூலாயிற்று. அந்நூலின் உள்ளுறை நுண்ணியதாய்ப் பல பேரறிஞரிடம் புகுந்து புகுந்து பலமொழிகளில் பரிணமித்தது. இவ்வாறு திருவள்ளுவர் கருத்துப் பெருகிப் பெருகி, இந்நாளில் விஞ்ஞானத்தில் விராவி மார்க்ஸியமாகவும், தெய்விகத்திற் கலந்து காந்திய மாகவும் பரவியுள்ளது. விஞ்ஞான மார்க்ஸியமும்,

தெய்விகக் காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக் கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நம் நாடு முற்பட்டால் உலகம் நலம் பெறும்.

உயிர்ப்பும் அரண்களும்

'உலகம் ஒரு குலம்' என்னுங் கொள்கை திருக் குறளின் உயிர்ப்பு. திருக்குறள், உயிர்ப்பைமட்டும் புலப் படுத்தும் அளவில் நின்றுவிடவில்லை. உயிர்ப்பு, செவ்விய முறையில் இயங்கிப் பயன்படுதற்குரிய கருவி கரணங்கள், அரண்கள் முதலியவற்றையும் திருக்குறள் வகுத்துள் ளது. அவற்றிடை நுண்மையதாய் இயங்குவது உயிர்ப்பு. உயிர்ப்பை உணர்தற்கு உழைப்புத் தேவை.

அன்பு வித்து

'உலகம் ஒருகுலமாதல் வேண்டும்' என்று பேசுதல் எளிது; எழுதுதல் எளிது. பேச்சும் எழுத்தும் செயலாதல் வேண்டும். செயலை எழுப்ப வல்ல ஒரு கருவி வேண்டும். கருவி உளதா? உளது. அஃது எது? அஃது அன்பு. உலகை ஒரு குலமாக்குதற்கென்று அன்பு இயற்கையில் அமைந்துள்ளது. அவ்வன்பே வித்து. 'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு - என்புதோல் போர்த்த உடம்பு' என்பது திருவள்ளுவர் வாய்மை.

வளர்ச்சி

அன்பு யாண்டு இல்லை? அது யாண்டும் உளது. அன்பில்லாத உலகமே இல்லை. அன்புண்மைக்கு அறிகுறி என்னை? வளர்ச்சி. வளர்ச்சியற்ற உலகம் உண்டு கொல்! இல்லை. மலை, மரம், புள், விலங்கு முதலிய வற்றைக் கொண்ட அஃறிணை யுலகும், மக்களைக் கொண்ட உயர்திணை யுலகும் வளர்ந்தே வருகின்றன.

அவற்றை வளர்க்கும் பண்பு அன்பிடை மருவுகிறது. அன்பு நிகழ்த்தும் வளர்ச்சியே கூர்தல் - உள்ளது சிறத்தல் - (Evolution) என்பது. அன்புக் கூர்தல் புரியுந் திருவிளையாடலை எச்சொல்லால் சொல்வது! எவ்வெழுத்தால் எழுதுவது! கூர்தல்வழியே அன்பு, அஃறிணையுலகை மெல்ல மெல்ல வளர்த்தும், பின்னை அதை உயர்திணையுலகாக்கி விரைந்து விரைந்து வளர்த்தும் வரும் பான்மையை உன்ன ஓர் உள்ளம் போதுமோ

மக்கட் பிறவி

அன்பு விரைந்து பெருகும் வாய்ப்பு மக்கட் பிறவிக்கு உண்டு. அதனால் அப்பிறவி விழுமியதென்று ஆன்றோரால் போற்றப் பெற்றது. மக்கட் பிறவி விழுமியதே. எப்பொழுது? அப்பிறவி தன்மாட்டுக் கெழுமியுள்ள அன்பு வளர்ச்சிக்குரிய வாய்ப்பை நன்முறையில் பயன்படுத்தினுல், அது விழுமியதாகும். இல்லையேல் அது விழுமியதாகாது.

வாழ்க்கைக் கலை

அன்புவழி வாழ்க்கை வளர்தல் வேண்டும். அவ்வழி வளரும் வாழ்க்கையே பண்பும் பயனும் உடையதாகும். பண்பும் பயனும் உடைய வாழ்க்கையே ஒரு கலை. அவ்வாழ்க்கைக் கலை அன்பிலே வளர்ந்து உருக்கொள்வதென்பதை மறத்தலாகாது. வாழ்க்கைக் கலையே மற்றக் கலைகளின் தாயகம்,

திருவள்ளுவர் நெறி

வாழ்க்கைக் கலையை உலகுக்கு உதவினோர் பலர். அவருள் குறிக்கத் தக்க பண்டைச் சான்றோர் ஆதிமனு, அரிஸ்டாட்டல், திருவள்ளுவர் முதலியோர். ஆதி மனுநெறி செவ்வனே செழித்துவந்தது. இடைநாளில் மனு என்ற

பெயரால் தோன்றிய சிலர் பழைய செந்நெறிக்குக் கேடு சூழ்ந்தனர். அவரால் பிறப்பில் உயர்வு தாழ்வு, பெண்ணடிமை, தீண்டாமை, கண்மூடி வழக்கங்கள் முதலியன கற்பிக்கப்பெற்றன. அவை தூறுகளாய்ச் செந்நெறியை மறைத்தன. இவ்வாறு ஆதிமனுநெறி குலைந்தது. அரிஸ்டாட்டல் வழியில் பொறாமை, நாட்டாசை, சுரண்டல், இகல், போர், கொலை முதலிய கொடுமைகள் மலியலாயின. இம் மலிவால் அரிஸ்டாட்டல் வழி இரத்த ஆறாகியது. திருவள்ளுவர் நெறியோ அறத்தை அடிப்படையாக் கொண்டது. அறத்தில் மாசு படிதல் அரிதன்றோ? அதனால், திருவள்ளுவர் நெறி சிதைவுபடவில்லை. அறத்தை அடிப்படையாக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.

அறத்தின் இயல்

திருவள்ளுவர், அறத்தை 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறம்' என்றும், 'அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் - இழுக்கா இயன்ற தறம்' என்றும் விளக்கியுள்ளனர். இஃது ஊன்றி ஊன்றி முன்னத் தக்கது. மனத்தின் முழுத் தூய்மையே அறம் என்பது திருவள்ளுவர் கருத்து.

முறைகள்

மனத்துக்கண் மாசிலா அற நிலையை எய்துதற்குத் திருவள்ளுவர் வகுத்த முறைகள் போற்றற்குரியன. இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்பு முதலிய அதிகார வைப்பு முறைகளை நோக்குக. அவற்றை நோக்க நோக்கத் திருவள்ளுவர் கோலிய அறநெறி புலப்படும்.

அன்பும் அறமும்

இல்வாழ்க்கையாலும், அதன் சார்புகளாலும் அன்பு எழுகிறது. அன்பு மனமாசைக் கழுவுங் கருவியாகிறது.

மனமாசற்ற நிலையே அறம் என்பது. அறத்தை விளங்க வைப்பது அன்பு. இதற்கு விரிவுரை வேண்டுவதில்லை. திருவள்ளுவர் கண்ட நெறி, அன்பால் தெளிவுறும் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. இதை உளங் கொண்டு, திருவள்ளுவர் அருளிய வாழ்க்கைக் கலையில் ஆழ்ந்து நினைத்தால், அஃது அன்புக் கலை - அறக்கலை - என்பது உறுதிப்படும். அக்கலை, உலகை ஒரு குலமாக்குந் தகைமையது என்று சொல்லலும் வேண்டுமோ?

முப்பால் நுட்பம்

திருவள்ளுவர் கலை முப்பாலால் ஆகியது. அவை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்பன. 'உலகம் ஒரு குலம்' என்பதற்குக் கால்கொள்ளும் இடம் காமத்துப்பால். அக்காலுக்கு உரம் அளிப்பது பொருட் பால். இரண்டையும் ஒழுங்கில் இயக்கிக் காப்பது அறத்துப்பால். மூன்றன் குறிக்கோளும் 'உலகம் ஒருகுல மாதல் வேண்டும்' என்பதே.

உரையும் ஆராய்ச்சியும்

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருக்குறளுக்கு உரை கண்டவர் பலர்; ஆராய்ச்சி வேய்ந்தவர் சிலர். உரையும் ஆராய்ச்சியும் காலத்துக்கேற்றவாறு பிறப்பன. இப் பொழுது புது உலகம் பூத்து வருகிறது. அதற்கேற்ற உரையும் ஆராய்ச்சியும் வேண்டும்.

திருக்குறள் ஒரு சுரங்கம்

திருக்குறள் ஒரு சுரங்கம். அஃது அவ்வக்கால உல கைப் புரக்கும் பொருள்களை அவ்வப்போது வழங்கும் பெற்றியது. அதினின்றும் இதுகாறும் அறிஞரால் எடுக் கப்பட்ட பொருள் சிலவே; மிகச் சிலவே. இவ்வேளையில்

திரண்டுவரும் புது உலகமும், இனித் திரளப்போகும் பலவகை உலகங்களும் ஏற்கத்தக்க பொருள்கள் இன்னும் திருக்குறளில் மிடைந்து கிடக்கின்றன. திருக்குறட் சுரங்கம் வற்றாதது.

இந்நூல்

திருக்குறளைப்பற்றிய ஆராய்ச்சிகள் புதுமைப் போர்வையில் இனி வெளிவருவது நல்லது. இப்பொழுது ஒன்று வெளிவந்துள்ளது. அது 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்னும் இந்நூல். இதிலே புது உலக மணங் கமழ்கிறது.

ஆசிரியர்

இத்தகைய நூலை யாத்தவர் வித்துவான் - மு. வரதராசனார், எம். ஓ. எல். ஆசிரியர் வரதராசனாரை யான் நீண்ட காலமாக அறிவேன். அவரை யான் முதல் முதல் பார்த்தபோது அவர்தம் மலர்ந்த விழியும், கூரிய மூக்கும், பரந்த நெற்றியும், நீண்ட முகமும், நிமிர்ந்த பிடரியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. இவை, அறிவுக்கு உறையுளாயுள்ள மூளையின் திறத்தை அறிவிக்கும் புறக்கருவிகள். அவர்பால் யான் அன்று கண்ட இளமை இன்றும் பொலிகிறது. அவர் என்றும் இளைஞராயிருத்தல் வேண்டுமென்பது எனது வேட்கை. கவலைக் காட்சியை அவர் முகம் வழங்குவதில்லை. நல்ல மூளையும், நிலைத்த இளமையும், கவலை காணா முகமும் ஒருவரைச் சிறந்த கலைஞராக்கும் நீர்மையன. ஆசிரியர் வரதராசனார் பெருங் கலைஞராய் நாட்டை நல் வழியில் ஓம்புந் தொண்டராவர் என்று யான் நினைந்ததுண்டு. அந்நினைவு பழுதுபடவில்லை. அவர் இயற்றியுள்ள நூல்கள் நாட்டை நல் வழியில் ஓம்பிவருதல் கண்கூடு.

புரட்சி

புரட்சி - புரட்சி - என்று பேசப்படுகிறது ; எழுதப் படுகிறது. இந்நாளில் புரட்சிக் கூக்குரல் எழாத இடமே இல்லை. உண்மையில் புரட்சி நிகழ்த்துவோர் யார் ? கலைஞர் - கலைஞர் என்று வரலாறு கூறும். தோழர் வரதராசனார் ஒரு கலைக்கழகம்; பொறுமைக்கு உறையுள்; அமைதிக்கு நிலைக்களன். புரட்சி அவர் நெஞ்சில் பொங்குகிறது ; வாயில் வழிகிறது ; கையில் நிகழ்கிறது. தோழர் புரட்சியை இந்நூலில் பரக்கக் காணலாம்.

திருக்குறள் பால்வைப்பைப் பார்ப்போம். அஃது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று வைப்பைப் பெற்றிருக்கிறது. இவ்வைப்பைத் தலைகீழாக்கு கிறார் வரதராசனார். புது உலக மக்களுக்குத் திருக்குறள் ஆராய்ச்சித்துறைகளை எளிமையாக்குதல் வேண்டுமென் பது அவர் கருத்துப் போலும். நூலின் தோற்றுவாயி லேயே புரட்சி வீறுகிறது. புரட்சி, நூல் நெடுகப் புகுந்துள்ளது.

புது உலகம்

வளர்ச்சி இயற்கை. அதைக் கெடுக்கச் சிற்சில தடை கள் குறுக்கிடுவதுண்டு. அத்தடைகளைக் களைந்தெறிய இயற்கை எழுகிறது ; அவ்வெழுச்சி புரட்சியாகிறது ; புரட்சியால் புது உலகம் பிறக்கிறது.

இந்நூலிடை ஆசிரியர் புரட்சி செய்துள்ளார். அப் புரட்சியின் அடியில் அறம் செறிகிறது ; மூர்க்கம் அலற வில்லை. அறப்புரட்சி திருக்குறள் நலத்துக்குத் துணை போவது.

அறப் புரட்சியே புது உலகைப் படைக்க வல்லது. மூர்க்கப் புரட்சி புது உலக எழுச்சிக்குத் தடை

செய்யினுஞ் செய்யும். மூர்க்கப் புரட்சி மூர்க்கத்தையே வளர்க்கும். அது கொள்ளத்தக்கதன்று.

காமத்துப்பால்

திருவள்ளுவர் காமத்துப்பாலை நோக்குவோம்; அதைப் பற்றி ஆசிரியர் வரதராசனுர் நிகழ்த்தியுள்ள ஆராய்ச்சி யுரையையும் நோக்குவோம். என்ன காணப்படுகிறது? பழமையினின்றும் புதுமை அரும்புதல் காணப்படுகிறது.

'காமத்திற் சிறந்தது காதற் காமம்' என்பது ஆன்றோர் மொழி. திருவள்ளுவர் காமத்துப்பால் காதலை அறிவுறுத்துவது. காதல், அன்பின் இறுதிப்படி. அன்புக்குப் பலதிறப் படிகள் உண்டு. அவற்றுள் காதல் இறுதியது. காதல் பெருகி அன்பின் முழுமையாகும்.

அன்பு எழுச்சிக்கும் நிகழ்ச்சிக்கும் நெகிழ்ச்சிக்கும் சேர்க்கை இன்றியமையாதது. சேர்க்கை இயற்கையின் பாற்பட்டது. தனிமை செயற்கையின்பாற்பட்டது. இயற்கைக் கூறுகளில் எதை ஆய்ந்தாலும், அது சேர்க்கை பெற்றிருத்தல் காணலாம். அணுமுதல் அண்டம்வரை சேர்க்கை பெற்றிருத்தல் வெள்ளிடைமலை. இயற்கை அமைப்பில் சேர்க்கையற்ற இடமேயில்லை. இயற்கை, சேர்க்கையை அறிவுறுத்தும் ஒரு பள்ளி என்று கூறலாம். சேர்க்கை இல்லையேல் வளர்ச்சி ஊக்கம் பெறுது சாம்பும். இஃது இயற்கைச் சட்டம்.

இயற்கையில் பிரிவு இல்லையோ என்று சிலர் கருதலாம். இயற்கையில் பிரிவு உண்டு. அப்பிரிவு நிலைபேறுனதன்று. அது சேர்க்கைக்கு ஆக்கந் தேட நேர்வதாகும். ஊடலைப் பற்றி அகநூல் கூறுவதை ஓர்க.

சேர்க்கை பலவிதம். அவற்றுள் மக்கள் சேர்க்கையே சிறந்தது. மக்கள் சேர்க்கை காதலால் விளைவது; மற்றச் சேர்க்கைகள் காமத்தால் விளைவன. இரண்டுக்கும்

உள்ள வேற்றுமை இந்நூலுள் தெளிவுசெய்யப்பட்டிருக்கிறது.

மிகமிகப் பழைய காலத்தில் ஓர் ஆடவன் பல மகளிரைக் கூடலும், ஒரு மகள் பல ஆடவரைக் கூடலும் நிகழ்ந்துவந்தன. நாளடைவில் பின்னையது அருகியது. முன்னையதை வீழ்த்தத் திருவள்ளுவர் காமத்துப்பாலில் புரட்சி செய்தார். அப்புரட்சி இந்நூலாசிரியர்க்கு நன்கு புலப்பட்டது.

திருவள்ளுவர் புரட்சி சில இடங்களில் பரவியது; இன்னும் பல இடங்களில் பரவவில்லை. அது யாண்டும் பரவுங் காலம் நெருங்கியுள்ளது. ஒருவன் ஒருத்தியுடனும், ஒருத்தி ஒருவனுடனும் வாழ்வதே காதல் வாழ்க்கை என்று காமத்துப்பால் வலியுறுத்துகிறது. இது தோழர் ஆராய்ச்சியில் உள்ளங்கை நெல்லிக்கனியெனப் பிறங்குகிறது.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் ஒருவன் ஒருத்தி காணப்படுகின்றனர். இருவரையுங் காதல் ஒருமைப்படுத்துகிறது. ஒருமை மன இயல், கூறு, தூய்மை முதலியன இந்நூற்கண் விளக்கம் பெற்றுள்ளன. காதல் வாழ்க்கையில் மனம் தூய்மைப்படுவதை ஆசிரியர் பொருந்திய சொற்களால் விரித்துள்ளது மக்களை வயப்படுத்தும். காதற் சேர்க்கைவாழ்க்கை, உலகை ஒரு குலமாக்குதற்குரிய விதை. சேர்க்கைவாழ்க்கை இல்லையேல் உலகம் ஒரு குலமாதல் அருமை. இயற்கைஅன்னை உலகை ஒரு குலமாக்க முனைந்தே நிற்கிருள். அவள் முனைந்தும் உலகம் ஏன் இன்னும் ஒரு குலமாகவில்லை? காரணம் உலகில் சில இடங்கள் தனிமைவாழ்க்கைக்கு இரையாவதேயாகும். இஃது உலக வளர்ச்சியைத் தடைசெய்கிறது. தனிமை வாழ்க்கை தேக்கமுறுவது; அன்பை அடைப்பது. உலக வளர்ச்சிக்குத் துணைபோவது

சேர்க்கை வாழ்க்கையே. இவ்வாழ்க்கை காமத்துபபாலின் உள்ளுறை; சாரம்.

பொருட்பால்

பொருட்பாலில் உற்றுள்ள புரட்சி பெரிது. அரசு, கல்வி, உழவு முதலியன பொருட்பாலின் அணிகள். அரசின் உறுப்புக்கள் பல. அவற்றுள் ஒன்று போர்க்களன். அரசில் போர் இடம்பெறல் இயல்பு. திருவள்ளுவர் அரசிலும் போர் இடம் பெற்றுள்ளது? எப் போர்? கொலைப்போரா? வேறு?

திருவள்ளுவர் போரின் நுட்பங் காண இந் நூலாசிரியர் நெஞ்சம் விரைகிறது. விரைவு புரட்சியாகிறது.

திருவள்ளுவர் போரில் கொலைக்குறிப்பில்லை என்றும், இரத்தங் காணப்படவில்லை என்றும், அப் போர் மன்றப்போரை அதாவது கருத்துப்போரை உணர்த்துவது என்றும் ஆசிரியர் நெஞ்சம் நினைக்கிறது. அந்நெஞ்சம் வாழி!

வளர்ச்சிக்கு மன்றப்போர் என்னுங் கருத்துப்போர் தேவையே. அப்போர் பெருகப் பெருக உண்மை விளங்கிக்கொண்டேபோகும். உண்மை விளக்கம் உலகை ஒரு குலமாக்கும் வல்லமை வாய்ந்தது. மன்றப்போர் இல்லையேல் ஒருவர் கருத்துக்கு உலகம் பலியாகும்.

ஆசிரியர் வரதராசனார் திருவள்ளுவர் சுரங்கத்தில் பன்முறை மூழ்கி மூழ்கிப் பலதிற மணிகளைத் திரட்டிக் கொணர்ந்தவர். அவரது நெஞ்சம் திருவள்ளுவர் நெஞ்சுடன் உறவாடி உறவாடிப் பண்பட்டது. அந்நெஞ்சினின்றும் அரும்பும் கருத்துச் சிந்தனைக்குரியதே.

புது உலகம் கொலைப்போரைக் கடந்துநிற்கும் என்றும், அவ்வுலகில் தொழிற்சாலைகளெல்லாம் போர்க் கருவிகளை வடியா என்றும், மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான உற்பத்திகளை உதவும் என்றும் இக் காலத்

தில் புது உலகம் படைக்கப் பிறந்த அனைவரும் ஒருமுக மாக உரைத்துச்சென்றனர். இப்போரற்ற உலகம், பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே திருவள்ளுவர் நெஞ் சில் வடிவுபெற்றதென்று இந்நூலாசிரியர் நெஞ்சம் எண்ணுகிறது.

திருவள்ளுவர் காலத்தில் மன்னராட்சி நடைபெற் றது. அவ்வாட்சியைக் கண்ட திருவள்ளுவர் கண்ணும் கருத்தும் அதன் அளவில் கட்டுப்பட்டு நிற்கவில்லை. அவர் வாய்மையில் குடியாட்சியும் குலவுகிறது! திரு வள்ளுவர் பெருநோக்கு என்னே! என்னே!

குடியாட்சி பலவிதம். அவற்றுள் பொதுமை அறம் புகும் மக்களாட்சி என்னும் குடியாட்சிமுறையே இக்காலப் போக்குக்கு உரியது. இம்முறை திருக்குறளில் இலைமறை காயென இருத்தலைத் தோழர் வரதராசனுர் எடுத்துக் காட்டுகிருர். பழைய மன்னராட்சி புதிய மக்களாட்சி ஆகிறது! இது புரட்சியன்றோ? இப் புரட்சிக்குத் திருவள்ளுவர் பொருளும் அறமும் இடந்தராமலில்லை.

உழவு அதிகாரப் புலத்தைத் தோழர் அறிவு உழுகிறது; உணர்வும் உழுகிறது. அவ்வுழவு, புது உலகுக்குரிய தொழில் வண்ணமாக அவர் அறிவுக்கும் உணர்வுக்கும் பொருளாகிறது.

பெண்வழிச் சேறல் என்ற அதிகாரம், பழைய உரையாசிரியர்க்கும், ஆராய்ச்சியாளர்க்கும் வழங்கிய காட்சியை இந்நூலாசிரியர்க்கு வழங்கவில்லை. காட்சியே மாறுகிறது. விரிவை நூலிற் பார்க்க.

அறத்துப்பால்

அறத்துப்பால் ஆராய்ச்சியில் காமத்துப்பாலின் நுட்பமும், பொருட்பாலின் உள்ளுறையும் வட்டமிடுகின் றன; மனத்தில் மாசின்மை அதாவது மனத்தூய்மை

எங்கணும் மருவுகிறது; யாண்டும் அகத்திணை - மனே தத்துவம் - தாண்டவம் புரிகிறது.

ஈகை, புகழ் முதலிய அதிகாரங்கள் பழைய உலகைக் கடந்து புது உலகில் இவர்கின்றன. இஃது ஆசிரியர் உழைப்பின் பயன். ஆராய்ச்சி மலியும் இந் நூலில் ஊழ் பாழ்பட்டிருக்குமென்று எண்ணியே அப்பகுதியை விரைந்து விரைந்து பார்த்தேன். யான் எண்ணியவாறு ஊழ் பாழ்படவில்லை; புதுமுறையில் வாழ்வுபெற்றே நிற்கிறது.

வீட்டுப்பால்?

திருவள்ளுவர் வீட்டைப் பற்றித் தனிப்பால் ஏன் அருளவில்லை? இவ்வினு இன்று எழுந்தது அன்று; நேற்று எழுந்தது அன்று; பலப் பல ஆண்டுகளுக்கு முன்னரே எழுந்தது. இதற்குப் பலவகை விடைகளும் அவ்வப்போது பிறந்தே வந்தன. வினுவும் விடையும் பழம்பாடமாயின.

அறம் பொருள் (புறம்) இன்பம் (அகம்) என்று கூறுவது பழந்தமிழர் மரபு. இதற்கு அவர்தம் நூல்கள் இன்றும் சான்றுக நிற்கின்றன. திருவள்ளுவர் அம் மரபையொட்டி வீட்டுப்பாலை விடுத்திருக்கலாம்.

வீடு ஓர் உலகு அன்று. அஃது எல்லையற்றது; வாக்குமனம் கடந்தது. அதை எப்படி நினைப்பது? சொல்வது? அறம் பொருள் இன்ப வழிநின்று ஒழுகினுல் விளைவு வீடாகும். வீடு விளைவு; ஓர் இடமன்று.

திருவள்ளுவர் மனமாசற்ற நிலையை அறம் என்கிருர். அவ்வறத்தின் முழுநிலையே வீடாகும். பாயிரத்தில் திருவள்ளுவர் இறைவனை 'வாலறிவன்' என்றும், 'வேண்டுதல் வேண்டாமையிலான்' என்றும், 'அறவாழி அந்தணன்' என்றும் போற்றியுள்ளார். அச்செம்மொழிகள் 'அறமே இறை' என்பதை உட் கொண்டவை.

வீட்டைப்பற்றிய தனி நூல்கள் பின்னுளில் தோன்றின. அன்றுதொட்டு மக்கள் மனம் பெரிதும் அறம் பொருள் இன்பத்தில் படியாது வெறும் வீட்டிலேயே படியலாயிற்று. அவர்தம் நெஞ்சில் வீடு ஓர் உலகாயிற்று. அதனுல் அறம் பொருள் இன்ப ஒழுக்கத்தின் விளைவு வீடு என்ற உணர்வு சுருங்கியது; அன்பொழுக்கம் குன்றியது; அவா ஆட்சி பெற்றது; போர்கள் பெருகின.

திருவள்ளுவர் கருத்தை விளக்கவந்த இந் நூலாசிரியரும் வீட்டு விரிவில் நுழைந்தாரில்லை. அவர் பாயிரத்தில் பகர்ந்துள்ள மொழிகளை ஆராய்க.

நுரை ஈரல்

திருக்குறள் அதிகாரங்களிற் பலப்பல இந்நூலுள் புரட்சிபெற்றிருக்கின்றன. புரட்சி புதுஉலகை அமைத்தே தீரும்.

இந்நூற்கண் பல இடங்களில் பொதுமையும் மனத் தூய்மையும் மிளிர்கின்றன. இரண்டும் நூலின் நுரை ஈரல்கள் என்று கூறல் மிகையாகாது. இவை 'உலகம் ஒரு குலம்' என்னும் உயிர்ப்பை இயக்குவன.

சில பொருள்கள்

மற்றும், காதலில் மனுநிலை, பொருளால் காதல் வளம் பெறல், காதல் வளம்பெருத இடத்தில் தீக் கலைகள் பெருகிப் பாவங்களை வளர்த்து நட்பு முதலியவற்றைக் குலைத்தல், நல்லுலக அமைப்பு, அரண் வேண்டா அரசியல், தொழில் பொருளின் உயிராக இலங்கல், நகர வாயிலில் சிற்றூர்கள் வாடி நிற்கவேண்டாமை, பண்டமாற்றுல் நன்மையும் பணமாற்றுல் தீமையும் பெருகல், ஒப்புரவின் அடிப்படை, சிக்கனம் அறத்தின் கூறு ஆதல், இன்னுசெய்யாமை உயிர்வளர்ச்சிக்குத் துணைபுரிதல், நெஞ்ச நிலையை அளக்குங் கருவி, பணப்போராட்டம்

மக்களின் மனநலத்தை ஒடுக்கல், உழைப்பு உணவு ஓய்வு பயிற்சி ஆகியவை ஒழுங்குபெறுதலால் அறம் விளங்கல், பொருள் ஒருபால் பெருகி மற்றொருபால் அருகலால் விளையும் கேடுகள் முதலிய வான்பொருள்கள் நூலை அழகுசெய்கின்றன.

மணிமொழிகள்

நூலின் உள்ளம் இனிது புலனாதற்கு ஆசிரியர் மணிமொழிகளில் இரண்டொன்றை அகழ்ந்து ஈண்டுப் பொறிப்பது நலமென்று தோன்றுகிறது. அவை வருமாறு :—

'ஆண் பெண் இருவரின் இரு வேறு மனங்கள் ஒன்று மற்றொன்றில் கரைந்துபோகும் தன்மையைக் காமத்துப்பால் கூறுகின்றது ; கணவனும் மனைவியுமாகிய இருவர் ஒருமனம் உடையவராய் உலக நன்மை கருதி வாழும் தன்மையை இல்லறம் காட்டுகின்றது.'

* * * *

'உடம்பில் உயிர் வாழ்வதற்கு வேண்டிய அளவு கஞ்சிக்கே நாள்தோறும் போராடிக் காலம் கழிக்கின்றவர்கள் அன்பை வளர்ப்பது எங்கே?'

'உலகமெல்லாம் ஒருவனைப் பட்டினியால் வாட்டும் போது, அந்த உலகத்தில் அவன் உள்ளம் குளிர்ந்து வாழ முடியுமோ ?'

'அக்காலத்தில் வாழ்க்கைப்போர் பொதுவாக இருந்தது ; உலகத்திற்குப் பொதுவாகப் பெய்யும் மழையே காரணமாக இருந்தது ; இக்காலத்து வாழ்க்கைப்போர் பெரும்பான்மையான மக்களுடையதாக இருந்தாலும் தனித்தனியாக அமைந்திருக்கின்றது ; சிலரிடமே குவியும் பணம் காரணமாக இருக்கின்றது

* * * *

அண்மைப்புகழ் என்பது ஒருவனைச் சுற்றிவாழும் மக்கள் அவனுடைய நற்பண்புகளையும் நற்செயல்களை யும் அறிந்து புகழ்வது. சேய்மைப்புகழ் என்பது ஒருவ னைச் சுற்றியுள்ளவர்கள் வெறுத்தாலும் பழித்தாலும், தொலைவில் உள்ளவர்கள் அவனுடைய உண்மையான பண்புகளை அறியாமல் சிற்சில செயல்களைமட்டும் அறிந்து புகழ்வது.'

'உண்மையாகவே நல்ல பண்புகளும் நல்ல செயல் களும் நிறைந்த ஒருவருடைய புகழ் அண்மையிலும் பரவி, செல்வாக்கின் காரணமாகச் சேய்மையிலும் பரவு தல் உண்டு. ஆனால் இது மிகச் சிறுபான்மை. பெரும் பான்மையும் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்கக்கேடு முதலிய குறைபாடு மிக்கவர்கள் அவற்றை எல்லாம் செல்வம் செல்வாக்கு வாயிலாக மறைத்துச் செய்தித் தாள்களைப் பயன்படுத்திக்கொண்டு புகழுடையவர்க ளாக விளங்க முடிகின்றது.

இத்தகைய சேய்மைப் புகழைப் புகழ் என்னும் தூய பெயரால் குறிப்பதும் பொருந்தவில்லை. ஆகை யால் விளம்பரம் என்னும் பெயரால் குறிக்கலாம்.'

* * * *

கொலையைக் கடிந்து கூறப் புகுந்த திருவள்ளுவர் கொலையின் காரணம் பலவற்றையும் எண்ணினார். போர் களால் நடைபெறும் கொலைகளை எண்ணினார்; கொள்ளை முதலியவைகளால் நடக்கும் கொலைகளை எண்ணினார்; தனிப்பட்டவகையில் மக்களுக்குள் பகைமூண்டு அதனால் நடக்கும் கொலைகளையும் எண்ணினார்; வயிற்றுப் பசி யைத் தணிக்க உணவு தேடி மற்ற உயிர்களைக் கொல் லும் கொலைகளையும் எண்ணினார்; உயிர் உடனே நீங்கா விட்டாலும் அதற்கு நிகரான துன்பங்களைச் செய்து வருத்தும் கொலைபோன்ற கொடுஞ் செயல்களையும் எண்ணினார். எல்லாக் கொலைகளுக்கும் அடிப்படையில்

ஒரு பெருங் குறை இருப்பதாக உணர்ந்தார். அது என்ன குறை ?'

* * * *

'உலகத்தில் உள்ள விபசாரத்தில் பெரும்பங்கு பொருளுடையவரின் மயக்க வலையில் பொருளில்லாத வறியவர் விழுந்து அகப்பட்டுக்கொள்வதால் நிகழ்வதாகும். * * * வறுமையின் நெருக்கடி தாங்கமுடியாமல் பலர் ஒழுக்கக்கேட்டிற்கு ஆளாகின்றார்கள்.'

* * * *

இயற்கையில் கடவுள் தன்மையைக் கண்டு போற்றுவது உயர்ந்த நெறி. இயற்கையில் அமைந்துள்ள பலவற்றிலும் மழை மிகச் சிறந்தது. உலக வாழ்க்கை இடையறாமல் நடக்கவேண்டிய வகையில் இயற்கையை இயக்கிவரும் ஒரு பெரிய சக்தியை நினைந்து உருகுவதற்கு இது காரணமாக உள்ளது.'

நூலின் பெற்றி

இந்நூல் ஒரு நன்னூல்; புதுமைப் பொதுநூல்; உலகம் ஒரு குலமாகத் துணைசெய்யும் நூல். இதனை உதவிய ஆசிரியர் வரதராசனார் வாழ்க.

காதல் ஓங்க; பொருள் பெருக; அறம் வளர்க; பொதுமைப் புது உலகம் பூக்க; உலகம் ஒருகுலம் ஆக.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'—பூங்குன்றனார்.

திரு. வி. கல்யாணசுந்தரன்

முன்னுரை

திருக்குறள் பலர்க்குப் பலவகையாகப் பயன்படும் சிறப்பு வாய்ந்த தனிநூலாகும். இலக்கிய ஆராய்ச்சி யாளர் அதைச் சிறந்த இலக்கியமாகக் கற்றுக் கலைநயம் காணலாம். அறவோர் சமய நூலெனப் போற்றி ஒழுக்க முறைகளைக் காணலாம். அரசியலார் அரசியல் நூலென மதித்துப் பல நுணுக்கங்களைக் காணலாம். இவ்வாறே ஒவ்வொரு சாராரும் தம் தம் துறைக்கு ஏற்ற கருத்துக் களைக் காணலாம். பொதுவாக வாழ்க்கையை ஆராய்ந்து விளக்கியுள்ள எல்லா நூல்களும் இவ்வாறு பலர்க்குப் பல்வேறு வகையாகப் பயன்படுவனவே ஆகும்.

திருக்குறளை இலக்கியமாகக் கற்றுச் சொற் சுவை பொருட் சுவை முதலியன காணும் வகையில் நூல்கள் வெளிவந்துள்ளன. இவ்வாறே பிறதுறையாளர் தத் தமக்கு வேண்டும் கருத்துக்களைக் காணும் முயற்சியும் உள்ளது. ஆதலின் இந் நூலில் அத்தகைய ஆராய்ச்சி ஒன்றும் செய்யப்படவில்லை. திருவள்ளுவர் வாழ்க்கையை எவ்வாறு ஆராய்ந்துள்ளார், அவர் கண்டு விளக்கிய உண்மைகள் யாவை, அந்த விளக்கங்கள் இன்றைய வாழ்க்கைக்கு எவ்வளவில் பயன்படுவன என்னும் பகுதி களே இங்கு ஒருவாறு எழுதப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர், அவர் இன்றுள்ள வாழ்க்கையை எவ்வாறு விளக்க முடியும் என்று வினவலாம். காலம் மாறினும் உண்மைகள் மாறுவதில்லை. காலத்தின் மாறுதல்கள் உடையின் மாறுதல்களைப் போன்றவை. அடிப்படை உண்மைகள் உயிர்போன்றவை. திருவள்ளுவர், வாழ்க்கை

யின் அடிப்படையாகவும் பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளமையால் பல்வேறு காலத்த வரும் அவற்றைப் போற்ற முடிகின்றது. அவ்வாறு போற்றும்போது தம் தம் காலத்திற்கு ஏற்றவாறு அவற்றை உணர்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழும் நாமும் அவ்வாறு நம் வாழ்க்கையமைப்புக்கு ஏற்றவாறு திருவள்ளுவரைக் கற்று உண்மைகளை உணர முடியும்.

நூல் இருவகை : தன் காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்வது ஒன்று ; நம் காலத்திற்குத் தான் வந்து உதவுவது மற்றொன்று. நூலைக் கற்கும் முறையும் இருவகை; வாழும் காலத்தை மறந்து நூலெழுதிய காலத்திற்குக் கற்பனைச் சிறகு கொண்டு பறந்து சென்று நூற்பொருளைக் கற்பது ஒருவகை. நூலெழுதிய காலம் எதுவாயினும் அதைவிட்டு வாழும் காலத்திற்கே வந்து வழிகாட்டும்படியாக நூலைப் போற்றிக் கற்பது மற்றொருவகை. புலவருலகில் நின்று இலக்கியமாக மட்டும் போற்றப்படும் நூல்கள் முதல் வகையைச் சார்ந்தவை. இரண்டாம் வகை நூல்களோ, எல்லா மக்களுக்கும் பயன்படுவனவாய், ஆட்சிபுரியும் சட்ட நூல்களைவிடச் செல்வாக்கு உடையனவாய், மக்களின் உள்ளங்களே கோயில்களாய் வாழ்வன. திருக்குறள், பகவத்கீதை, கன்பூஷியஸ் நூல், பைபில், குர்ஆன் முதலியன இவ்வகையைச் சார்ந்தவை. இந்நூல்களில் எழுதிய எழுத்துக்கள் மறைந்து நிற்க, அறிவுறுத்தும் சான்றோரே முன்நிற்பர். திருக்குறளை இவ்வகையாகப் போற்றிக் கற்கக் கற்க, திருவள்ளுவர் என்னும் தமிழ்ச் சான்றோர் முன்வந்து வழிகாட்டக் காண்கின்றோம். இதுபற்றியே, திருக்குறளைத் திருவள்ளுவர் என்று வழங்கும் வழக்கும் காணப்படுகின்றது.

பகவத் கீதையைப் பற்றிக் காந்தியடிகள் எழுதும் போது, "இந்த நூலை மூளை கொண்டு கற்காமல் இதயம் கொண்டு உணர வேண்டும்" என்று குறித்துள்ளார். திருக்குறளையும் அவ்வாறே ஓதி உணர வேண்டும் என்னும் அவா நெடுங்காலமாக என்னுள் இருந்துவருகின்றது. அதன் தூண்டுதலால் இத்தகைய முயற்சியில் ஈடுபடலானேன்.

காதலும் பொருளும் வாழ்க்கைப் படிகள், அறமே வாழ்க்கையின் உயர்நிலை என்று விளக்கும் நோக்கத்தால் காமத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் என்னும் முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இங்கு எல்லாக் குறள்களுக்கும் விளக்கம் கூறப்படவில்லை. விளக்கப் பட்டுள்ள குறள்களிலும் இக்காலத்திற்குச் சிறப்பாக ஒளிவீசும் மணிகளுக்குச் சிறப்பிடம் தரப்பட்டிருக்கின்றது. இன்றுள்ள வாழ்க்கைக்கு வந்து நம்மை நாம் ஆராயும்போதெல்லாம் கருத்துவேறுபாடு எழுதல் இயற்கை. ஆதலின் இம் முயற்சியில் காணும் கருத்து வேறுபாடுகளுக்கு இடந் தருமாறும் பிழைகளைப் பொறுத் தருளுமாறும் வேண்டுகின்றேன்.

என் முயற்சிக்கு ஊக்கம் அளித்துத் தமக்கே சிறப்பியல்பான முறையில் இனிய செந்தமிழ் நடையில் அணிந்துரை எழுதி நூலை அணிபெறச் செய்துள்ள பெரியார் திரு. வி. க. அவர்களுக்கு மிகப் பெரிதும் கடப்பாடுடையேன். காகித விலையுயர்வு முதலிய நெருக்கடி ஒன்றையும் பொருட்படுத்தாமல் நூலை வெளியிட்டு உதவிய பொதிகைப் பதிப்பகம் மானேஜிங் டைரக்டர் (கிழக்கு மருதூர் நிலக்கிழார்) திரு. தி. சு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

சேத்துப்பட்டு
15—5—48

மு. வரதராசன்

பொருளடக்கம்

		பக்கம்
அணிந்துரை (திரு. வி. க.)	...	iii
முன்னுரை	...	xxi
காமத்துப்பால்	...	1
பொருட்பால்	...	53
அறத்துப்பால்	...	252

1. காமத்துப்பால்

மக்கள் வாழ்க்கை

உயிர் இயங்கத் தொடங்கியது. இயக்கத்திற்கு உடம்பு வேண்டும் அன்றோ? அவ்வாறு முதல்முதல் அமைந்த உடலில் ஊறு என்னும் உணர்வு ஒன்றே சிறந்துநின்றது. அந்த நிலையில் உயிர் கட்டுண்டே நின்றது; விளையாட முடியவில்லை. இன்றும் அந்த நிலையில் எஞ்சி நிற்கும் உடல்களே புல் பூண்டு செடி கொடி மரம் முதலியவை. இவற்றை ஓர் அறிவு பெற்ற உயிர்வாழ்க்கை என்று பாகுபாடு செய்வது வழக்கம். இத்தகைய உடலால் பயனில்லை என்று கண்டதும், உடலில் மற்றோர் உணர்வும் வளர்ந்தது. அதுவே சுவை யுணர்வு. அதற்காக வாய் அமைந்தது. உலகம் உற்றும் சுவைத்தும் உணரப்பட்டது. அங்கும் குறையே காணப்பட்டது; அந்த நிலையிலும் உயிர் கட்டுண்டே நின்றது; விளையாட்டு நிகழவில்லை. நத்தை இப்பி சங்கு கிளிஞ்சல் முதலியவை அந்த நிலையில் எஞ்சி நிற்பவைகளே. அடுத்த முயற்சியாக உடம்பில் முகரும் உணர்வு வளர்ந்தது. அதற்காக மூக்கு அமைந்தது. அவ்வாறு அமைந்தவைகளே செல், ஈசல், எறும்பு முதலியவை. அங்கும் உயிர் வெற்றி பெறவில்லை; உலகத்தை உணரும் வகை குறைவாகவே நின்றது. மேலும் முயற்சி வளர்ந்தது. உடலில் ஒளியுணர்வு வளர்ந்தது. அதற்காகக் கண் அமைந்தது.

நண்டு, வண்டு, தும்பி, ஈ முதலியவை இந்த நிலையில் தோன்றியவைகளே. இன்னும் குறை தீரவில்லை; ஆகையால் வளர்ச்சி முன்னேறியது. அடுத்தபடியாக உடல் ஒலியுணர்வைப் பெற்று வளர்ந்தது. அதற்காகச் செவி அமைந்தது. விலங்குகளும் பறவைகளும் அவ்வாறு தோன்றியவைகளே. இப்போது உயிர் உற்றும் உண்டும் உயிர்த்தும் கண்டும் கேட்டும் ஆடத் தொடங்கியது. இந்த ஆடலும் கட்டுப்பட்ட ஆடல் தான் என்பதை உணர்ந்ததும், உயிரின் விடுதலை வேட்கை தணியவில்லை. முயற்சி மேலும் முன்னேறியது. இந்த முன்னேற்றத்தின் பயனாகவே உயிர் மனம் என்னும் சிறந்த கருவியைப் பெற முடிந்தது. இந்த மனம் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல ஆற்றலையும்விடப் பேராற்றல் பெற்ற கருவி; உயிரின் கட்டறுத்து வீடு நல்கும் கருவி; உயிர்க்கு விளையாட உதவும் கருவி; உலகப் படைப்பில் மிக மிக உயர்ந்த கருவி.

இந்த மனத்தைப் பெற்றிருந்தும் பண்படுத்தத் தெரியாமல், பயன்படுத்தவும் தெரியாமல் வாழ்நாளைக் கழிப்பவர் பலர். மனம் இருந்தும், உற்று அறிவதே பெரிதாகச் சிலர் வாழ்கின்றார்கள். அவர்கள் வாழ்க்கை மரம் செடி கொடிகளின் வாழ்க்கை போன்றதே. வயிறே வாழ்வாக உண்டு அறிவதே பெரிதாகச் சிலர் வாழ்கின்றார்கள். இந்த வாழ்க்கை நத்தை முதலியவற்றின் வாழ்க்கை போன்றது. உற்றும் உண்டும் முகர்ந்தும் காலத்தைக் கழிப்பவர்களும் உண்டு. இவர்களின் வாழ்க்கையை எறும்பு, ஈசல் முதலியவற்றின் வாழ்க்கையோடு ஒப்பிடலாம். பலவகைக் காட்சிகளைக் கண்டு கண்டு, இதுவே உலகம் இதுவே உலகம் என்று வாழ்நாளைக் கழித்து மயங்குகின்றவர்களும் உண்டு; இவர்களை வண்டு தும்பி என்று குறிக்கலாம். பலவகை ஒலிகளை - மொழிகளைக் - கேட்டுக்

கேட்டு உலகத்தை உணர்ந்ததாகத் தடுமாறுகின்றவர்களும் உண்டு. இவர்களைக் காக்கை குருவி மான் முயல் முதலியவை களோடு ஒப்பிடலாம். இவற்றோடு மன உணர்வையும் பயன் படுத்த வல்லவர்களையே மக்கள் என்று சுட்டுவது பொருந்தும்.

இன்று மக்கள் உடம்புகள் கோடிக்கணக்காகப் பெருகி யுள்ளன; ஆனால் மக்கள் உணர்வு பெருகவில்லை. வேறு வகையாகக் கூறினால், மக்களாய்த் தோன்றுவோரின் தொகை பெருகியுள்ளதே அல்லாமல், மக்களாய் வாழ்வோரின் தொகை பெருகவில்லை. அதனால்தான் உலகத்தில் குழப்பமும் கோளாறும் பூசலும் போரும் இன்றும் ஓயவில்லை. இன்பமும் அன்பும் அமைதியும் அறமும் இன்றும் அரும்பொருள் களாகவே உள்ளன.

உலகத்தில் வாழும் இருநூறு கோடி மக்களுள் பலர் மர வாழ்க்கையில் நிற்கின்றார்கள்; பலர் நத்தைகளாய் வாழ்ந்து நகர்கின்றார்கள்; பலர் எறும்புகளாய் ஊர்கின்றார்கள்; பலர் வண்டுகளாய் அலைகின்றார்கள்; பலர் விலங்குகளாய்த் திரிகின் றார்கள்; சிலரே மன உணர்வைப் பண்படுத்தி மக்களாய் வாழ் கின்றார்கள். இதனாலேயே, மக்களுக்கு உரிய உறுப்புக்கள் அமைந்திருப்பதைக் கண்டு மக்கள் என்று சுட்டுவது பொருந் தாது என்று திருவள்ளுவர் கருதுகின்றார். கயவர் மக்களை போல் தோன்றினாலும் அவர்கள் வேறு என்றும், மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர்களும் ஊக்கம் இல்லாதவர்களும் மரமே என்றும், மக்கள் வாழ்க்கைக்கு உரிய கல்வி கல்லாதவர் கள் விலங்குகளே என்றும் விளக்குகின்றார்:

மக்களே போல்வர் கயவர்; அவர்அன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில். (1071)

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். (997)

உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை ; அஃ தில்லார்
மரம் ; மக்கள் ஆதலே வேறு. (600)

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். (410)

இவ்வாறு பல இடங்களில் கூறுவதோடு அமையாமல், ஓரிடத்தில் "உடம்பின் தோற்றத்தால் ஒத்திருப்பது மக்களோடு ஒப்புமை ஆகாது. பொருந்துவதாகிய ஒப்புமை எது என்றால் மக்கட் பிறப்பிற்கு உரிய பண்பால் ஒத்திருப்பதே ஆகும்" என்று இந்த உண்மையைத் தெளிவாக்குகின்றார்.

உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. (993)

காதலின் ஆற்றல்

தன் துன்பத்தை உணர்ந்து வருந்துவதும் தன் இன்பத்தை உணர்ந்து களிப்பதும் எல்லா உயிருக்கும் பொதுவான இயல்பு. ஆனால் மக்கட் பிறப்பில் அமைந்த பண்பு அதைவிடச் சிறந்தது. அதையே திருவள்ளுவர் அறிவின் பயன் என்கின்றார். "மற்றோர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் உணராவிட்டால் அறிவால் பயன் உண்டோ ?" என்று ஆசிரியர் கேட்கின்றார். அறிவு வளர வளர, இந்தச் சிறந்த பண்பு அமைந்திடும் என்பது அவருடைய கருத்து ; அதாவது, அறிவு வளர வளர, தன் துன்பத்தை உணர்ந்து வருந்துவது போலவே, மற்றவர்களின் துன்பத்தையும் உணர முடியும், உணர்ந்து வருந்தமுடியும் என்று தெளிவாக்குகின்றார்.

ஒரு காக்கை மற்றொரு காக்கையின் துன்பத்தை உணராது ; உணர்ந்து வருந்தும் அறிவு அதற்கு இல்லை. மற்றொரு காக்கை அடிபட்டுக் கீழே விழுந்து கிடக்கும்போது அதைக் கண்டு கா கா என மற்றக் காக்கைகள் கூடிக் கரைகின்

றன. ஆனால் அது இன்பம் உணர்ந்து எழுப்பும் ஒலி அன்று; ஏதோ புதுமை கண்டு மருண்டு எழுப்பும் ஒலியே ஆகும். உணவைக் கண்டபோது ஒரு காக்கை தன் இனத்தைக் கூவிக் கரைவதாகச் சொல்வதும், அதன் வாழ்க்கையில் இயற்கையாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சி பற்றியே; அது மற்றக் காக்கைகளுடன் பகிர்ந்து உண்ணவேண்டும் என்று விரும்பி அவ்வாறு செய்வதில்லை. எப்போதும் இனமாகவே கூடி வாழ்ந்து பழகிய பழக்கத்தால், அதற்கு உணவுப்பொருள் கண்டதும் இனத்தைப் பற்றிய இயற்கையான உணர்வு ஏற்பட்டுக் கரைகின்றது. மற்றவை கூடி வந்து உண்ணும் போது விட்டுக்கொடுக்கும் உணர்வு காக்கையினிடம் இல்லை. வலிய காக்கையைக் கண்டு மெலிந்த காக்கை ஒதுங்கி நிற்பதும், வலியது கிடைத்த வரையில் உண்டு செல்வதும் காணலாம். ஆகவே, தன் இனத்தின் துன்பத்தை உணர்ந்து வருந்தும் பண்பு காக்கைக்கும் இல்லை என்பது தெளிவு.

பறவைகளின் காதல் வாழ்க்கையும் இப்படிப்பட்டதே. ஒன்றை ஒன்று பிரியாமல் ஆண்பறவையும் பெண்பறவையும் கூடி வாழ்ந்து பழகிவிடுகின்றன. பிறகு ஏதோ காரணமாகப் பிரிய நேர்ந்தபோது, கூடிவாழ்ந்த பழக்கத்தால் பெற்ற இயற்கை உணர்வு துணையை நினைவூட்டுகின்றது. அதனால் துணையைக் கூவி அழைக்கின்றது. அவ்வளவே அல்லாமல், மக்களிடம் உள்ளதுபோல், துணை பிரிந்து எங்கோ சென்றுவிட்டதே என்று அதனுடைய துன்பத்தை நினைந்து உணர்ந்து கூவும் தன்மை இல்லை. கூடு கட்டி முட்டை இட்டுக் குஞ்சுகளைக் காக்கும் வாழ்விலும் இவ்வாறு இயற்கை உணர்வே காரணமாக இருக்கின்றது.

பசு தன் கன்றை நினைந்து கதறுவதிலும் இயற்கை உணர்வே காரணமாக அமைந்துள்ளது. பாலால் மடி கனத்து

நிற்கும்போது கன்றை நாடும் உணர்ச்சி அதற்கு இயற்கையாக ஏற்படுகின்றது. தன்னோடு இருந்து பாலுண்டு பழகிய கன்றைக் காணாதபோது, அந்தப் பழக்க உணர்ச்சியால் கன்றை நினைத்துக் கதறுகின்றது. அவ்வளவே அல்லாமல், கன்றின் துன்பத்தை நினைந்து உருகும் ஆற்றல் அதற்கு இல்லை. ஒரு பசு தன் காலில் அடிபட்டு நோகும்போது வருந்துமே அல்லாமல், தன் கன்றின் காலில் அடிபட்டு இரத்தம் கசியும்போது அதன் துன்பத்துக்காகத் தான் வருந்தாது. ஆனால் மக்கட் பிறப்பில் தாய் தன் குழந்தையின் உடலில் சிறு துன்பம் கண்டாலும் கசிந்துருகுவாள்; கேட்டாலும் கண்ணீர்விட்டு நெக்குருவாள். பசு ஈன்ற கன்றுகள் பல இருக்கலாம்; முன் தன்னிடம் வளர்ந்த கன்றுகளை அந்தப் பசு மறந்துவிடுகின்றது. தாய் ஒருநாளும் அப்படித் தன் மக்களை மறக்க முடியாது. பிறந்து இறந்த குழந்தைகளையும் நினைந்து நினைந்து கண்கலங்குவதே தாயின் தன்மை. அப்போது பாலுண்ணும் கன்றை மட்டும் போற்றி, அதற்கு முன் கன்றாக இருந்து இப்போது வளர்ந்துள்ள மற்றொன்றை முட்டித் துரத்தும் தன்மையையே பசுவினிடம் காணலாம்.

பறவைகளும் விலங்குகளும் தம்மோடு தொடர்புடைய மற்றப் பறவை விலங்கின் துன்பமும் உணர முடியாத நிலையில் இருப்பது கண்டோம். தொடர்பு இல்லாத மற்றொரு பறவையின் துன்பத்தையோ, மற்றொரு விலங்கின் துன்பத்தையோ இவைகள் எப்படி உணரமுடியும்? வழியில் காணும் மற்றொரு பறவை உணவு இல்லாமல் வாடிக் கிடப்பதையோ, அடிபட்டு வருந்துவதையோ ஒரு பறவை உணர்வதில்லை. ஒரு பசுவின் உடம்பில் உள்ள புண்ணைக் கண்டு மற்றொரு பசு உணர்வதில்லை. ஆனால் முன்பின் கண்டறியாத ஒரு மனிதன் தெருவில் அடிபட்டு இரத்தம் சொரிந்தால், வழியில் செல்வாரெல்

லாரும் இரக்க உணர்வோடு பார்த்து மனம் உருகுகின்றார்கள். இந்த உணர்வே மக்கட் பிறப்பின் உயர்வைக் காட்டுகின்றது. மற்றொரு மனிதனின் துன்பத்தை உணர்வது மட்டும் அன்று; யாதொரு தொடர்பும் இல்லாத பறவை ஒன்று கல்லடி பட்டுக் கீழே விழுந்து குற்றுயிராய்க் கிடந்தால், அதைக் கண்டு கசிந்துருகும் இயல்பும் மக்களின் மனத்திற்கு உள்ளது. தான் வளர்த்த பசு மட்டும் அல்லாமல், மற்றொரு பசு காலடிபட்டு நொண்டி நொண்டி நடக்குமானால் அதைக் கண்டு மனிதன் இரக்கங் கொண்டு வருந்துகின்றான்.

இந்தப் பொது இயல்பையே அறிவின் பயனாகத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

> அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
> தன்நோய்போல் போற்றாக் கடை. (315)

இவ்வாறு மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் உணரும் இயல்பை எவரிடத்தும் காணலாம்; எந்நிலையிலும் காணலாம்; ஆனால் அதன் முழுமையைக் காணும் இடம் ஒன்று உண்டு; அதுதான் ஒத்த அன்புடைய காதலர் வாழ்க்கை. காதலர் வாழ்க்கையில் ஒருவர் உறும் துன்பம் அவ்வளவும் மற்றொருவரும் உறுகின்றார். இன்னும் ஆராய்ந்தால், அவரவர் தம் தம் துன்பத்திற்காக வருந்துவதைவிட, தம் தம் காதலர் உற்ற துன்பத்திற்காகவே மிகுதியாக வருந்துகின்றனர். காதலன் தன் துன்பமெல்லாம் மறந்து தன் காதலிக்காகவே துயருறுகின்றான்; காதலி தன் வருத்தமெல்லாம் மறந்து தன் காதலனுக்காகவே வருந்துகின்றாள். ஆகவே, பிறர் துன்பம் உணர்வது அறிவின் பயனாக இருக்க, தன் துன்பம் மறந்து பிறர் துன்பம் மட்டுமே உணர்வது காதலின் பயனாக விளங்குகின்றது. மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தி

உயர்ந்த வல்ல ஆற்றல் காதலுக்கு அமைந்திருக்கக் காரணம் இதுவே ஆகும்.

பண்பாட்டின் அடிப்படை

பிறரை அடக்கி வென்றால்தான், அவர்களுடன் வாழ முடியும் என்று காணப்படும் உலகத்தில், அன்புடையவர்களிடம் அடங்கித் தோற்றுவிடுவது நன்மை என்று காதல் வாழ்க்கை உணர்த்துகின்றது. தன்னிடம் குற்றம் கண்டு காதலி ஊடும்போது காதலன் எதிர்த்து அடக்கி வெல்ல முயலவில்லை; ஆனால் பணிந்து தோற்க முன்வருகின்றான். அதன் பயன் என்ன? குற்றம் கண்டு ஊடிய காதலியின் நெஞ்சமே கசிந்து உருகுகின்றது; "பல பொய்கள் வல்ல கள்வனான காதலனுடைய பணிவான மொழியே என் பெண்மையாகிய அரணை அழிக்கும் படை ஆயிற்று. அதனால் நானும் நெகிழ்ந்தேன்" என்கின்றாள்.

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. (1258)

இந்தச் சிறந்த பண்பைக் காதல் வாழ்க்கையில் அல்லாமல் வேறு எங்குக் கற்க முடியும்? இதையே வெளியுலகத்தில் அன்புடையவரிடத்தில் மட்டும் அன்றி அன்பில்லாதவரிடத்திலும் கையாளும்போது அது சால்பு என்னும் அரும்பண்பாகப் போற்றப்படுகின்றது.

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (986)

வல்லமை ஒன்றே வெற்றிக்கு வழி என்று உலகம் சொல்கின்றது. ஆனால், வல்லமை இழந்து மென்மை மேற்கொண்டு இயைந்து நடப்பதால் வாழ்க்கை சிறக்கும் என்று காதல் கற்பிக்கின்றது.

காதலனுடைய கொடுமையைக் கண்டு அவன்மீது வெகுளி கொண்டு காயவேண்டும் என்று காதலி முயல்கின்றாள். ஆனால் அவளுக்கே தன் மென்மையும் அதனால் நெஞ்சு நெகிழும் நெகிழ்ச்சியும் தெரியும். "நெஞ்சே! இப்போது காதலருடைய கொடுமையைப் பொறுக்காமல் வெறுப்போடு எழுகின்றாய். இது பொய்யான காய்வு. ஊடலிலே பொய்யாக வாவது வெறுத்து நிற்க உன்னால் முடியவில்லை. இப்போது முடியுமா? இது வீண் முயற்சி" என்று நெஞ்சை நோக்கிக் கூறுகின்றாள். ஒருமுறை ஊடவேண்டும் என்று அவரிட மிருந்து அகன்று வேறிடத்தில் போய் நின்றாளாம். ஆனால் அவளுடைய அன்பு நெஞ்சம் நிறை இழந்து அவரோடு சேர்ந்து நிற்பதைக் கண்டு ஊடலைக் கைவிட்டாளாம். அத னால், "விடாப்பிடியாக ஊடிக்கொண்டிருப்போம் என்று இது போன்ற நெஞ்சு உடையவர்கள் முயல்வதால் பயன் இல்லை. நெருப்பில் இட்டதும் உருகுகின்ற கொழுப்பைப் போல் உருகும் நெஞ்சு உடையவர்களால் அது முடியாது" என் கின்றாள்.

கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. (1246)

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு. (1259)

நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். (1260)

காதல் வாழ்க்கையில் இந்தப் பயிற்சியைப் பெற்றவர்கள், இந்த அரும் பண்பை வெளியுலகத்திலும் மேற்கொண்டு வாழும்போது அருளுடையவர்களாகவும் சினமற்றவர்களாக வும் இன்னா செய்யாதவர்களாகவும் போற்றப்படுகின்றார்கள். "தன்னைவிட எளியவரைத் தான் வருத்தச் செல்லும்போது,

தன்னைவிட வலியவர் தன்னை வருத்துமிடத்தில் அவர்முன் தான் அஞ்சி நிற்பதை நினைத்துத் துன்பம் செய்வதைக் கைவிட வேண்டும்.” “தன் சினம் பலிக்குமிடத்தில் அதைத் தடுக்க வல்லவனே சினமற்றவன். பலிக்காத இடத்தில் அதைத் தடுத்தால் என்ன? தடுக்காவிட்டால் என்ன? சுடர் மிகுந்த பெருந்தீ வந்து தோய்ந்தாற் போன்ற துன்பத்தை ஒருவன் செய்தபோதிலும் கூடுமானால் அப்போதும் சினம் கொள்ளாமலிருப்பதே நல்லது.” “தம்மேல் செற்றம் கொண்டு ஒருவன் துன்பம் செய்தபோதிலும், திருப்ப அவனுக்குத் துன்பம் செய்யாமலிருப்பதே தூயவர்களின் கொள்கை. தீங்கு செய்தவர்களைத் தண்டிக்கும் முறை ஏது என்றால், அவர்கள் தாமே நாணும்படியாக அவர்களுக்கு இனிய நன்மையைச் செய்து, அந்தத் தீங்கையும் இந்த நன்மையையும் மறந்து விடுவதே ஆகும். துன்பம் என்று தான் உணர்ந்தவைகளை மற்றவனிடத்துச் செய்யாமல் விடவேண்டும்.”

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து. (250)

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் ? காவாக்கால் என் ? (301)

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (308)

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (312)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (314)

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல். (316)

என்று அறிவுறுக்கப்படும் அரிய அறநெறிகளைக் காதல் வாழ்க்

T4.813|K37 1556|2

கையால் பண்பட்டவர்கள் மிக எளிதில் கற்று உயர முடியும். காதலர் ஒருவர் மற்றொருவரிடம் ஒழுகும் அன்புமுறையில் இந்தப் பண்புகள் இயல்பாகவே வந்து அமைகின்றன. ஆதலின் அவற்றை அங்கே கற்றுப் பயின்றவர் வெளியுலக வாழ்க்கையில் அவற்றை மேற்கொள்வது எளிதாகும்.

நம்மை வெறுத்தவர்களை நாமும் வெறுக்க வேண்டும், நம்மைப் புறக்கணித்தவர்களை நாமும் புறக்கணிக்க வேண்டும் என்று உலகம் சொல்கின்றது. ஆனால், புறக்கணித்தவர்களையே மீண்டும் மீண்டும் நாடும் மனத்தால் அன்பு வளரும், மானம் இழந்தாலும் அன்பு வளரும் என்று காதல் வாழ்க்கை கற்பிக்கின்றது. அன்பு வளர்ந்த நெஞ்சிற்கு மானம் என ஒன்று இல்லை, வெறுப்பு என்பது முடியாது, வெறுப்பதாக நெருங்கினாலும் விரும்புவதாகவே முடியும் என்று காதல் வாழ்க்கை கற்பிக்கின்றது. காதலன் பிரிந்து சென்றபோது நெஞ்சை நோக்கிக் கூறும் காதலியின் சொற்களில் இதைக் காணலாம். "நெஞ்சே! நாம் அவரை உறவாகக் கொண்டிருந்தும், அவர் உறவு கொள்ளவில்லை; அவ்வாறு வெறுத்தாரே என்று கருதி நாமும் வெறுத்துக் கைவிடும் வலிமை நமக்கு உண்டோ? இல்லையே" என்கின்றாள். "தம்மை வெறுத்து நீங்கியவர்களைத் தாமும் வெறுத்து நீங்கும் உறுதி உலகத்தில் மற்ற வாழ்க்கைத் துறைகளில் உண்டு. ஆனால் இது காதல்துன்பம் உற்றவர்களுக்குத் தெரியாது" என்று காதல் வாழ்க்கையில் வெறுப்பும் துறவும் கொள்ளமுடியாத தன் நிலையைத் தானே கூறுகின்றாள்.

செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். (1245)

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று. (1255)

இந்தச் சிறந்த கல்வியைக் காதலராக வாழ்ந்து கற்றவர்கள் வெளியுலக வாழ்க்கையில் "வெறுப்புக்கு வெறுப்பு, புறக்கணிப்புக்குப் புறக்கணிப்பு, தீமைக்குத் தீமை" என்று பாராட்டாமல் பிறரிடம் அன்பு செலுத்தி இன்னா செய்தவர்க்கும் இனியவை செய்து வாழ்வது எளிது. காதலர்க்கு இன்றியமையாத இந்தப் பண்பு வெளியுலக வாழ்க்கையில் வளரும்போது சால்பு எனப் புகழப்படும்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (987)

இந்தக் கல்வியைத் தம்மை அறியாமல் கற்றுக்கொள்ள வல்லவர் உண்மைக் காதலர்.

இத்தகைய உயர்ந்த பண்புகளை வளர்த்து மக்களைப் பண்படுத்தும் ஆற்றல் காதல் வாழ்க்கைக்கு அமைந்துள்ளது.

அதனால்தான் தவம், நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல், ஊழ் என்னும் அரும்பொருள்களை விளக்கி வலியுறுத்தியுள்ள திருவள்ளுவர், காதலர் வாழ்க்கையையும் கலையுணர்வோடு விளக்கியுள்ளார். திருவள்ளுவர் போன்ற மெய்யுணர்வு பெற்ற சான்றோரே காதலின் சிறப்பை உள்ளவாறு போற்ற வல்லவர். அத்தகையவர்க்கே காதல் என்னும் பெயரால் பலர் வாழும் போலி வாழ்க்கையின் குறைகளும் தெரியும். அந்தக் குறைகள் போலிகளின் வாழ்க்கையில் இருத்தலைக் கொண்டு காதல் என்னும் தூய மக்கட் பண்பைக் குறைகூறுவது தகுமோ? ஆதலின் திருவள்ளுவர் பிறனில் விழையாமை, வரைவின் மகளிர் என்னும் அதிகாரங்களில் தீயொழுக்கத்தைக் கடிந்தாரே அல்லாமல் காதல் வாழ்க்கையைப் பழிக்கவில்லை. தவத்தின் பெயரால் போலிகள் வாழும் கூடாவொழுக்கத்தைக்

கடிந்தாரே அல்லாமல் தவத்தைப் பழிக்கவில்லை. அதுபோல் நெறி கடந்த காம வாழ்க்கையைக் கடிந்தாரே அல்லாமல் காதலைக் கடிந்து கூறவில்லை. அதனால்தான் காதலின் சிறப் பெல்லாம் தோன்றுமாறு காமத்துப்பாலை இயற்றியுள்ளார்.

அறிவும் உணர்வும்

அறிவும் உணர்வும் இயற்கையாக அமைந்த பண்புகள். அறிவே இல்லாதவனையும் உணர்வு அற்றவனையும் உலகத்தில் காணமுடியாது. ஆனால் போதிய அளவு வளர்ச்சி இல்லாதவர் களையும் காணலாம்; அறிவு மிகுதியாக வளரப்பெற்றவர்களை யும் காணலாம்; போதிய உணர்வு அற்றவர்களையும் காண லாம்; உணர்வு மிகுந்தவர்களையும் காணலாம்.

அறிவும் உணர்வும் வேறுபட்ட இருபண்புகள் ஆயினும் பிரிக்க முடியாதனவாய் உள்ளன. வன்மையும் மென்மையும்இவ் வாறே பல பொருளில் இயற்கையில் அமைந்திருத்தல் காண லாம். வன்மை மிக்க பொருளினிடத்தில் ஓரளவு மென்மையும் காணலாம்; மென்மை மிக்க பொருளினிடத்தில் ஓரளவு வன் மையும் காணலாம். இவ்வாறே அறிவு மிக்கவரிடத்தில் உணர் வும் காணலாம்; உணர்வு மிக்கவரிடத்தில் அறிவும் காணலாம். தருக்கம், கணக்கு முதலிய கல்வித்துறைகளிலேயே காலங் கழிப்பவரும், நெருங்கிப் பழகும் பிறர் துன்பம் கண்டு கரைந்து உருகுகின்றனர்; ஓவியம் காவியம் முதலிய கலைத் துறைகளிலே காலம் கழிப்பவரும், தமக்கு வரும் துன்பத்தை ஒருவாறு தாங்கிக் கலங்காமல் நிற்கும் ஆற்றல் பெறுகின்றனர்.

வன்மை மென்மைப் பண்புகளைத் தனித்தனியே பிரிக்க முடியாவிட்டாலும், வன்மை மிக்க பொருளையும் மென்மை மிக்க பொருளையும் தனித்தனியே பிரிக்க முடியும் அன்றோ? அதுபோல், அறிவையும் உணர்வையும் தனித்தனியே பிரிக்க

முடியாவிட்டாலும், அறிவு மிக்கவரையும் உணர்வு மிக்கவரையும் தனித்தனியே பிரிக்க முடியும்.

அறிவு மிக்கவர் எதைக் கண்டாலும் முதலில் எண்ணத் தொடங்குவர்; பிறகே உணரத் தொடங்குவர். உணர்வு மிக்கவர் எதைக் கண்டாலும் முதலில் உணரத் தொடங்குவர்; பிறகுதான் எண்ணத் தொடங்குவர். ஆண்களில் பெரும்பாலோர் முதலில் எண்ணத் தொடங்குவர்; பெண்களில் பெரும்பாலோர் முதலில் உணரத் தொடங்குவர். ஒரு குடும்பத்தில் தந்தையையும் தாயையும் ஆராய்ந்தே இந்த உண்மையைக் காணலாம். அதனாலேயே ஆண் மூளை சிறந்தவன் என்றும், பெண் இதயம் சிறந்தவள் என்றும் டென்னிசன் என்னும் ஆங்கிலப் புலவர் தெளிவித்துள்ளார். அறிவு மிக்கவர் எதிர்காலத்தைப் பற்றி எண்ணித் தற்காப்புத் தேடிக்கொள்வதில் வல்லவர். உணர்வு மிக்கவரோ நிகழ்காலத்திலேயே மூழ்கித் தம்மை மறந்து தொண்டுசெய்ய முந்துபவர். அறிவு மிக்கவர் உள்ளத்தில் உள்ளதைப் பிறர்க்குப் புலப்படுத்தாமல் மறைக்கும் ஆற்றல் உடையவர்; உள்ளத்தில் உள்ளதற்கு மாறாகப் பேசவும் நடிக்கவும் வல்லவர். உணர்வு மிக்கவரோ உள்ளொன்று புறமொன்றாக நடிக்க அறியாதவர்; உள்ளத்தில் உள்ளதை எல்லாம் கண்ணும் முகமும் காட்டப் பளிங்கு போல் விளங்குபவர்.

குழந்தை பிறக்கின்றது. பிறக்கும்போது பெற்றோருடைய மூளை வளர்ச்சிக்கும் இதயப் பண்பாட்டிற்கும் ஏற்றபடி மூளையும் இதயமும் பெற்றுப் பிறக்கின்றது. பிறந்ததும் தாய் ஆசிரியராக விளங்குகின்றாள். குழந்தையின் மூளையையும் இதயத்தையும் வளர்க்கின்றாள். மூளையைவிட இதய வளர்ச்சியே மிகுதியாக ஏற்படுகின்றது. குழந்தை உணர்ச்சியோடு அழுகின்றது; சிரிக்கின்றது. அறிவுகொண்டு சிற்சில

பொருள்களைப் பகுத்தறியத் தொடங்குகின்றது. தந்தையின் தொடர்பு அடுத்தபடியே வாய்க்கின்றது. அவராலும் குழந்தையின் மூளையும் இதயமும் வளர்கின்றன. பெரும்பாலும் மூளையே மிகுதியாக வளர்கின்றது. இவ்வாறே குடும்பத்தில் உள்ள மற்றவர்களாலும் வளர்ச்சி ஏற்படுகின்றது. குழந்தை, விளையாட்டில் பொழுதுபோக்கும் சிறுவன் (அல்லது சிறுமி) ஆகின்றது. உடன்விளையாடும் சிறுவர்களால் வளர்ச்சி மிகுகின்றது. அவர்களாலும் உணர்வு வளர்ச்சியே சிறப்படைகின்றது. அடுத்தபடி பள்ளிக்கூடத்து ஆசிரியரால் ஏற்படும் வளர்ச்சி உள்ளது. அவரால் மிகுதியாக வளர்வது மூளையே. அடுத்த நிலையில் நண்பர்களின் தொடர்பாலும் சுற்றுப்புறத்தின் காரணத்தாலும் பலவகை மாறுதல் நேர்கின்றது. வாழ்வுக்கு உரிய இளமை வருகின்றது. குழந்தையாக இருந்து, சிறுவன் (அல்லது சிறுமியாக) வளர்ந்த அவன் (அல்லது அவள்) உற்ற வயது அடைந்து, விளங்கும் நிலைமை அது. அப்போது அவனுக்கு (அல்லது அவளுக்கு) அறிவு மிகுதியா? அல்லது உணர்வு மிகுதியா? கூட்டல் கழித்தல் கணக்கை முதலிலிருந்து பார்த்து முடிவு காண வல்லவர் யார்? பெரும்பான்மை பற்றியே ஒரு முடிவுக்கு வரலாம். சிறுபான்மை விதிவிலக்காக அமைந்திருப்பதும் உண்டு.

பெரும்பாலும் ஆண் இளமை நிரம்பியபோது அறிவு சிறந்து உணர்வும் வளர்ந்து விளங்குகிறான். பெண் இளமை நிரம்பியபோது உணர்வு சிறந்து அறிவும் வளர்ந்து விளங்குகிறாள். இதற்கு உரிய வித்துக்கள் விளையாட்டுப் பருவத்திலேயே காணப்படுகின்றன. அமைதியாக இருந்து பெண் சிற்றில் இழைக்கும் பருவத்தில் ஆரவாரமாக இயங்கி ஆண் சிற்றில் சிதைக்கும் நிலையில் இருக்கின்றான். இவ்வாறே சிறுமியின் மனம் பெரிதும் ஆக்கவேலையில் முனைந்திருக்க,

சிறுவன் மனமோ அழிவு வேலையில் ஊக்கம் காட்டுகின்றது. ஆதலால் பெண் அமைதி மிக்கவளாக வளர்கின்றாள்; ஆண் ஆற்றல் மிக்கவனாக வளர்கின்றான். இது இயற்கையின் வியக்கத்தக்க முறையாக அமைந்திருக்கின்றது.

ஆனால், அமைதி மட்டும் பெற்றிருப்பதோ, ஆற்றல் மட்டும் பெற்றிருப்பதோ வாழ்க்கைக்குப் போதாது. அமைதிக்கு ஆற்றல் வேண்டும்; ஆற்றலுக்கு அமைதி வேண்டும். இயற்கையே இதற்கும் வழி வகுத்திருக்கிறது. ஆணின் இளமை பெண்ணைக் கவரவும் பெண்ணின் இளமை ஆணைக் கவரவும் கவர்ச்சி அமைத்துள்ளது. உடலில் உள்ள இளமை அழகு மட்டும் அல்லாமல், உள்ளத்தில் உள்ள இளமைப்பண்பும் ஒருவரை ஒருவர் கவருமாறு அமைத்துள்ளது. இத்தகைய தூய கவர்ச்சியே காதல் எனப்படுவது. காதல்உறவினால் ஆற்றல் மிக்கவன் அமைதியைக் கற்கின்றான்; அமைதி மிக்கவள் ஆற்றலைக் கற்கின்றாள்.

காதலன் அறிவும் ஆற்றலும் மிக்கவன்; ஆயினும் காதலால் நெகிழ்ந்து உருகுகின்றான் என்பதைத் திருவள்ளுவர் அங்கங்கே புலப்படுத்திச் செல்கின்றார். காதலியைக் கண்டு மயங்கிக் கண்வலைப் பட்டபோது, அவன் என்ன கூறுகின்றான்? "போர்க்களத்தில் வந்து பொருத பகைவரும் என்னைக் கண்டு அஞ்சினார்கள். போர்க்களத்திற்கு வராத பகைவரும் என் வலிமையைப் பற்றிக் கேட்டறிந்து அஞ்சினார்கள். அத்தகைய என் வலிமை இவள்முன் அழிந்ததே" என்கின்றான்.

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. (1088)

பகைவர்கள் அஞ்சுவதற்குக் காரணமான இவனுடைய வன்மை எல்லாம் காதலியின் மென்மைக்கு முன் நிற்க முடியவில்லை.

காதலியைக் காணமுடியாமல் வருந்தும்போது ஆற்றாமை காரணமாக அவன் கூறும் சொற்களிலும் காதலின் ஆற்றலையும் அவன் உணர்வு மிகுதலையும் அறியலாம். " என் உடம்பும் உயிரும் இந்தத் துன்பத்தைப் பொறுக்க முடியவில்லை. மடலேறித் தம்மை அழித்துக்கொள்ள முயல்கின்றன. நாணம் அந்த முயற்சியைத் தடுக்கின்றது. ஆண்மையெல்லாம் இழந்து ஒருத்தியின் பொருட்டாகப் பலரறிய இவ்வாறு அழிவதா என்று தடுக்கின்றது. ஆனால் நாணத்தின் இந்தத் தடையையும் பொருட்படுத்தாமல் நீக்கி உடம்பும் உயிரும் மடலேற முனைகின்றன. நாணமும் நல்ல ஆண்மையும் முன்னெல்லாம் என்னிடம் சிறந்திருந்தன. இப்போது காதலர் ஏறும் மடலே எனக்குத் துணையாக இருக்கின்றது. இவ்வாறு மடலேற வேண்டும் என்று இப்போது மட்டுமல்ல, நடு யாமத்திலும் இதையே எண்ணுகின்றேன். ஏன் என்றால் அந்த யாமத்திலும் காதலியை நினைந்து என் கண்கள் உறங்காமலிருக்கின்றன " என்கின்றான்.

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. (1132)

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் ; இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். (1133)

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற ;
படல்ஒல்லா பேதைக்கென் கண். (1136)

காதலனுடைய ஆற்றாமையை அறிந்த தோழி அவனை நோக்கி, " ஐய, உன் காதலியே பொறுத்திருக்கும் வல்லமை உடையவளாக இருக்கும்போது நீ இவ்வாறு வருந்தலாமா ? பெண்ணைவிட அறிவும் ஆற்றலும் மிகுந்த ஆண் இவ்வாறு வருந்துவதா ?" என்று கேட்டாள். அவனை நோக்கி, " கடல்

போல் எல்லையற்ற காதல்துன்பத்தால் வருந்திய போதிலும் அவள் எப்படியோ ஆற்றியிருக்கின்றாள். அவ்வளவு அடக்கமும் ஆற்றலும் எனக்கு இல்லை என்பது உண்மைதான். வருந்தாமல் ஆற்றியிருக்கும் பெண் பிறப்பே பெருமை உடையது !" என்று தன் உள்ளப்போக்கை உணர்ந்து குறையை உடன்படுகின்றான்.

கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல். (1137)

உணர்வும் அமைதியும் மிக்கவளாய்த் தாய்தந்தையரோடும் தோழிமாரோடும் வாழ்ந்துவந்த காதலி அறிவும் ஆற்றலும் பெற்று மாறுவதைக் காண்போம். அவனும் அவளும் காதல்கொண்டு பிறர் அறியாமல் பழகும் பழக்கத்தை ஊரார் அறிகின்றார்கள். அவர்கள் அலர் தூற்றுகின்றார்கள். இது அன்னைக்கும் தெரிய வருகின்றது. அவளும் மகளை வெகுண்டு பேசுகின்றாள். காதலி ஊராரின் அலரையும் கேட்டுப் பொறுக்கின்றாள் ; அன்னையின் கடுஞ்சொல்லையும் கேட்டுப் பொறுக்கின்றாள். பொறுக்கப் பொறுக்க அவளுடைய ஆற்றல் மிகுகின்றது ; காதலும் வளர்கின்றது. "அலர் கூறுவதனால் என் காதலை அடக்கிவிடலாம் என்று ஊரார் எண்ணுவதாகத் தெரிகின்றது. அது வீண் முயற்சி. நெய்யால் தீயை அவிக்க முடியுமோ ?" என்கின்றாள்.

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். (1147)

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல். (1148)

காதலன் பிரிந்த பிறகு, காதலி தனியே இருந்து நினைந்து நினைந்து துயருறுகின்றாள். நாளாக ஆக உயிர்வாழ்வது

வெறுப்பாகின்றது ; உடல் சுமையாகத் தோன்றுகிறது. "நான் ஏன் உயிரோடு வாழ்கின்றேன் ?" என்று தானே எண்ணுகின்றாள். "துன்பம் இவ்வாறு வரம்பு கடந்து வருத்தும்போதும் நான் உயிர்வாழ்வதற்குக் காரணம் என்ன? அவர் பிரிந்து சென்றபோதிலும் அவரை நினைக்கும் பேறு பெற்றிருக்கின்றேன். அவரோடு வாழ்ந்த நாட்களை நினைப்பதில் ஒருவகை ஆறுதல் இருக்கின்றது. அவ்வாறு நினைத்து ஆறுதல் பெறவே உயிருடன் இருக்கின்றேன்" என்று துன்ப உணர்வு மிகுந்த காலத்திலும் அறிவோடு எண்ணுகின்றாள்.

> மற்றியான் என்உளேன் மன்னோ அவரொடியான்
> உற்றநாள் உள்ள உளேன். (1206)

இரவெல்லாம் கண் உறங்காமல் கலுழ்கின்ற நிலைக்கு இடையே, சிறிதுநேரம் உறக்கம் பெறின், அதில் கனவு வருகின்றது ; கனவில் காதலன் வருகின்றான் ; கனவு கலைகின்றது. இவ்வாறு இராக்காலம் கழிந்தபின் பொழுது விடிகின்றது. காலையில் காதலரைப் பிரிந்த பிரிவுத்துன்பம் தலையெடுக்கின்றது ; அரும்புகின்றது. பகல் முழுதும் மெல்ல வளர்கின்றது ; அரும்பு போது ஆகின்றது. மாலை வந்த உடனே துன்பம் பழையபடி முற்றி முழுநிலை அடைந்து வருத்துகின்றது ; மலராகின்றது. இந்த நிலைமை தன் உள்ளத்தில் மாறி மாறி நேர்வதையும் அவளே எண்ணிப் பார்க்கின்றாள்.

> காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
> மாலை மலருமிந் நோய். (1227)

தன் நெஞ்சு எந்நேரமும் அவரையே நாடி அவர்பின் சென்று அலைவதையும் தன் வழியில் நின்று தனக்குத் துணையாகாததையும் கண்டு காதலி எண்ணுகின்றாள். துன்ப உணர்வுக்கு இடையே தத்துவஞானிபோல் அவள் எண்ணும்

எண்ணம் அறிவின் திட்பத்தைப் புலப்படுத்துகின்றது. " நெஞ்சே! காதலருடைய நெஞ்சம் அவரை விட்டு நம்மிடம் வருகின்றதா? இல்லையே! அவரிடமே இருந்து அவர்க்கே துணையாக இருக்கின்றதே! நீ மட்டும் என் நெஞ்சமாய் என்னிடம் நில்லாதது ஏன்?" என்கின்றாள். " ஒருவர்க்குத் துன்பம் வந்தபோது அந்தத் துன்பத்தைப் போக்குவதற்கு அவருடைய நெஞ்சமே துணையாகாவிட்டால், வேறு யார் துணையாக முடியும்? ஒருவருக்கு உரிமையான நெஞ்சமே உறவாக நின்று உதவாதபோது, அயலார் உறவாவது எங்கே?" என்று மெய்யுணர்வு பெற்றவர்போல் எண்ணுகின்றாள்.

அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது. (1291)

துன்பத்திற் கியாரே துணையாவார் தாம்உடைய
நெஞ்சம் துணையல் வழி. (1299)

தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய
நெஞ்சம் தமரல் வழி. (1300)

இவ்வாறு அறிவும் உணர்வும் வளர்ந்து தக்கவாறு அமைந்து நிரம்புவதற்குக் காதல் வாழ்க்கை காரணமாக இருக்கின்றது.

காதல் : தொண்டு

சிலர் வாழ்க்கை வேறுபட அமைந்திருப்பது உண்டு. அதாவது, அவர்கள் இளமையிலேயே ஆற்றலும் அமைதியும் ஒருங்கே நிரம்பியவர்களாக விளங்குகின்றார்கள். அறிவும் உணர்வும் ஒருங்கே வளர்ந்தவர்களாகத் திகழ்கின்றார்கள். மூளையும் இதயமும் ஒத்த நிலையில் வளர்ந்து அமைகின்றார்கள். அத்தகையவர் மிக மிகச் சிலரே. குழந்தையாயிருந்த காலம் முதல் அவர்களுக்குப் பெற்றோரும் மற்றோரும்

ஊட்டிய அறிவும் உணர்வும் எவ்வாறு கலந்து ஒன்றுபட்டு ஒரு நிகராகச் சிறப்படைகின்றன. எடுத்துக்காட்டாக, திருநாவுக்கரசரின் நல்வாழ்க்கையைக் குறிப்பிடலாம்.

இவர்கள் காதல் இல்லாமலே வாழ்க்கை பண்பட்டவர்கள்; காதல் வாழ்க்கையால் என்ன பண்பாடு பெறவேண்டுமோ அதை முன்னமே அமையப் பெற்றவர்கள். இத்தகையவர் இல்வாழ்க்கையில் இருந்தாலும் சிறப்படையலாம்; இல்லாமலும் சிறப்படையலாம். ஆனால் இவர்களை மற்றவர்கள் பின்பற்ற முடியாது. மற்றவர்களுக்கு அறிவும் உணர்வும் பண்படாத குறையே அதற்குக் காரணமாகும்.

பண்பட்ட அறிவும் உணர்வும் வாய்ந்தவர்களும் காதல் வாழ்க்கை இல்லையானாலும், அதற்கு நிகரான மற்றொரு துறையில் ஈடுபடுவதனால்தான் செம்மையாக வாழமுடிகின்றது. காதலுக்கு நிகரான மற்றொரு துறை தொண்டு என்பதே ஆகும். நாட்டுத்தொண்டு, கலைத்தொண்டு, சமயத்தொண்டு என்று பல பெயர் கூறலாம். மற்றவர்களின் வாழ்க்கைக்குப் பயனளிக்கத் தக்க நெறியில் செய்வதே தொண்டு ஆகையால், எல்லாம் பிறர் நன்மைக்கான பொதுநலத் தொண்டே ஆகும்.

தொண்டு வாழ்க்கை, மக்களைப் பண்படுத்தும் வகையில் காதல் வாழ்க்கைக்கு நிகரானது. அதனால் திருநாவுக்கரசர் போன்றவர்கள் துறவறத்திலேயே முழுமை காண முடிகின்றது. காரணம் ஒன்றே: தொண்டு காதல் இரண்டிற்கும் அடிப்படையில் விளங்குவது தியாகம் என்னும் அரும் பண்பே. தியாகமில்லாதவர் தொண்டர் அல்லர்; நாட்டின் பெயராலும் கலையின் பெயராலும் சமயத்தின் பெயராலும் அவர்கள் எது செய்தினும் அது வாணிகமாகவே விளங்கும். தியாகம் உடையவர்கள் தன்னலம் இழந்து நாடு கலை சமயம் என்னும் காரணங்களால் செய்வது எதுவோ அதுவே

தொண்டு ஆகும். அதுபோலவே, தியாகம் இல்லாதவர் கணவன் மனைவி எனக் கூடி நடத்தும் வாழ்க்கை காமமே அன்றிக் காதல் என்று கூறமுடியாது. கணவன் மனைவிக்காகவும் மனைவி கணவனுக்காகவும் தன்னலம் இழந்து வாழும் வாழ்க்கையே காதல் என்பது. ஆகையால் காதலுக்கு உள்ள சிறப்பெல்லாம் தொண்டுக்கும் உள்ளது. காதல் இல்லாதவர்கள் இல்வாழ்க்கையால் நன்மை அடையாமல் கெடுவதுபோல், தொண்டு செய்யாதவர்களும் பிரமசரியம், துறவறம் இவற்றைக் கைக்கொண்டாலும் பயனடையாமல் கெடுகின்றார்கள். திருநாவுக்கரசரின் பெருவாழ்வில் உழவாரத்திற்கு இருந்த சிறப்பை நினைக்குந்தோறும் நெஞ்சம் உருகுகின்றது. கலைச் செல்வராய்ச் சமயத் தலைவராய் விளங்கிய அவர் தொண்டு நெறிக்குத் திரும்பியதும் ஏடுகளையும் பிறவற்றையும் கைவிட்டு உழவாரத்தை ஏந்திய சிறப்பை உலகம் உணர்ந்து போற்ற வேண்டும். காந்தியடிகளின் பிரமசரிய வாழ்வில் ராட்டினத்திற்கு இருந்த சிறப்பும் இத்தகையதே ஆகும்.

தன்னலம் இழந்து தொண்டு செய்விக்கும் ஆற்றல் காதலுக்கு இருப்பதால், காதலர் பலர் தொண்டராக வாழ நேர்கின்றது. எடுத்துக்காட்டாகக் கூறத் தக்க வாழ்க்கை புத்தர் பெருமான் வாழ்க்கை. காதல் வாழ்க்கையில் பண்பட்ட அவர், பிற உயிர்கள் படும் துன்பத்தைக் கண்டு வாளா இருக்க முடியவில்லை; உயிர்களின் துன்பத்தைப் போக்க ஏதேனும் வழி காண வேண்டுமென்று போராடினார். பலநாள் எண்ணி எண்ணித் துணிந்தார். காதலை வெறுக்காமல், மனைவியையும் மகவையும் வெறுக்காமல் துறக்கத் துணிந்தார். பல ஆண்டுகள் ஓயாமல் பாடுபட்டார்; தவம் கிடந்தார்; உண்மை கண்டார்; உலகறியத் தொண்டாற்றினார்.

உலகநிலை இப்படியே இருக்காது. படிப்படியாக மாறி அமையும். இன்று கண்மூடிகள் தொகை மிகுந்துள்ளது; அதனால் ஒளிகாட்டுவோர் பலர் தொண்டு செய்யவேண்டியதாக உள்ளது. இன்று வயிற்றுக் கவலையால் நலிபவர் தொகை மிகுந்துள்ளது; அதனால் ஈகையும் ஒப்புரவும் உடையவர் பலர் தொண்டு செய்ய வேண்டியதாக உள்ளது. இன்று மெலிந்த மனமுடையவர்களாய்க் கொலை களவு கள் காமம் பொய் மேற்கொள்வோர் தொகை மிகுந்துள்ளது; அதனால் ஒழுக்கத்திற் சிறந்த பலர் தொண்டு செய்ய வேண்டியதாக உள்ளது. இன்று அறிவற்ற பாமரர் தொகை மிகுதியாக உள்ளது; அதனால் அறிஞர் பலர் தொண்டு செய்ய வேண்டியதாக உள்ளது.

அதனால் இன்று உலக வாழ்க்கை மெய்யுணர்வு பெற்றவர்களையும் ஈரநெஞ்சு உடையவர்களையும் ஒழுக்கத்திற் சிறந்தவர்களையும் அறிவு மிக்கவர்களையும் தொண்டு செய்ய ஈர்க்கின்றது. சமயத்தொண்டு, ஈகை, அறத்தொண்டு, அறிவுத் தொண்டு என்ற பெயர்களால், அவர்களின் வாழ்நாளில் பெரும் பகுதி மற்றவர்களுக்காகச் செலவு ஆகின்றது. இல்வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னமே இந்தத் தொண்டு அவர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந்தால், அவர்கள் தூய பற்றற்ற தொண்டு வாழ்க்கை வாழ்ந்து உலகத்தைக் காக்க நேர்கின்றது. இவ்வாறு இல்லாமல், இல்வாழ்க்கை தொடங்கிய பிறகு, தொண்டு செய்யும் உணர்ச்சி மிகுந்தால், ஒருபக்கம் இல்வாழ்க்கை ஈர்க்க, மற்றொரு பக்கம் உலகத்தொண்டு ஈர்க்க, போராட்டத்திற்கு ஆளாவது உண்டு; வாழ்நாள் வரைக்கும் போராடிப் போராடி இரண்டு நிலையிலும் இருந்து, இருவகைக் கடமைகளையும் இயன்ற அளவு செய்வதும் உண்டு. இல்வாழ்க்கையைத் துறந்து உலகத்தொண்டே குறிக்கோ

ளாகப் புத்தர்பெருமான் போல் வெளிவருவதும் உண்டு ; இல் வாழ்க்கையை மாற்றி உலகத்தொண்டாக அமைத்துக்கொண்டு காந்தியடிகள்போல் கடமையைச் செய்வதும் உண்டு. இத்தகைய வாழ்க்கைகளை எல்லாம் ஆராயும்போது இல்வாழ்க்கை அவ்வளவு சிறப்பில்லாதது போல் தோன்றலாம்.

ஆனால், " வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால் " என்று கனவு காணும் நல்ல நிலை அமைந்த நாட்டில் ஈகைக்கு இடம் ஏது ? ஒப்புரவிற்கு இடம் ஏது ?

பிறர்க்கு உதவிசெய்யும் வாய்ப்பு வேண்டும், உதவிசெய்ய வேண்டும் என்று விரும்பும் மனத்தில் அடிப்படைக் குறை ஒன்று உள்ளது. இந்த உலகத்தில் குறைகளும் துன்பங்களும் இன்றுபோல் என்றும் இருந்தால்தானே, பிறர்க்கு உதவி செய்யும் வாய்ப்பும் இருக்கமுடியும் ? ஆகவே, ஒரு சிலர் தொண்டர்களாக வாழ்வதற்காக, உலகம் குறையுடையதாக இருக்கவேண்டும் என்றும், மக்கள் வாழ்க்கையில் துன்பம் இருக்க வேண்டும் என்றும் மறைமுகமான கருத்துக் காணப் படவில்லையா ? அவ்வாறு விரும்புவது அறமா ? நான் வள்ளலாக விளங்கவேண்டும், அதற்காக மக்கள் பலர் வறுமையால் வாடவேண்டும் என்று எண்ணலாமா ? நான் மருத்துவனாகச் சிறப்படைய வேண்டும், அதற்காக மக்களுக்கு நோய் மிக வேண்டும் என்று எண்ணலாமா ? நான் ஒழுக்க விளக்காகப் புகழ்பெற வேண்டும், அதற்காக என்னைச் சுற்றி வாழும் மக்கள் ஒழுக்கங் கெட்டவர்களாக வாழவேண்டும் என்று எண்ணலாமா ? நான் பேராசிரியனாக விளங்கவேண்டும், அதற்காகப் பெரும்பாலோர் அறிவு குறைந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணலாமா ? நான் மெய்யுணர்வு உடையவனாகச் சிறப்புறவேண்டும், அதற்காகப் பலரும் கண்மூடிகளாக வாழவேண்டும் என்று எண்ணலாமா ? இவ்வாறு

எண்ணும் எண்ணங்களின் அடிப்படையில் நம்மை அறியாமல் ஒரு குறை இருக்கின்றது. அதனால்தான், உண்மை நெறியில் தலைப்பட்ட சான்றோர், உலகமே திருந்தி அமையவேண்டும், பொருட்குறை முதலான எந்தக் குறையும் தலைகாட்டாமல், எல்லாரும் இன்புற்று வாழும் நல்லுலகம் அமையவேண்டும் என்று விரும்பியிருக்கின்றார்கள் ; அதுவரையில் தம்மால் இயன்ற தொண்டு செய்யவேண்டும் என்றே தொண்டில் ஈடு பட்டிருக்கின்றார்கள்.

இன்னொரு வகையாகக் கண்டால், எந்த நாட்டிலாவது எப்போதாவது வள்ளல் பலர் வாழ்ந்தனர் என்றால், அந்த நாட்டின் பொருளாதார அமைப்பின் குறைபாட்டை அது காட்டியது என்று கொள்ளவேண்டும். ஓர் ஊரில் மருத்துவர் மலிந்திருந்தால், அந்த ஊர் நல்வாழ்வு பெறாமல் நோயால் வாடும் சூழல் அமைந்த ஊர் என்று எண்ணி இரங்கவேண்டும். ஒரு நாட்டில் சீர்திருத்த இயக்கங்களும் தொண்டர்களும் பெருகியுள்ள நிலை கேட்டால், அந்த நாட்டு மக்கள் மூடநம்பிக்கை பலவற்றிற்கு ஆளாகி அல்லல்படுகின்றார்கள் என உணர்ந்து வருந்த வேண்டும்.

ஆகவே, தொண்டுகளில் தலையான தொண்டு, வறுமையும் பாவமும் அறியாமையும் மூடநம்பிக்கையும் நாடி உதவுவது அன்று ; இவற்றிற்குக் காரணமான உலக அமைப்பை மாற்றுவதே ஆகும். வறுமை முதலியவற்றை ஈகை முதலிய வற்றால் ஒழிக்க முனைந்தால், அந்தத் தொண்டு ஓரளவே பயன்படும் ; ஒரு சிலர்க்கே பயன்படும் ; உலக இருளை நீக்க ஒரு வீட்டில் அல்லது சில வீடுகளில் விளக்கு ஏற்றுவது போதுமா ? இராக்காலத்தையே மாற்றிப் பொழுதுவிடியச் செய்து ஞாயிறு தோன்றிக் கதிர் பரப்பவேண்டாமா? ஒரு சிலர் உயரவும் பலர் தாழவும் காரணமான அமைப்பு

முறையினை மாற்றியமைக்கத் தொண்டு செய்வதே தலையான தொண்டு. மற்றத் தொண்டுகளும் தொண்டுகளே ; ஆனால் இதுவே அடிப்படையான தொண்டு ; நிலையான தொண்டு; உண்மைத் தொண்டு.

அந்த நல்லுலகம் அமைவதாக வைத்துக்கொண்டு, அப்போது இல்வாழ்க்கையின் நிலைமை எவ்வாறு இருக்கும் என்று எண்ணிப் பார்ப்போம். காதலர் இருவர் கணவனும் மனைவியுமாக இல்லறம் மேற்கொண்டு அன்பு வாழ்க்கை நடத்துவார்கள். நாடெங்கும் இப்படி இருவர் இருவராக இல்வாழ்க்கை நடத்துவோர் காணப்படுவார்கள். இவர்கள் பலர் சேர்ந்த அமைப்பே ஊராகவும், இப்படிப்பட்ட ஊர்கள் பல சேர்ந்த அமைப்பே நாடாகவும் விளங்கும். இவர்களுக்கு உறைவிடமும் உணவும் உடை முதலியனவும் பங்கிட்டு அளித்துக் காப்பாற்றும் முறைக்கே ஆட்சிமுறை என்று பெயர் இருக்கும். அந்த ஆட்சி முறையில் இவர்கள் எல்லோருக்கும் பொறுப்பும் பங்கும் இருக்கும். ஆகவே, மக்களின் இல்வாழ்க்கைக்குத் துணை செய்யும் நாட்டாட்சி நன்கு நடக்கவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியே கல்வியின் முதல் நோக்கமாகவும் ஒழுக்கத்தின் முதல்படியாகவும் இருக்கும். அந்த நல்லுணர்ச்சியின்படி இவர்களில் ஒவ்வொருவரும் தம் தம் பங்குக்குரிய தொழிலைத் தவறாமல் செய்து முடிப்பார்கள் ; அந்தத் தொழில் உடலுழைப்பாகவும் மூளையுழைப்பாகவும் இருக்கும் ; எந்தக் கடமையானாலும் எத்தகைய தொழிலானாலும், உழைப்பை எல்லோருக்கும் பங்கிட்டளிக்கும் நல்ல முறை இருக்கும் ; அதனால், பொறாமைக்கோ, போலியுயர்வுக்கோ, சோம்பலுக்கோ, பேராசைக்கோ இடமில்லாமல், உழைத்தல் கடமை, வாழ்தல் முறைமை என்ற பொது உணர்ச்சி நிலவும். அந்த நிலையில் காதலர்க்கு நாட்டிலும் ஒரு

தக்க இடம் இருக்கும் ; வீட்டிலும் தக்க உரிமை இருக்கும். வீட்டில் வாழும் உரிமையை நினைந்து இன்புற்று, நாட்டுக் கடமையை ஊக்கத்துடன் செய்யும் வழக்கம் இயற்கையாகிவிடும்.

திருவள்ளுவர் கூறும் காமத்துப்பாலில் இத்தகைய நல் லுலகையும் அதில் வாழும் காதலரையும் காண்கின்றோம். அன்பை அடிப்படையாகக் கொண்ட உறவையே காதலரிடையே காண்கின்றோம். அன்பிற் சிறந்த காதலர் இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத வாழ்க்கைத் துணையாக அமைகின்றார்கள். ஒருவர் பிரிந்தால் மற்றொருவர்க்கு வாழ்க்கை இல்லை என்று உணரக்கூடிய அளவுக்கு உறவு வளர்கின்றது. "உடம்புக்கும் உயிருக்கும் எவ்வளவு உறவோ அவ்வளவு உறவு எனக்கும் என் காதலிக்கும்" என்று காதலன் உணர்கின்றான். ஒரு கை விட்டுப் பிரிந்து நிற்பதாக எண்ணுவதே துன்பமாக இருக்கின்றது. இவ்வாறே மற்ற உறுப்புக்களும் இன்றியமையாத பிணைப்பு உடையனவாக இருக்கின்றன. உடம்பு முழுதும் நீங்குவதோ வாழ்க்கையின் முடிவேதான். உடம்பு இல்லையானால் உயிர்க்கு வாழ்க்கை இல்லை. உயிர் இல்லையானால் உடம்புக்கு உணர்ச்சி இல்லை. காதலர் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியும் பிரிவும் இப்படிப் பட்டதே. "உயிர்க்கு வாழ்க்கை என்பது எத்தகையதோ, அத்தகைய உறவு உடையவள் என் காதலி எனக்கு. அவள் பிரிவோ, உயிர்க்குச் சாக்காடு எப்படி இருக்குமோ அப்படித் தான் உள்ளது" என்று காதலன் உணரும் உணர்வும் இதை விளக்குகின்றது.

உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. (1122)

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை ; சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. (1124)

அன்பின் ஐந்திணை

உலகத்தில் நன்மை தீமைகளைப் பிரிக்க முடியாததுபோல் காமத்தையும் காதலையும் பிரிப்பதும் அருமையே. நன்மையான செயலில் சிறு தீமையும் கலந்திருக்கிறது. தீமையில் சிறு நன்மையும் கலந்திருக்கிறது. அது போலவே, காமுகரான கணவன் மனைவி வாழ்க்கையிலும் சிறிதளவு காதல் காணலாம்; காதலர் வாழ்க்கையிலும் காமம் காணலாம்.

காமம் காதல் என்னும் சொற்களுக்குப் பழங்காலத்தில் ஒரே பொருள் இருந்துவந்தது. இன்று காமம் வேறு, காதல் வேறு என்று தெளிவாகிவிட்டது. காமம் தன்னலமானது, உடம்பே காரணமாக எழும் ஆசை; காதல் தன்னலம் அற்றது, உள்ளம் காரணமாக வளரும் அன்பு.

வாழ்க்கையைத் தொடங்கும் நிலையில் காமுகர் காதலர் என்று பிரித்தறிவது இயலாது. தொடக்கத்தில் ஒரே தன்மை காணப்படும். வளர்ச்சியிலேயே வேறுபாடு உண்டு. ஆண் பெண் உறவு என்பது தொடக்கத்தில் ஒரு செடியாய் முளைத்து எழுவது. அப்போதே அதனிடத்தில் இரண்டு கிளைகள் உண்டு. ஒரு கிளை காமம், உடல் பற்றிய கவர்ச்சி; மற்றொரு கிளை காதல்; உள்ளம் பற்றிய கவர்ச்சி. இந்த இரு கவடுகளும் எல்லோருடைய வாழ்க்கையிலும் உண்டு.

வளர வளர இந்த இருகிளைகளுள் ஒன்று மட்டும் செழித்து ஓங்க, மற்றொன்று வளர்ச்சியின்றி மெலிந்து நின்று பட்டுப்போகும். நல்ல பண்புகள் நிறைந்த கணவனும் மனைவியுமாயின், காதல் கிளை செழித்து வளரும்; காமக்கிளை செழிக்காமல் போகும்; பண்பாடு இல்லாதவர்களாயின், காமக் கிளையே வளர்ந்தோங்கும்; காதல் பட்டுப்போகும்.

பண்பாடு இல்லாதவர்கள் வாழ்க்கையில் காதல் செழிக்காத குறையால் அன்புவாழ்க்கை, தன்னலமற்ற தியாக

வாழ்க்கை, ஒருவன் ஒருத்தி என்ற கற்பு வாழ்க்கை இவற்றைக் காண முடியாது. அவர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்துப் பிரிவர்; பிரியாவிடினும் வெறுத்து வாழ்வர். வேறு ஆணிடத்திலோ பெண்ணிடத்திலோ உறவு கொள்ளவும் முயல்வர்; அந்த உறவில் இருவகை உண்டு. தம்மை விரும்பாதவரிடத்திலும் தாமே வலிந்து உறவு கொள்வது; அதனை ஒருதலைக் காமம் அல்லது கைக்கிளை என்று சான்றோர் ஒதுக்கினர். மற்றொன்று: தம்மை ஒருசிறிது விரும்புவாரிடத்தில் உறவு கொள்வது. அது ஒத்த அன்பு அன்று. ஆகையால், அதனைப் பொருந்தாக் காமம் அல்லது பெருந்திணை என்று சான்றோர் ஒதுக்கினர்.

திருவள்ளுவர் காமத்துப்பாலில் ஒருதலைக் காமத்தையோ பொருந்தாக் காமத்தையோ கூறவில்லை. 'அன்பின் ஐந்திணை' என்று சான்றோர் புகழ்ந்த ஒத்த அன்புடைய காதலர் வாழ்க்கையையே கூறுகின்றார்.

அத்தகைய காதலர் வாழ்க்கையில் பிரிவு நேரும்போதும் மீண்டும் மீண்டும் அந்த ஒத்த அன்பே எதிர்பார்க்கப்படுகின்றது. இதைப் பிரிவாற்றாமல் வருந்தும் காதலியின் சொற்களால் அறியலாம். "காதலர் பிரிந்தாலும் பிரியலாம்; பிரிவால் வருந்துவதாயினும் வருந்தலாம். ஆனால் தாம் காதலரை விரும்புவது போலவே, காதலரும் தம்மை விரும்பவேண்டும். அத்தகைய ஒத்த அன்பு வாய்க்கப் பெற்றவர்கள், காதலர் பிரிந்தாலும் மீண்டுவருவர் என்று செருக்கோடு வாழும் தகுதி உடையவர்கள். அவ்வாறு இல்லாமல், நாம் மட்டும் அவரைக் காதலிக்கின்றோம்; அவர் நம்மேல் காதல் கொள்ளாதபோது, பயன் என்ன? காதல் என்பது ஒரு சார்பாக இருப்பது துன்பமே. காவடி தாங்கும் இருபுறம் போல, இருசார்பிலும் ஒத்த வேட்கை இருந்தால்தான் காதலும் சிறப்புறும். தாம் விரும்

பும் காதலரிடமிருந்து ஓர் இன்சொல்லாவது பெற்ருல்தான் பிரிவாற்ருமல் வருந்தினலும் உயிர்வாழ முடியும். ஓர் இன் சொல்லும் பெருமல் உயிர்வாழ்கின்றவர்களைப் போல் கல்நெஞ்சம் உடையவர்கள் உலகத்தில் இல்லை. பிரிவால் வருந்தும் துணைவியரை நினைந்து உணர்ந்து காதலர் மீண்டு வந்து அன்பு செய்வார்களானல், அவர்களுடைய அன்புக்கு ஈடு உண்டோ? மழையை நோக்கி உயிர் வாழ்கின்றவர்களுக்கு மழை பெய்து காக்கும் அருளைத்தான் அதற்கு ஒப்பாகச் சொல்ல வேண்டும்" என்று காதலி கூறும் மொழிகளில், காதலர் வாழ்க்கையில் பிரிவின்போதும் ஒத்த அன்பே வேண்டும் என்று ஏங்கும் ஏக்கத்தைக் காணலாம்.

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. (1193)

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. (1195)

ஒருதலையான் இன்னுது காமம்;காப் போல
இருதலை யானும் இனிது. (1196)

வீழ்வாரின் இன்சொல் பெருஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். (1198)

வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. (1192)

ஒத்த உருவும் திருவும் பருவமும் பண்பும் உடைய ஒருவனும் ஒருத்தியும் தம்முள் கண்டு மயங்குகின்றனர். அந்த மயங்கிய உள்ள நிலையைத் தலைவனை புலப்படுத்துகின்ருன். "அணங்கோ, மயிலோ, மங்கையோ" என்று அவன் நெஞ்சம் மயங்குகின்றது.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. (1081)

தலைவியின் அழகு மட்டும் அவனுடைய நெஞ்சைக் கவரவில்லை. உடலழகு மட்டும் கவரும் கவர்ச்சி உயர்ந்த கவர்ச்சி அன்று; மக்கள், விலங்கு பறவைகளைவிட உயர்ந்துநிற்பவர்கள் ஆகையால், உடலின் கவர்ச்சியோடு நிற்பது இல்லை. உள்ளம் கவரும் கவர்ச்சியே சிறப்பைத் தருவது. முதலில் தலைவன் தலைவியின் உடல் வனப்பைக் கண்டு மயங்கினான் என்றாலும், அவளுடைய உள்ளத்துக் கவர்ச்சியையே எதிர்பார்த்து நிற்கின்றான்; அதையும் பெறுகின்றான். "அந்த அழகி என் பார்வைக்கு எதிரே பார்க்கின்றாள்; அதுதான் என் வருத்தத்தை வளர்க்கின்றது. அந்த வருத்தம் எவ்வளவு? கூற்று என்று சொல்கின்றார்களே, அதன் செயல் போல் உள்ளது. பெண் தன்மையோடு அவளுடைய கண்கள் வருத்தும் வருத்தத்தில் அதை உணர்கின்றேன். அந்தக் கண்கள் கண்டவரின் உயிரை உண்ணும் தன்மை பெற்றிருக்கின்றன" என்கின்றான்.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. (1082)

பண்டறியேன் கூற்றென் பதனை இனிஅறிந்தேன்
பெண்டகையான் பேரமர்க் கட்டு. (1083)

கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தான் பெண்டகைப்
பேதைக்கு அமர்த்தன கண். (1084)

பார்வையின் கொடுமையை மட்டும் தலைவன் கண்டு நிற்கவில்லை. அதன் அழகையும் காண்கின்றான். அதனோடு பெண்தன்மையை எடுத்துக்காட்டும் நாணம் என்னும் பண்பையும் காண்கின்றான். கண்ணழகும் நாணழகும் உள்ளபோது, வேறு அணிகலன்களை அணிவது ஏன் என்று வியந்து எண்ணுகின்றான்.

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து? (1089)

இவ்வாறு தலைவன் காணும் கண்களில் வெறும் புறத் தோற்றத்தை மட்டும் கண்டு நிற்கவில்லை; கருமணியும் செவ்வரியும் காண்பதாகத் தலைவன் கூறவில்லை. அந்தப் பார்வையையே கண்டு வருந்துகின்றான்; வியக்கின்றான். கண்ணின் புறத்தோற்றத்தில் தலைவியின் உள்ளம் வெளிப்படுவதில்லை; கண் நோக்கும் நோக்கில்தான் அவளுடைய உள்ளம் வெளிப்படுகின்றது; அதனால்தான் கண்பார்வையோடு பெண்தன்மையும் கலந்து வருத்துவதாகக் கூறுகின்றான்; கண்பார்வையோடு நாணமும் கலந்து அழகு விருந்து அளிப்பதாகக் கூறுகின்றான். இவ்வாறு அவன் தலைவியின் கண்களில் காண்பது அவளுடைய உள்ளத்தையே; உள்ளத்தின் கவர்ச்சியையே.

திருக்குறளில் இருமுறை வரும் அதிகாரப் பெயர் ஒன்று உள்ளது. அதுவே குறிப்பறிதல் என்பது. பொருட்பாலில் அங்கவியலிலும் குறிப்பறிதல் உண்டு. காமத்துப்பாலில் களவியலிலும் அது உண்டு. பொருட்பாலில் குறிப்பறிதலை விளக்கும் திருவள்ளுவர், நெஞ்சம் கடுத்ததைக் காட்டுவது முகமே என்றும், அந்த நெஞ்சக் குறிப்பை அளந்தறிவது கண்ணே என்றும் கூறுகின்றார்.

> **அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
> **கடுத்தது காட்டும் முகம்.** (706)
> **குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்**
> **என்ன பயத்தவோ கண்.** (705)

அந்த அதிகாரத்தில் இறுதியாக இரண்டு குறளில், உள்ளத்தில் உள்ள பகையையும் நட்பையும் (வெறுப்பையும் விருப்பையும்) கண்ணே சொல்லிவிடும் என்றும், உள்ளக் கருத்தை நுட்பமாக அளந்தறியும் கருவியாகப் பயன்படுவது கண்ணே என்றும் தெளிவாக்குகின்றார்.

பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். (709)

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற. (710)

பிறனுக்கு உரியவளைத் தான் பெற விரும்புவது கொடுமை; தன்னை விரும்பாத ஒருத்தியைத் தான் விரும்புவது கயமை ; தன்னைப் பற்றி அறியாத ஒருத்தியைத் தான் அறிந்து நாடுவது குற்றம் ; தன்னைப் புறக்கணிக்கும் ஒருத்தியைத் தான் நாடி நிற்பது பேதைமை ; தன்னை வெறுத்து ஒதுக்கும் ஒருத்தியைத் தான் நினைந்து வருந்தி உடைவது ஆண்மைக்கு இழுக்கான கோழைத்தன்மை : இவற்றை நன்கு உணர்ந்தவன் தலைவன். ஆகையால் தொடக்கத்தில் ' அணங்கோ மயிலோ மங்கைபோ ' என்னும் அளவில் உடல் கவர்ச்சியால் மயங்கினாலும், அதன் பிறகு தலைவியின் கண்களின் வாயிலாக உள்ளக் கவர்ச்சியும் பெற்ற பிறகே வருந்தத் தொடங்கினான்; அவளும் தன்னை விரும்புகின்றாள் என்று அறிந்த பிறகே தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிடுகின்றான். இதை அறிவிப்பதே காமத்துப்பாலில் அமைந்த குறிப்பறிதல் என்னும் பகுதி. தலைவி விரும்புவதை அறிந்தே தலைவனும் விரும்புகின்றான் என்னும் ஒத்த அன்பை இந்தப் பகுதி விளக்குகின்றது.

" இவளிடம் உள்ள நோக்கு இருவகை ; ஒன்று எனக்குத் துன்பம் தருகின்றது ; மற்றொன்று அதற்கு மருந்தாக நின்று அந்தத் துன்பத்தைத் தீர்க்கின்றது. யான் காணாதபோது என்னைக் கண்டு களவு கொள்கின்ற சிறு நோக்கம் இவளிடம் உள்ளது. யான் காணாதபோது கண்டு, ஏதோ கருத்தை உட்கொண்டு நாணி இறைஞ்சுகின்றாள் ; அதுதான் எங்களிடையே அன்பை வளர்க்கும் நீராகின்றது. யான் நோக்கும்போது தான் எதிர்நோக்காமல் நாணித் தலை

குனிந்து நிலத்தை நோக்குகின்றாள். யான் நோக்காதபோது என்னை நோக்கித் தனக்குள் மகிழ்கின்றாள்" என்று அவளுடைய உள்ளக் குறிப்பைக் கண் வாயிலாக அளந்தறிகின்றான்.

> இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
> நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. (1091)
>
> கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
> செம்பாகம் அன்று பெரிது. (1092)
>
> நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
> யாப்பினுள் அட்டிய நீர். (1093)
>
> யானோக்குங் காலை நிலன்நோக்கும் ; நோக்காக்கால்
> தான்நோக்கி மெல்ல நகும். (1094)

ஒருவனுக்கும் ஒரு பொருளுக்கும் உள்ள உறவு ஐந்து வகைப்படும் : அவன் அந்தப் பொருளைப் பெற்று மகிழ்தல் ; அந்தப் பொருளைப் பிரிந்து வருந்துதல் ; இழந்த பொருளை மீண்டும் பெறமுடியும் என்று நம்பிக்கையோடு இருத்தல் ; மீண்டும் பெறமுடியாது என்று நம்பிக்கை இழந்து துயருறுதல் ; அந்தப் பொருள் தன் கருத்திற்கு இசையத் தன்னிடம் அமையாதபோது அதனோடு உரிமைகொண்டு போராடுதல். இந்த ஐவகை உறவே காதலர் இருவர்க்கும் உள்ள காதலினும் உண்டு. அவை யாவன : காதலர் கூடியிருந்து மகிழ்தல் அல்லது குறிஞ்சி ; பிரிந்து வருந்துதல் அல்லது பாலை ; பிரிந்த பிறகு மீண்டும் கூடுவோம் என்று நம்பிக்கையோடு இருத்தல் அல்லது முல்லை ; பிரிந்த பிறகு மீண்டும் காணும் நம்பிக்கை இழந்து சோர்ந்து துயருறுதல் அல்லது நெய்தல் ; அன்பு மறந்து பிரிந்து மீண்டுவந்தபோது உரிமையோடு ஊடுதல் அல்லது மருதம்.

இந்த ஐவகை உறவையே இருவகையாக அடக்கிக் கூறலாம். கூடுதல் அல்லது குறிஞ்சி, பிரிதல் அல்லது பாலை என இரு பெரும் பிரிவாக்கலாம். இந்த இரண்டையுமே திருவள்ளுவர் விளக்கமாகக் கூறிச்செல்கின்றார். களவியலில் காதலர் கூடும் ஒழுக்கத்திற்கு உரிய பகுதிகளைக் கூறுகின்றார். கற்பியலில் காதலர் பிரிவாற்றாது வருந்தும் வருத்தத்தைக் கூறுகின்றார். நம்பிக்கையோடு இருந்தலாகிய முல்லை பற்றியும், நம்பிக்கை இழந்து இரங்குதலாகிய நெய்தல் பற்றியும் திருவள்ளுவர் தனித்தனியே விளக்காமல், பாலையாகிய பிரிவிலேயே அடக்கிக் கூறுகின்றார். பிரிந்து மீண்ட போது ஊடுதலாகிய மருதம் பற்றி இறுதியில் கூறுகின்றார்; அந்தப் பகுதியில் அவர் பெரிய சீர்திருத்தமும் செய்துள்ளார்.

காதலர் ஒருவரை ஒருவர் பெற விழைந்த வேட்கையில் உள்ள தூய்மையைக் காட்டுவதே களவியலில் திருவள்ளுவர் நோக்கம். காதலர் ஒருவர்க்கு ஒருவர் இன்றியமையாதவராய் அன்பால் பிணைப்புண்டிருத்தலை விளக்குவதே கற்பியலில் திருவள்ளுவர் நோக்கம். அதனால் களவியலில் குறிஞ்சித்திணை கூறுகின்றார்; கற்பியலில் பெரும்பாலும் பாலைத்திணை கூறுகின்றார்; சிறுபான்மை மற்றத் திணையும் உடன் கூறுகின்றார்.

மருதத்திணை

மருதத்திணையைச் சங்க நூல்களாகிய அகநானூறு முதலியவை கூறும் முறை வேறு; திருவள்ளுவரின் நூல் கூறும் முறை வேறு. திருவள்ளுவர் கூறும் மருதத்தில் பரத்தை என ஒருத்தி இல்லை; தலைவன் பரத்தையை நாடிச் செல்வதும் இல்லை. மற்ற நூல்களில் பரத்தையும் உண்டு; பரத்தையோடு தலைவன் களிப்பதும் உண்டு. பொருள் காரணமாக மகளிர் சிலர் ஒழுக்கத்தை விற்பதும் கூடாது, ஒழுக்கமற்ற

அந்த மகளிரை ஆடவர் நாடுவதும் கூடாது என்று பொருட்பாலில் வன்மையாகக் கடிந்தவர் திருவள்ளுவர்; வரைவின் மகளிர் என்ற அதிகாரம் திருவள்ளுவரின் சீர்திருத்தத்தை விளக்குவது. அக்காலத்து நூல்களில் எல்லாம் இடம் பெற்று வந்த பரத்தையர்க்குத் திருக்குறளில் நல்ல இடம் இல்லை; வேண்டா என்று கடியப்படும் இடமே கிடைத்தது. ஆதலின், திருவள்ளுவர், மருதத் திணைக்கு முன்னோர் வகுத்தோதிய இலக்கணத்தையும் புறக்கணித்துப் பரத்தையர்க்குக் காமத்துப்பாலில் இடம் இல்லாமல் செய்தார்; நூலோர் மரபையே கடந்து புது வழி வகுத்தார்.

காமத்துப்பாலில் திருவள்ளுவர் கூறும் காதலரிடையே ஊடல் உள்ளது. காதலி ஊடுகின்றாள்; காதலன் தவறு செய்ததாகக் கற்பனை செய்துகொண்டு விளையாட்டாக ஊடுகின்றாள்.

காதலி காதலனை நோக்கி, "எல்லாப் பெண்களும் கண்ணால் உன்னைக் கண்டு உன் அழகை நுகர்கின்றார்கள். ஆகையால் நீ கற்பு இல்லாதவன். உன்னை நான் நெருங்கமாட்டேன்" என்கின்றாள்.

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. (1311)

காதலன் ஒரு மாலையைச் சூடிச் சென்றான். அந்த மாலை வேற்று நிலத்துக் கோட்டுப் பூக்களால் ஆகியது. அதைக் காதலி கண்டதும் ஊடுகின்றாள்; "உன் காதலி யாரோ ஒருத்திக்கு இந்த அழகைக் காட்ட வேண்டும் என்றுதான் சூடியிருக்கின்றாய்" என்று ஊடுகின்றாள்.

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. (1313)

காதலன் அன்பு மிகுதியால், "காதலர் யாவரையும்விட நாம் காதல் மிகுந்தவர்களாக இருக்கின்றோம்" என்றான். "நீ பல மகளிரைக் காதலிக்கின்றாயோ? அவருள் என்னிடம் அன்பு மிகுதியோ? என்னைப் போன்ற காதலியர் பலர் உளரோ? அதனால் யாரையும்விடக் காதல் மிகுதி என்றாயோ? அவர்கள் யார்? யாரைவிட? யாரைவிட?" என்று கேட்டு ஊடுகின்றாள்.

யாரினும் காதலம் என்றேனா; ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. (1314)

"இந்தப் பிறப்பில் நாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய மாட்டோம்" என்றான் காதலன். "அப்படியா? இந்த ஒரு பிறப்புத்தானா? மறு பிறப்பில் பிரியக் கருதிவிட்டாயா?" என்று ஊடிக்கொண்டே காதலி கண்ணீர் கலங்குகின்றாள்.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். (1315)

"பிரிந்து சென்றிருந்தபோது உன்னை அடிக்கடி நினைந்தேன்" என்றான் காதலன். "பிரிந்தவுடன் என்னை மறந்து விட்டாயா? மறந்ததால்தான் மீண்டும் நினைக்க நேர்ந்தது. என்னை மறந்துவிட்டாயே" என்று சொல்லிக் காதலி ஊடுகின்றாள்.

உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். (1316)

ஊடல் நீடிக்கின்றது. காதலனுக்குத் தும்மல் வருகின்றது; தும்முகின்றான். வழக்கம்போல் காதலி "நூறு ஆண்டு வாழ்க" என்று தும்மல் கேட்டு வாழ்த்துகின்றாள். ஆனால் இவ்வாறு தன் வாயால் வாழ்த்துப் பெறவேண்டும் என்றும் ஊடலை முடிக்கவேண்டும் என்றும் வேண்டுமென்றே காதலன்

செயற்கையாகத் தும்மியதாக எண்ணுகின்றாள். ஊடல் முடிவது போய் மிகுதியாயிற்று. அடுத்த நொடியில் அவள் மனத்தில் வேறோர் எண்ணம் தோன்றியது. "யாராவது நினைத்தால்தான் ஒருவர்க்குத் தும்மல் வரும் என்று சொல்வார்கள். இப்போது இவரை யார் நினைத்திருப்பார்கள்? நினைக்கும் உரிமை உடையவள் நான் ஒருத்திதான் என்று எண்ணியிருந்தேனே! இன்னும் யாரோ ஒருத்தி இவருக்குக் காதலியாக இருக்கவேண்டும். அவள் நினைத்ததால்தான் இவருக்குத் தும்மல் வந்தது" என்று எண்ணி, காதலனை நோக்கி, "யார் நினைக்கத் தும்மல் வந்தது?" என்று கேட்டு ஊடுகின்றாள். இதை உணர்ந்த காதலன் அடுத்த தும்மலை வெளிப்படுத்தாமல் அடக்கிவிட முயல்கின்றான். அதை அறிந்த காதலி, "தெரிந்துவிட்டது, தெரிந்துவிட்டது. உன் காதலி நினைக்கின்றாள் என்பது எனக்குப் புலப்படாதபடி மறைக்கின்றாய். அதனால்தான் தும்மலை அடக்குகின்றாய்" என்று சொல்லி அழுகின்றாள்.

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து. (1312)

வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று. (1317)

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. (1318)

காதலனிடத்தில் தவறு கண்டுதான் இவ்வாறு தலைவி ஊடுகின்றாளா? அவளையே கேட்போம். "அவரிடத்தில் தவறு இல்லை. ஆயினும் அவர் மேன்மேலும் செய்கின்ற அன்பு காரணமாகவே ஊடுகின்றேன். நிலமும் நீரும் போல் ஒன்றுபட்ட காதலர் வாழ்க்கையில் ஊடுவதே தனி இன்பமாக இருக்கின்

றது. தேவருலகம் அத்தகைய இன்பம் தருவதாகுமோ?" என்கின்றாள்.

இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர் அளிக்கு மாறு. (1321)

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (1323)

இந்த ஊடலுக்கு இயைந்து ஒழுகுகின்ற தலைவனைக் கேட்போம். "தவறு ஒன்றும் இல்லாத போதும் ஊடலுக்கு ஆளாகிக் காதலியை நெருங்க முடியாமல் சிறிது அகன்று நிற்கும்போது, ஒரு தனிச் சிறப்புடைய இன்பம் உள்ளது" என்கின்றான். "அவள் இன்னும் ஊடுவாளாக; ஊடும்போது யான் அவளுடைய அன்பை வேண்டி இரப்பேனாக; அவ்வாறு நீண்ட நேரம் இரக்குமாறு இராக்காலம் நீடிப்பதாக" என்கின்றான்.

தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து. (1325)

ஊடுக மன்னோ ஒளியிழை; யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. (1329)

தவறு கண்டு ஊடும் பகுதியும் திருவள்ளுவர் கூறுகின்றார். ஆனால் அது என்ன தவறு என்பதைக் கூறவில்லை. அது பரத்தையரிடம் காதலன் தங்கிவந்த காரணத்தால் நிகழ்ந்த ஊடல் என்று கூறுவதற்கு இடம் இல்லை. வெளியுலக வாழ்க்கையில் பல கடமைகளை மேற்கொள்ளும் காதலன் காதலியை மறக்காவிட்டாலும் மறந்ததுபோல் வாழ நேரும் நாட்கள் சில உண்டு. அத்தகைய நாட்களில், அவனுடைய அன்பு மாறியதாக எண்ணிக்கொண்டு காதலி ஊடுகின்றாள்.

இத்தகைய ஊடலில் காதலியின் மன உறுதியைக் காண்கின்றோம். ஆனால் அந்த மன உறுதியும் ஓரளவாகவே இருக்கின்றது. அன்புக்கு மாறான வகையில் தவறு செய்த போதிலும் காதலனைக் காணவேண்டும் என்றே காதலியின் கண்கள் நாடுகின்றன.

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். (1283)

காதலனுடைய தவற்றை நினைந்து ஊடவேண்டும் என்று சென்றாள். ஆனால் அவளுடைய நெஞ்சு அதை மறந்து கூட வேண்டுமென்று சென்றதாம். அவனை நேரில் காணாத போது தவறுகளே நினைவுக்கு வருகின்றனவாம். ஆனால் கண்டபோது அந்தத் தவறுகள் நினைவிலே நிற்பதில்லையாம். காதலிக்கு ஓர் உவமையும் நினைவுக்கு வருகின்றது. மைதீட்டுமுன் அஞ்சனக் கோலின் தன்மை நன்றாகக் கண்ணுக்குத் தெரிகின்றது. ஆனால் மைதீட்டும் நேரத்தில கண் அந்த அஞ்சனக் கோலைக் காண முடியவில்லை. அதுபோல், காதலனைக் காணாதபோது அவனுடைய தவறு தெரிகின்றதாம். கண்டபோது அது தெரிவதில்லையாம்.

ஊடற்கண் சென்றேன்மன் தோழி ; அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு. (1284)

காணுங்கால் காணேன் தவறாய ; காணாக்கால்
காணேன் தவறல் லவை. (1286)

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து. (1285)

காதலி தன் நிலைமையை எண்ணுகின்றாள். வெள்ளத்தின் ஆற்றலை அறிந்தும் அதில் பாய்ந்து அதை எதிர்க்க முடியாமல் அதோடு செல்பவரைப் போல் காதலின் ஆற்றலை

அறிந்தும் ஊட முயன்று தோற்கின்றேனே" என்று எண்ணு கின்றாள். காதலனை நோக்கி, "கள்வ! கள் இழிவும் தீமையும் விளைவிப்பது தெரிந்தும், குடிகாரர் மீண்டும் மீண்டும் கள்ளையே விரும்புவது போல், உன் தவறு அறிந்திருந்தும் மீண்டும் மீண்டும் உன்னையே விரும்புகிறேன்" என்கின்றாள்.

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து. (1287)

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. (1288)

அவள் ஊட எண்ணுவதையும் பிறகு அதை மறந்து கூட விரும்புவதையும் காதலன் கண்டு அவளுடைய அறிவுக்கும் உணர்வுக்கும் உள்ள போராட்டத்தை உணர்கின்றான். "கண்ணளவில் ஊடினவளாய்த் தோன்றி, என்னைவிட வேட்கை மிகுந்து கூட விரும்பிக் கலங்குகின்றாள்" என்கின்றான்.

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று. (1290)

காதலி உறுதியோடு இருந்து ஊடுகின்ற நிலைமையும் உண்டு. அப்போதும் காதலர் உள்ளம் எல்லை கடவாமல் காத்து நலம் புரியும். "உறுதியாக ஊடுகின்ற ஊடலிலேயே என் உள்ளத்தை நெக்குருகச் செய்ய வல்ல தன்மையும் இருக்கின்றது" என்று காதலி கூறுகின்றாள்.

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை. (1324)

காதலனும் அவளிடம் இத்தகைய உறுதியையும் பிறகு நெஞ்ச நெகிழ்ச்சியையும் கண்டு வியப்படைகின்றான். காதலின்பம் மலரைவிட மென்மையானது என்றும், இந்த

உண்மையை உணர்ந்து பயனடைய வல்லார் சிலரே என்றும் கூறுகின்ருன்.

> மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
> செவ்வி தலைப்படு வார். (1289)

திருவள்ளுவர் இவ்வாறு ஊடலைக் கூறியும் பரத்தையர் சேரி, பரத்தையர் வாழ்க்கை, தலைவன் புறத்தே செல்லுதல், புனல் விளையாட்டு, ஆடல்பாடல், களியாட்டம், விழா, மணம் முதலியவற்றைக் கூருமல் விடுத்தது ஏன்? மருதத்திணை கூற வந்தவர், மரபாகக் கூறத் தக்கவைகளுள் பலவற்றைக் கூருமல் விட்டது ஏன்? அதுதான் திருவள்ளுவரின் உயர்ந்த மனப் பான்மையைத் தெரிவிப்பது.

> ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
> வழுக்கியும் வாயால் சொலல். (139)

தன்னை மறந்தும் தீயசொல் வாயில் பிறக்காமல் காக்க வேண்டும் என்று ஒழுக்கக் கடமையை வற்புறுத்துகின்றவர் திருவள்ளுவர். வரைவின் மகளிரோடு உறவுகொள்வது தீது என்று அடித்தவர், அதை விளக்கி எழுத மனங்கொள் வாரோ?

நன்மை தீமை இரண்டையும் ஆராய வேண்டும், ஆராய்ந்து நல்லவை கொண்டு தீயவை தள்ள வேண்டும் என்பது ஆராய்ச்சி யாளர் கொள்கை. ஆனல் அறவோர் இதற்கு உடன்படுவ தில்லை. நன்மை தீமை என்று பகுத்தறிவதே போதும், நன்மையை மட்டும் போற்றிப் பாராட்டித் தீமையைத் திரும்பப் பேசாமல் விடவேண்டும் என்பதே அறவோரின் கொள்கை. தீமையைக் காண்பது, கேட்பது, ஆராய்வது இவற்றை அறிவு வளர்ச்சிக்காகவும் மேற்கொள்ளக் கூடாது என்று அறவோர்

கடிவது வழக்கம். ஏன் ? புலன்கள் கீழ்ப்படியிலிருந்து படிப் படியாக முன்னேறி மேல்நிலைக்கு வருபவை. விலங்கு நிலையி லிருந்து மக்கள் நிலையை எட்டி உயர்பவை. ஆகையால், அவைகள் தீமையோடு பழகிய பழக்கம் உள்ளவை ; நன்மையை அடைய முயல்பவை. அதனால் தீமையை எளிதில் கற்றுக்கொள்வதுபோல் நன்மையைக் கற்பதில்லை. தீமையைக் கற்றபின் மறப்பது முடியாது. நன்மையைக் கற்றாலும் எளி தில் மறந்துவிடலாம். பரத்தையரின் நட்பு முதலியவற்றை ஆராய்ச்சி என்னும் காரணத்திற்காகக் கற்பதும் புலன்களைக் கெடுப்பதற்கே தூண்டுதலாகும். இந்த உண்மையை அறிந்தே, நாடகம் முதலிய கலைகளில் தீய காட்சிகளை நீக்கி அமைக்க வேண்டும் என்று சான்றோர் வற்புறுத்திவருகின்றனர். ஆனால் நாடகம் முதலிய கலைகளில் தீமையை அறவே விலக்க முடியாது. இலக்கியம் என்னும் அருங்கலை ஒன்றுதான் தீமையை அடியோடு விலக்கி நன்மையை வற்புறுத்த வல்லது. அன்றியும், நாடகம் முதலிய கலைகளில் புலன்களுக்கு வேலை மிகுதி ; அறிவைவிட உணர்வுக்கு இடம் மிகுதி. ஆனால் இலக்கியக் கலையிலோ புலன்களுக்கு வேலை குறைவு ; அகக் கண்ணாகிய மனத்திற்கு வேலை மிகுதி ; உணர்வைப் போலவே அறிவுக்கும் இடம் உண்டு. அதனால் இலக்கியக் கலையைப் பொறுத்த வரையில் ஒழுக்கக் கேட்டிற்கு இடம் இல்லை. எழுதும் ஆசிரியரும் தூய்மையைக் காக்கின்றார் ; கற்கும் மாணவரும் தூய்மையைப் பெறுகின்றார் ; திருவள்ளுவர் மருதத் திணையைக் காமத்துப் பாலில் அமைக்க முன்வந்த போது, இந்த உண்மையை உணர்ந்து, தீமையை விளக்காமல் விலக்கி, நன்மையை மட்டும் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார் ; பரத்தையர் உறவைக் கூறாமல் விட்டு, காதலியின் ஊடலால் விளங்கும் உரிமையை மட்டும் எடுத்துரைத்திருக்கின்றார்.

இன்ப துன்பம்

பெற்ற தாயின் நோயைக் கண்டு ஒருவன் படும் துன்பத்தைவிட, தன் மனைவியின் நோயைக் கண்டு அவன் படும் துன்பம் மிகுதியாகும். தன் நண்பன் உற்ற இன்னலைக் கண்டு உறும் துயரத்தைவிட, மனைவி உற்ற இன்னலைக் கண்டு துயருறுவது பல மடங்கு மிகுதியாகும். உடன்பிறந்தார்க்கு இடுக்கண் உற்றபோது மனம் உருகுவதைவிடப் பல மடங்கு மிகுதியாக மனைவிக்கு இடுக்கண் உற்றபோது உருகுகின்றான். சுருங்கக் கூறினால், உலகத்தில் ஒருவன் மற்றவர்களுக்காக விடும் கண்ணீர் குறைவு ; ஆனால் தன் துணைவிக்காக விடும் கண்ணீரே மிகுதி. அதுபோலவே, ஒருத்தி தன் கணவனுக்காக உருகிவிடும் கண்ணீருக்கு நிகர் இல்லை. பெற்ற மக்களுக்காக அவனும் அவளும் சொரியும் கண்ணீரும் அவற்றிற்கு அடுத்த நிலையிலேயே வைத்து எண்ணப்படும். பெற்ற மக்களிடத்தில் இவ்வளவு உருக்கம் இருப்பதற்கும் காரணம், தாம் ஒருவர் மற்றொருவரிடத்தில் செலுத்திவந்த அன்பின் விளைவே எனலாம் ; ஏன் எனில், பெற்ற மக்களிடத்தில் கணவனும் மனைவியும் தம்மையே காண்கின்றார்கள் ; அவர்களைத் தம் உடலின் பகுதிகளாகவும் தம் உயிரின் பகுதிகளாகவும் உணர்கின்றார்கள். அத்தகைய உணர்வால் வளர்ந்த அன்பும் மக்கள் வயது ஏறி வளர வளர ஒருவாறு குறைகின்றது. ஆனால் காதலர் வாழ்க்கையில் என்றும் குன்றாத அன்பும் நெகிழ்ச்சியுமே காணப்படும்.

இத்தகைய சிறப்புக்குக் காரணம் என்ன ? காதலர் உறவில்தான் முழுமனமும் அன்புருவாய் நின்று உருகிப் பயில்கின்றது. மனம் என்பது என்ன ? கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலன்களின் தலைமை நிலையம் அன்றோ ? மற்றவர்களிடம் பழகும்போது ஐம்புலன்களும்

ஒருங்கே உணர்வது இல்லை. சிலரிடம் கண்ணும் சிலரிடம் காதுமாகப் பயின்ற பயிற்சியாகவே பெரும்பாலும் நிற்கின்றது. பெற்ற மக்களிடத்தில் இந்தப் பயிற்சி மிகுதியாக உள்ளது. அதனால் மற்றவர்களிடம் செலுத்தும் அன்பைவிட மக்களிடத்தில் செலுத்தும் அன்பு மிகுதியாக உள்ளது. ஆயினும் ஐம்புலனுணர்வாய் மனம் முழுதும் ஒருங்கே பாயும் அன்பு காதலரின் காதலில்தான் உள்ளது. காதல் ஒன்றே முழுமனப் பயிற்சி நல்குவது. அதனால் காதலர் நெக்குருகும் நெகிழ்ச்சிக்கு ஈடும் இல்லை; எடுப்பும் இல்லை.

கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரிடம் கொண்ட பேரன்பின் முதிர்ந்த நிலைமையைக் குறிக்க நேர்ந்தபோது 'காதல் கிழமை' என்றே குறிப்பிட்டான். கடவுளன்பர்களும் இறைவனிடத்தில் கொண்ட பேரன்பைக் குறிக்க நேர்ந்த போது "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று விளக்கியுள்ளனர். மாணிக்கவாசகர், நம்மாழ்வார் முதலானவர்கள் தம் பக்தியைப் புலப்படுத்த வேறு சொற்கள் இல்லையாகலின், காதலுலகத்துச் சொற்களையே பயன்படுத்தியுள்ளனர். தாயுமானவர் போன்ற மெய்யுணர்வாளரும் தம் வேட்கையைப் புலப்படுத்த நேர்ந்து உவமை நாடியபோது, "காதல் மிகும் அணியிழைபார் என வாடுற்றேன்" என்று காதலுலகத்தையே உவமையாக்கிக் கூறியுள்ளனர்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட் டாள்நங்கை தலைவன் தாளே.

(திருநாவுக்கரசர் தேவாரம்)

வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்
ஆயும் அமருலகும் துஞ்சினும்நீ துஞ்சாயால்
நோயும் பயலைமையும் மீதூர எம்மேபோல்
நீயும் திருமாலால் நெஞ்சம்கோட் பட்டாயோ?

(நம்மாழ்வார் திருவாய்மொழி)

மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மற்றுளஎலாம் உறங்கும்
கண்ணுறங்கேன் எம்இறைவர் காதலால் பைங்கிளியே.

(தாயுமானுர் பைங்கிளிக்கண்ணி)

இந்த அருள்மொழிகளை ஓதி உணர உணர, காதலுள்ளத்தின் தூய்மையும் அதைக் கொண்டு கடவுளன்பை அளந்தறியும் பெருமையும் இரண்டற்கும் உள்ள ஒற்றுமையும் நன்கு புலப்படும்.

காதல் இவ்வாறு மற்றத் துறைகளுக்கும் எடுத்துக் காட்டாக இருக்கும் சிறப்புக்குக் காரணம் காதலர் வாழ்வில் உள்ள முழுமன உணர்வே என்று கண்டோம். காதலர் கூடும் போது உணர்வது முழுமன இன்பமாகும். காதலர் பிரியும் போது உணர்வது முழுமனத் துன்பமாகும். திருவள்ளுவர் களவியலில் முன்னதை விளக்கியுள்ளார்: "கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் நுகரும் ஐம்புலனும் காதலியிடத்து உள்ளன. அவளைப் பெறுமல் வாடிய என் உயிர், பிறகு பெற்று உறும்போதெல்லாம் தளிர்க்கச் செய்ய வல்லன அவளுடைய தோள்கள். அவை அமிழ்தால் ஆக்கப் பட்டன. அறிவு வளர வளரப் பழைய அறியாமை காணப் படுவது போல், காதலியுடன் மகிழ மகிழக் காதல் காணப்படுகின்றது. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு எத் தன்மையானதோ, அத்தன்மையானது காதலிக்கும் எனக்கும் உள்ள நட்பு. அவளோடு வாழ்வது உயிர் உடம்போடு கூடி வாழ்வதைப் போன்றது. அவளைப் பிரிவது உயிர் உடம்

பிலிருந்து நீங்கிப் போவதைப் போன்றது" என்று காதலன் கூறுகின்றான்.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. (1101)

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலான் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். (1106)

அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. (1110)

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. (1122)

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து. (1124)

காதலர் பிரியும்போது உறும் துன்பத்தை மனமுழுதும் உணர்வதைக் கற்பியலில் காதலியின் வாயிலாகப் புலப்படுத்துகின்றார்: "தம்மவர் ஒருவரும் இல்லாத வேற்றாரில் வாழ்வது துன்பம்; காதலரைப் பிரிவது அதைவிடத் துன்பமானது. தீயும் தொட்டால் சுடுமே அல்லாமல், காதலைப் போல் பிரிந்தால் சுடும் கொடுமை இல்லையே. இந்தக் காதல் நோயைப் பிறர் அறியாதபடி மறைக்க முயல்கின்றேன்; ஆனால் ஊற்றுநீர் இறைக்க இறைக்க மிகுவது போல், நான் மறைக்க மறைக்க இது மிகுகின்றதே. ஒருபக்கம் காதல், மற்றொரு பக்கம் நாணம், இரண்டிற்கும் இடையில் இந்த மெலிந்த உடம்பில் என் உயிர் வாடி அழிகின்றது. பிரியாத நிலையில் காதல் விளைக்கும் இன்பம் கடல் போல் பெரியது; ஆனால், பிரிந்ததும் செய்யும் துன்பமோ அந்தக் கடலைவிடப் பெரியது" என்று காதலி வருந்துகின்றாள்.

இன்னாது இனனில்லூர் வாழ்தல்; அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. (1158)

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. (1159)

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். (1161)

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து. (1163)

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. (1166)

பிரிவுத் துன்பம் உள்ளத்தை அழிக்கின்றது ; உடம்பையும் அழிக்கின்றது. உடம்பு உற்ற துன்பத்தைக் கண் சொரியும் கண்ணீரால் அறியலாம் ; மேனி உற்ற பசலையாலும் காணலாம். இவற்றையும் திருவள்ளுவர் காதலி வாயிலாகவே விளக்குகின்றார்: “என் மனம் காதலர் உள்ள இடத்தை நாடிச் சென்றுவிடுகின்றது ; கண்கள் அவ்வாறு செல்ல முடியவில்லை ; அதனால்தான் வெள்ளமாகிய கண்ணீரில் நீந்துகின்றன. அன்று விரும்பி இழைந்து அவரைக் கண்டு உறவு கொண்டவை இந்தக் கண்களே. ஆகையால், இவை துயிலிழந்து துன்பம் உழந்து உழந்து நீரும் வற்றிப் போகட்டும். காதலர் வாரதபோதும் அவரை எதிர்பார்த்து எதிர்பார்த்துக் கண்கள் உறங்குவதில்லை ; வந்தபோதும் அவர் பிரிவாரோ என்று அஞ்சி அஞ்சி உறங்குவதில்லை ; இருவழியும் கண்கள் பெருந் துன்பம் உறுகின்றன. அவர் பிரிந்து சென்றபோது என் மென்மையழகையும் நாணத்தையும் கொண்டுபோனார் ; கைம்மாறாக எனக்கு இந்தக் காதல்துன்பத்தையும் பசலையையும் தந்தார்” என்று காதலி துயருறுகின்றாள்.

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். (1170)

உழந்துழந்து உண்ணீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண். (1177)

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். (1179)

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. (1183)

"என் காதலர் பிரிந்த பிறகும் அவரையே நினைத்துக் கொண்டிருக்கின்றேன்; வாயால் பேசுவதும் அவரைப் பற்றியே; அவ்வாறு இருந்தும் பசலை வந்து நின்றதே" என்று வருந்துகின்றாள். "நனவில் காணும்படியாக அருளாதவர் கனவில் வரக் காண்கின்றேன்; அதனால்தான் என் உயிர் இன்னும் இருக்கின்றது. அத்தகைய நல்ல கனவுக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? என்ன விருந்து செய்வேன்?" என்று கனவில் காணும் பேறு பெற்றதை நினைந்து மகிழ்கின்றாள்.

உள்ளுவன் மன்யான்; உரைப்பது அவர்திறமால்;
கள்ளம் பிறவோ பசப்பு. (1184)

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் னுயிர். (1213)

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து. (1211)

பிரிவாற்றாத துயரம் வரம்பு கடந்து வருந்திச் சோர்கின்ற நெய்தல் பகுதியும் தலைவி வாயிலாகப் புலப்படுத்துகின்றார்: தலைவி மாலைப்பொழுதைக் கண்டு வருந்துகின்றாள். அதுவும் தன்னைப் போல் மயங்கித் துன்புறுவதாக எண்ணுகின்றாள். "மாலைக்காலமே! நீயும் என்னைப் போல் துன்பப் படுகின்றாய். என் காதலனைப் போல் உன் துணையும் இரக்க

மற்றதோ ?" என்று கேட்கின்றாள். தான் உறும் துன்பத்தை மட்டும் நினைக்கும்போது, அதை மிகுதிப்படுத்திய மாலைப் பொழுதை வெறுக்கின்றாள் : " இது மாலை என்னும் பொழுது அன்று ; என்னைப் போல் காதலரைப் பிரிந்த மகளிரின் உயிரை உண்ணும் இறுதிக்காலம் இது. காதலர் இல்லாதது கண்டு, கொலைக்களத்தில் கொலையாளிகளைப் போல் உயிரைக் கொல்ல வருகின்றது " என்கின்றாள்.

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை? (1222)

மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது. (1221)

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். (1224)

" நெஞ்சே ! அவர்க்கு நம்மிடம் காதல் இல்லை என்று அறிந்தும் அவரை நினைந்து துயருறுவது உன் அறியாமையே. உன்னோடு உறவு கொள்ளாதவரிடத்தில் உன் துன்பத்தைச் சொல்ல முற்படுகின்றாயே! அதைவிட, உன் துன்ப மிகுதிக்குக் காரணமான கடலைத் தூர்க்க முயல்வாயாக. அதுவே எளியது " என்ற மொழிகளிலும் அந்த ஆற்றாமை மிகுதலைக் காணலாம்.

காதல் அவரில ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. (1242)

உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் ; கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. (1200)

" வெற்றியே விருப்பமாய் ஊக்கமே துணையாய் நம்மைப் பிரிந்து சென்ற காதலரின் வருகையை ஆவலோடு விரும்பியே இன்னும் உயிரோடு இருக்கின்றேன். காதலர் மீண்டு வருவார்;

வந்தபின் காதலரைக் கண்ணாரக் காண வேண்டும்; கண்டபின் இந்தப் பசலை நீங்கும். ஒருநாள் என் காதலர் வருவாராக; வந்தபின் என் துன்பம் எல்லாம் கெட யான் மகிழ்வேனாக. கண் போன்ற காதலர் வருவார்; வந்தபின் யான் அவரோடு ஊடுவதா! கூடுவதா? இரண்டும் விரவுவதா?" என்று பலவாறு எண்ணிக்கொண்டு நம்பிக்கையோடு காதலன் வரவை எதிர்நோக்கியிருக்கின்றாள். இது முல்லைத் திணைப் பகுதியாக வருவதாகும்.

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். (1263)

காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோள் பசப்பு. (1265)

வருகமன் கொண்கன் ஒருநாள்; பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. (1266)

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின். (1267)

"காதலராய்க் கூடியிருந்து பிரிந்தவர் மீண்டு வருவதை நினைந்து நினைந்து என் நெஞ்சம் மேன்மேலும் மகிழ்ச்சி கொண்டு எழுகின்றது" என்ற காதலியின் சொற்களில் இந்த நம்பிக்கை தெளிவாக இருக்கின்றது.

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொடு ஏறுமென் நெஞ்சு. (1264)

இவ்வாறு காதலர் இருவர் இன்பமும் துன்பமும் உற்றுப் பண்படுவதே தனிக்கல்வி யாகும். உணர்வும் அறிவும் ஒன்றற்கொன்று மிகாமல் ஒத்த வளர்ச்சி பெற்று நல்வாழ்வு வாழக் கூடிய வகையில் காதல் அவர்களுக்குப் பயிற்சி நல்குகின்றது. இந்தப் பயிற்சி பெற்றால்தான் இல்வாழ்க்கை அன்பும் அறனும்

உடைய வாழ்க்கையாக வளர்ந்தோங்க முடியும் ; காதலர் ஒருவர்க்கு ஒருவர் வாழ்க்கைத்துணையாய் அமைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ முடியும்; அறிவறிந்த மக்களைப் பெற்றுத் தீயவை தீண்டாமல் வாழ முடியும்; பிறர் துன்பம் உணரப் பயின்ற பயிற்சியால் தொடர்புடைய எல்லாரிடத்திலும் அன்பு செலுத்த முடியும்; பிறர்க்கு உரியராக அன்பு வாழ்க்கை வாழ முடியும்; விருந்தோம்பி வேள்வி தலைப்பட முடியும்; இன்சொல் பயின்று, செய்ந்நன்றி மறவாமல், நடுநிலை போற்றி, அடக்கமும் ஒழுக்கமும் உடையவர்களாய் வாழ முடியும்; பிறனில் விழையாமல் காத்துக்கொள்ள முடியும் ; பொறுமை பூண்டு, பொறாமை அகற்றி, பிறர் பொருள் கவராமல், புறங் கூறாமல், பயனில சொல்லாமல், தீவினை அஞ்சி, ஒப்புரவு போற்றி, ஈகை உடையவராய்ப் புகழ் பெற முடியும்; அருளுணர்வு வளர்ந்து, புலால் மறுத்து, தவம் மேற்கொண்டு, போலி ஒழுக்கம் துறந்து, களவும் பொய்யும் வெகுளியும் இன்னா செய்தலும் கொலையும் கடிந்து, தூய வாழ்க்கை நடத்த முடியும்; நிலையாமை அறிந்து, துறவு நிலையில் நின்று, மெய்யுணர்வு பெற்று, அவா அற்று, ஊழ்வலி உணர்ந்து ஒழுகமுடியும்; அறத்தின் சிறப்பையும் அறவோர் பெருமையையும் அறிந்து அவற்றின் வாயிலாகக் கடவுளியல்பு உணர்ந்து வழிபட்டு வீடு வாழமுடியும். இவ்வளவுக்கும் காரணமாக இருப்பது காதல் கற்பிக்கும் பண்பாடே ஆகும்; மற்ற உயிரின் துன்பம் தன் துன்பம் போல் உணர்ந்தறியும் பண்பாடே ஆகும்.

1586/2
(365) 724.073/K37

2. பொருட்பால்

இருவகை வாழ்வு

இத்தகைய காதல் வாழ்க்கை சிறப்படைய வேண்டுமானால், நாடு நல்ல நிலையில் அமைந்திருக்கவேண்டும். வீட்டு வாழ்வும் நாட்டுக்கடமையும் ஒன்றோடொன்று இயைந்து செல்லும் அமைப்பு வேண்டும். இன்று உள்ள நிலையோ மாறானது; வீட்டு வாழ்க்கைக்கு இடையூறான முறையிலேயே நாட்டுக் கடமைகள் பற்பலவாய்ப் பெருகியுள்ளன. செல்வரோ ஆனாலும், வறியரோ ஆனாலும், இன்று வெளிக்கடமைகளை நினைந்து நினைந்து அலையவேண்டியுள்ளது; தம் கடமைகளை முடித்த பிறகும் மற்றவர்களால் தமக்கு வரும் இடையூறுகளை நினைந்து கவலையுற வேண்டியுள்ளது; மற்றவர்களால் இடையூறுகள் இல்லாத போதும், எதிர்காலம் என்னவாக இருக்குமோ என்று ஏங்கி ஏங்கி, எதிர்காலச் சேமிப்பிற்காகவும் நாளைய இன்பத்திற்காகவும் இன்றே கவலைப்பட்டு அலைய வேண்டியுள்ளது; நாளை நாளை என்று இல்லாத நிலையை எண்ணி ஏங்கி இன்று பெறத்தகுந்த அன்பு வாழ்வை இழந்துவிட வேண்டியுள்ளது. சுருங்கச் சொன்னால், இன்று இல்வாழ்க்கையை மேற்கொண்டுள்ள ஒவ்வொருவர் நெஞ்சத்திலும் அமைதி குறைவு; அலைவே மிகுதி; தம் கடமையை முடித்த அளவில் நிற்பதில்லை; மற்றவர்களின் பொறாமைகளையும் இடையூறுகளையும் எண்ணியும், எதிர்காலம் பற்றிய கவலைகளையும் துன்பங்களையும் எண்ணியும் மனம் அலையவேண்டியுள்ளது; நாட்டுக் கடமையை ஆற்றும்போது மட்டும் அல்லாமல், வீட்டுத் திண்ணையில் ஓய்ந்திருக்கும்போதும் நெஞ்சத்தில் அமைதி

இல்லை; அலேவே நிலவுகின்றது; ஆகையால் வீடு விடுதலை நிலையமாய் இருக்காமல், சுமையாகவே தோன்றுகின்றது; இல்வாழ்க்கை இன்பம் நல்காமல், துன்பத்திற்குத் துணைபோல் தோன்றுகின்றது.

நாட்டுக் கடமையைப் பற்றிய அல்லலே இவ்வளவும். இவ்வளவு அல்லலுற்று நாட்டுக்கடமையை ஆற்றிய போதிலும், நாடு ஒருவர்க்கு உரிய பங்கை அளிக்காவிட்டால் - அவர்க்கு வேண்டிய உறைவிடத்தையும் உணவையும் உடை முதலியவற்றையும் அளிக்காவிட்டால் - கவலை பல மடங்காய்ப் பெருகும். "என் பங்கான உழைப்பைச் செய்கின்றேன். ஆனால் நாட்டிலிருந்து எனக்கு உரிய நன்மையின் பங்கைப் பெற முடியவில்லை. உழைக்காமலே சிலர் பெறுகின்றார்கள். குறைந்த அளவு உழைத்தும் சிலர் நிறைந்த பயனைப் பெறுகின்றார்கள். நான் நிறைய உழைத்தேன்; ஆனால் எனக்கு உரிய பங்கும் கிடைக்கவில்லையே" என்று ஒரு நல்ல மனம் வாடுமானால், அவர் வாழும் இல்வாழ்க்கை எப்படியிருக்கும்? இன்று உள்ள உலக அமைப்பில், அப்படி எண்ணும் நிலையில் வாழ்வோர் பலர் இல்லையா? ஆகவே, இல்வாழ்க்கை நன்கு நடைபெற முடியாதபடி இன்று வெளியுலக வாழ்க்கை தடையாக இருக்கின்றது அன்றோ? இதனால், அறிவும் பண்பும் வாய்ந்த நல்லவர்களின் வளர்ச்சி கெடாதிருக்கலாம்; அவர்கள் இல்வாழ்க்கையைத் துறந்தோ துறக்காமலோ உலக நன்மையைக் கருதித் தொண்டர்களாக மாறித் தொண்டாற்றலாம். ஆனால், மற்றப் பொதுமக்களின் வளர்ச்சி என்ன ஆவது? பொருளாதாரப் போராட்டத்தை வீட்டிலேயே கொண்டுவந்து நுழைத்து, காதலை மறந்து காசைப் போற்றி இல்வாழ்க்கையை வாணிகக் கடையாகக் காண்பதே அவர்களுக்கு உள்ள நேர்வழி.

வாழ்க்கையாய்த் தொடங்கிய இல்லறம் வாணிகமாய் மாறுகின்றது ; காதலாய்த் தொடங்கிய உறவு காசு நாட்டமாய் மாறுகின்றது. இந்த வாழ்க்கையில் தொடக்கத்திலாவது ஒருவகையில் நல்ல அடிப்படை அமைந்திருக்கின்றது ; பிறகு மெல்ல மெல்லப் பொருள் பற்றிய போராட்டம் அதைக் கெடுத்துவிடுகின்றது. ஆனால், தொடங்குமுன்பே கெட்டுப் போன வாழ்க்கையே உலகத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றது. காதலராய் மணந்துகொள்வோர் மிகச் சிலரே ; பட்டும் பொன்னும் பணமும் மிகுந்தவராயிருப்பதை அறிந்து அவற்றின் காரணமாக விருப்பங் கொண்டு மணந்து கொள்வோரே மிகப் பலர். வாழ்க்கையாக இல்லறம் தொடங்குவோர் மிகச் சிலரே ; இவ்வளவு சொத்து எழுதிவைத்தால் வாழ்வேன் என்று வாணிகமாகவே தொடங்குவோர் மிகப் பலர். அவர்கள் வாழ்க்கையில் எதனைக் காண்பது ? பொருட்போரின் களிநடம் காணலாம் ; அன்பைக் காணமுடியாது ; அமைதியைக் காணமுடியாது ; இன்பத்தையும் காணமுடியாது.

காதலரின் அன்பு வாழ்க்கைக்குப் பொருள் ஒரு சிறந்த கருவியாகும். பொருள் இல்லாதவர்க்கு இந்த உலகவாழ்வு இல்லை என்பதைத் திருவள்ளுவர் அறத்துப்பாலிலும் நினைவூட்டுகின்றார். பொருட்பாலிலும் 'பொருள் செயல்வகை' என்ற அதிகாரத்தில் வலியுறுத்துகின்றார். அறத்துப்பாலில் அருளைச் சிறப்பிக்க வந்த இடத்தில் உவமையாக வைத்துப் பொருட்சிறப்பைக் கூறுகின்றார். பொருட்பாலில், அந்த அருளும் பொருளால் வளர்வது என்கின்றார் ; அருள் என்னும் குழந்தையை - அன்பு பெற்ற அந்தக் குழந்தையை- பொருள் செவிலித்தாயாக இருந்து வளர்த்தால்தான் வளரும் என்கின்றார்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. (247)

அருள்என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (757)

இவ்வாறு கூறியபின் அறமும் இன்பமுமாகிய வாழ்க்கைப் பகுதிகளுக்குப் பொருள் கட்டாயம் வேண்டும் என்று தெளிவிக்கின்றார்; பொருள் பெற்றவர்களுக்கே அறவாழ்க்கையும் எளிது, காதலாகிய இன்பவாழ்க்கையும் எளிது என்கின்றார்.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள். (754)

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (760)

திருவள்ளுவர் பொருட்பாலில் கூறுவது நல்ல நாட்டின் வாழ்க்கையே ஆகும். ஒரு நாட்டின் வாழ்க்கை அந்த நாட்டுப் பொருள்வளத்தையே பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பொருளாலேயே அதைச் சுட்டிக் கூறியுள்ளார். அறம் பொருள் இன்பம் என முன்னோர் வகுத்த முறையிலும் இதுவே காணப்படும். நாட்டுவாழ்க்கை என்றோ, அரசியல் என்றோ கூறின், அது யாரோ சிலருடைய பொறுப்பு என்று பலரும் ஒதுங்குவர். அரசியல் அல்லது நாட்டுவாழ்க்கை என்பது சிலருடைய நேர்ப்பொறுப்பில் உள்ளது உண்மைதான். ஆனால் அதனால் மற்றவர்களுக்குப் பொறுப்பு இல்லை என்று சொல்ல முடியாது. மற்றவர்களுக்கு நேர்ப் பொறுப்பு இல்லையானாலும் மறைமுகப் பொறுப்பு உண்டு. இருவகைப் பொறுப்பையும் ஒட்டியே நாட்டுவாழ்க்கையாகிய அரசியல் நடைபெறுகின்றது. பொருள் என்று குறிக்கும்போதுதான் இந்த உண்மை தெளிவாகின்றது.

அரசியலில் வெளிப்படையாக நேர்ப்பொறுப்பு ஏற்று நடத்துவோர் அடிக்கடி நாடி அமைப்பது பொருள்தான். மற்றவர்கள் உழவும் தொழிலும் செய்து நாடி நிற்பதும் பொருள்தான். ஆகவே, வயிறு உள்ளவரையில் பொருள்நாட்டம் இருப்பது இயற்கை; அதனால் மக்கள் எல்லோருக்கும் நாட்டு வாழ்க்கையில் பொறுப்பு உண்டு. மனம் என்பது ஒன்று உள்ள வரையில், மனச்சான்று இருந்தே தீரும்; அறத்தின் ஆட்சியிலிருந்து ஒருவரும் விலக முடியாது; அதுபோலவே, வயிறு உள்ள வரையில் பொருள் தேடும் வாழ்க்கை இருந்தே தீரும்; அரசியலிலிருந்து ஒருவரும் விலக முடியாது. ஆகையால் வீட்டு வாழ்க்கைக்கு அடிப்படையானது பொருள் கல்கும் நாட்டு வாழ்க்கை என்பது பெரிய உண்மையாகும்.

ஆட்சித் தலைமை

திருவள்ளுவரின் பொருட்பாலில் மூன்று பகுதிகள் அமைந்துள்ளன. முதல் பகுதி அரசியல்; இரண்டாம் பகுதி அரசின் உறுப்புக்களைக் கூறும் அங்கவியல்; மூன்றுவது சொல்லாமல் ஒழிந்த பகுதிகளைக் கூறும் ஒழிபியல்.

இவற்றுள் அரசியலில் அவர் ஆளும் தலைவனைப் பற்றிக் கூறுகின்றார். ஆளும் தலைவன் யார்? மன்னன், வேந்தன், அரசன், இறைவன் என்று பல பெயர்களால் கூறப்படும் ஒருவன். "திருவள்ளுவர் வாழ்ந்த காலம் உலகெங்கும் முடியாட்சி இருந்துவந்த காலம்; அவர் அப்போது தமிழ்நாட்டில் கண்டதும் முடியாட்சி ஆகும். நாம் வாழும் காலமோ உலகெங்கும் குடியாட்சி பரவி வரும் காலம். ஆகவே, திருவள்ளுவர் வேந்தன், மன்னன், அரசன், இறைவன் என்று ஒருவனைப் பற்றிக் கூறும் பகுதிகள் நம் காலத்துக்குப் பொருந்துமா? அவற்றை நாம் கற்பதால் பயன் என்ன? நம் காலத்தில்

நாம் கற்கவேண்டியவை, பாராளுமன்றத்தைப் பற்றியும் அமைச்சரைப் பற்றியும் அல்லவோ ? இவற்றை எல்லாம் ஆராயாமல் திருவள்ளுவரின் பொருட்பாலை - சிறப்பாக அரசியலைக் கற்பதால் பயன் விளையுமோ? அது நம் காலத்து ஆட்சிமுறைக்கு வழிகாட்டுமோ'' என்று ஆராய்ந்து அறியும் வேட்கையோடு திருக்குறளைக் கற்க வேண்டும். இல்லையேல் திருவள்ளுவரின் அரசியலைக் கற்பதைவிட, பழங்கால வரலாற்று நூல்களைப் படிப்பதே நலம்.

உழவு பழங்காலத்திலும் இருந்தது ; இன்றும் இருக்கின்றது ; எதிர்காலத்திலும் இருக்கும். பழங்காலத்தில் ஏரும் எருதும் கொண்டு சிறு சிறு நிலப்பகுதிகளை உழுது எரு இட்டு, களை கட்டு, நீர் பாய்ச்சி, காவல் காத்து, அறுவடை செய்துவந்தார்கள். இதற்கு உரிய கருவிகள் எல்லாம் கையால் செய்யப்பட்ட கலப்பை, அரிவாள் முதலிய எளிய கருவிகளே. எருவும் அங்கங்கே சேர்த்துவைத்த அழுகல் பொருள்களும் அழுக்குப் பொருள்களுமே ஆகும். நீர் பாய்ச்சுவதும் ஏற்றம் அல்லது கபிலை முதலிய எளிய கருவிகள் கொண்டே. இந்த நிலைமை இன்றும் இருந்துவருகின்றது. ஆனால் புதுமுறையும் இன்றே புகுந்து வாழ்ந்துவருகின்றது. அது என்ன ? விஞ்ஞான முன்னேற்றத்தால் அரிய பெரிய கருவிகள் வந்துவிட்டன. பரப்பான பெருநிலங்களையெல்லாம் நொடிப்பொழுதில் யந்திரங்களைக்கொண்டு உழுகின்றார்கள் ; தொழிற்சாலைகளில் உண்டாக்கப்பட்ட செயற்கை எருவை வாங்கி இடுகின்றார்கள் ; மின்வலியால் இயங்கும் யந்திரங்களைக் கொண்டு நீர் பாய்ச்சுகின்றார்கள் ; யந்திரங்களைக் கொண்டே அறுவடையும் செய்கின்றார்கள். எதிர்காலத்தில் பழைய கலப்பைக்கும் ஏற்றத்திற்கும் அரிவாளுக்கும் இடம் இல்லாமல் எங்கும் இந்த யந்திரங்களே வேலை செய்யும். ஆனால், உழவுத்

தொழிலுக்கு அடிப்படையான தேவைகளும் முறைகளும் அன்றும் இன்றும் ஒரே தன்மையாக உள்ளன; நாளையும் அவ்வாறே இருக்கும். செழிப்பான மண், பயிருக்கு ஏற்ற பருவம், வேண்டிய ஒளியும் காற்றும் நீரும், வித்துக்களைக் காக்கும் முறை, விளையும் கதிர்கள் காய்கள் முதலியவை, அறுவடைக்கு உரிய பக்குவம் முதலியவற்றில் மாறுதல் ஒன்றும் காணோம். இவை என்றும் ஒரே வகையாக இருப்பவை.

அரசியலும் அதே நிலைமை உடையது. முடியாட்சி அகன்று குடியாட்சி வந்தாலும், அடிப்படையான தேவைகளும் முறைகளும் மாறுவதில்லை. அன்று மன்னன் இருந்தான்; வழி வழியாக ஆளும் உரிமை அந்த மன்னர்குடிக்கு இருந்தது; அவன் அறநெறியில் ஆட்சிபுரிந்த போது செங்கோலனாய் நெடிது வாழ்ந்தான்; இல்லையேல் கொடுங்கோலனாய்க் கடிதில் அழிந்தான். அவனுக்கு அமைச்சர்கள் துணைபுரிந்தார்கள். அவர்கள் அவனுடைய மனம் அறிந்து பழகினார்கள். இது பழங்காலத்து முடியாட்சி முறை.

குடியாட்சி முறையில் அரச குடும்பம் என்ற ஒன்று இல்லை; இருந்தாலும் அதற்கும் மற்றக் குடும்பங்களுக்கும் வேறுபாடு இல்லை; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மன்றம் அமைப்பார்கள்; அந்த மன்றத்தார் தம் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்; அந்தத் தலைவர் ஆட்சிக் குழுவை (அமைச்சர் குழுவை) அமைத்துக்கொள்வார்; ஆட்சி, பொது நன்மைக்கு ஏற்றதாக இருந்தால் அவர்களுக்கு ஆட்சி உரிமை நெடுங்காலம் நிற்கும்; இல்லையேல் ஆட்சி உரிமை இழந்து வெளியேற வேண்டி வரும். இதுவே குடியாட்சி முறை.

இருவகை ஆட்சியிலும் அடிப்படைகள் ஒத்திருக்கின்றன. பொதுமக்களின் நன்மையைக் கருதி ஆளுதல்,

ஒற்றுமையை வளர்த்தல், பகையை ஒடுக்குதல், பசியும் பிணியும் நாட்டில் பரவாதபடி காத்தல், நீர்வளம் நிலவளம் தொழில் வளம் ஆகியவற்றைப் பெருக்குதல், எல்லோர்க்கும் ஒத்த உரிமை வழங்கி நடுநிலைமை தவறாமல் முறை செய்தல் முதலான அடிப்படைகள் முடியாட்சிக்கும் வேண்டியவை; குடியாட்சிக்கும் வேண்டியவை. திருவள்ளுவர் இத்தகைய அடிப்படைகளையே விளக்கிச் செல்கின்றார்.

திருவள்ளுவர் மக்களின் நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு பொருட்பால் எழுதியவர். ஆகையால், அவர் இந்த அடிப்படைகளிலேயே கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து கூறியுள்ளார். அவர் தமிழ்நாட்டு மூவேந்தர்களின் மரபுகளையோ கொடி, பூ முதலியவற்றையோ கூறவில்லை; குறுநில மன்னர்களின் மரபுகளையும் கூறவில்லை; அரசர்களின் பிறந்தநாள் விழாவையும் பிற விழாக்களையும் கூறவில்லை; முடி சூட்டும் சிறப்பையும் கூறவில்லை; இறந்தபின் அடக்கம் செய்யும் வழக்கத்தையும் அதன் பிறகு உடனே மகனோ மற்றொருவனோ கட்டிலேறும் வாழ்வையும் கூறவில்லை. வேந்தனுக்கு வேண்டிய வீரத்தையும் அறமுறையையும் கூறினாரே அல்லாமல், அவன் கையில் ஏந்திய வாளையும் செங்கோலையும் புகழ்ந்து வருணிக்கவில்லை. அரசனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாடு எவ்வாறு விளங்கவேண்டும் என்று கூறினாரே அல்லாமல், அரசன் வாழும் அரண்மனை எவ்வாறு புனையப்பெற வேண்டும் என்று கூறவில்லை. ஆட்சிமுறைக்கு உறுதுணையாகும் சுற்றமும் நட்பும் பற்றிக் கூறினாரே அல்லாமல், அரச குடும்பத்தில் பெண் கொண்டும் கொடுத்தும் சுற்றத்தாரானவர்களைப் பற்றியும் மற்றத் தனித் தொடர்புகளைப் பற்றியும் கூறவில்லை. மக்களின் வாழ்க்கையை விளக்கி வழிகாட்டப் புகுந்த பெரியோர் ஆதலின், அவர் பொருட்பாலில் விளக்கியுள்ள அரசியல்

கருத்துக்கள் எந்த ஆட்சிமுறைக்கும் அடிப்படையாக வேண்டிய கருத்துக்களாக விளங்குகின்றன; காலங் கடந்து ஒளிர்கின்றன. முடியாட்சிக் காலத்தில் மன்னர்கள் போற்றத் தக்க உண்மைகளாக இருந்ததுபோலவே, குடியாட்சிக் காலத்திலும் மன்றத் தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் போற்றத் தக்க உண்மைகளாக இருக்கின்றன; இனி வருங் காலத்திலும் என்றென்றும் போற்றத்தக்க வாய்மொழிகளாக விளங்கும்.

இன்று உழவுத் தொழிலில் பழங்காலத்து ஏரும் ஏற்றமும் ஒருபக்கம் விளங்க, மற்றொரு பக்கம் உழும் யந்திரமும் நீரிறைக்கும் யந்திரமும் விளங்கவில்லையா? நாம் பழங்காலக் கருவிகளையும் விஞ்ஞானக் கருவிகளையும் ஒருசேரக் காணவில்லையா? அதனால்தான் இருவகைக் கருவிகளுக்கும் அடிப்படையான தேவைகளும் முறைகளும் பொதுவாக இருக்கின்றன என்னும் உண்மையையும் நாம் உணர்ந்து தெளிகின்றோம். அதுபோலவே, திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பழங்காலத்து முடியாட்சி ஒருபக்கம் மதுரை புகார் வஞ்சி முதலான பெருநகரங்களில் விளங்க, மற்றொரு பக்கம் குடியாட்சி ஊர்தோறும் மன்றங்களில் விளங்கியிருந்தது. பெருநகரங்களில் வேந்தர்கள் ஆண்டுவந்தபோதிலும், நாடு முழுதும் அவன் ஆணைக்கு உட்பட்ட ஊர்மன்றங்கள் (பஞ்சாயத்துக்கள்) இருந்துவந்தன. அந்த ஊர்மன்றங்களுக்கும் வேந்தர்களுக்கும் நேர்த் தொடர்பு ஒன்றும் இல்லை. வேந்தர்களின் கொடிகள் மன்றங்களில் பறக்கும். வேந்தர்களின் பெயர்கள் மக்கள் உள்ளத்தில் வாழும். அவ்வளவே அல்லாமல், அந்தந்த ஊரை உரிமையோடு ஆண்டுவந்தவை அந்தந்த ஊர்மன்றங்களே. ஊர்மன்றங்களை அமைக்கும் உரிமையும் அந்தந்த ஊர்மக்களையே சார்ந்திருந்தது. ஊரின் காவல், வழக்கு,

விழா, வரி முதலிய எல்லாவற்றையும் அந்தந்த மன்றத்தாரே கவனித்து ஆண்டுவந்தார்கள். இவ்வாறு ஊர்தோறும் குடியாட்சியும் தலைநகரங்களில் முடியாட்சியும் இருந்த காலத்தில் திருவள்ளுவர் வாழ்ந்தவர் ஆகையால், இருவகை ஆட்சிக்கும் பொதுவான அடிப்படைகள் இன்ன இன்ன என்று அவருக்குத் தெளிவாக விளங்கின. அவற்றை மட்டுமே எக்காலத்துக்கும் பயன்படுமாறு நூல்வடிவு கொடுத்து வாழவைத்துள்ளார்.

குடியாட்சி முறை அமைந்த ஊராட்சியையும் முடியாட்சி முறை அமைந்த நாட்டாட்சியையும் திருவள்ளுவர் ஆராய்ந்து பொதுவான அடிப்படைகளையே கூறுகின்றார் என்பது கண்டோம். முடியாட்சியின் தலைவனைப் பற்றிக் கூற நேர்ந்த போதும், அவர் மிகச் சிறந்த அரசனுடைய இயல்புகளையே கூறுகின்றார். மிகச் சிறந்த அரசன் என்பவன் மரபின் வழி வந்தவன், தேர்தலின் வழியாகத் தேர்ந்தெடுக்கப்படாதவன் என்னும் வேறுபாடுகள் இருந்தாலும், அவனுக்கும் சிறந்த குடியாட்சித் தலைவனுக்கும் ஆட்சிவகையில் வேறுபாடு இருக்க முடியாது அன்றோ? ஒரு நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட நாட்டுத்தலைவன் எவ்வாறு செம்மையாகக் குடிமக்களின் கருத்திற்கு இணங்க நன்மை விளைய ஆட்சி புரிவானோ, அவ்வாறே மிக நல்ல செங்கோல் மன்னனும் குடிமக்களின் நன்மையையே குறிக்கோளாகக் கொண்டு தன்னலம் இன்றி ஆட்சி புரிதல் உண்டு என்பதை வரலாறுகளில் கண்டு தெளிகின்றோம். மன்னவன் மிகச் சிறந்தவனாக விளங்கும்போது அவன் முடியாட்சிமுறையான் என்பதையே மறந்துவிடுகின்றோம். ஆகையால், திருவள்ளுவர் கூறும் மன்னவன் இயல்புகள் குடியாட்சித் தலைவனுக்கு மிகவும் பொருந்துகின்றன.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (544)

இந்தக் குறளில் மன்னன் குடிகளைத் தழுவி அவர்களின் கருத்திற்கு இசைய ஆட்சிபுரியும் குடியாட்சித் தலைவனாகவே விளங்குதல் காணலாம்.

ஆயினும், அங்கங்கே ஆட்சித்தலைவனுடைய இயல்புகளை எடுத்துச்சொல்லும்போது அவனுக்கு ஏதாவது ஒரு பெயர் கொடுத்துச் சுட்டிக் கூறவேண்டும் அன்றோ? அத்தகைய இடங்களில் இறை, அரசு, வேந்து, மன்னன் முதலான சில சொற்களால் சுட்டுகின்றார். இந்தச் சொற்களைக் கண்டதும், முடியாட்சி என்றும், அரசர் குடியில் பிறந்தவன் என்றும், குடியாட்சி முறைக்கு மாறுபாடு என்றும் விட்டுச் செல்வதால் பயனில்லை. நாட்டை ஆளும் தலைவனுக்கு ஏதேனும் ஒரு பெயர் கூற வேண்டுமே என்ற அளவிலேயே அந்தப் பெயர்கள் அங்கே உள்ளன. திருவள்ளுவர்க்கு அந்தக் கருத்து இருந்தது என்று கொள்ளலாம். நிலனாள் பவன் (383), கோலொடு நின்றான் (552), காவலன் (560) முதலான பொதுச் சொற்களையும் அவர் ஆண்டிருக்கின்றார். ஆதலின் அரசு, இறை, வேந்தன், மன்னன் என்னும் சொற்களைக் காணுமிடங்களில் இந்தக் காலத்திற்கு ஏற்ப, ஆட்சித் தலைவன் என்று பொருள்கொண்டு கற்பதே பயன் தருவதாகும்.

திருவள்ளுவர் முப்பால் எழுதி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற பாகுபாடும் செய்து, பத்துப் பத்துக் குறள்களை ஒவ்வோர் அதிகாரம் ஆக வகுத்து, அதிகாரங்களுக்கு ஏற்ற தலைப்புக்களும் இட்டு நூலை இயற்றியுள்ளார். பின்வந்த அறிஞர்கள் திருக்குறளை ஓதி ஓதிப் பால்

தோறும் உட்பிரிவுகளை அமைத்துள்ளார்கள். அவர்கள் பொருட்பாலில் வகுத்த உட்பிரிவுகள் மூன்று; அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்பன; பரிமேலழகர் உரையால் இதனை அறியலாம்.

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவவல் லரணிரண் டொன்று ஒண்கூழ் — இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை

என்று போக்கியார் என்னும் புலவர் பெயரால் உள்ள பழைய வெண்பா ஒன்றில் இந்தப் பாகுபாடுகள் இல்லை. இதன்படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது; அரசியல் 25, அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக எழுபது அதிகாரங்களை ஏழு பகுதிகளாகப் பிரிக்கலாம். இது மிகப் பொருந்துவதாகவே உள்ளது. பொருட்பாலின் முதல் குறளிலேயே இந்தப் பாகுபாட்டிற்கு அடிப்படையும் காணப்படுகின்றது.

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. (381)

இதில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறனையும் உடைய ஆட்சித்தலைவனைப் பற்றியும் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாகப் பாகுபாடு செய்தல் திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

அரசனது இயல்பு கூறும் அரசியலையே மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களால் கூறி முதலில் வைத்துள்ளார். இந்த அரசியலில்தான் இறை, வேந்து முதலான சொற்கள்

பலமுறை பயின்றுள்ளன. இந்த இருபத்தைந்து அதிகாரங்களில் நாற்பத்தாறு முறை ஆட்சித்தலைவனை இப் பெயர்களால் சுட்டிக் கூறியுள்ளார்.

அடுத்த அமைச்சியலில் உள்ள பத்து அதிகாரங்களில் ஆட்சித்தலைவனைப் பெயரால் சுட்டும் இடம் ஒன்றே. அதற்கடுத்த அரணியலில் உள்ள இரண்டு அதிகாரங்களில் மூன்று இடத்தில் சுட்டியுள்ளார். அடுத்த கூழியலில் உள்ள ஓர் அதிகாரத்தில் ஓர் இடத்தில் வேந்தனைச் சுட்டியுள்ளார். படையியலில் உள்ள இரண்டு அதிகாரத்தில் இருமுறை கூறியுள்ளார். அதற்கடுத்த பதினேழு அதிகாரங்களைக் கொண்ட நட்பியலில் பெரியாரைப் பிழையாமை என்ற ஓர் அதிகாரத்தில் இருமுறை மட்டுமே சுட்டியுள்ளார். ஏழாம் இயலாகிய குடியியலில் பதின்மூன்று அதிகாரங்கள் இருந்தும் ஓர் இடத்திலும் வேந்தனைச் சுட்டவில்லை.

அரசியலில் இருபத்தைந்து அதிகாரங்களில் நாற்பத்தாறு முறை ஆட்சித்தலைவனைச் சுட்டிக் கூறும் ஆசிரியர் மற்ற ஆறு இயல்களில் உள்ள நாற்பத்தைந்து அதிகாரங்களில் ஒன்பது முறையே குறிப்பிட்டுள்ளார். அரசியலில் அரசன் அல்லது ஆட்சித்தலைவனைப் பற்றிப் பலமுறையும் கூறவேண்டியது பொருத்தமே. குடியியலில் அவனைப் பற்றி ஒன்றும் கூறாமல் விட்டதும் பொருத்தமேயாகும். ஆகவே இன்றியமையாத சில இடங்களில் மட்டுமே வேந்தன், மன்னன் முதலான சொற்களை ஆண்டிருக்கின்றார் என்பதும், எக்காலத்துக்கும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான ஆட்சிப் பகுதிகளையே பொருட்பாலில் கூறியிருக்கின்றார் என்பதும் தெளிவாகின்றன.

இந்தக் கருத்தோடு அரசியலைக் கற்கும்போது நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் ஆட்சித்தலைமைக்கு வேண்டிய தகுதி பெறவேண்டும் என்ற எண்ணம் பிறக்கின்றது. குடியாட்சி

சீராக நடைபெற வேண்டுமானால் அத்தகைய நல்ல நிலைமை வேண்டும் அன்றோ? ஆட்சித் தலைமை என்றால் நாட்டை ஆளும் பாராளு மன்றத்தின் தலைமையும் அமைச்சர் குழுவின் தலைமையும் மட்டும் அல்ல. பாராளுமன்றம் நாடு முழுமைக்கும் ஆன பெரிய மன்றம். அதற்கு உறுப்பினர்களை அனுப்புவதற்குரிய அடுத்த மாவட்ட (ஜில்லா) மன்றங்களும் கோட்ட (தாலுக்கா) மன்றங்களும் அவற்றிற்கு அடிப்படையான ஊர் மன்றங்களும் (பஞ்சாயத்துக்கள்) வேண்டும். அந்தந்த மாவட்டங்களை மாவட்ட மன்றங்களே ஆளவேண்டும்; கோட்டங்களைக் கோட்ட மன்றங்களே ஆளவேண்டும்; அந்தந்த ஊர்களை ஊர்மன்றங்களே ஆளவேண்டும். இந்த முறை இன்று இல்லை. அதனால் குடியாட்சி பெரிதும் பெயரளவிலே நின்று பயன் தராமல் போகின்றது. ஆனால் உண்மையான குடியாட்சி முறையை மனத்தில் வைத்துக்கொண்டு திருக்குறளைக் கற்கவேண்டும். அப்போது ஆட்சித்தலைவன் என்பவன் நாட்டுத் தலைநகரத்தில் உள்ளவன் (வேந்தன், அல்லது நாட்டுத் தலைவன், அல்லது முதலமைச்சன்) ஒருவன் மட்டும் அல்லன் என்பதும், மாவட்ட மன்றங்களை ஆள்வோரும் கோட்ட மன்றங்களை ஆள்வோரும் ஊர்மன்றங்களை ஆள்வோரும் ஆகிய பலரும் ஆட்சித்தலைவர் என்று சுட்டப்படும் தகுதி உடையவர்களே என்பதும் தெளிவாகும். ஊர்களின் தொகை நூறாயிரக்கணக்காக இருப்பின், ஆட்சித் தலைவர்களின் தொகையும் மிகுதியாகவே இருக்கும். அதிலும், குடியாட்சி முறைப்படி சில ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடந்து தலைவர்கள் மாறுவார்களானால் ஆட்சித் தலைவர்களாக இருந்தவர்களும், இருக்கின்றவர்களும், இருக்கக் கூடியவர்களுமாகப் பல நூறாயிரம் மக்கள் இருப்பார்கள். இருக்கக்கூடிய தலைவர்கள் என்ற முறையில் ஊர்களில் உள்ள ஒவ்வொருவரும்

ஆட்சித் தலைமைக்கு உரிய தகுதி பெற்றாகவேண்டும். ஆகவே குடியாட்சி திருந்தாக அமைந்த நாட்டில் தலைமைப்பதவிக்குத் தகுதியாகக் கல்வியும் பண்பும் திறனும் அமையப் பெற்றவர்கள் மிகப் பலராக இருப்பார்கள். ஆகையால் திருவள்ளுவரின் அரசியலில் அரசனுக்கு (ஆட்சித் தலைவனுக்கு) உரியவை என்று கூறும் இயல்புகள் நாட்டுமக்கள் பலர்க்கும் வேண்டிய நல்ல இயல்புகளாக உள்ளன. இன்னொரு வகையாக நோக்கினால் நாட்டுமக்களுள் நல்ல இயல்பும் திறனும் கல்வியும் உள்ள பலர்க்கும் ஆட்சித்தலைமை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும் அரசியல் முறையே குடியாட்சி முறை அன்றோ?

கல்வி வேண்டும், கேள்வி வேண்டும், அறிவு வேண்டும், குற்றம் கடிந்த வாழ்வு வேண்டும், பெரியாரைத் துணைக் கொள்ள வேண்டும், சிற்றினம் சேராமல் வாழ வேண்டும், தெரிந்து (ஆராய்ந்து) செய்யும் இயல்பு வேண்டும், வலியும் காலமும் இடமும் அறிந்து வினை செய்யும் திறம் வேண்டும், தெரிந்து தெளியும் ஆற்றல் வேண்டும், தெரிந்து வினையை ஆளும் வன்மை வேண்டும், சுற்றம் தழுவ வேண்டும், பொச்சாப்பு (சோர்வு) இல்லாமல் கடமைகளைச் செய்ய வேண்டும், செங்கோன்மை (நேர்மை) வேண்டும், கொடுங்கோன்மையை வெறுக்க வேண்டும், வெருவந்த (பிறர் அஞ்சி நடுங்கும் செயல்கள்) செய்யாமை வேண்டும், கண்ணோட்டம் வேண்டும், ஒற்று ஆளும் முறை வேண்டும், ஊக்கம் வேண்டும், சோம்பலை ஒழிக்கவேண்டும், முயற்சிவேண்டும், இடுக்கணை (துன்பத்தைப்) பொருட்படுத்தாத உறுதி வேண்டும்: இவைகளே அரசியலில் ஆட்சித்தலைவர்க்குத் திருவள்ளுவர் கூறும் இயல்புகள். இவை நன்மக்கள் எல்லோருக்கும் வேண்டும் பண்புகளே அல்லவோ?

அன்றியும், அரசியல் என்பது யாரோ ஒரு சிலரது பொறுப்பு என்னும் கருத்தே பொய்யாகிவருகின்றது. வரி

செலுத்துவோர் அனைவரும் அரசியலைத் தாங்குவோரே ஆதலின், அரசியலில் பொறுப்பு உடையவரே ஆவர். வரி செலுத்தாதவர் யார் என்பதை ஆராய்ந்தால் ஒருவருமே இல்லை என்பது தெரியவரும். நிலம் இல்லாதவரும் உணவுப் பொருள் வாங்குவதன் வாயிலாக உழவனுக்குப் பணம் தர, அந்த உழவன் வரி செலுத்த, இவ்வாறு (நேர்முகமாக இல்லை எனினும்) மறைமுகமாக வரி செலுத்துகின்றனர். வாணிகம் செய்யாதவரும் வணிகரிடம் பொருள் வாங்குவதன் வாயிலாகப் பணம் தந்து, அந்தப் பணத்தில் ஒரு சிறுபகுதி விற்பனை வரி, வருமான வரி, சுங்கம் முதலியவற்றிற்குச் சேரச் செய்கின்றனர். குடியிருப்போரும் தொழில்செய்வோரும் இவ்வாறே ஒவ்வொரு வகையில் வரி செலுத்துகின்றனர். ஆகவே இவர்கள் எல்லோரும் அரசியல் தொடர்பு இல்லாதவர் என்று விலகமுடியாது. வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை இருப்பதால், அரசியல் நடத்துவோரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு அவர்கள் எல்லோருக்கும் நேர்முகமாக இருக்கின்றது. இவை எல்லாம் ஒருபுறம் நிற்க; அரசாங்கத்தைப் பற்றி எண்ணாமலும் பேசாமலும் ஒருவரும் இருப்பதில்லை. இந்த எண்ணமும் பேச்சும் ஓரளவு ஆற்றலோடு மெல்ல மெல்லப் பரவி அரசாங்கத்தை ஆக்கவோ அழிக்கவோ பயன்படுகின்றன என்பதை மறுக்க முடியுமோ? ஆகவே, வாக்குரிமை அளித்தல், வாழ்க்கை நடத்தல், பொருள் வாங்குதல், பேசுதல், எண்ணுதல் ஆகிய எல்லாவற்றின் வாயிலாகவும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் எல்லோரும் அரசியலில் தொடர்புகொண்டுள்ளனர்; பொருட்பாலில் இடம்பெற்றுள்ளனர்.

திருவள்ளுவர், நாடாளும் வேந்தனுக்கு உரிய இயல்புகளைக் கூறத் தொடங்கியபோது, அவனுடைய மன்றத் தலைவர்

களையும் கருத்தில் கொண்டுள்ளார். அதனால் அவர்களுக்கும் ஆட்சித்தலைமைக்கு வேண்டிய பொது இயல்புகளைக் கூறியுள்ளார். வேந்தன் என்றும் மன்னவன் என்றும் ஒருவனைச் சுட்டிச் செல்கின்ற இடங்களை அடுத்தே பலரைச் சுட்டிச் செல்லுதலும் காணலாம்.

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். (446)

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் (448)

என்று மன்னனைச் சுட்டிக் கூறியவர்,

இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்? (447)

முதலிலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை (449)

என்று அடுத்தாற்போல் ஆள்வார் என்றும் சார்பிலார் என்றும் பலரைக் கருத்தில் கொண்டு கூறியுள்ளார்.

இறையாட்சியில் ஆட்சித்தலைவனுக்குக் கல்வி வேண்டும் என்று கூறி, அந்தக் கல்வியின் தன்மையை அடுத்த அதிகாரத்தில் கூறும்போது,

இவ்விரண்டும், கண்என்ப வாழும் உயிர்க்கு (392)

மாந்தர்க்குக், கற்றனைத்து ஊறும் அறிவு (396)

என்னும் அடிகளில் வாழும் உயிர்க்கு என்றும் மாந்தர்க்கு என்றும் மக்கள் பலர்க்கும் பொதுவாகக் கூறுதலையும் காணலாம். இவ்வாறே பொருட்பால் முழுதும் மக்கள் பலர்க்கும் பொருந்தக் கூடிய நல்லியல்புகளைக் கூறிச் செல்வதைக் காணலாம்.

நாட்டாட்சியும் ஊராட்சியும் தவிர, இன்னொரு வகையாலும் பொருட்பால்—சிறப்பாக அரசியல் எல்லோருக்கும் வேண்டியதாக உள்ளது. நாட்டை ஆள்வதும் வீட்டை ஆள்வதும் போலவே, எல்லோருக்கும் ஆளும் தலைமை ஒவ்வொரு வகையில் உள்ளது. வாணிகத் துறையில் அவரவர் செய்யும் தொழிலுக்கு அவரவரே தலைவராக இருந்து ஆட்சி புரிய வேண்டியிருக்கின்றது. தொழில் நிலையத்திற்கும் ஒவ்வொருவர் தலைவராக இருந்து ஆளவேண்டியிருக்கின்றது. கல்வி நிலையம், கலைக்கழகம், அறநிலையம் முதலியவற்றிற்கும் இவ்வாறே ஆட்சித்தலைவர் வேண்டும். இவைபோலவே உழவுப் பண்ணைகளுக்கும் வேண்டும். இவையெல்லாம் ஒருபுறம் நிற்க, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆட்சித்தலைமையும் அமைச்சும் வேண்டியனவாக உள்ளன. குடும்பத்தில் சில வகையில் (வெளிக்கடமைகளில்) கணவன் ஆட்சித்தலைவனாக இருக்கவேண்டியுள்ளது; அவற்றைப் பொறுத்த வரையில் மனைவி அமைச்சுத் தொண்டு ஆற்றுகின்றாள். இன்னும் சில வகையில் (வீட்டுப் பொறுப்புகளில்) மனைவி தலைமை தாங்கி ஆட்சிபுரிய வேண்டியிருக்கின்றது; அவற்றில் கணவன் அமைச்சனாக இருந்து துணைசெய்கின்றான். இவ்வாறு நோக்கினால், ஒவ்வொரு குடும்பத்திலும் பொருட்பாலும் அதற்கேற்ற அரசியலும் இருக்கக் காண்கின்றோம்; குடும்பத்தாராகிய கணவனும் மனைவியும் சிலவகையில் ஆட்சித்தலைமைக்கு உரிய இயல்புகளைப் பெற்று ஆட்சி நடத்தக் காண்கின்றோம். ஆகவே அரசியல் அமைச்சியல் முதலியவற்றில் திருவள்ளுவர் கூறியுள்ளவை வாழும் மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக இருக்கின்றன. அதனால்தான் திருவள்ளுவர் அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய கல்வி முதலியவற்றை

1586|2

(365)

'வாழும் உயிர்க்கு' என்றும், 'மாந்தர்க்கு' என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார்.

124.073/K37

இறைமாட்சி

ஆளும் தலைவனுக்கு உரிய இயல்புகள் பல. அவன் அற நெறியிலிருந்து தவறாமல் ஒழுக வேண்டும்; அறமல்லாத தீ நெறியை நீக்க வேண்டும்; வீரம் வழுவாத மானம் உடையவனாக இருக்க வேண்டும்.

அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு. (384)

ஆளும் தலைவன் குடிகளுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன். அவன் ஒருவன் கெட்ட வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோலாகும். அவன் தலைவனாக இருப்பதால் அவனுடைய ஒழுக்கத்திற்கு நாடெங்கும் பரவும் ஆற்றல் உண்டு. ஆகவே அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வற்புறுத்துகின்றார். மானம் வேண்டும் என்று கூறும்போது தலைவனுடைய தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடவில்லை. அதனால்தான் 'மறன் இழுக்கா மானம்' என்று வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறித்தார். நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு அவன் வாழ்க்கை நடத்த வேண்டும். நாட்டிற்கு உண்டாகும் சிறுமை தன் சிறுமை என்றும், அதன் பெருமை தன் பெருமை என்றும் வாழ வேண்டும். தன் தனி மானத்தை நாட்டுவாழ்க்கையில் புகுத்தி நாட்டுமக்களுக்குப் போர் முதலிய தொல்லைகளை விளைக்கக் கூடாது. தன்னைக் குறைகூறினால் பொறுத்து, நாட்டைக் குறைகூறினால் புறக்கணிக்காத மானம் வேண்டும். தனிவாழ்க்கையில் தன் பகைவனாக உள்ளவனைப்

பொருட்படுத்தாமல், நாட்டின் பகைவனாக உள்ளவனை அடக்கவும் திருத்தவும் முயல வேண்டும்.

பொருளாதாரத் துறையில் தலைவனுக்கு உரிய கடமைகள் சில உண்டு. பொருள் வரும் வழிகளைப் பெருக்கவேண்டும்; வந்த வருவாயைத் திரட்டிச் சேர்க்கவேண்டும்; சேர்த்த பொருளை அழிவுபடாமல் காக்க வேண்டும்; பிறகு அவற்றைச் செலவுக்கு உரிய துறைகளில் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்ய வேண்டும். இவ்வாறு வருவாய் பெருக்கும் துறையிலும் வரவு செலவுத் திட்டத்திலும் (budget) வல்லவனாக விளங்க வேண்டும்.

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. (385)

நாட்டுத்தலைவன் என்ற எண்ணத்தால் செருக்குக் கொள்ளாமல், வேண்டியவர்கள் வந்து காண எளிமை உடையவனாக இருக்க வேண்டும்; அதிகாரி என்ற காரணத்தால் கடுஞ்சொல் கையாளாமல் இன்சொல் கூறிப் பழக வேண்டும்; விரும்பினவர்களுக்கு உதவிசெய்து காக்கும் கடமையை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு ஆட்சி புரிந்தால் அவனுடைய புகழும் செல்வாக்கும் மேன்மேலும் வளரும்.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (386)

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. (387)

தலைவன் எல்லோரிடமும் இன்சொல் உடையவனாக இருக்கவேண்டும்; ஆனால் பிறர் எல்லாரும் தலைவனிடம் இன்சொல்லே கூறி அன்பாக ஒழுகுவர் என்று எதிர்பார்க்க முடியாது. ஆட்சிமுறை என்ற ஒன்றை ஏற்ற பிறகு, அது

பலருடைய வாழ்க்கையின் பொறுப்பு ஆகையால், குறைகூறப் படுதல் எளிது. அவ்வாறு தலைவனைக் குறைகூறுவோர் இன் சொல்லாலே குறைகூறுவது அருமை. கொடுஞ்சொல்லே விரைவில் பயன் விளைக்கும் என்ற நம்பிக்கையால் அவர்கள் செவி பொறுக்க முடியாத கொடுஞ்சொற்களைக் கூறலாம். ஆயினும் அவற்றைப் பொறுத்துக்கொண்டு தன் கடமையை வெறுப்பில்லாமல் செய்யும் ஆற்றல் உடையவனே தலைமைக்குத் தகுதியுடையவன். அவனையே உலகமெல்லாம் தலைவனாகப் போற்றும்.

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. (389)

கல்வி, கேள்வி, அறிவுடைமை

கண்ட நூல்களை எல்லாம் கற்பதால் பயனில்லை. கற்கத் தகுந்த நூல்கள், கற்கத் தகாத நூல்கள், இன்றியமையாத நூல்கள், வேண்டாத நூல்கள் என்று பாகுபாடு வேண்டும். இல்லையானால், காலமும் முயற்சியும் வீணாவது தவிர, தவறான கல்வியாலும் சுமையான கல்வியாலும் வாழ்க்கை கெடும். ஆகையால் கற்கவேண்டிய நல்ல நூல்கள் என்று தேர்ந்தெடுத்துக்கொண்டு அவற்றைக் கற்கவேண்டும். அவற்றையும் மேற்போக்காக நுனிப்புல் மேயாமல் ஆழ்ந்து கற்க வேண்டும்; பழுதறக் கற்க வேண்டும். கற்கும்போதே, வாழ்க்கையோடு ஒட்டி எண்ணி எண்ணிக் கற்க வேண்டும். பொழுதுபோக்குக்காக, வேடிக்கைக்காக, நூல்களைக் கற்பது வீண் முயற்சி ஆகையால், கற்றபின் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆராய்ந்து கற்க வேண்டும். அப்போதுதான் கற்ற கல்விக்குத் தக்கவாறு நல்ல நெறியில் நிற்கமுடியும்.

கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. (391)

முகத்தில் உள்ள இரண்டு கண்களும் இப்போது நிகழ்கின்றவைகளையும் இங்கே உள்ளவைகளையும் மட்டும் காண முடியும். இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் காண இந்தக் கண்கள் பயன்படா. இந்த இடம் தவிர, மற்ற நாடுகளை இங்கிருந்தே காண்பதற்கும் இந்தக் கண்கள் பயன்படா. எல்லாக் காலங்களையும் எல்லா நாடுகளையும் ஆராய்ந்து காண்பதற்குப் பயன்படும் கண் கல்விக்கண்ணே. ஆகையால் கற்றோரே கண்ணுடையவர்கள் என்று சொல்லவேண்டும். கல்வி கற்க உதவாதபோது, முகத்தில் உள்ள கண்கள் புண்களைப் போல் துன்பம் தருவதற்கு உள்ளனவே அல்லாமல், அவற்றால் வேறு பயன் இல்லை.

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. (392)

கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (393)

மணலில் தோண்டிய கேணி தோண்டத் தோண்ட நீர் ஊறும். கற்கக் கற்க, கல்வியின் அளவுக்கு ஏற்றபடி மக்களுக்கு அறிவு வளரும். ஆகையால் மேன்மேலும் கற்க வேண்டும். கேணியில் மணலடியில் நீர் உள்ளது. ஆயினும் தோண்ட வேண்டும். அறிவும் மக்களுக்கு இயல்பாக அமைந்துள்ளது. ஆயினும் கற்க வேண்டும்; கற்றால்தான் அந்த அறிவு வெளிப்படும். (இக்காலத்து உளநூலாரும் அறிவு வெளியே இருந்து மூளைக்குள் புகுத்தப்படுவது அன்று என்றும், உள்ளே இருந்து விளக்கிக் கொணரப்படுவது என்றும் கூறுவர்).

தொட்டனைத்து ஊறும் மணல்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு. (396)

கல்லாதவனுக்கு உலகத்தில் உள்ள தொடர்பு பிறப்பால் ஏற்படும் தொடர்பே. பிறந்த ஊரும் பிறந்த நாடும் மட்டுமே அவனுக்குத் தொடர்பு உடைய இடங்கள். ஆனால் கற்றவனுக்குப் பிறப்பால் அமைந்த தொடர்போடு, கல்வியறிவால் பெறும் தொடர்பும் உள்ளது. அவன் கற்ற கல்வியின் பெருமையால் மற்ற ஊர்களும் அவனைப் போற்றும்; மற்ற நாடுகளும் அவனை நாடும். ஆகையால் வெளிநாடுகளும் வெளியூர்களும் அவனுக்குத் தொடர்பு உடைய இடங்களே ஆகும். உலகம் இவ்வாறு கல்விக்குப் பரந்த இடம் அளிப்பது கண்டும் சிலர் கல்வியில் முயற்சி இல்லாமல் இருக்கின்றார்கள்; சாகும் வரையில் கல்வி பெறாமலே இருந்து சாகின்றார்கள்; இது வீணான வாழ்வு.

யாதானும் நாடாமால்; ஊராமால்; என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு? (397)

செல்வத்தைவிடக் கல்வியே விரும்பத்தக்கது. அதனால் தான் கற்றவர்கள் மேன்மேலும் கல்வியையே விரும்புகின்றார்கள். செல்வம் சேர்ப்பதிலும் காப்பதிலும் பெருந்துன்பம் உள்ளது. இழந்துவிடும் துன்பமும் உள்ளது. இழக்காமல் வைத்திருந்தாலும், பலருடைய பகைக்கு ஆளாகவேண்டியுள்ளது. கல்வி அப்படிப்பட்டது அன்று. கல்வியால், கற்றோரும் இன்புறுகின்றார்கள்; அவர்கள்வாயிலாக மற்றவர்களும் இன்புறுகின்றார்கள். அன்றியும், மற்றத் துறைகளில் உலகத்தாரின் இன்பத்துக்காக உழைப்பவர்கள் தாம் துன்பப்பட வேண்டியுள்ளது. கல்வி என்னும் ஒரு துறையில்தான் தாம் இன்புறுவதே உலகத்தாரின் இன்பமாகவும் அமைந்திருக்கின்றது. ஆகையால் கற்றவர்கள் மேன்மேலும் கல்வியைப் போற்றுகின்றார்கள். செல்வத்திற்கு இந்தப்

பெருமை இல்லை. கல்வி போல் அழிவில்லாமல் நிலைக்கக் கூடிய தன்மையும் அதற்கு இல்லை; கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் வளரும் சிறப்பும் அதற்கு இல்லை.

தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். (399)

கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. (400)

கல்வியில்லாதவர், கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொல்ல முடியாது. சொல்லுவதற்கு முயற்சி செய்வதைவிடச் சொல்லாமல் இருப்பதே நல்லது. தப்பித் தவறிச் சொல்லிய போதிலும், அதில் அறிவுப் பகுதி இருக்காது; அறிவான பகுதி ஒருகால் இருந்தாலும் அதனை அறிஞர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (401)

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். (403)

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். (404)

நூல்கள் பல கற்று அறிவு பெறாதவன் நல்ல தோற்றத்தோடு அழகாக விளங்கலாம்; ஆனால் அது மண்பாவை அழகாகத் தோன்றுவதுபோல்தான்; அதனால் ஒரு பயனும் இல்லை; அதற்கு ஒரு சிறப்பும் இல்லை.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று. (407)

கல்லாதவரிடத்தில் செல்வம் இருக்கலாம்; அதனாலும் பயன் இல்லை. அந்தச் செல்வத்தால் அவருக்குத் துன்பம்

வளரும்; தீமையும் உண்டாகும். பசி குறைதல், உறக்கம் நீங்குதல், கவலை மிகுதல், பகை பெருகுதல், பொறாமை வளர்தல் முதலிய பல தீமை அதனால் விளையும். அதைவிட, கற்றவரான நல்லவரிடத்தில் உள்ள வறுமையே மேலானது. ஏன் என்றால், அந்த வறுமை கற்றவரைக் கெடுப்பதில்லை. செல்வமோ கல்லாதவரைக் கெடுத்துவிடுகின்றது. ஆகையால் கல்லாதவராக வாழ்வது எவ்வகையிலும் துன்பமே.

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. (408)

செல்வம் வாய்ப்பது நல்வினையால்தான் என்று பலரும் எண்ணுகின்றார்கள். தீவினையும் செல்வத்தைக் கொண்டு வந்து சேர்க்கும், அந்தச் செல்வத்தின் வாயிலாகப் பகை பழி கவலை நோய் முதலியவற்றை விளைக்கும் என்பது உண்மை. செல்வம் பெற்ற அளவிலேயே இன்பம் என்றும் நல்வினையால் நேர்ந்தது என்றும் எண்ணி மயங்குதலும், வறுமை உற்ற அளவிலேயே துன்பம் என்றும் தீவினையால் விளைந்தது என்றும் எண்ணி மயங்குதலும் தவறு. அவரவர் கற்ற கல்வியறிவால் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் வகையைக் கொண்டே இன்ப துன்பத்தை அறிந்தறிய முடியும்.

நல்ல நூல்களைத் தான் கற்காவிட்டாலும், கற்றவர்கள் சொல்லும் பொருள்களைக் கேட்டாவது உணரவேண்டும். துன்பத்தால் தளர்ச்சி வந்தபோது முன் கேட்டறிந்த அறிவு ஊன்றுகோல்போல் துணைநிற்கும்.

கற்றிலன் ஆயினும் கேட்க; அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை. (414)

கற்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சொல்வதைக் கேட்பதைவிட, கற்றவர்களில் ஒழுக்கம் உடையவர்களின்

வாயில் பிறக்கும் நல்ல சொற்களைக் கேட்பதே சிறந்தது. ஒழுக்கமில்லாதவர்கள் கூறும் சொற்களால் நன்மை விளையாமல் தீமையும் விளையும். ஒழுக்கம் உடையவர்களின் சொற்கள் வழுக்கும் சேற்று நிலத்தில் ஊன்று கோல்போல் வாழ்க்கையில் உதவும்.

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல். (415)

நிறைந்த கேள்வி உடையவர்கள் தவறாக உணர்ந்தாலும் அறிவில்லாத சொற்களைப் பேசமாட்டார்கள். அதுபோலவே, பணிவான நல்ல மொழிகளைப் பேசும் பண்பு எல்லோருக்கும் அமைந்துவிடாது; நுட்பமான நூற்பொருள்களை எல்லாம் கேட்டறிந்தவர்களுக்கே அந்தப் பண்பு அமையும். ஆகவே கேள்வியால் செவி பண்பட்டவர்களுக்கே, வாயும் பண்பட்டுப் பணிவான மொழிகளில் பயிலும்.

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர். (417)

நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது. (419)

அழிவு வராமல் காத்துக்கொள்ளும் தற்காப்பு அமைப்புக்கு அரண் என்பது பெயர். ஆனால், புறத்தே கல்லாலும் மண்ணாலும் அமைந்த அரணில் பகைவர் புகுந்து அழிக்க முடியும். அகத்தே உள்ள அறிவும் அரண்தான். அந்த அரணில் எந்தப் பகைவரும் புகுந்து அழிக்க முடியாது. ஆகவே, அறிவுதான் அழிவு வராமல் காப்பாற்றும் கருவியாகும்.

அறிவற்றங் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். (421)

மனம் போன போக்கில் வாழ்ந்தால் வாழ்க்கை கெடும். ஆகவே தக்கவழி அறிந்து மனத்தைத் திருத்திச் செலுத்த வேண்டும். அவ்வாறு தீமையிலிருந்து தடுத்து நன்மையில் செலுத்த வல்லது அறிவே ஆகும்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. (422)

யார் யாரிடம் என்ன பொருள் பற்றிக் கேட்டாலும் கேட்டதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல், அதிலுள்ள மெய்ப்பொருளைக் காண்பது எதுவோ அதுவே அறிவு. அந்த அறிவு இருந்தால், தான் கூறும் பொருளை எளிமையாக்கிக் கேட்போருக்கு விளங்கும்படி கூறலாம்; மற்றவர்கள் கூறுவதில் உள்ள நுண்ணிய பொருளையும் உணரலாம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (423)

எண்பொருள ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு. (424)

உலகம் எவ்வாறு செல்கின்றதோ அவ்வாறு உலகத்தோடு ஒட்டி ஒழுகவேண்டும். எதிர்காலம் இவ்வாறு இருக்கும் என்று முன்னதாகவே எண்ணி உணர வேண்டும். அஞ்சத் தகுந்ததற்கு அஞ்சி வாழ வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் பயன்படுவதே அறிவு. அந்த அறிவு பெற்றவர்கள் வேறொரு செல்வமும் இல்லாவிட்டாலும் எல்லாம் உடையவர்களே. அறிவு இல்லாதவர்கள் எவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களே.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு. (426)

அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (427)

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (428)

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (430)

இந்தக் குறள்மொழிகளில் அறிவைப் பற்றித் திருவள்ளுவர் கொண்ட கருத்துக்கள் தெளிவாக விளங்குகின்றன. தன்னைத் தான் அழித்துக் கொள்கின்றவன் அறிவு உடையவன் அல்லன்; ஏன் எனில், பகைவராலும் அழிக்க முடியாத கோட்டையாக இருப்பதே அறிவு. மனம் போன போக்கெல்லாம் போய் அலைகின்றவன் அறிஞன் அல்லன்; ஏன் எனில், தீமை நன்மை அறிந்து தடுத்தும் விடுத்தும் மனத்தைச் செலுத்துவதே அறிவு. உலகம் பொல்லாதது என்று பழித்துக்கொண்டு அஞ்சி ஒதுங்கியிருப்பவன் அறிஞன் அல்லன்; ஏன் எனில், உலகப் போக்கை உணர்ந்து ஒட்டி நடப்பதே அறிவு. கற்றதைக் கற்றவாறே ஒப்புவிப்பவன் அறிஞன் அல்லன்; கற்றவற்றை உணர்ந்து தெளிந்து பிறர்மனத்தில் எளிதில் பதியுமாறு எளிய பொருளாக்கிக் கூறுவதே அறிவின் பயன். பிறர் சொல்வன எல்லாம் அவ்வாறே கேட்டு நம்புவோன் அறிஞன் அல்லன்; கேட்டவற்றை எல்லாம் ஆராய்ந்து உண்மை காண்பதே அறிவு. காலம் மாறுவதை அறிந்து தக்க மாறுதல்களைச் செய்யாதவன் அறிஞன் அல்லன்; ஏன் எனில் எதிர்கால நிலைமையை உணர்ந்து அதற்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைத்துத் தற்காப்புத் தேடிக்கொள்வதே அறிவின் பயன். நான் எதற்கும் அஞ்சேன் என்று கண்மூடி வாழ்ந்து துன்பவலையில் வீழ்ந்து வருந்துவோன் அறிஞன் அல்லன்; தீமை என்றும் பொல்லாதது என்றும் பழி என்றும் அறிந்து அஞ்சித் தகாதன செய்யாமல் வாழ்வதே அறிவின் பயன்.

குற்றங் கடிதல்

தலைவன் என்ற காரணத்தால் தன்னிடம் வந்துள்ள பொருளின்மேல் பற்றுக்கொள்ளக் கூடாது; செலவிட வேண்டிய வழியில் அதைச் செலவு செய்ய வேண்டும். தான் தலைவன் என்ற செருக்கை ஒழித்து வணக்கம் உடையவனாக ஒழுக வேண்டும்; சொன்ன சொல்லை முடித்தே தீர்வேன் என்று குறுகிய மான உணர்ச்சி கொண்டு பிடிவாதமாகப் பொது நன்மைக்கு இடையூறான செயல்களைச் செய்யக் கூடாது. தன் நிலைமைக்குத் தகுதியல்லாத வரம்பு கடந்த மகிழ்ச்சியில் ஈடுபடக்கூடாது. பொருள்களின்மேல் பற்றுள்ளம், சிறப்பில்லாத குறுகிய மான உணர்ச்சி, தகாத மகிழ்ச்சி ஆகிய இவை தலைவனுக்குக் குற்றங்களாகும்.

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. (432)

செய்த குற்றம் சிறியதே ஆனாலும், அதைப் பெரிய குற்றமாகக் கருதி மனம் வருந்துவது சான்றோர் பண்பு. மற்றவர்கள், செய்த குற்றத்தைப் பற்றிக் கவலை இல்லாமல் மறந்து திரிவார்கள். ஆனால் சான்றோர் மனச்சான்று பண்பட்டவர்கள் ஆகையால், அவ்வாறு மறப்பதில்லை. அந்த மனச்சான்றே பழிக்கு நாணும் தன்மை உடையது. அதனால் குற்றம் வாராமல் காக்கும் ஆற்றல் வளரும். குற்றம் வாராமல் காத்துக் கொண்டால், வாழ்க்கைக்குத் தீங்கு நேராது. வாழ்க்கையைக் கெடுக்க வல்லவர்கள் பகைவர்கள் அல்லர்; உண்மையில் இத்தகைய குற்றமே வாழ்க்கையைக் கெடுக்க வல்ல பகையாகும். ஆகையால் குற்றம் வருவதற்கு முன்பே காத்துக் கொள்ள வேண்டும்; தவறினால், அழிவது உறுதி; அழியும்

போது தீயை அடுத்து நின்ற வைக்கோல்போர் போல அழிய நேரும்.

> தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
> கொள்வர் பழிநாணு வார். (433)
>
> குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
> அற்றம் தரூஉம் பகை. (434)
>
> வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
> வைத்தூறு போலக் கெடும். (435)

தலைவன் என்பவன் மற்றவர்களின் குற்றங்களை ஆராயும் பொறுப்பான கடமை உடையவன். அந்தக் கடமையைச் செம்மையாகச் செய்ய வேண்டுமானால், தான் முன்னே குற்றம் இல்லாமல் காத்துக்கொள்ள வேண்டும். தன் குற்றத்தைக் கண்டு கடிவது அரிய செயல்தான். ஆனால், முறை செய்ய வேண்டிய தலைவன் அந்தத் தகுதி பெற்றே தீரவேண்டும். மற்றவர்களின் குற்றங்களை ஆராய்வதே ஒரு குற்றமாகும். தலைவன் தூயவனாக இருந்தால் இந்தக் குற்றம் அவனைச் சாராது; கடமையைச் செய்வதாக முடியும்.

> தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
> என்குற்றம் ஆகும் இறைக்கு? (436)

கலை ஆராய்ச்சியாளரும் இந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். மற்றவர்களின் குணம் குற்றங்களை நாடுகின்ற கடமை அவர்களுக்கு உள்ளது. அந்தக் கடமையைச் செய் வதற்குமுன் தம் குற்றங்களை நாடி நீக்கிக்கொள்ள வேண்டும். இல்லையானால், மற்றவர்களின் குறைகூறுதலுக்கு ஆளாக நேரும்; கடமையையும் செய்ய முடியாது.

ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலையில் நின்றாலும், தன் உயர்வைத் தானே வியந்து மதித்துக்கொள்ளக் கூடாது. அது

தன் அறிவுக் கண்ணை மறைக்கக் கூடியது. அவ்வாறு மறைத்தால் உண்மை விளங்காமல் போகும்; பல தவறுகள் செய்து அழிவு தேடிக்கொள்ள நேரும். தான் செய்யும் செயல்களிலும் நல்ல நோக்கம் இருக்குமாறு கவனித்துக் கொள்ள வேண்டும். நன்மை தராத செயல்களை மனத்தாலும் விரும்பாமல் விட வேண்டும். தான் எண்ணியும் பிறரிடம் சொல்லியும் உறுதி பூண்ட செயல்களை ஆனாலும் அவற்றைக் கைவிட வேண்டும். இவ்வாறு தன்னைத் தானே மதித்தலும், நல்ல நோக்கம் அற்ற செயலை நாடுதலும் ஆகிய குற்றங்களைக் கடிய வேண்டும்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை. (439)

பெரியாரைத் துணைக்கோடல்

அறத்தின் பெருமையை உணர்ந்தவர்களாகவும் தன்னை விட அனுபவம் முதிர்ந்தவர்களாகவும் உள்ள பெரியவர்களின் துணை வேண்டும். அவர்களுடைய துணையை முறை அறிந்து கொள்ள வேண்டும். வந்த துன்பத்தை நீக்கும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு; இனித் துன்பம் வாராமல் காக்கும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு. ஆகையால் அவர்களுடைய துணையைப் போற்ற வேண்டும்.

அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல். (441)

உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். (442)

தலைவன் எல்லாவற்றையும் தானே கண்டு ஆராய முடியாது. ஆராய்ந்து கூற வல்ல பெரியவர்களை அவன் நாடி,

அவர்களின் ஆராய்ச்சியைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆகையால், அவர்கள் அவனுக்குக் கண்போன்றவர்கள்; அவ்வாறு தக்க பெரியோர்களிடத்தில் கலந்து ஒழுக வல்ல தலைவனுக்கு ஒரு தீங்கும் வராது. அவனுடைய பகைவர்களும் அவனுக்கு ஒன்றும் செய்ய முடியாது.

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். (445)

தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல். (446)

அறிவால் ஆராய்ந்து கூற வல்லவர்கள் பலவகைப்படுவார்கள். சிலர் தலைவன்மேல் கொண்ட அன்பினால் நன்மையை மட்டுமே கண்டு கூற வல்லவர்கள்; அவர்களுடைய ஆராய்ச்சி குறை உடையது; ஆகையால் பயன் தராது. சிலர் தலைவனிடம் உள்ள அஞ்சுதலால் தீமையைக் கண்டாலும் எடுத்துக் கூற மாட்டார்கள்; அவர்களால் தலைவன் திருந்த முடியாது; அதனால் அவர்களுடைய துணை இருந்தும் பயன் இல்லை. இன்னும் சிலர், தலைவனிடம் நன்மை இருந்தாலும் மறைத்துத் தீமையை மட்டுமே பெருக்கிக் கூறுவார்கள்; அவர்களாலும் பயன் இல்லை. (இக்காலத்தில் உலகத்தில் உள்ள எல்லாப் பாராளுமன்றங்களிலும் எதிர்கட்சியில் இருப்பவர்களுக்கு இதுவே கடமையாக இருக்கின்றது. இந்த முறை பொய்க்குப் பொய்யே மருந்தாக - ஆள்வோரின் பொய்க்கு எதிர்ப்போரின் பொய்யே வளர்வதாக - இருப்பதால், இதிலும் உண்மை இல்லை.) வேறு சிலர், தலைவன் யார் என்ற கவலையே இல்லாமல், பொதுநன்மையே கருத்தில் கொண்டு, நன்மை தீமைகளை நடுநிலையிலிருந்து எடுத்துக் கூறி, தவறு கண்டபோது கடிந்து திருத்த முயல்வார்கள். அத்தகைய பெரியவர்களின் துணை இருந்தால், அந்தத் தலைவனைக் கெடுக்க வல்ல பகைவர்

ஒருவரும் இல்லை. அவ்வாறு இடித்துக் கூறித் திருத்தும் பெரியவர்களின் துணை இல்லாத தலைவன் கெடுவான்; தீமை செய்யும் பகைவர் இல்லாவிட்டாலும் அவன் எளிதில் கெடுவான்.

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்? (447)

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். (448)

இங்கிலாந்து முதலிய சில நாடுகளில் அறிஞர்களின் பேச்சுரிமைக்கும் எழுத்துரிமைக்கும் ஒரு சிறிதும் தடை இல்லாமல் இருப்பதும், சில நாடுகளில் பேரறிஞர்க்கும் வாழ்வுக்கு இடமில்லாமல் நாடு கடத்தும் நிலை இருப்பதும் இங்கு ஆராயத் தக்கவை. இரண்டாம் உலகப்போர் நடந்த காலத்தில், பெர்னார்ட் ஷா, எச். ஜி. வெல்ஸ் என்னும் அறிஞர் இருவரும் இங்கிலாந்தில் இருந்துகொண்டே அரசாங்கத்தின் பலவகை முயற்சியைக் குறைகூறியும் அமைச்சர் குழுவைக் கடிந்தும் எழுதினர்; பேசினர்; ஆயினும் அரசாங்கம் அவர்களைத் தண்டிக்கவில்லை; தடுக்கவுமில்லை; தலையிடவும் இல்லை. அதற்கு மாருக, மற்ற நாடுகளில் தடுக்கப்பட்ட அறிஞர்களுக்கும் நாடு கடத்தப்பட்ட சான்றோர்களுக்கும் இங்கிலாந்து புகலிடமாக விளங்கிவந்துள்ளது. உலகத்தைக் காக்க வல்ல பெருநூல்கள் எழுதிய அறிஞர்கள் பலர் தடைகளுக்கு ஆளாயினர்; அதனால்தான் உலகத்து வல்லரசுகள் மண்ணாய் மறைந்தன; மறைந்துவருகின்றன. பொதுநன்மையை நாடும் சான்றோர்களின் அறிவுக்குத் தடை ஏற்படுத்துவது பெருங் குற்றம் என்பதை உலகம் உணர வேண்டும். மிகப் பழங்காலத்திலேயே திருவள்ளுவர் இந்த உண்மையை உணர்ந்து, அவர்

களின் துணை தலைவனுக்குக் கட்டாயம் வேண்டும் என வற்புறுத்தியுள்ளார்.

சிற்றினம் சேராமை

பெருந்தன்மை அற்றவர்களோடு-கீழ்மக்களோடு-சேராமல் வாழவேண்டும். அவர்களைத் திருத்த வேண்டும் என்ற நல்ல நோக்கம் இருந்தாலும் அவர்களோடு சேர்ந்து பழகக் கூடாது. சேர்ந்து பழகாமல் அவர்களைத் திருத்த முயற்சி செய்வதே நல்லது. ஏன்? சேர்ந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்றபடி நிறமும் சுவையும் நீருக்கு ஏற்படுவதுபோல், சேர்ந்த இனத்தின் இயல்புக்கு ஏற்றவாறு சேர்ந்தவர்களின் அறிவும் மாறிவிடும். ஆகையால் சிற்றினத்தோடு சேர்ந்தால் அறிவு கெடும். நம் மனம் தூய்மையாக இருந்தால் அறிவு கெடுவதற்கு வழி இல்லையே என்று கூறலாம். மனத்திற்கு ஏற்றவாறு அறிவு இருப்பது போல் தோன்றலாம்; அது உண்மை அன்று; சேர்ந்த இனத்திற்கு ஏற்றவாறு அறிவு அமைகின்றது. தவிர, உலகத்தார் எதைக் கண்டு ஒருவனை இன்ன தன்மை உடையவன் என்று சொல்கின்றார்கள்? ஒருவனுடைய உணர்ச்சியை வளர்க்கின்ற மனத்தைப் பார்த்துச் சொல்லாமல், இனத்தைப் பார்த்தே சொல்கின்றார்கள்.

> நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
> இனத்தியல்பது ஆகும் அறிவு. (452)
>
> மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
> இனத்துளது ஆகும் அறிவு. (454)
>
> மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தானும்
> இன்னான் எனப்படும் சொல். (453)

மனத்தூய்மை ஒன்று இருந்தால் போதுமே, நாம் சேரும் இனம் எப்படி இருந்தால் என்ன என்று புறக்கணிக்கலாம். அதுவும் பரபரப்பு மிகுந்த இந்த நாளில், செய்யும்

பொதுவேலையைத் திறமையாகச் செய்தால் போதும், மனம் இப்படி இனம் இப்படி என்று உலகத்தார்க்குத் தெரியாது என்று கவலைப்படாமலும் இருக்கலாம். ஆனால், புகழில் இரு வகை உண்டு; அண்மைப் புகழ், சேய்மைப் புகழ் என்பன. வாழும் இடத்திலும் பழகும் இடத்திலும் நெருங்கிப் பயில் கின்றவர்கள் மட்டும் உண்மை உணர்ந்து புகழ்வது அண்மைப் புகழ்; வெளியூராரும் வெளிநாட்டாரும் முன்பின் தெரியாத வர்களாக இருந்தும் ஒன்றும் அறியாமல் பிறர் சொல்லக் கேட்டுக் கண்மூடிப் புகழ்வது சேய்மைப் புகழ். அண்மைப் புகழ்தான் உண்மையானது; நிலைத்து நிற்பது. சேய்மைப் புகழில் போலித்தன்மை உண்டு; நிலைபேறு அதற்கு இல்லை. இனத்தூய்மையால்தான் அண்மைப்புகழ் (இன்னான் எனப்படும் சொல்) பெறமுடியும். இனத்தூய்மை இல்லாமல், (பத்திரிகை முதலியவைகளின் துணையால்) சேய்மைப் புகழை எளிதில் பெற முடியும். ஆனால் அது ஏமாற்றமே; பயனற் றதே; புகழ் பழியாக மாறுவதும், மறைந்தே போவதும் நேர்ந் தாலும் நேரும். தவிர அந்தப் புகழில் உண்மையும் இல்லை; அன்பும் இல்லை. ஆகையால் அண்மைப் புகழை நாடி நற்செயல் செய்ய விரும்புகின்றவர்களுக்கு மனத்தூய்மை வேண்டும்; செயல்தூய்மை, மனத்தூய்மை இந்த இரண்டும் இனத்தூய்மை இருந்தால்தான் கிட்டும். மனத்தூய்மை மட்டும் உடையவர் களுக்குப் பிற்காலத்தில் நன்மை விளையும்; ஆனால் இனத் தூய்மை இருந்தால் இப்போதே எல்லாச் செயலும் நன்மை யாகும்.

> மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
> இனந்தூய்மை தூவா வரும். (455)

> மனந்தூயார்க்கு எச்சம்நன் றாகும்; இனந்தூயார்க்கு
> இல்லைநன் றாகா வினை. (456)

தெரிந்துசெயல்வகை

செய்யத் துணிவதற்குமுன் அதைப் பற்றி நன்றாக எண்ணிப் பார்த்துத் துணிய வேண்டும். துணிந்து தொடங்கி விடலாம், பிறகு எண்ணிக்கொள்ளலாம் என்று செய்வது குற்றமாகும். இன்ன வகையால் செய்தால் இதை முடிக்கலாம் என்று வழியோடு செய்யாத முயற்சி வீணாகும்; பலர் துணையாக நின்று காப்பாற்றினாலும் அந்த முயற்சி பயன் அளிக்காது. ஆகையால் எல்லாம் முன்னமே நன்றாக எண்ணிப்பார்த்து வழியோடு முயற்சி செய்ய வேண்டும்.

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (467)

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். (468)

நல்ல செயலாக இருந்தாலும் ஆராய்ந்து செய்ய வேண்டும். "என் மனச்சான்று நல்லது என்று சொல்கின்றது, ஆகையால் கவலை இல்லாமல் செய்வேன்" என்ற துணிவு தவறானது. யாருடைய நன்மையைக் கருதி ஒரு செயல் செய்ய வேண்டுமோ, அவருடைய பண்பை ஆராய்ந்தறிந்து அவர்க்குப் பொருந்தும்படியாகச் செய்ய வேண்டும்; இல்லையானால் நன்மை செய்வதும் தவறாக முடியும்.

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை. (469)

இந்த உண்மை உணராத காரணத்தால்தான் பலர் நற்செயல் செய்தும் துன்பத்திற்கும் பழிக்கும் ஆளாகின்றார்கள். 'சொல்லுக சொல்லிற் பயனுடைய' என்று வற்புறுத்தும் திருவள்ளுவர், செயலிலும் பயனுடைய செயலையே செய்யவேண்டும் என்று இங்குக் கூறுகின்றார்; பயனில்லாத,

பயன் விளைக்காத செயலைச் செய்துவிட்டு, "என் கடமையைச் செய்துவிட்டேன்" என்று மகிழ்வது கூடாது. ஆராயாமல் இவ்வாறு செய்து முடிப்பது தீங்கும் உண்டாக்கும்; ஆகையால் அதைத் தவறு என்று குறிக்கின்றார்.

வலி காலம் இடன் அறிதல்

வலியறிதல், காலமறிதல், இடன் அறிதல் என்ற மூன்று அதிகாரங்களில் திருவள்ளுவர் கூறுவன படை யெடுத்துப் போர் செய்யும் முடிவேந்தனுடைய முயற்சியைப் பற்றியே கூறுவன போல் உள்ளன. ஒரு பகுதி அவ்வாறு அமைந்திருப்பது உண்மையே ஆகும். ஆட்சித் தலைவனுக்கு அந்தக் காலத்தில் போர்செய்தல் பெரிய கடமையாக - வினையாக - இருந்து வந்தது. அதனால் போரில் வெல்வதற்கு வேண்டிய வகையில் அறியத் தக்கவை வலிமை, காலம், இடம் என்று கூறுகின்றார். இது ஒரு பகுதி. மற்றொரு பகுதியில் பொருளைச் செலவு செய்யும் முறை முதலியன பற்றிக் கூறுகின்றார். எனினும் இந்தப் பகுதியைக் காலத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ளலாம். போர் இன்னும் உலகத்தில் செல்வாக்குடன் இருக்கின்றதே, ஆதலின் திருவள்ளுவர் காலத்துப் பொருளையே காணலாமே என்று தயங்கலாம். உலகத்தை இன்னும் போர்த் தொல்லை விடவில்லை எனினும், அறிஞர்கள் விழித்தெழுந்து போரைப் பழிக்கும் காலம் இது; வேறு வழி இல்லையே என்று வல்லரசுகள் போர் தொடங்கி நடத்தும் நிலையிலும், எல்லா நாட்டிலும் மக்கள் போரைப் பழித்தும் வெறுத்தும் அஞ்சியும் நடுங்கும் காலம் இது; இவ்வாறு இன்று போர் பொதுமக்களின் போற்றுதலும் அறிஞர்களின் ஆதரவும் இல்லாமல், வல்லரசுகள் சிக்கிக்கொள்ளும் வலையாக இருக்கின்றது. திருவள்ளுவர்காலத்தில் போர் என்பது பொது

மக்கள் விருப்பத்தோடும் மகிழ்ச்சியோடும் மேற்கொண்ட கடமையாக இருந்தது ; அறிஞர்கள் ஊக்கத்தோடு புகழ்ந்து பாடினார்கள் ; வாழ்த்தினார்கள் ; அரசர்கள் அறத்தை நிலை நாட்டுவதற்குரிய நெறியான செயலாக முறையோடு போர் நடத்தினார்கள். தவிர, இப்போது போர் முறையும் அடியோடு மாறிவிட்டது. ஒருவர் ஒருவரை அடுதலும் தொலைதலும் அந்தக் காலத்து முறை; ஒத்த படை எடுத்து ஒத்த ஆண்மை உடையவனோடு அவன் முனைந்து வந்தபோது குறித்த ஒரு களத்தில் போர் நிகழ்த்துவது அந்தக் காலத்து முறை. இக் காலத்துப் போரோ முறையற்றது, நெறியற்றது, வரம்பற்றது. கையில் கொண்ட குண்டின் ஆற்றலுக்கு ஏற்றவாறு ஒருவன் நூறு பேரைக் கொல்லலாம்; நூறாயிரம் பேரையும் கொல்லலாம் ; கோடிக்கணக்கானவரையும் கொன்று குவிக்கலாம். கொல்வதற்கென்று தனிப் போர்க்களமும் குறித்த நேரமும் இல்லை. கண்ட இடமெல்லாம் குண்டு வீசலாம்; நினைத்த நேரமெல்லாம் குண்டு வீசலாம் ; பெரும்பாலும் தற்காப்பற்ற இடத்தை யெல்லாம் எளிதில் அழிப்பதும், ஏமாந்து சோர்ந்து நிற்கும் நேரத்தில் திடீரெனப் புகுந்து குண்டு வீசி அழிப்பதும் வழக்கம். ஒத்த படை உடையவர்களைக் கண்டால் அஞ்சி ஒதுங்கித் தற்காப்புத் தேடிக் கொள்வதும், மெலியாரைக் கண்டால் வலிமை காட்டிச் சுட்டுக் கொல்வதும் வழக்கம். போர்க்கு என்று வந்தவர்களைத் தேடிக் கொல்லாமல், பதுங்கி நிற்கும் பொது மக்களையும் ஓடி ஒளியும் பெண்களையும் ஆடி மகிழும் குழந்தைகளையும் அல்லல்படும் நோயாளிகளையும் இருக்கும் இடம் தேடி, சந்தை, கோயில், பள்ளிக்கூடம், மருத்துவ நிலையம் என்று தெளிந்து குண்டுவீசிக் கொல்வதை இந்தக் காலத்துப் போரில் காணலாம். கொல்பவர் கொல்லப்படு

பகைவரைக் கண்ணால் பார்ப்பதில்லை. இவருக்கும் அவருக்கும் பகையும் இல்லை, காழ்ப்பும் இல்லை. கொல்கின்றவர்கள் யாரோ அனுப்பிய கூலியாட்கள். கொல்லப்படுகின்றவர்கள் இரவும் பகலும் அஞ்சி நடுங்கி உயிர்வாழும் மக்கள். ஆகையால், அக்காலத்துப் போர் முறைக்கு எழுதிய கருத்துக்களை அவ்வாறே இக்காலத்துக் கொடுங்கொலைக்குப் பயன்படுத்தல் பொருந்தாது. அன்றியும், திருவள்ளுவர் இன்று இருந்து அரசியல் கூறுவாரானால், போரை ஒழிக்கப் பெருநூல் எழுதிப் பாடுபடுவார்; அறமும் இன்பமும் எழுதுவதையும் ஒத்திவைப்பார். ஆகையால் வலியறிதல், காலமறிதல், இடனறிதல் ஆகிய இப்பகுதிகளை இக்காலத்து அரசியலுக்கு ஏற்பப் பயன்படுத்த வேண்டும், அவ்வாறு பயன்படக் கூடிய முறையிலேயே திருவள்ளுவரும் எழுதியுள்ளார்.

உலகத்தில் சிறந்த சான்றோர் எழுதிய நூல்களை இவ்வாறு பயன்படுத்தும் முறை புதுமை அன்று. பகவத் கீதைக்கு இவ்வாறு பல அறிஞர்கள் பொருள் கண்ட முயற்சியே எடுத்துக்காட்டாகும். நாட்டுப் பற்றோடு நல்லுணர்வை ஊட்ட விரும்பிய திலகர் கீதைக்கு விளக்கம் கண்டபோது, இந்திய நாட்டு விடுதலைக்கும் வீரவாழ்வுக்கும் உரிய நூலாகப் பயன்படுமாறு முயன்றார். அறநெறியே உயிராகப் போற்றிய காந்தியடிகள், கீதைக்கு விளக்கம் கண்டபோது பற்றற்ற தொண்டு வாழ்க்கையே அடிப்படையாக விளங்குமாறு எழுதினார்; பற்றின்றி வாழும்நெறி என்று பொருள்படும் அனுசக்தி யோகம் என்னும் தொடரையே தம் விளக்கத்திற்குப் பெயராகவும் அமைத்தார். அருச்சுனன், கண்ணன் என வரும் பெயர்களை வரலாற்றுப் பெயர்களாகக் கொள்ளாமல் கற்பனையாகக் கொண்டார்; அறத்திற்கும் அறமல்லாததற்கும் நடக்கும் வாழ்க்கைப் போரையே அந்த நூலில் விளக்கினார்;

போர்ச் செயல் மலிந்த பின்னணி உடைய அந்த நூலைக் கொண்டே, இன்னா செய்யாமை (அஹிம்சை) என்னும் அறத்தைத் தெளிவாக்கினார்.

திருவள்ளுவருடைய அரசியலில் சில அதிகாரங்களில் சிற்சில குறளுக்கே அவ்வாறு பொருள் கண்டு பயன்படுத்த வேண்டியிருக்கின்றது. மற்றவை திருவள்ளுவரின் காலம் கடந்த பரந்த நோக்கத்தைக் காட்டி, போரற்ற காலத்திற்கும் பயன்படக் கூடியவைகளாக உள்ளன. இப்போது கருதப்படும் இந்த வலியறிதல் காலமறிதல் இடனறிதல் என்னும் அதிகாரங்களில் உள்ள முப்பது குறளில் ஆறு குறளே போரைப் பற்றி ஒரு சிறிது அறிவிக்கின்றன. மற்றவை எல்லாம் போர்ச் செயலுக்கும் மற்றெந்த அரசியல் செயலுக்கும் பொதுவாகவே அமைந்துள்ளன. ஆகவே, அந்த ஆறு குறளுக்கும் கீதையில் காந்தியடிகள் கண்டது போல் பொருள் காண வேண்டும். உருவகமாக அல்லது பிறிது மொழிதலாகப் பொருள் காண்பதிலும் ஒரு தனிச் சிறப்பு உள்ளது. அந்தப் பொருள் தெளிவாக நெஞ்சில் பதிகின்றது; நினைவில் நீங்காமல் நிற்கின்றது ; பழமொழிகளில் கொள்ளும் பொருளுக்கு உள்ள தனிச்சிறப்பு இதுதானே ? காலம் வாய்த்தபோதே கடமையைச் செய்து முடிக்கவேண்டும் என்று நேராக உணர்த்துவதை விட, 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்' என்று பிறிதுமொழிதலாக உணர்த்தினால் தெளிவும் ஆழமும் உடையதாய்க் கேட்போருக்குப் பயன்படவில்லையா ? ஆதலால் போருக்கு உரிய சொற்களைக் கொண்ட ஒரு சில குறளுக்கும் இவ்வாறு பொருள் காண்பது மிக்க பயன் உடையதாகவே இருக்கின்றது. திருவள்ளுவரும் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்கு இந்தப் பகுதியில் பிறிதுமொழிதலான கருத்துக்களை அமைத்துள்ளார்.

இந்த அமைப்பை எண்ண எண்ணத் திருவள்ளுவரின் அற நெஞ்சம் புலனாகின்றது. வலியறிதலில் இரு முறையும் (475, 476), இடனறிதலில் மும்முறையும் (495, 496, 500) பிறிது மொழிதல் அமைத்துள்ளார். இவை அல்லாமல் உவமை களும் உருவகங்களும் பல உள்ளன. இவற்றை ஆராய்ந்தால், போர் அற நெறி இழந்து கெட்டுவருதலையும், பொது நன்மைக் குப் பயன்படாமல் பொது அழிவுக்குப் பயன்பட்டு வருதலையும் திருவள்ளுவரே உணர்ந்து உணர்ந்து போரை வெளிப்படை யாகக் கூறாமல் விட்டார் என்று எண்ணத் தோன்றுகின்றது ; எதிர்காலத்தில் அறிஞர்களாலும் பொதுமக்களாலும் போர் வெறுக்கப்படும் என்று உணர்ந்து, போரற்ற காலத்திற்கும் பயன்படுமாறு எழுதினார் என்று கருத இடந்தருகின்றது ; அரசியல் எனின், புறத்திணை எனின், போர் ஒன்றே குறிப் பிடத் தகுந்தது என்னும் அறியாமை நீங்கி, அரசாங்கத்தின் மற்றச் செயல்களைப் போற்றுமாறு, வலியறிதல் முதலியவற் றைப் பொதுச் சொற்களால் எழுதினார் என்றும் கருத இட மிருக்கின்றது.

இக்காலத்துக் குடியாட்சி முறைக்குப் பொருந்த அரசாங்கம் தொடங்கும் எல்லாச் செயல்களுக்கும் வலியறிதல், காலமறிதல், இடமறிதல் இம் மூன்றும் வேண்டும். செய் வதற்கு உரிய வலிமையும் செய்வதற்கு ஏற்ற காலமும் தக்க இடமும் அறியாமல் ஒரு செயலும் செய்ய முடியாது. ஆகையால் பொதுவாக எல்லாச் செயலுக்கும் உரியவைக ளாகக் கொள்ளல் பொருந்தும் ; சிறப்பாகக் கொள்ளத்தகுந்த துறை ஒன்று இக்காலத்து அரசியலில் உள்ளது. அதாவது : பாராளுமன்றத்து நடவடிக்கை. ஒரு புதிய திட்டத்தை அர சாங்கம் நடத்த வேண்டுமானால், முதலில் அதைப் பாராளு மன்றத்திற்குக் கொண்டுபோய்க் கூறி விளக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் அந்தத் திட்டத்திற்குத் துணைநிற்பவர்களும் இருப்பார்கள்; எதிர்ப்பாளர்களும் இருப்பார்கள். பெரும்பாலோரின் போற்றுதல் கிடைத்தால்தான் அதற்கு வெற்றி கிடைக்கும்; வெற்றி பெற்று நிறைவேறிய பிறகுதான் அந்தப் புதுத் திட்டம் நடைமுறைக்கு வரக்கூடியதாகும். ஆகவே இக்காலத்தில் அமைச்சர்குழுவின் தலைவர் அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை ஆராய்ந்தால், அது ஒரு வகைக் கருத்துப்போர் முறையாக இருக்கின்றது. செய்யும் ஒவ்வொன்றும் பாராளுமன்றத்தாரின் கருத்துப்போரில் வெற்றி பெறவேண்டும்; அதாவது, பெரும்பாலோரின் ஆதரவைப் பெறவேண்டும்; எதிர்ப்பைக் குறைக்கவேண்டும். இந்தக் கருத்துப்போர் நிகழாத நாடு இப்போது இல்லை. ஆகையால் இந்த அதிகாரங்களை இதற்கு உரிய முறையில் பொருள்கண்டு தெளியலாம். முதலமைச்சராகிய ஆட்சித் தலைவர், செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் வலிமை அறிந்து, காலம் அறிந்து, இடம் அறிந்து ஒழுகவேண்டும் என்று பொருளுணரலாம்; இதனோடு மற்ற வாழ்க்கைத் துறைகளுக்கும் பொருந்தப் பொதுப் பொருளும் கொள்ளலாம்.

ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வருவதானால், அதன் வலிமையும், கொண்டுவரும் தலைவருடைய (முதலமைச்சருடைய) வலிமையும், எதிர்கட்சித் தலைவருடைய வலிமையும் தமக்கும் அவருக்கும் துணையானவர்களின் வலிமையும் சீர்தூக்கி அதைச் செய்ய முற்பட வேண்டும். தம்மால் எவ்வளவு முடியும் என்பதையும் அதற்கு எவ்வளவு ஆற்றல் வேண்டும் என்பதையும் அறிந்து அதுவே நோக்கமாக உறுதியுடன் இருந்து செய்ய வல்லவர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை. தம்முடைய வலிமையை அளந்தறியாமல், ஊக்கமே காரணமாகத்

தொடங்கினால், அதை முடிக்காமல் இடைநடுவே சோர்ந்து கெடவேண்டி வரும்.

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். (471)

ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல். (472)

உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். (473)

எதிர்கட்சியாரோடு பொருந்திய முறையில் நடக்காமல், தன் வலிமையையும் அளந்தறியாமல், தன்னைப் பெருமையாக வியந்துகொண்டு செய்பவன் விரைவில் கெடுவான்.

அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். (474)

கனம் இல்லாத மயில்பீலி ஏற்றிய வண்டியே ஆனாலும், அதையும் அளவுமீறி மிகுதியாக ஏற்றினால், வண்டியின் அச்சு முறியும். அதுபோல், தான் வலியவனே ஆனாலும், எதிர்ப்பவர் எளியவரே ஆனாலும், பலரோடு பகைத்துக்கொண்டால் அழிவு நேரும்.

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (475)

ஒரு மரத்தின் நுனிக்கொம்பில் ஏறியவர் ஊக்கத்தினால் அதையும் கடந்து மேலும் ஏறுவாரானால், உயிருக்கு இறுதியாக முடியும். அதுபோல், தன்னால் முடிந்த அளவோடு நின்று செயலாற்றாமல் ஊக்க மிகுதியால் அளவுகடந்து சென்றால், எடுத்த செயல் முடியாமல் அழிவுதான் நேரும்.

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். (476)

வருவாயின் அளவு அறிந்தே செலவு செய்ய வேண்டும் என்பதையும் திருவள்ளுவர் வலியறிதலில் கூறுகின்றார்.

பொருள் வரும் வழி சிறியதாக இருந்தாலும் கவலை இல்லை ; பொருள் போகும் வழி அதைவிடப் பெருகாமல் இருக்க வேண்டும். தன்னிடம் உள்ள பொருளின் அளவு அறிந்து அதற்கு ஏற்றவாறு வாழ்க்கையை அளவுபடுத்திக் கொள்ளாவிட்டால், அந்த வாழ்க்கை உள்ளதுபோல் தோன்றி இல்லாமல் கெடும். தன் செல்வத்தின் அளவை அறியாமல் ஒப்புரவு (உபகாரம் செய்தலை) மேற்கொண்டால், அந்த ஒப்புரவுக்கும் இடம் இல்லாமல் விரைவில் வளம் கெடும்.

ஆகாறு அளவிட்டிது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை. (478)

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (479)

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். (480)

செயலாற்றுவதற்கு வலியறிதல் போலவே காலமறிதலும் வேண்டும். கூகை (கோட்டான்) வலிமை மிக்கது ஆனாலும், பகலில் அதைக் காக்கை வென்றுவிடும். அது போல் எதிர்ப்பவருடைய மாறுபாட்டை வெல்ல வேண்டுமானால், அதற்குத் தக்க காலம் வேண்டும். ஊக்கம் உடையவன் காலம் வரும் வரையில் அமைதியாக ஒடுங்கியிருப்பது நல்லது; அது, போர் செய்யும் ஆட்டுக் கிடாய் பாய்வதற்காகப் பின் வாங்குவது போன்றது.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (481)

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. (486)

கிடைப்பதற்கு அரிய காலம் வந்து வாய்க்குமானால், அப்போதே செய்வதற்கு அரிய செயல்களைச் செய்து முடித்துக்கொள்ள வேண்டும். (பாராளுமன்றம் தம் சார்பாக இருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு தக்க செயல் களைச் செய்து முடித்துக்கொள்ள வேண்டும்). அமைதியாகக் காலத்தை எதிர்பார்த்திருக்கும்போது, மீனைக் குத்துவதற் காகக் காத்திருக்கும் கொக்கைப்போல் காத்திருக்கவேண்டும். காலம் வாய்த்த உடனே அந்தக் கொக்கு மீனைக் குத்துமாறு போல விரைந்து செயல் செய்து முடிக்க வேண்டும.

எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல். (489)

கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (490)

இவ்வாறே இடமறிந்து செய்யும் திறமையும் வேண்டும். ஆழமான நீர்நிலையில் முதலை மற்ற விலங்குகளை எல்லாம் வெல்லும்; ஆனால் நீரை விட்டு நீங்குமானால் அதை மற்றவை வென்றுவிடும். நிலத்தில் ஓடும் தேர் கடலில் ஓடாது ; கடலில் ஓடும் கப்பலும் நிலத்தில் ஓட முடியாது. போர்க் களத்தில் வேல் வீரரையும் தூக்கிக் கொம்பில் கோத்துத் திரியும் போர்க்களிறாக இருந்தாலும், கால் ஆழ்ந்து போகின்ற சேற்று நிலத்தில் அகப்பட்டுக்கொண்டால், நரியும் அதைக் கொன்றுவிடும். ஆகையால், எதிர்க்கின்றவரை வெல்ல வேண்டுமானால், அதற்குத் தக்க இடத்தை நாடவேண்டும். இடத்தோடு பொருந்தி எண்ணத் தக்க வழிகளை எண்ணிச் செய்வதானால், வெற்றி பெறுவதற்கு அஞ்சாமை தவிர வேறு துணையே வேண்டா. ஆகவே, எண்ணியதை முடிப்பதற்கு ஏற்ற இடம், தக்க வழி, அஞ்சாமை ஆகிய இவை போதும்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (495)

கடலோடா கால்வல் நெடுந்தேர் ; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. (496)

காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு. (500)

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். (497)

பிறருக்குக் கேடு சூழக் கூடாது என்று அறத்துப்பாலில் ஓதிடவர், பொருட்பாலில் இவ்வாறு பிறர் கெடுவதற்கு ஏற்ற காலத்தைப் பார்த்துக் காத்திருக்க வேண்டும் என்றும், பிறரை வெல்லுவதற்கு ஏற்ற இடத்தைப் பார்த்திருக்க வேண்டும் என்றும் கூறுவது பொருந்துமா என்று கேட்கலாம். திருவள்ளுவர் அறத்துப்பாலில் ஓதியது தன் நன்மையைக் கருதிப் பிறருக்குத் தீங்கு செய்யக் கூடாது என்பதே ஆகும். ஆனால் இங்கே அரசியலில் அவர் கூறுவது தனிவாழ்க்கையைப் பற்றி அன்று. பொது நன்மைக்காகப் பொறுப்பு மேற்கொண்டு தலைவனாய் ஆட்சிபுரிகின்றவன், பலருடைய வாழ்வைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இடையூறு செய்யும் சிலருக்குத் தோல்வி உண்டாக்குவது கடமையாகின்றது. எல்லோரையும் மகிழ்விப்பது முடியுமானால் அவ்வாறே எல்லோரும் விரும்புமாறு ஆட்சி செய்யலாம். ஆனால் கருத்து வேறுபாடும் எதிர்ப்பும் இருப்பது இயற்கை. அவற்றைக் கண்டு தயங்கினால், தலைவன் செயலற்று நிற்க வேண்டும். அதைவிட ஆட்சி யுரிமையைக் கைவிட்டு ஒதுங்குவதே தகுதி. ஆகையால் எதிர்க்கும் சிலருடைய இடையூற்றை வென்று கடந்து போக முயற்சி செய்ய வேண்டும்; காலமும் இடமும் அறிந்து தக்க செயல் ஆற்ற வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர்.

தெரிந்து தெளிதல்

தலைவன் எல்லாக் கடமைகளையும் தானே செய்யமுடியாது. ஆகையால், தனக்குத் துணையாகப் பலரை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு நியமிப்பதற்குமுன் அவர்கள் தக்கவர்களா அல்லரா என்று ஆராய்ந்து அறிய வேண்டும். அதுவே தெரிந்து தெளிதல் என்பது.

இவ்வாறு ஒருவனை ஆராயும்போது, என்ன என்ன அறியவேண்டும்? அவன் அறத்தில் நம்பிக்கை உடையவனா? உறுதி உடையவனா? பொருள் வகையில் எவ்வாறு நடப்பான்? பிறர் பொருளாயினும் கவரும் ஆசை உடையவனா? பொருளே பெரியது என்று கருதி அறத்தைப் புறக்கணித்து வாழக் கூடியவனா? தகாத வழியில் வரினும் பொருளை விரும்பி ஏற்கக் கூடியவனா? இன்ப வாழ்வை விழைந்து கடமைகளை மறப்பவனா? இன்பத்திற்காகப் பிறர்க்கு அடிமையாகக் கூடியவனா? தகாத இன்பத்தை வெறுத்து உறுதியாய் நிற்க வல்லவனா? தன் உயிர்க்காக அஞ்சி ஓடி நெருக்கடியில் கை விடக் கூடியவனா? உயிர்க்காக அஞ்சாமல் உதவிசெய்யக் கூடியவனா? தன் ஒருவனுடைய உயிர் வாழ்க்கைக்காகப் பிறர்க்கு இன்னல் விளைக்கக்கூடியவனா? சாவுக்கு அஞ்சுகின்றவன் அறநெறியில் நிற்கமுடியாது என்று சொல்வதால், சாவுக்கு அஞ்சாத உறுதி உடையவனாக விளங்குவானா? இவ்வாறு அறம், பொருள், இன்பம், உயிரச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்த பிறகே தெளிந்து துணையாகக் கொள்ள வேண்டும்.

> அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
> திறம்தெரிந்து தேறப் படும். (501)

ஒருவனுடைய அறிவை ஆராயும்போது அடிப்படையான ஓர் உண்மையை மறக்கக் கூடாது. எல்லாம் அறிந்தவரும்

ஏதும் அறியாதவரும் இந்த உலகத்தில் இல்லை. அதனால் சிறந்த அறிஞனிடத்திலும் சிறிது அறியாமை இருப்பது இயல்பு.

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. (503)

இந்த உண்மை விளங்கினால் ஒருவனை ஆராய்வது எளிதாகும். அவன் எவ்வெவ் வகையில் அறியாமை உடையவன் என்பதையும், எவ்வெவ்வகையில் அறிவு தெளிந்தவன் என்பதையும் ஆராயலாம். இல்லையானால், வெறுப்பின் காரணமாக ஒருவனிடம் அறியாமையே கண்டு, அறிவுப்பகுதியைக் காணமல், "அவனுக்கு ஒன்றுமே தெரியாது" என்று ஒதுக்க நேரும். வெறுப்பு இல்லாமல், அன்பு வளர்ந்த இடமாக இருந்தாலோ, அவனுடைய அறிவுப்பகுதியை மட்டும் கண்டு அறியாமையைக் காணமல் ஆராய்ச்சியில் குறையுற வேண்டிவரும்; பிறகு அவனையே தேர்ந்தெடுத்தால், அதனால் தலைவனுக்கே அறியாமை வந்துசேரும்; தலைவன் தன் பொறுப்பும் கடமையும் உணராத அறியாமையாக முடியும்.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும். (507)

ஒருவனை நல்லவனு கெட்டவனு என்றும் ஆராய்ந்து காண வேண்டும். ஆனால் அவ்வாறு காணும்போது, முழுதும் நல்ல குணங்களே இருக்கவேண்டும் என்றும், சிறிதும் குற்றம் இருக்கக்கூடாது என்றும் ஆராய்வதால் பயனில்லை. என் எனில், உலகத்தில் குணமே நிறைந்து குற்றம் சிறிதும் இல்லாதவர்களையும் காணமுடியாது. குற்றமே வடிவாய்க் குணம் சிறிதும் இல்லாதவர்களையும் காணமுடியாது. குணமும் குற்றமும் எல்லோரிடமும் கலந்தே நிற்கின்றன. ஆகையால்

இரண்டையும் ஆராய்ந்து, குணம் மிகுந்திருந்தால் கொள்ள வேண்டும் ; குற்றம் மிகுந்திருந்தால் தள்ள வேண்டும்.

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (504)

ஆனால், மனத்தின் இயல்போ மாறானது ; ஒருவனிடத்தில் குணம் கண்ட மனம் அவனிடத்தில் குற்றத்தைக் காணாது ; குற்றத்தைக் கண்டபின் அதையே காண்பதும் தூற்றுவதும் அல்லாமல் குணத்தைக் காணாது. இப்படி ஒன்றைக் கண்டால் மற்றொன்றைக் காணாத குறைபாடு இருப்பதால்தான் உலகத்தில் வீர வழிபாடு மலிந்துவிட்டது ; எதிலும் எவரிடத்திலும் உண்மை விளங்குவது அரிதாகி விட்டது. (இலக்கியம் முதலியவற்றிற்கும் இந்த உண்மை பொருந்தும்). ஒரு சாரார் ஒருவரைப் போற்றினால், அவரையே மற்றொரு சாரார் தூற்றுகின்றார்கள் ; ஒரு சாரார் தாழ்த்தும் ஒருவரையே மற்றொரு சாரார் உயர்த்துகின்றார்கள். ஆகையால் இந்த ஒரு விதி செய்துகொள்ள வேண்டும்: ஒவ்வொருவரிடமும் குணம் குற்றம் இரண்டும் இருக்கும்; ஆகையால், குணம் நாடும்போதே குற்றமும் உடன் ஆராய வேண்டும். மற்றொரு வழியும் உண்டு ; அதாவது, அவருடைய இயல்பு இன்னது என்று ஆராய்வதைவிட்டு, அவர் செய்த செயல்கள் இவை இவை என்று ஆராயவேண்டும். அந்தச் செயல்களால் அவருடைய பண்பு விளங்குவது உறுதி. ஏன் என்றால், ஒருவருடைய பெருமையையோ சிறுமையையோ அவர் செய்யும் செயல்களே பொன் உரைக்கும் (கட்டளைக்)கல் போல் மதிப்பிட்டுக் காட்டமுடியும்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (505)

தெரிந்து வினையாடல்

தலைவனால் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படுகின்றவன் எப்படி இருக்கவேண்டும்? அவன் கண்மூடியாகவும் இருக்கக் கூடாது; தன் விருப்பம் போல் செய்கின்றவனாகவும் இருக்கக் கூடாது. அவனை ஆளும் தலைவன், அவனுடைய கடமையில் அடிக்கடி தலையிட்டு அவனை ஐயுறவும் கூடாது; எல்லாப் பொறுப்பையும் அவனிடம் ஒப்படைத்துவிட்டுக் கவலையில்லாமல் இருக்கவும் கூடாது.

அவன் தானாகவே நன்மை தீமைகளை ஆராய்ந்து நன்மையை விரும்பிச் செய்யும் தன்மை உடையவனாக இருக்க வேண்டும்; பொருள் வரும் வழிகளைப் பெருக்கி வளப்படுத்தி இடையூறுகளைத் தானே ஆராய வல்லவனாக இருக்க வேண்டும். தலைவனிடத்தில் அன்பும், அவன் கருத்தை அறியும் அறிவும், செயல் செய்யும்போது தெளிவும், பிறர்பொருள்மேல் அவா இல்லாமையும் ஆகிய நான்கு பண்புகளும் நன்றாக அமைந்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவனையே செயலுக்குத் தக்கவன் என்று தெளிய வேண்டும்.

> நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
> தன்மையான் ஆளப் படும். (511)

> வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
> ஆராய்வான் செய்க வினை. (512)

> அன்பறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
> நன்குடையான் கட்டே தெளிவு. (513)

எவ்வளவோ வகைகளால் ஆராய்ந்து தெளிந்தாலும் செயலை ஒப்படைத்தபின் அதைச் செய்யும்போது வேறு வகையாக மாறுகின்ற மக்கள் பலர் உண்டு. ஆகையால் தெளிந்த பிறகும் விழிப்பாக இருக்க வேண்டும்.

> எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்
> வேறாகும் மாந்தர் பலர். (514)

வழி அறிந்து, இடையூறுகளைப் பொறுத்து, திறமையோடு செய்ய வல்லவனையே செயலுக்கு உரியவனாக ஏற்படுத்த வேண்டுமே அல்லாமல், நம்மிடம் அன்பு மிக்கவன் என்ற காரணத்தால் செயலுக்கு உரியவனாக ஏவக் கூடாது.

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற்று அன்று. (515)

ஒருவனை ஒரு செயலுக்கு உரியவன் என்று ஆராய்ந்து ஏற்படுத்திய பிறகு, அவனை அதற்கு உரியவனாகவே கருதி அதனால் உயருமாறு செய்ய வேண்டும். அப்போதுதான் அந்தச் செயலைத் தானே செய்து முடிக்கும் விருப்பமும் கொள்வான்; ஆற்றலும் பெறுவான். அவ்வாறு அல்லாமல், மற்றவர்கள் அவன்மேல் பொறாமையால் சொல்வதைக் கேட்டு அவனுடைய உரிமையான உறவை மாறுபடக் கருதினால், திரு நீங்கும் (செல்வாக்கு நீங்கிவிடும்; தலைமை அகலும்). அது கருதி, ஆட்சிமுறையில் பொறுப்பெல்லாம் பிறர்மேல் விட்டு விட்டுக் கவலை இல்லாமல் இருக்கவும் கூடாது; பிறர் தவறு இழைக்காமல் பொதுக்கடமையைச் செய்தால் உலகம் கெடாது ஆகையால், அதை நாள்தோறும் ஆராய்ந்துவர வேண்டும்.

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல். (518)

வினைக்கண் வினைஉடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. (519)

நாள்தோறும் நாடுக மன்னன்; வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு. (520)

சுற்றந்தழால்

தனிவாழ்க்கையில் சுற்றத்தார் அமைவது போல், பொது வாழ்க்கையிலும் சுற்றத்தார் அமைவது உண்டு. தன் ஏவ

னுக்கு இயைந்து தொழில் செய்கின்றவர்கள் வேறு; தன்னோடு பல காரணங்களால் நெருங்கிப் பழகுகின்றவர்கள் வேறு. இவ்வாறு பொதுவாழ்க்கையில் பழகுகின்றவர்களையே அரசியலில் சுற்றம் என்று கொள்ள வேண்டும். அவர்கள் எல்லோரையும் தழுவி அன்பாக நடப்பது ஆட்சித்தலைவனுடைய கடமையாகும்.

சுற்றம் என்பது பெண் கொள்ளல் கொடுத்தல் பற்றியும் பிறப்பின் தொடர்பாலும் ஏற்படும் சுற்றம் மட்டும் அன்று. அவர்களுக்குள்ளும் உண்மையான அன்புடையவர்கள் ஒரு சிலர் உண்டு. ஆனால் பொதுவாழ்க்கையில் பழகி அன்பு கொண்டவர்களே பெரும்பாலும் உண்மைச் சுற்றமாக விளங்குவார்கள். அவர்களே பதவி, செல்வாக்கு முதலியவை நீங்கிய காலத்திலும் பழைய அன்பைப் பாராட்டுவார்கள்; செல்வாக்கில் இருந்த காலத்தில் பெற்ற உதவியைப் பின்னரும் நினைந்து அன்புகொள்வார்கள். மற்றப் போலிச் சுற்றத்தாரோ, பணம் உள்ளவரையில் சூழ்ந்து போற்றியிருந்து, வறுமை வந்தபோது நெருங்காமல் தொலைவில் நின்று எள்ளி ஒதுக்குவார்கள். நாட்டுப்புறங்களில் இரத்தத் தொடர்புள்ள சுற்றத்தார் ஒருவரோடு ஒருவர் பகைகொண்டு கேடு சூழ்வதைக் காணலாம். தொழில் தொடர்பான சுற்றத்தாரும் நாட்டுப்புறங்களில் காணலாம். உழவர், வணிகர், தச்சர் முதலானோர் தமக்குள் கொள்ளல் கொடுத்தல் உறவு இல்லாமலிருந்தும், ஒருவரை ஒருவர் அண்ணன் தம்பி மாமன் மைத்துனன் என்று உறவுமுறை கொண்டு அளவளாவுதலும் உண்டு; துன்பம் வந்தபோது உள்ளம் உருகி வருந்துவதும் ஒருவர்க்கு ஒருவர் இயன்ற உதவி செய்வதும் அங்கு உண்டு. அத்தகையவர்களே பொதுவாழ்க்கையில் சுற்றமாகக் கூறத் தக்கவர்கள். அவர்களிடத்திலதான் செல்வாக்குக்

குறைந்த காலத்திலும் பழைய அன்பைப் போற்றும் பண்பு உண்டு.

பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. (521)

அன்பு நீங்காத சுற்றம் ஒருவனுக்கு வாய்க்குமானால், அவனுக்கு வளர்ச்சி குன்றாத நன்மைகள் பலவும் உண்டாகும். அப்படிப்பட்ட சுற்றத்தாரோடு கலந்து பழகி அளவளாவுவது நல்லது ; இல்லையானால் ஒருவனுடைய வாழ்க்கை நிரம்பாது ; கரையில்லாத குளத்தில் நீர் நிறைவது போல் பயனற்றுப் போகும்.

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும். (522)

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (523)

பதவியும் செல்வாக்கும் பெற்றபோது இத்தகைய உண்மை அன்புடைய சுற்றத்தாரை மறக்காமல், அவர்களைத் தழுவி வாழ வேண்டும். அதற்கு உரிய வழியில், பொருள் கொடுத்து உதவியும் இன்சொல் கூறியும் வாழ்ந்தால், சுற்றத்தார் மேன்மேலும் சூழ்ந்து தொடர்பு கொள்வார்கள். காக்கையின் வாழ்க்கையில் இது இயற்கைப்பண்பாக அமைந்துள்ளது. ஒரு காக்கை இரை கண்டபோது மறைக்காமல் தன் இனத்தைக் கூவி அழைத்து உண்கின்றது. சுற்றத்தால் விளையும் நன்மைகளும் அத்தன்மை உடையவர்களுக்கே அமையும்.

சுற்றத்தால் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். (524)

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். (525)

காக்கை கரவா கரைந்துண்ணும்; ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள. (527)

பொச்சாவாமை

தன் கடமைகளை மறக்காமல் போற்றிச் செய்யும் வழக்கம் வேண்டும். கடமைகளை மறந்து சோர்வுறுகின்றவர்கள் புகழ் பெற முடியாது; இது உலகமெல்லாம் அறிஞர்கள் கண்டு அறிவித்த உண்மை. மனத்தில் அச்சம் கொண்டவர்களுக்கு அரண் எவ்வளவு வலிமையாக அமைந்தாலும் பயன் இல்லாததுபோல், கடமையைச் செய்ய மறக்கின்றவர்களுக்கு எவ்வளவு சிறப்பு அமைந்தாலும் நல்வாழ்வு இல்லை.

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அதுஉலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு. (533)

அச்சம் உடையார்க்கு அரண்இல்லை; ஆங்கில்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு. (534)

உலகத்தில் பெரிய பெரிய கலைஞர்களும் கவிஞர்களும் வாழ்க்கையில் தோல்வியுற்றிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கலையறிவும் புலமையும் சிறப்புற அமைந்திருந்தும் அல்லல் பட்டுக் கவலையுற்று மடிந்திருக்கின்றார்கள். உலகத்தை ஆட்டி வைத்த பெரும் பேச்சாளர்களும் அவ்வாறு அழிந்திருக்கின்றார்கள். அதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் என்ன என்று நடுநிலையில் நின்று ஆராய்ந்தால் விளங்கும் உண்மை இதுதான்: அவர்கள் உணர்ச்சி வயமாக இருந்து உலகத்தில் இயங்கினார்களே அல்லாமல் அறிவுகொண்டு மனத்தைத் திருத்தி ஆளவில்லை. மனத்தைச் சென்ற இடத்தில் எல்லாம் செல்லவிட்டு, தம் தம் கடமையாகிய உலகவாழ்க்கையின் பங்கைப் புறக்கணித்த குறையே வீழ்ச்சிக்குக் காரணம் ஆகும். இவ்வாறே எந்தத் துறையில் எவ்வளவு சிறந்தவர்களாக இருந்தாலும் கடமையை மறந்து வாழ்கின்றவர்களுக்கு உய்வு இல்லை; பொதுவாழ்க்கையாகிய அரசியலில் இது மறக்க

முடியாத உண்மையாகும். ஆகையால், ஒருவர் மகிழ்ச்சியுற்றுப் பதவிச் செருக்கால் கடமையை மறந்திருக்கும்போது, முற் காலத்தில் இவ்வாறு கடமையை மறந்து புறக்கணித்த காரணத்தால் அழிந்தவர்களை நினைக்க வேண்டும்; அந்த நினைப்பால் மனம் திருந்திக் கடமைகளைப் போற்றிச் செய்ய வேண்டும்.

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (539)

செங்கோன்மை

குடிகளைத் தழுவிச் செங்கோல் செலுத்த வேண்டும்; அவ்வாறு ஆட்சி புரிகின்ற தலைவனை உலகம் விடாமல் பொருந்தி நிற்கும். உலகம் விரும்புமாறு செங்கோல் செலுத்துவதே தலைவனுக்கு நன்மை. அவனுக்கு வெற்றி தருவது அவன் கையில் உள்ள வேல் என்று பலர் எண்ணுகின்றார்கள் ; அது தவறு ; அவன் ஏந்திய கோல்-செங்கோல்தான்-உண்மையாக வெற்றி தருவது. அதாவது, வீரத்தாலும் போர்ச்செயலாலும் தலைவன் வெற்றியோடு வாழ்வதாகத் தோன்றினாலும், உண்மையில் நேர்மையான ஆட்சிமுறையால்தான் அவன் சிறப்போடு வாழமுடிகின்றது. நாட்டைக் காக்கும் தலைவனுடைய வாழ்வைக் காப்பாற்றுவது வேறு எது ? அவனுடைய ஆட்சி கோணாமல் நேர்மையாக நடைபெறும் முறைதான் அவனைக் காப்பாற்றுகின்றது.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (544)

வேல்அன்று வென்றி தருவது; மன்னவன்
கோல்;அதூஉம் கோடாது எனின். (546)

இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (547)

நேர்மையாக ஆட்சி புரிதல் என்பது எளிய கடமை அன்று; குடிகளைக் காப்பாற்றி முறை செய்யும்போது, அவர்களில் சிலரிடத்தில் குற்றம் கண்டால் தண்டிக்க வேண்டும். குற்றவாளிகள் சிலரைத் தண்டித்தால் அல்லாமல், பல மக்களையும் காப்பாற்ற முடியாது. அருள் வடிவாக இருந்து எல்லோரிடமும் அன்பு செலுத்த வந்தவன் சிலருக்குத் தண்டனை என்ற வகையில் துன்பம் செய்யும்போது மனம் அமைதியுறாது. ஆயினும் பலருடைய நன்மைக்காக ஒரு சிலர்க்குத் துன்பமும் செய்ய வேண்டும். இந்த உண்மையைத் திருவள்ளுவர் எடுத்துக்கூறும்போது, அறத்துப்பாலில் ஓதிய அன்புடைமை நினைவுக்கு வருகின்றது. தனக்குத் துன்பம் செய்தவர்களுக்கும் தீமை செய்யாதிருப்பதே தலையான அறிவு என்றும், மறந்தும் மற்றவனுக்குக் கேடு சூழக் கூடாது என்றும் தீவினையச்சத்தில் கூறியவை நினைவுக்கு வருகின்றன. வாழ்க்கைச் சிறப்புக்குக் காரணமான செல்வநிலையைப் பெறுவதாக இருந்தாலும் பிறருக்கு இன்னா செய்யாமல் வாழ்வதே தூயவர் துணிவு என்றும், செற்றங் கொண்டு துன்பம் செய்தவனுக்கும் அதற்கு ஈடாகத் தீமை செய்யாமல் வாழ்வதே சான்றோர் கொள்கை என்றும், இன்னா செய்தவர்களைத் தண்டிக்கும் முறை அவர்கள் தாமே நாணும்படியாகப் பதிலுக்கு நன்மை செய்வதே என்றும், மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் போற்றுவதே அறிவின் பயன் என்றும் பலமுறை இன்னாசெய்யாமையை வற்புறுத்தியதும் நினைவுக்கு வருகின்றது. தண்டனை முறைகளில் கொலைத் தண்டனையும் ஒன்று; குற்றவாளிகளுள் மிகப் பொல்லாதவர்களாகிய ஒரு சிலரைக் கொலைத்தண்டனை தந்து ஒழிக்க வேண்டும் என்று எழுதும்போது, அறத்துப்பாலில் கொல்லாமையில் எழுதியுள்ள கருத்துக்களும் நினைவுக்கு வரு

கின்றன ; தன் உயிர் நீங்குவதானாலும் சரி, தான் மற்ற உயிரைப் போக்கும் செயலைச் செய்யக் கூடாது என்றும், எவ்வளவு பெரிய நன்மை உண்டாவதானாலும் கொலையால் பெறும் நன்மை கீழ்ப்பட்டதே என்றும் கூறிய கருத்துக்களை யும் மறக்க முடியாது. திருவள்ளுவரின் அறவடிவாய மனச் சான்று கொலை என்றதும் தயங்கி நின்று உண்மையைத் தெளி வாக உணர்ந்து உணர்த்துகின்றது.

அறத்துப்பாலில் தீவினையச்சமும் இன்னாசெய்யாமை யும் ஒதியது தனிவாழ்க்கை என்னும் முறையிலாகும். தனி ஒருவன் தன் வாழ்க்கை கெடுவதானாலும் பிறருக்குத் தீமை செய்யாமல் வாழ வேண்டும் என்பதே அறம். ஆனால் அவனே பொதுவாழ்க்கையில், பலரைக் காக்கும் கடமையை மேற் கொண்டபோது, பொதுவாழ்க்கை கெடுவதானாலும் ஒரு சிலர்க்குத் துன்பம் செய்யக்கூடாது என்று நிற்பது அறி யாமை ; அறியாமை மட்டும் அன்று, கடமை செய்யத் தவறிய குற்றமுமாகும். ஆகவே பொதுவாழ்க்கை கெடாமல் ஓங்க வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு குற்ற வாளிகளைத் தண்டிக்க வேண்டும். அவ்வாறு தண்டிப்பது பழி அன்று ; தலைவனுடைய தொழிலாகும். கொலைத்தண்டனை விதிப்பதும் அவ்வாறே கடமையாகும் ; அது பயிரைக் காப் பாற்றக் களையைப் பிடுங்கி எறியும் உழவனுடைய தொழில் போன்றது.

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று; வேந்தன் தொழில். (549)

கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (550)

கொலைத்தண்டனையை இப்போது பல நாடுகள் ஒழித்து வருகின்றன. ஒருவனைக் கொன்று தண்டிப்பதால், அவன்

வாழ்வை ஒழிக்க முடிகின்றதே அல்லாமல் அவனைத் திருத்த முடிவதில்லை. ஆகையால் அவனுக்குப் பல ஆண்டு சிறைத் தண்டனை விதித்துத் திருத்த முயல்வதே அரசாங்கத்தின் கடமை என்று அறிஞர் பலர் கருதுகின்றார்கள். தவிர, கொலைத் தண்டனை நாகரிகம் இல்லாத பழங்காலத்தில் ஏற்பட்டது, மக்களின் நாகரிக உணர்ச்சிக்கே மாறுபட்டது என்று காரணங்களும் கூறுகின்றார்கள். ஆனால் இதற்கு மாறாகக் கருதுகின்ற அறிஞர்களும் சிலர் இருக்கின்றார்கள். அவர்களுள் எச். ஜி. வெல்ஸ் என்பவரும் ஒருவர். குற்றவாளிகளுள் திருந்தக் கூடியவர்கள் சிலர் என்றும், திருந்த முடியாதவர்கள் சிலர் என்றும், திருந்த முடியாதவர்களை எத்தனை ஆண்டுகள் சிறையில் வைத்துக் காத்தாலும் பயன் விளையாது என்றும், சிறைவாழ்வால் அவர்களிடம் எஞ்சியுள்ள மக்கட் பண்பும் கெட்டுவிடுகின்றது என்றும், சிறையில் வைத்து அவர்களுடைய மனத்தை முற்றிலும் கெடுத்து உயிரைக் காப்பாற்றுவதைவிட அவர்களுடைய உயிரைப் போக்கிவிடுவதே நன்மை என்றும், சிறைத்தண்டனையால் தண்டிக்கப்பட்டவர்கள் கெடுவதோடு அவர்களைக் காவல் காக்கும் மக்களும் பண்பு இழந்து கெடவேண்டி நேர்கின்றது என்றும், கொலைத்தண்டனையால் குற்றவாளிகள் ஒழிந்தாலும் காவலாளிகள் கெடாமலிருக்க முடிகின்றது என்றும் பற்பல காரணம் காட்டுகின்றார்கள். திருவள்ளுவருடைய கருத்தையும், பயிர் வாழக் களை போக்குதல் போன்றது என்ற உவமையையும் ஆராய்ந்தால், அவரும் இவ்வாறே கருதி எழுதியுள்ளார் எனக் கொள்ள இடம் இருக்கின்றது. ஆயினும் எதிர்காலத்தில் கொலைத்தண்டனை ஒழிந்து, மிகப் பொல்லாதவர்களை நாடு கடத்தித் தீவில் விடும் முறையே நிலவக்கூடும்.

பொதுவாழ்வின் நன்மையைக் கருதிக் குற்றவாளிகள் சிலரைத் தண்டித்தல் தலைவனுடைய கடமை. ஆனால் அவனே தன் கடமையையும் பொறுப்பையும் மறந்து, ஆற்றலையும் அதிகாரத்தையுமே நினைந்து, பலரையும் வருத்தத் தொடங்கிக் கொடுமை செய்தால், அவன் கொலையாளிகளைவிடக் கொடிய வன் ஆவான்.

கொலைமேற் கொண்டாரின் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. (551)

இப்படிப்பட்ட கொடிய தலைவன் நெடுங்காலம் தான் நினைத்தபடியே எல்லோரையும் துன்புறுத்திக்கொண் டிருக்க முடியாது. அவனால் அல்லல்படுகின்ற மக்கள் பல நாளும் பொறுக்க முடியாமல் அழுது அழுது விடுகின்ற கண்ணீர் வீண் போகாது ; அந்தக் கண்ணீருக்கு அளவற்ற ஆற்றல் உண்டு ; அந்தக் கண்ணீர்தான் கொடுங்கோலனுடைய செல்வ வாழ்வை அழிக்கக் கூடிய பெரும்படை யாகும்.

அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. (555)

"கொடியவனுடைய வல்லமையும் போர்க்கருவிகளும் படைகளும் துணைகளும் எவ்வளவு! திக்கற்றுத் துன்பப்படும் ஏழைமக்களின் வலிமை அவற்றிற்குமுன் நிற்க முடியுமா ?" என்று கேட்கலாம். இந்த ஏழைமக்கள் அவனை எதிர்த்துப் போர்செய்ய மாட்டார்கள். ஆனால் போரால் உண்டாகும் அழிவைவிடப் பொல்லாத அழிவை அவர்களுடைய கண்ணீர் உண்டாக்கிவிடும். இதற்கு நேர்க்காரணமாகக் கண்ணீரைக் கூறமுடியாவிட்டாலும், அடிப்படைக் காரணம் அதுதான். கண்ணீர் எப்படி அழிக்கின்றது என்பதை வெளிப்படையாகக் காணமுடியாவிட்டாலும் அதனால் என்ன என்ன விளைந்து

எப்படி எப்படி அவனுடைய அதிகாரக் கொடுமை அழிகின்றது என்பதை ஆராய்ந்து அறியலாம். இந்த உண்மையை விளக்க வரலாறுகள் உள்ளன. போர்க்கருவிகளால் உடலை அழிக்க முடியும்; அரணை அழிக்க முடியும். ஆனால் கண்ணீரால் எத்தனையோ பெரிய மாறுதல்கள் விளையும்; கொடியவனுக்குத் துணையாக இருந்தவர்கள் எல்லோரும் பகைவர்களாக மாறுவார்கள்; அவனுக்கு அடங்கியிருந்தவர்களே அவனை அடக்கக் கிளம்புவார்கள்; இவ்வாறு பலருடைய மனத்திலும் அவனை அழிக்கும் ஆற்றலை வளர்ப்பது எது? திக்கற்றவர்களின் கண்ணீர்தான். அதனால்தான் திருவள்ளுவர் கொடுங்கோலனுடைய அளவற்ற செல்வத்தையும் அதன் வாயிலாகப் பெற்ற ஆற்றலையும் ஒருபால் நிறுத்தி, மெலிந்து துன்புறுகின்றவர்களின் கண்ணீரை மற்றொருபால் நிறுத்தி, வலியவன் ஆற்றலை மெலியவரின் கண்ணீர் வெல்லும் என்று கூறினார். அந்த வெற்றியைச் சிறப்பிக்கவே போர் செய்து வெல்லும் என்று கூறாமல் இருந்த இடத்திலிருந்தே அமைதியாக மெல்ல நிகழ்த்தும் ஒரு சிறு தொழில்போல் தேய்க்கும் என்று நுட்பமாக விளக்கினார். இத்தகைய திக்கற்றவர்களின் கண்ணீரைக் காற்றில் உலர்ந்து போகும் எளிமையுடையது எனக் கருதுவது அறியாமை என்று புலப்படுத்த விரும்பி அதையே படை என்று உணரச் செய்தார். உண்மையாகப் படை வைத்துக் கொண்டு தற்காப்புச் செய்துகொள்ளும் கொடுங்கோலனுடைய ஆற்றலை அந்தப் படையில் காட்டாமல் அதை வெறுஞ் செல்வம் என்று சொல்லிக்கழித்தார். வலிமையும் இழந்து படையும் இல்லாமல் வாடும் மக்களின் கண்ணீரின் ஆற்றலை உணர்த்துவதற்காக அதையே படை என்று குறிப்பிட்டார்.

இரக்கம் கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவது தவறு; செருக்குக் கொண்டு எல்லோரையும் துன்

1586/2

புறுத்துவதோ மிகப் பெரிய தவறு. ஆகவே குற்றம் செய்த வர்களைப் பற்றி நன்றாகக் கேட்டறிந்து, நடுநிலையில் நின்று ஆராய்ந்து தண்டிக்க வேண்டும்; அவ்வாறு தண்டிக்கும் முறையால் அந்தக் குற்றவாளிகள் மறுபடியும் அத்தகைய குற்றம் செய்யாமல் திருந்தும்படியாகத் தண்டிக்க வேண்டும்; குற்றத்திற்கு ஏற்ற தண்டனையாகவே விதிக்க வேண்டும். தண்டனை விதிக்கும்போது அளவு கடந்து தண்டிப்பவர் போல் தொடங்கி அளவு மீறாமல் நிற்க வேண்டும். அது தான் நெடுங்காலம் ஆக்கத்தோடு இருப்பதற்கு வழியாகும்.

> தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
> ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. (561)
> கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
> நீங்காமை வேண்டு பவர். (562)

T24.0B/K37

பொதுவாழ்விற்கு உரிய இந்தக் கடமையில் தான் மட்டும் எண்ணிப்பார்த்து முடிவுக்கு வருவதைவிட, தன்னைச் சார்ந்தவர்களோடு கலந்து எண்ணிப்பார்ப்பது சிறந்தது; அவர்களோடு ஆராய்ந்து எண்ணித் தண்டனை விதிக்காமல், தான் தனியாகச் சினங்கொண்டு சீறித் தண்டிக்கக் கூடாது; அவ்வாறு தனியே வெகுண்டு தண்டிப்பதால் செல்வாக்குப் படிப்படியாகச் சுருங்கிப்போகும்.

> இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
> சீறின் சிறுகும் திரு. (568)

பொது நன்மையைப் பற்றிய கருத்து இல்லாமல், சார்ந்தவர்களோடு கலந்து ஆராயாமல், பிறர்மேல் தன் சினத்தைக் காட்டி அல்லல்படுத்திச் செருக்கோடு செயலாற்றுகின்ற கொடியவனுடைய ஆட்சி முறையிலும் அவனுக்குத் துணையாக ஒரு கூட்டம் சேரும்; அந்தக் கூட்டம் கல்வியறிவில்லாத

கீழ்மக்களின் கூட்டமாக இருக்கும். கொடுங்கோலன் இந்தக் கூட்டத்தைக் கவர்ச்சியாகத் தன் பக்கம் துணை சேர்த்து வைத்துக்கொண்டிருக்க முடியும். ஆனால் இது பயனற்ற கூட்டம்; நிலத்திற்கு வீண் சுமையான ஒரு கூட்டம். இதனால் ஒரு முன்னேற்றமும் அடைய முடியாது.

> கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல்; அதுவல்லது
> இல்லை நிலக்குப் பொறை. (570)

கல்வியறிவில்லாத மக்கள் எளிதில் ஒற்றுமைப்பட முடியும். அற நெறி அவர்களுடைய உள்ளத்தைக் கவராது. அதனால் கொடுங்கோலனுடைய கொடிய செயல்களை அவர்கள் ஒரு முகமாகப் போற்றித் துணைநிற்பார்கள். அதனால்தான் திருவள்ளுவர் 'கல்லார்ப் பிணிக்கும்' என்று பிணித்தல் என்னும் சொல்லால் விளக்கியுள்ளார். உலகத்தில் குடியாட்சிமுறை சீர் பெற அமையும் நாள் வரையிலும் அரசியலில் அறிஞர்கள் பெரும்பாலோராக வருவது அருமையே. தப்பித் தவறி ஒருவர் இருவர் வரினும் அவர்களும் கல்வியறிவில்லாத மக்களின் மனம் மகிழுமாறு நடந்து உயர்ந்த நெறியை மறக்க நேர்கின்றது. இதை மாற்றவேண்டி அறிஞர்கள் செய்யும் முயற்சியும் பயனளிப்பதில்லை. பெரும்பாலான மக்கள் கற்றுத் தெளிந்தவர்களாக வாழும் காலம் வந்தால் இந்தக் குறை தீர்ந்து குடியாட்சி முறை சீராக வாழும்.

கண்ணோட்டம்

பழகியவரிடத்தில் நெகிழ்ந்து நடக்கும் பண்பு கண்ணோட்டம் என்பதாகும். அந்தப் பண்பு மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பது மட்டும் அல்லாமல் மிகச் சிறந்த அழகாகவும் விளங்குகின்றது. அந்தப் பண்பு இருப்பதால்தான் உலகியல் நடைபெறுகின்றது. இவ்வாறு பழகிய

வரிடத்தில் நெகிழ்ந்து ஒழுகும் பண்பு இல்லையானால், ஒருவரை ஒருவர் சீறுவதும் சிதைப்பதுமே வாழ்க்கையாக இருக்கும்; புலியும் மற்றக் கொடிய விலங்குகளும் வாழும் காடு போலவே நாடும் மாறித் தோன்றும். ஆகையால் உலகத்தில் சமுதாய அமைப்பிற்கே கண்ணோட்டம் அடிப்படையாக இருக்கின்றது.

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு. (571)

ஒருவரை ஒருவர் பார்க்கும் பார்வையிலே உள்ளத்தின் நெகிழ்ச்சி புலப்படும். அந்தக் கண்பார்வையால்தான் அன்புகொண்டு பழக முடிகின்றது. மக்களுக்குப் பிறவியிலேயே இந்தக் கண்ணோட்டம் அமைந்திருக்கின்றது. அதனாலேயே, மக்கள் நூற்றுக்கணக்காகவும் நூறாயிரக்கணக்காகவும் சேர்ந்து பழகவும் கூடி வாழவும் முடிகின்றது. பகையும் பூசலும் பெருக்குவது மக்களுக்கு இயற்கையான பண்பு அன்று; யாரோ சிலர் தன்னலம் கொண்டு தலைமை பெற்று மற்றவர்களை ஏய்த்துத் தூண்டுவதால் பகையும் போரும் அவ்வப்போது ஏற்படுகின்றன. தன்னலம் உடையவர்களுக்குத் தலைமை இல்லாமல் செய்ய வல்ல அறிவும் ஆற்றலும் மக்களுக்கு ஏற்பட்டுவிடுமானால், போருக்கு வழி இல்லாமல் போகும். போருக்கு ஆள் திரட்ட ஒரு தலைவன் முயன்றால், மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து போர் செய்ய மறுத்துவிடுவார்கள்; தலைவன் வற்புறுத்தினால், அவனுடைய தலைமையை ஒழித்து, போர் வேண்டா என்று அமைதியை நாடும் ஒருவனையே தலைவனாக்கிக்கொள்வார்கள். நாட்டுப்பற்று, சமயப்பற்று என்று பலவாறு நல்ல பெயர்களைச் சொல்லி வெறியூட்டுகின்ற உணர்ச்சியாளர்களுக்கும் தந்திரக்காரர்

களுக்கும் மக்கள் இரையாகாமல் விழித்துக்கொள்வார்கள். ஒருவேளை, போர்க்கருவிகளைக் கையில் எடுக்க நேர்ந்தாலும், தம்மைப் போல் வாழும் மக்களைக் கொல்லாமல், தம்மைக் கருவிகளாக்கி மந்தைகளாக்கி வெறியூட்டிக் கண்மூடித் திற்கு இடம் இல்லாமல் கெடுத்து அழிவு வேலை செய்கின்ற கொடுங்கோலர்களையும் வஞ்சகர்களையும் ஒழிப்பதற்கே அந்தக் கொலைக்கருவிகளைப் பயன்படுத்துவார்கள். ஆகையால் எப்படியும் மக்கட் பண்பை அழிக்க முடியாது. மக்கள் வாழ்க்கை இந்த அடிப்படை கொண்டே அமைந்திருக்கின்றது. புலி முதலிய கொடிய விலங்குகளின் வாழ்க்கை இப்படி இல்லை. ஒன்றை ஒன்று காணும்போதே உறுமுவதும், வலிய விலங்குகளைக் கண்டால் ஓடி ஒளிவதும், வலிமை குறைந்த விலங்குகளைக் கண்டால் துரத்திக் கொல்வதும் அவற்றின் இயற்கை. தம் வயிற்றில் பிறந்த குட்டிகளையும் வளர்ந்த பிறகு உறுமுவதும் பகைப்பதும் அவற்றின் வாழ்க்கையில் காணலாம். அதனால் பத்துப் பதினைந்தாகவோ, நூறு இருநூறாகவோ கூடி வாழும் தன்மை அவற்றிற்கு இல்லை. தம் இனத்தையும் போற்றுவதில்லை; பிற இனத்தையோ அழிக்காமல் விடுவதில்லை. அதன் பயனாக இந்தக் கொடிய விலங்குகள் வளர்ந்து பெருகாமல் வரவரக் குன்றியும் குறைந்தும் வருகின்றன. ஆனால் மான் முயல் முதலான மற்றத் தீமை அற்ற உயிர்கள் எவ்வளவோ அழிவுகளுக்கு இடையிலும் பெருகி வாழ்ந்து வருகின்றன; இருபது முப்பதாகக் கூடி வாழ்கின்றன; கவலையில்லாமல் காற்றிலும் ஒளியிலும் கலந்து விளையாடி வாழ்கின்றன; புலிகளைப் போல் குகைகளிலும் கற்பாறைகளிடையிலும் ஒதுங்கிப் பதுங்கிப் பகலில் வெளிவர அஞ்சி அடைபட்டுக் கிடப்பதில்லை; வெட்டவெளியில் வாழ்ந்து மகிழ்கின்றன. மக்கள் வாழ்க்கையும் இப்படிப்பட்டதுதான்.

பிறரோடு பழகிப் பழகிக் கண்ணோட்டம் உடையவர்களாய் இயைந்து வாழ்வதே மக்கட் பண்பு. அதனால்தான் நூறாயிரக் கணக்காகக் கூடி வாழ்வதும் பெரிய பெரிய சமுதாயம் அமைத்து வாழ்வதும் இயல்வனவாக உள்ளன. தந்திரமும் தன்னலமும் உடைய சிலர் சூழும் கேடுகளுக்கு ஒவ்வொரு வேளையில் இரையாகிப் போர் முதலியவற்றால் மக்கள் அழிவுற்றாலும், அந்தப் பண்பும் அழிவுபடவில்லை; சமுதாய அமைப்பும் குலையவில்லை. இவ்வளவு சிறந்த மக்கட் பண்பைத் திருவள்ளுவர் மிகச் சிறந்த அழகு (கழி பெருங் காரிகை) என்கின்றார். கண்ணோட்டம் இருப்பதால் உலகியல் அழியாமல் இருக்கின்றது என்றும், அப்பண்பு இல்லாதவர்கள் பூமிக்குப் பாரமே அன்றி வேறு பயன் இல்லை என்றும் கூறுகின்றார். இவ்வளவு சிறப்புடைய உள்ள நெகிழ்ச்சி கண்ணில் புலனாவதால், கண்ணைச் சிறப்பித்து, அந்தக் கண்ணோட்டமே கண்ணுக்கு அணிகலம் என்றும், அது இல்லாத கண் நோய் தரும் புண்ணே என்றும், அவ்வாறு பயனற்ற கண்ணை உடையவர்கள் கணுவை உடைய மரம் போன்றவர்கள் என்றும் கூறுகின்றார்.

> கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃதிலார்
> உண்மை நிலக்குப் பொறை. (572)
>
> கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதின்றேல்
> புண்என்று உணரப் படும். (575)
>
> மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
> இயைந்துகண் ணோடா தவர். (576)

இவ்வளவும் கூறிய திருவள்ளுவர், ஆட்சிப் பொறுப்பு ஏற்றுள்ள தலைவன் கண்ணோட்டம் உடையவனாக இருக்கமுடியுமா என்பதைத் தெளிவிக்கின்றார்: பொதுக்கடமைகளைத் தான் மேற்கொண்டிருக்கும்போது, பழகியவர்களும் சிலவேளைகளில்

இடையூறு செய்ய முற்படுவர். அவர்கள்மேல் சினங்கொண்டு மாறுபடலாம் என்று தோன்றும். ஆனால் பழகியவர்களாக இருப்பதால் இயல்பாக உள்ளம் நெகிழ்ந்துநிற்கும். இடையூறு செய்கின்றவர்களிடத்திலும் கண்ணோட்டம் உடையவனாக இருக்கலாம்; ஆனால் தான் மேற்கொண்டுள்ள கடமை கெடாதவாறு காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு நடக்க வல்லவர்களுக்கு இந்த உலகம் உரிமையானதாகும். சில வேளைகளில் இடையூறு செய்கின்றவர்கள் அளவு மீறிச் செல்வார்கள்; தன் அதிகாரத்தைக் கொண்டு தலைவன் அவர்களைத் தண்டிக்கவும் முடியும். ஆனால் அப்போதும் பழகியவர்கள் என்ற காரணத்தால் பொறுமை மேற்கொண்டு கண்ணோட்டம் உடையவனாக இருப்பதே சிறந்த பண்பு ஆகும்.

> கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடைத்திவ் வுலகு. (578)

> ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
> பொறுத்தாற்றும் பண்பே தலை. (579)

ஒருசிலர் மற்றவர்களுக்குத் தீங்கு செய்தால் அந்தக் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று செங்கோன்மையில் கூறினார். இங்குக் கூறுவது, தலைவனுக்கே இடையூறு செய்கின்றவர்களைப் பற்றியாகும். அவ்வாறு தனக்கு இடையூறு செய்கின்றவர்கள் பழகியவர்களாக இருந்தால், தான் தலைவன் என்ற உயர்நிலையில் இருந்தாலும், பொறுத்துக் கண்ணோடுவது நல்லது என்று திருவள்ளுவர் கூறுகின்றார். பொதுக்கடமைகளை மேற்கொண்டு செய்யும்போது, தன்னைப் போன்ற அறிவும் ஆற்றலும் உடைய சிலர்க்குப் பொறாமை ஏற்படுவதும், அதனால் அவர்கள் இடையூறு செய்ய முனைவதும் இயற்கை. அப்போதெல்லாம் தலைவன் சினங்கொண்டு

தண்டிக்க முயல்வது கூடாது ; தன் பொதுக்கடமை கெடாத வாறு காத்துக்கொள்வது மட்டும் போதும். நாளடைவில் இடையூறு செய்கின்றவர்கள் பொறாமை மாறி அன்புகொண்டு திருந்தக் கூடும். ஏன் என்றால் அவர்களின் பொறாமைக்குக் காரணம் தன் செல்வாக்கும் உயர்நிலையுமே அல்லாமல், தனிப்பட்ட முறையில் தன்மேல் அவர்களுக்குப் பகையும் காழ்ப்பும் இல்லை. தானும் அந்தத் தலைமைப் பொறுப்பைத் தன் நன்மைக்குப் பயன்படுத்தாமல் பொதுநன்மைக்குப் பயன் படுத்திச் செருக்கு இல்லாமல் வாழ்ந்தால், இடையூறு செய் கின்றவர்கள் தம் தவறு உணர்ந்து அன்புகொள்ளத் தலைப்படு வார்கள். ஆகையால் அவர்களிடத்தில் கண்ணோட்டம் கொள் வதே தலையான பண்பாகும். ஒருவேளை அவர்களில் சிலர் திருந்தாமல், மேன்மேலும் பொறாமையே கொண்டு, அன்பு துறந்து, தன் உயிருக்கே தீங்கு செய்வார்களானால், அப் போதும் கண்ணோட்டமே சிறந்தது என்கின்றார் திருவள்ளு வர். அதை நன்கு விளக்குவதற்காக, பழகியவர்கள் தனக்கு நஞ்சு இடுவதைக் கண்ணால் கண்டும் கண்ணோட்டத்தால் மறுக்கமுடியாமல் அதை உண்டு அமைதியுறுவதே நல்லது என்கின்றார்.

> பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர். (580)

இப்படி அமைதி அடைவதை நல்லது என்று மட்டும் திருவள்ளுவர் கூறவில்லை ; விரும்பத் தகுந்த நாகரிகம் உடையவர்களின் செயல் என்று கூறுகின்றார். திருவள்ளுவர் நாகரிகம் என்ற சொல்லைக் குறிப்பிடும்போது மனப் பண் பாட்டையே கருதுகின்றார் ; உண்பதிலும் உடுப்பதிலும் உறையுள் அமைப்பதிலும் பிறவற்றிலும் பெற்றுள்ள மாறு தல்களையே முன்னேற்றம் என்று எண்ணி, அவற்றையே

நாகரிகம் என்று பெரும்பாலோர் போற்றுகின்றார்கள். ஆனால், திருவள்ளுவரும் மற்றச் சான்றோர்களும் புறவாழ்வில் நிகழும் மாறுதல்களை நாகரிகமாகக் கருதவில்லை. அகவாழ்வில் ஏற்படும் நல்ல பண்புகளை-நெஞ்சின் உயர்நிலைகளையே-அவர்கள் நாகரிகத்தின் கூறுகளாகக் கொள்கின்றார்கள். திருவள்ளுவரின் கருத்துப்படி உயர்வகையான மாடி வீடுகளில் வாழ்வது நாகரிகம் அன்று; தாம் மாடிவீட்டில் வாழ்ந்தாலும் பொத்தல் குடிசைகளில் உள்ள மக்களோடு பழகி, பழகிய காரணத்தால் கண்ணோட்டம் உடையவர்களாக வாழ்வதே நாகரிகம். பகட்டான ஆடை அணிகளை அணிந்து ஒய்யாரமாகத் திரிவது நாகரிகம் அன்று; தம்மொடு பழகியவர்கள் கந்தலுடுத்துக் கிடந்தாலும் அவர்களைத் தம்போல் மதித்து நெஞ்சம் நெகிழ்வதே நாகரிகம். அறுசுவை உணவு உண்டு களிப்பது நாகரிகம் அன்று; தம்மொடு பயின்றவர்கள் உப்பில்லாக் கூழ் குடிப்பவர்களாயினும் அவர்களைத் தம்போல் மதித்து உள்ளம் உருகி இயைவதே நாகரிகம். இந்தப் பண்பு எல்லா மக்களிடத்திலும் ஓரளவு அமைந்திருக்கின்றது. ஆனால் புறவாழ்க்கையின் போக்கு இந்த நெஞ்சப் பண்பாகிய நாகரிகத்தை வளரவொட்டாமல் நெருக்கி அடக்குகின்றது.

எடுத்துக்காட்டாக, ஒருவர் தம் நண்பர் வீட்டில் உணவு உண்ணச் செல்கின்றார் என்று வைத்துக்கொள்ளலாம். உணவு உண்ணும்போது உணவில் கல் அகப்படுகின்றது. அந்தக் கல் பற்களுக்கிடையில் சிக்கிக் கறிக்கின்றது. அந்தச் சிறு ஒலி நண்பருடைய துணைவியார் செவியில் விழுகின்றது. "என்ன அது? கல் இருந்ததோ?" என்று அம்மையார் கேட்கின்றார். "இல்லை, இல்லை" என்கின்றது உண்கின்றவருடைய வாய். இதுதான் நாகரிகம். "ஐயோ! நன்றாகக் கல் பொறுக்காமல் சமைத்துவிட்டோமே! அவர் உண்ணும்

போது கல் இருந்ததே" என்று அந்த அம்மையாரின் மனம் நொந்து "கல் இருந்ததோ?" என்று கேட்டது. "அந்த மனம் ஏன் நோகவேண்டும்? அது நோகாமல் நாம் நடந்து கொள்ளத் தவறினேமே" என்று உண்கின்றவர் மனம் வருந்துகின்றது. அதனால்தான் கல் இருந்தும், "இல்லை, இல்லை" என்று அவருடைய வாய் பொய் சொல்லியாவது அந்த அன்புமனம் வருந்தாதிருக்கச் செய்ய வேண்டும் என்று முயல்கின்றது. பிறர் வருந்தாமலிருக்க வேண்டும் என்று தன் வருத்தத்தை இவ்வாறு மறைப்பதுதான் நாகரிகம். இதுவே வளர்ந்து முதிர்ந்த நாகரிகமாக நிற்கும்போது, பிறர் வருந்தாமல் வாழட்டும் என்று அதற்காக அவர்கள் இட்ட நஞ்சும் உண்டு, தன் உயிர்வேதனை தெரியாமல் அவர்கள் வாழட்டும் என்று அமைதியும் பூண்கின்றார்கள். அவர்களிடம் வெறுப்பும் சினமும் கொள்ளாமல் அவர்களைத் தண்டிக்காமல் இருக்கும் பண்பு, அவர்களை விட்டுத் துறக்காமல் மேலும் அவர்களோடு பழகும் பழக்கம், அவர்கள் தன்னைக் கொல்லச் சூழ்ந்து நஞ்சு இடுவதைக் கண்டும் பொறுத்திருக்கும் பொறுமை, அதை எடுத்து உண்ணத் துணியும் துணிவு, துணிந்து உண்டபின்னும் தன் உயிர்வேதனையை அவர்களுக்குப் புலப்படுத்தி அதனால் அவர்கள் வருந்தும்படியாகச் செய்யக்கூடாது என்று தன் துன்பத்தைத் தனக்குள் அடக்கிக்கொண்டு அமையும் அமைதி இவற்றை ஒவ்வொன்றாக எண்ணிப்பார்க்கப் பார்க்க, மனப்பண்பாடு என்னும் நாகரிகத்தைப் படிப்படியாக அளந்தறிவதுபோல் தோன்றுகின்றது; கண்ணோட்டமே அதை அளந்தறியும் கருவியாகவும் விளங்குகின்றது.

ஒற்றாடல்

ஆட்சி புரியும் தலைவனுக்கு எல்லாவற்றையும் அறிந்து முறை செய்வதற்கு இரண்டு துணை வேண்டும் : ஒன்று அங்கங்கே என்ன என்ன நிகழ்கின்றன என்பதை உள்ளவாறு அறிவிக்கும் ஒற்று (வேவு பார்த்தல்); மற்றொன்று, நிகழ்கின்றவற்றை அறிந்த பிறகு எதற்கு என்ன செய்யவேண்டும் என்று கடமையைத் தெளிவாக்கும் நீதிநூல் (சட்டநூல்). இந்த இரண்டையும் தலைவன் தன் இரண்டு கண்ணாகப் போற்ற வேண்டும்.

ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். (581)

ஆட்சி புரியும்போது, மக்கள் தம் குறைகளை எழுதியனுப்பியபின் (விண்ணப்பங்கள் அனுப்பியபின்) அவற்றை ஆராய்ந்து தக்கவை செய்தல் உண்டு ; அல்லது, மக்கள் தெரிவிக்காமலே, தலைவனே ஒற்றர்களின் வாயிலாக (வேவுகாரர்களின் வாயிலாக) அங்கங்கே அவரவர்களின் வாழ்வில் நடப்பன அறிந்து அவற்றிற்கு ஏற்றபடி தக்கவை செய்தலும் உண்டு. இந்த இருமுறைகளில், விண்ணப்பங்களால் தெரிந்தபிறகு ஆராய்வது நல்ல ஆட்சிமுறை அன்று. தலைவனே ஒற்றர்களின் வாயிலாகக் குறைகளை அறிந்துகொண்டு தக்கவை செய்வதே நல்ல ஆட்சிமுறைஆகும். அதுவே கடமையுமாகும். குடிமக்கள் ஆள்வோரைத் தேடி அலையக் கூடாது. ஆள்வோர் குடிமக்களை நாடிக் கடமையைச் செய்யவேண்டும். ஆகையால் எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் ஒற்றர்களால் விரைந்து அறிவது தலைவனுடைய கடமையாகும்.

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில். (582)

இவ்வாறு ஆள் வைத்து ஆராயும்போது எல்லாரையும் ஆராயவேண்டும். வேண்டியவர் வேண்டாதவர் என்ற வேறுபாடு இல்லாமல், நெருங்கியுள்ளவர் அல்லாதவர் என்ற வேறுபாடும் இல்லாமல், எல்லாரையும் ஆராயவேண்டும். தம் குறையைச் சொல்லத் தயங்கியிருப்பவர்களும் உண்டு. தலைவன் நமக்கு வேண்டியவன் என்று கடமையை மறந்து தீமை செய்கின்றவர்களும் உண்டு. ஆகையால் நன்மை செய்வதானாலும் தீமை செய்வதானாலும் எல்லோரையும் ஆராய வேண்டும். பொது ஊழியம் செய்கின்றவர்கள், சுற்றமாகச் சூழ்ந்திருக்கின்றவர்கள், பகைவர்கள் ஆகிய எல்லோரையும் ஆராய வேண்டும்.

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. (584)

கண்டவர் ஐயுறாத வடிவத்தை உடையவனாய், அவர் ஐயுற்று வெகுண்டபோதும் அஞ்சாமைகொண்டு, யார் என்ன செய்தாலும் எவ்விடத்தும் தன் மனக்கருத்தை வெளியிடாமல் காக்க வல்லவனாக இருப்பவனே ஒற்றன் ஆவான். மக்கள் மறையச் செய்த செயல்களையும் எவ்வாறாவது கேட்டறியக் கூடிய வல்லமை உடையவனாய், கேட்டறிந்தவைகளை ஐயமறத் தெளிந்து உணர்த்தக் கூடியவனாய் அவன் தொழிலாற்ற வேண்டும்.

கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. (585)

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று. (587)

இவ்வாறு ஓர் ஒற்றன் அறிவித்த ஒரு செய்தியை அவ்வாறே உண்மை என்று நம்பிவிடாமல், மற்றோர் ஒற்றனை

அனுப்பி அறிந்து இருவர் கூறும் செய்திகளையும் ஒத்திட்டு நோக்கி உணர வேண்டும். இவ்வாறு செய்யும்போது, ஓர் ஒற்றனுக்கு மற்றோர் ஒற்றன் யார் என்று தெரியாதபடி ஆள வேண்டும். எத்தகைய செய்தி ஆனாலும், மூன்று ஒற்றர்கள் கூறுவன ஒத்திருந்தால் உண்மை என்று தெளியப்படும்.

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். (588)

ஒற்றொற்று உணராமை ஆள்க ; உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். (589)

ஊக்கமுடைமை

ஊக்கம் உடைமையே நிலையான உடைமை. ஏன் என்றால் அது மனத்தில் உள்ள செல்வமாகும். பொருள் உடைமை நிலைத்தது அன்று ; அது உடம்பை விட்டு வேறாக இருப்பது. ஆகையால் அழியக் கூடியது. நிலைத்த செல்வமான ஊக்கத்தைத் தம்மிடம் கொண்டவர்கள், பெற்ற நன்மை போய் விட்டதே என்று எப்போதும் வருந்த மாட்டார்கள் ; ஊக்கம் கொண்டு உழைத்து மீண்டும் அதை அடையப் பாடுபடுவார்கள். சோர்வற்ற ஊக்கம் உடையவனிடத்தில், நன்மை தானே வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும். ஒரு பொய்கையில் நீரின் ஆழத்திற்கு ஏற்றவாறு நீர்ப்பூக்களின் தாள்கள் நீள்வதுபோல், மக்களுடைய உள்ளத்தின் ஊக்கத்திற்கு ஏற்றவாறு அவர்களுடைய வாழ்க்கை உயரும்.

உள்ளம் உடைமை உடைமை ; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (592)

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். (593)

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை. (594)

வெள்ளத் தனைய மலர்நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு. (595)

ஒருவனுக்கு வலிமை எது என்றால் ஊக்க மிகுதியே. அந்த ஊக்கமிகுதி இல்லாதவர் மக்கள் அல்லர் ; மரங்களே. வடிவால் மக்களைப் போல் இருப்பதுதான் இந்த ஊக்கமற்ற மரங்களுக்கும் மண்ணில் நிற்கும் மற்ற மரங்களுக்கும் வேறு பாடாகும்.

உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை;அஃ தில்லார்
மரம்;மக்கள் ஆதலே வேறு. (600)

உடனே செய்து முடிக்காமல் காலம் நீட்டித்துச்செய்யும் தன்மையும், மறதியும், சோம்பலும், அளவு மிகுந்த தூக்கமும் ஆகிய இந்த நான்கும் கேட்டைத் தரும் ; கெட்டுப் போகின்றவர்கள் ஏற விரும்பும் மரக்கலங்களாக இவை உள்ளன.

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். (605)

சோம்பலை விரும்பிச் சிறந்த முயற்சியைக் கைவிட்டவர்களை மற்றவர்கள் கடிந்து கூறுவார்கள் ; எள்ளி இகழ்வார்கள் ; அவர்கள் இந்தச் சொற்களைக் கேட்டுக்கொண்டு வாழ நேரும்.

இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். (607)

எந்தச் செயலாக இருந்தாலும் செய்ய முடியாதது என்று சோர்வடையக் கூடாது; முயற்சி இருந்தால், அதைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய ஆற்றல் தானே வரும் ; அந்த ஆற்றலை முயற்சியே தரும். செயலைத் தொடங்கி ஒரு

பகுதியைச் செய்து இடைநடுவே சிலர் சோர்ந்து விட்டுவிடு கின்றார்கள். அத்தகையவர்களை உலகமும் கைவிடுகின்றது. ஆகையால் எடுத்த வேலையைக் குறையாக விடக்கூடாது.

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும் ;
பெருமை முயற்சி தரும். (611)

வினைக்கண் வினைகெடல் ஓம்பல்; வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு. (612)

பிறர்க்கு உதவியாக வாழும் வாழ்க்கையே மேம்பட்ட வாழ்க்கை ; முயற்சியாகிய உயர்ந்த பண்பு உடையவர்களுக்கே அந்த மேம்பட்ட வாழ்க்கை அமையும். தன்னலத்தோடு தன் இன்பத்தை விரும்பாமல் செயல் செய்து முடிப்பதையே விரும்புகின்றவன் எவனோ அவனே சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்கும் தூண் போல் நிற்பான்.

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. (613)

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (615)

முயற்சி பொருள்வளத்தைப் பெருக்கும் ; முயற்சியில்லா விட்டால், வளம் எல்லாம் வறண்டு வறுமை அடையச் செய்யும். நல்வினை இல்லாத காரணத்தால் முயற்சியில் தோல்வியுற்றால் அதனால் யார்க்கும் பழி இல்லை. ஆனால், அறியத்தக்க வழிகளை அறிந்து முயற்சி செய்யாமலிருப்பது பழியாகும். ஊழ்வினையால் கருதிய பயனை அடைய முடியாமற் போனாலும், உடம்பு வருந்திய வருத்தத்தின் கூலியையாவது முயற்சி தரும். ஊழ்வினை முயற்சிக்குத் தடையாக நின்றாலும், சோர்வடையாமல் குறையில்லாமல் முயற்சி செய்ய வல்லவர்கள் அந்த ஊழ்வினையையும் வெல்ல முடியும்.

முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (616)

பொறியின்மை யார்க்கும் பழிஅன்று; அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. (618)

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (619)

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். (620)

இடுக்கண் அழியாமை

துன்பம் வரும்போது சோர்ந்து அழியாமல் உள்ளத்தில் மகிழ வேண்டும். வந்த துன்பத்தை வெல்வதற்கு அதைப் போல் சிறந்த வழி இல்லை.

இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல். (621)

துன்பம் வரும்போது இவ்வாறு உள்ளத்தில் மகிழ வேண்டுமானால், மன உறுதி வேண்டும்; அறிவுத் தெளிவு வேண்டும். உறுதியும் தெளிவும் உடைய மக்கள் மிகச் சிலரே. மற்றவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களை எண்ணினால் இரக்கமே தோன்றுகின்றது. அவர்கள் தமக்கு வரும் துன்பத்தை மறப்பதற்குக் கள்ளையும் சூதையும் பொதுமகளிரையும் நாடுகின்றார்கள். மன உறுதியும் அறிவுத் தெளிவும் இல்லாத காரணத்தால்தான் அவற்றை நாடிக் கெடுகின்றார்கள். துன்பத்தை மறக்கலாம் என்று அவற்றில் ஈடுபட்டு மீளாத் துன்பத்தில் சிக்குண்டு என்றாலும் வருந்துகின்றார்கள். "ஐயோ! இந்த உலகத்தில் இவர்கள் மனத்தில் உறுதியும் தெளிவும் இல்லாமல் கெடுகின்றார்களே!" என்று இரக்கம் தோன்றுகின்றது. ஆனால் அத்தகையவர்களுக்கு அரசியலில்-

பொதுவாழ்வில் - பொறுப்பு இருக்கக்கூடாது என்று வலி யுறுத்துவதற்காகவே, பொருட்பாலில் வரைவின்மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்னும் அதிகாரங்களில் அவற்றைக் கடிந்துரைக்கின்றார். இங்கே, அரசியலில் தலைவன் இயல் பைக் கூறுகின்ற திருவள்ளுவர், மனஉறுதியும் அறிவுத் தெளிவும் உடைய தலைவனைப் பற்றியே கூறுகின்றார். ஆகை யால், அவன் செயலாற்றும்போது இடுக்கண் வந்தால், உள் ளத்தால் மகிழும் ஆற்றல் பெற்றிருக்கவேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். அதற்கு வேண்டிய தெளிந்த அறிவு பெற்றவனாகவும் அவன் இருக்க வேண்டும் என்று குறிக் கின்றார். வெள்ளம் போல் எல்லையற்ற துன்பம் வந்தாலும், அறிவுடையவன் உள்ளத்தால் நினைத்த அளவில் அவ்வளவு துன்பமும் கெடும் என்கின்றார்.

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். (622)

பொதுக்கடமையில் முதல் பங்குக்கே தலைமை என்று பெயர். பொறுப்பு மிகுதி ஆக ஆகச் சுமையும் மிகுதி யாகும்; கடமையும் மிக ஒழுங்காகச் செய்ய நேரும். இந்த உண்மையை உணர்ந்தவர்கள் பெரிய பொறுப்பு வாய்த்தபோது அதைப் பெற்றோம் என்று பெருமகிழ்ச்சி கொண்டு அது தம்மை விட்டுப் போகாதவாறு கவலைப்படமாட்டார்கள். நமக்கு அந்தப் பொறுப்பு வாய்த்தது; அது உள்ள வரையில், நம்மால் இயன்ற வரையில் நம் கடமையைச் செய்வோம் என்று பற்றின்றிக் கடமையைச் செய்வார்கள்; அதனால் அது நீங்கியபோது, இழந்துவிட்டோமே என்று அல்லலும் பட மாட்டார்கள். இன்பம் வந்தபோது கடமையைச் செய்வ தோடு நின்று இன்பத்தை விரும்பாமல் வாழ்ந்தால், துன்பம்

வந்தபோதும் கடமையைச் செய்துகொண்டு துன்புறாம லிருக்க முடியும்.

அற்றேம்என்று அல்லல் படுபவோ பெற்றேம்என்று
ஓம்புதல் தேற்றா தவர் ? (626)

இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். (629)

இந்த உடம்பு மற்றவர்களுக்கு நன்மை செய்து தான் துன்பம் அடையத்தக்கது, ஆகையால் துன்பத்திற்கு இலக்கானது என்று தெளிய வேண்டும். இந்தத் தெளிவு இருப்பதால் அறிவுடைய மேலோர் துன்பம் வந்தபோது கலங்குவதில்லை. அவ்வாறு தனக்கென இன்பம் விரும்பாமல் துன்பம் இயல்பு என்று தெளிந்திருக்கின்றவன் எப்போதும் துன்பம் அடைவதில்லை. இன்பம் துன்பம் என்று பகுத்துணர்வதையும் விட்டு, வரும் துன்பத்தையே இன்பமாகக் கொண்டு கடமையைச் செய்துவந்தால், தன் பகைவரும் விரும்பத்தகுந்த சிறப்பு ஏற்படும்.

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். (627)

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். (628)

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. (630)

அமைச்சு

தலைவனுக்குத் தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அமைச்சன் வேண்டும். அமைச்சன் எத்தகையவனாக இருக்க வேண்டும் ?

அறம் அறிந்து, கல்வியால் நிறைந்து, அமைந்த சொல் உடையவனாய்,எக்காலத்திலும் செயல் ஆற்றும் திறம் அறிந்த

வனாய் இருக்க வேண்டும். இயற்கையான அறிவு நுட்பம் வேண்டும்; நூல்களைக் கற்றறிந்த செயற்கை அறிவும் வேண்டும்; இருவகை அறிவும் பெற்றவர்களுக்கு மிக அரியது, முடியாதது என்று முன்னிற்கும் செயல் இல்லை; எல்லாவற்றையும் எளிதில் முடிக்கும் திறமை அமைந்துவிடும். நூல்களைக் கற்ற அறிவுமட்டும் போதாது; நூலறிவால் செயல் ஆற்றும் திறங்களை எல்லாம் அறிந்த போதிலும், உலகத்தின் இயல்பை அறிந்து அதற்குப் பொருந்துமாறு செய்ய வேண்டும்.

அறன்அறிந்து ஆன்றமைந்தசொல்லான்எஞ் ஞான்றும்
திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. (635)

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்.
யாஉள முன்நிற் பவை? (636)

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். (637)

சொல்வன்மை

நல்ல சொல்லால் நன்மை உண்டாகும்; தீய சொல்லால் தீமை உண்டாகும். ஆக்கமும் கேடும் சொல்லால் வருவனவாக இருப்பதால், பேசும்போது சொல்லை ஆளுவதில் விழிப்பாக இருக்க வேண்டும்; சோர்ந்திருந்து கேட்டுக்கு இடந்தரக் கூடாது.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. (642)

பேசும்போது கேட்டவர்களைப் பிணித்துக் கவரக்கூடிய தன்மையை நாட வேண்டும்; கேளாதவர்களும் கேட்க வேண்டும் என விரும்பக் கூடியதாகச் சொல்லவேண்டும்; அது தான் சிறந்த சொல்வன்மை யாகும். இத்தகைய சொல்

வன்மை உடையவனாய், சோர்வு இல்லாதவனாய் அவையோர்க்கு அஞ்சாதவனாய் இருந்தால், அவனோடு மாறுபாடு கொண்டு வெல்ல யாராலும் முடியாது. சொல்வதை ஒழுங்குபடக் கோத்து இனிமையாகச் சொல்ல வல்லவர்கள் வாய்த்தால், உலகம் அவர்கள் ஏவும் தொழிலை விரைந்து கேட்டு நடக்கும்.

கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல். (643)

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. (647)

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். (648)

மணிக்கணக்காகப் பலவகை ஆற்றல் தோன்ற விரிவாகப் பேசுவதே பேச்சுத் திறமை என்று நினைக்கின்றார்கள் ; அது தவறு. உலகத்தில் மிகப் பெரிய செயல் செய்தவர்கள் எல்லோரும் பெரும் பேச்சாளர் அல்லர் ; பெரும்பேச்சு வேறு ; சொல்வன்மை வேறு. பயனற்ற பெரும் பேச்சு வீண் முயற்சியே தவிர நன்மை சிறிதும் விளைக்காது. ஆகையால் குற்றமற்ற சில சொற்களைச் சொல்லிப் பயன் பெறும் வழியைத் தெளிய வேண்டும். இந்தத் தெளிவு இல்லாதவர்களே பல சொற்களைச் சொல்ல விரும்புவார்கள்.

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (649)

கல்வி என்பது கற்றவர் மட்டும் பயன்பெறுவதற்காக அன்று ; மற்றவர்களுக்கும் எடுத்துச்சொல்லி உணர்த்த வேண்டும். 'தாம் இன்புறுவது உலகு இன்புறக்' காண வேண்டும் என்பதே உண்மையாகக் கற்றவர்களின் நோக்கம். ஆகவே கற்றதைப் பிறர்க்கு உணர்த்தும் திறமை வேண்டும்.

இது எவ்வாறு வரும்? கற்கும்போது தெளிவாகக் கற்று உணர்ந்தால், அந்தத் தெளிவு நெஞ்சில் இருந்தால், அது வேண்டியபோது வெளியிடக் கூடிய கல்வியாகும். உள்ளத்தின் தெளிவு எப்போதும் உரைப்பதில் புலனாகும். எண்ணத் தெரிந்தவர்களுக்குப் பேசவும் தெரியும். எண்ணத்தில் குறை இருந்தால்தான், உள்ளத்தில் தெளிவு இல்லாமலிருந்தால்தான், பிறர்க்கு உணர்த்த முடியாத நிலை இருக்கும். ஆகையால் எண்ணிக் கற்கவேண்டும், தெளிவாகக் கற்று உணரவேண்டும்; அப்போது தாம் கற்றதைப் பிறர் உணருமாறு விரித்துச்சொல்ல முடியும்; அவ்வாறு சொல்ல முடியாவிட்டால், கொத்துக் கொத்தாகப் பூத்த பிறகும் மணம் கமழாத மலர்களைப் போல் அவர்கள் பயனற்றவர்களே.

> இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
> உணர விரித்துரையா தார். (650)

வினைசெயல் வகை

செய்யும் செயல் புகழும் நன்மையும் தருமா என்று ஆராய்ந்து செய்ய வேண்டும். புகழும் நன்மையும் பயக்காத செயலை என்றும் செய்யாமல் விடவேண்டும். எவ்வளவு துன்பம் படுவதாக இருந்தாலும், தெளிந்த அறிவுடையவர்கள் இழிவு தரும் செயல்களைச் செய்யமாட்டார்கள். "என்ன செய்தோம்!" என்று பிறகு வருந்த வேண்டிய செயலை முன்னமே ஆராய்ந்து செய்யாமல் ஒழிக்க வேண்டும்; ஒரு வேளை தவறிச் செய்தாலும், மீண்டும் அத்தகைய செயல்களில் ஈடுபடாமல் காத்துக்கொள்வது நல்லது.

> என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
> நன்றி பயவா வினை. (652)

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். (654)

எற்றென்று இரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. (655)

சில வேளைகளில் நல்ல நோக்கம் கொண்டு தகாத செயலைச் செய்ய நேர்வது உண்டு; ஒருவகையில் நன்மை விளைவதைக் கருதிக் குற்றமான செயலைச் செய்ய நேர்வதும் உண்டு. அப்போது அதனால் விளையும் நன்மையைக் கருதி அதைச் செய்வது கடமையா? அல்லது குற்றத்தைக் கருதிக் கைவிடுவது கடமையா ? வெவ்வேறு வகையாகக் கருதுகின்றவர்கள் உண்டு. திருவள்ளுவர் கருத்து மிகத் தெளிவானது. பொதுக்கடமை சீர்பெறவேண்டும் என்பதையும், பிறர் நலத்தைப் போற்ற வேண்டும் என்பதையும், தன்னலத்தைப் பெரிதாகக் கொள்ளக் கூடாது என்பதையும் மறக்காதவர்கள் ஒரு முடிவுக்கு வருதல் மிக மிக எளிது. திருவள்ளுவர் ஓர் எடுத்துக்காட்டைக் கூறி வழி வகுக்கின்றார். பெற்ற தாய் பசியோடு வருந்துகின்றாள். அவள் பசியைத் தீர்ப்பதற்காகப் பழியான ஒரு செயலை (லஞ்சம் வாங்குவது முதலியவற்றுள் ஒன்றைச்) செய்யலாம் என்று தோன்றுகின்றது. ஆனால் அந்தச் செயல் பொதுக்கடமைக்கு இழுக்கானது ; பிறர் நன்மைக்கு இடையூறானது ; ஆகையால் சான்றோர் பழிப்பார்கள். அதைச் செய்வதா ? செய்யாமல் விடுவதா ? மனச்சான்றையே கேட்க வேண்டும். செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தன் தாய் பசி தீர்ந்து வாழ வேண்டும் என்ற நோக்கம் இருக்கின்றது ; நல்லதே ஆனாலும் அது தன்னலம்தான். செய்ய வேண்டாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பொதுக்கடமைக்கு இழுக்கு என்றும் பிறர் நன்மைக்கு இடையூறு என்றும் அஞ்சும் பரந்த நோக்கம்

இருக்கின்றது. ஆகையால் அதைச் செய்யாமல் விடுவதே நல்லது என்று திருவள்ளுவர் தெளிவிக்கின்றார். பழியைச் சேர்த்துக்கொண்டு அடையும் ஆக்கத்தைவிட, அதைப் பொருட்படுத்தாமல் சான்றோர் அடையும் பொல்லாத வறுமையே மேலானது என்கின்றார்.

> ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை. (656)

> பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
> கழிநல் குரவே தலை. (657)

எதையாவது எப்படியாவது செய்துமுடிக்க வேண்டும் என்று கருதிச் சிலர் செயலாற்றிவருகின்றார்கள். பொருள் துறையில் இப்படிச் செய்தால்தான் வெற்றி பெறமுடியும் என்று அவர்கள் நம்புகின்றார்கள். ஆனால் திருவள்ளுவர் அந்த வெற்றி போலிவெற்றியே என்றும், முதலில் வெற்றி போல் தோன்றி முடிவில் துன்பம் தரும் என்றும் எடுத்துரைக்கின்றார்.

சான்றோர் விலக்கிய செயல்களை விட்டொழிக்காமல் செய்கின்றவர்களுக்கு, அவை விரும்பியபடி நிறைவேறினாலும், பிறகு துன்பத்தையே கொடுக்கும். ஒருவன் மற்றவர்களை வருத்தி அழவைத்துக் கைப்பற்றிய பொருள்கள் எல்லாம் அவனை அழவைத்துவிட்டுப் போய்விடும். ஆனால் நல்ல நெறியில் வந்த பொருள்களை அவன் இழந்துவிட்டாலும், அவை பிறகு பயன் தரும்.

> கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
> முடிந்தாலும் பீழை தரும். (658)

> அழக்கொண்ட எல்லாம் அழப்போம் ; இழப்பினும்
> பிற்பயக்கும் நற்பா லவை. (659)

இவ்வாறு நன்மையான நெறியில் ஒரு செயலை ஆராய்ந்து செய்கின்றவர்களுக்கு வேறு என்ன வேண்டும்? மனத் திட்பம் - மன உறுதி-வேண்டும். ஒரு செயலைச் செய்துமுடிக் கும் உறுதி எது என்றால் மன உறுதிதான்; மற்றவை அல்ல. இடையூறுகளை முன்னமே ஆராய்ந்து நீக்க வேண்டும்; ஆனால் செயலாற்றும்போது இடையூறு வந்தால் அதற்குத் தளராமல் மன உறுதியோடு செய்ய வேண்டும். இந்த இரண்டுமே வினை முடிக்கும் வழி என்று சொல்வார்கள்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. (661)

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். (662)

இதைச் செய்வேன், இவ்வாறு செய்வேன் என்று சொல் வது யாருக்கும் எளிதே ஆகும். ஆனால் சொல்லியவாறு செய்வது அருமை. ஆகையால் வாயால் சொல்லிக்கொண் டிருப்பதைவிட்டு, உள்ளத்தில் திட்பமாக எண்ணிச் செய்வது கடமை. எண்ணுகின்றவர் செயல் ஆற்றும்போதும் உறுதி யாக இருந்தால், எண்ணியதை எண்ணியவாறே அடைவார் கள். அவ்வாறு உறுதியுடன் செயல் ஆற்றும்போது, இன்பம் தரும் அந்தச் செயல் முடிவதற்காகத் துன்பம் மிகுதியாக நேர்ந்தாலும் துணிவோடு செய்ய வேண்டும். இத்தகைய வினைத்திட்பத்தை விரும்பிப் போற்றாதவர்கள் வேறு துறை யில் எவ்வளவு உறுதி உடையவர்களாக இருந்தாலும் பயன் இல்லை; அவர்களை உலகம் விரும்பாது.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். (664)

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (666)

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. (669)

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. (670)

நன்றாக ஆராய வேண்டும்; அந்த ஆராய்ச்சி துணிவு கொள்வதில் முடிய வேண்டும்; துணிவு கொண்ட பிறகு செயலாற்றும்போது காலம் நீட்டித்தால் அது குற்றமாகும். ஆனால் மெல்லக் காலம் பார்த்துச் செய்ய வேண்டிய சில செயல்கள் உண்டு; அவற்றை மட்டும் நீட்டித்துச் செய்யலாம். மற்ற செயல்களைச் செய்யும்போது காலம் நீட்டித்தல் கூடாது.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல்; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (671)

தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. (672)

ஒரு செயல் செய்தால் தன்னைச் சார்ந்தவர்களுக்கு நன்மை உண்டாகும். மற்றொரு செயல் செய்தால் பகைவராக உள்ளவர்களின் பகையைப் போக்கித் தன்னோடு சேர்த்துக்கொள்ள முடியும். இந்த இரண்டு செயலும் செய்ய வேண்டியது கடமையே ஆகும். ஆனால் எதை விரைந்து முன்னே செய்ய வேண்டும்? பகைவரைச் சேர்த்துக் கொள்ளும் செயலையே விரைந்து செய்ய வேண்டும். ஏன்? உண்மை நண்பர்கள் கால நீட்டிப்பால் மனம் வருந்தமாட்டார்கள்; அன்பு மாற மாட்டார்கள். ஆனால், மற்றவர்கள் அந்த நேரத்திலேயே தன் போக்கை எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள்; ஆகையால் அந்த வாய்ப்பை இழந்துவிடாமல், அவர்களைச் சேர்த்துக்கொள்வது கடமையாகும்.

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். (679)

தூது

தலைவனிடத்தில் அன்பும், அவனைப் பற்றித் தெளிந்து அவனுடைய கொள்கையை அறியும் ஆற்றலும், சொல்ல வேண்டியதை ஆராய்ந்து சொல்லும் வல்லமையும் ஆகிய இந்த மூன்றும் தூது சொல்வார்க்கு இன்றியமையாத பண்புகள். இந்த மூன்றும் உள்ளவர்களே தலைவனுடைய நம்பிக்கைக்கு உரியவர்கள் ; பொதுவாழ்க்கையில் பொறுப்பு ஏற்கத் தக்கவர்கள். இந்தச் சிறப்பியல்புகளோடு அவர்களுக்கு மற்றப் பொதுப் பண்புகளும் வேண்டும்; இயற்கை அறிவு, கண்டவர் விரும்பும் தோற்றம், பலமுறை ஆராய்ந்து கற்ற கல்வி ஆகிய பண்புகளை உடையவர்கள் தூது செல்லத் தக்கவர்கள். அவர்கள் தூது சொல்லும்போது, பலவற்றையும் தொகுத்துக் கூற வேண்டும்; கடுஞ்சொற்களை நீக்க வேண்டும்; கேட்பவர் மகிழுமாறு இனிய முறையில் சொல்ல வேண்டும் ; இவ்வாறு சொல்லித் தலைவனுக்கு நன்மை பயக்கும் நோக்கம் கொள்ள வேண்டும். (சொல்லும் திறமையிலேயே காலமும் முயற்சியும் செலவிட்டுக் கடமையை மறக்கக் கூடாது).

அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று. (682)

அறிவுரு ஆராய்ந்த கல்வி இம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. (684)

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. (685)

மன்னரைச் சேர்ந்தொழுகல்

திருவள்ளுவர் எக்காலத்திற்கும் உரிய பொதுவான உண்மைகளையே கூறியபோதிலும், அவருடைய காலத்து மக்களுக்கு விளங்குமாறு அக்காலத்துச் சொற்களை ஆண்

டிருக்கின்றார். ஆதலின், உண்மைகளைக் கற்க முயலும்போது, சில இடங்களில் அக்காலத்துச் சொல்லைவிட்டு இக்காலத்துச் சொல்லைப் பயன்படுத்தினால் கருத்து நன்கு விளங்கும். 'தலைவன் தேரில் வந்தான்' என்பது அக்காலத்தார்க்கு விளங்கியது. 'தலைவன் வண்டியில் வந்தான்' என்பதே இக்காலத்தார்க்கு விளங்குவது. அதுபோலவே 'மன்னன்' என்னும் முடியாட்சிக் காலத்துச் சொல் இக்காலத்துக்கு உண்மையை விளக்கத் தடையாய் நிற்பது; ஆட்சித்தலைவன் என்று வழங்குவதே இன்று பொருந்துவது. ஆகையால் மன்னரைச் சேர்ந்தொழுகல் என்பதற்குத் 'தலைவரைச் சேர்ந்தொழுகல், தலைவரைப் பொருந்தி நடக்கும் முறை' எனக் கொள்வதே தக்க வழி.

இறைமாட்சியில் தலைவனுடைய இயல்பைச் சொல்லும்போது, வந்து காண்பதற்கு எளியவனாய் இருக்க வேண்டும் என்றும், யாரிடத்தும் கடுஞ்சொல் கூறாமல் இன்சொல் பயில வேண்டும் என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார். செங்கோன்மையில் ஆளும் முறை பற்றிக் கூறும்போதும், முறைநாடி வருகின்றவர்களுக்கு எளிய செவ்வி உடையவனாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இவ்வாறு எளியவனாய் இனியவனாய் ஒரு தலைவன் நடந்துகொண்டால், அவனை வந்து காண்போர் அளவற்றவராய்ப் பெருகிவிடுவார்கள். அதனால் அவர்களைக் கண்டு இன்சொல் கூறிப் பழகுவதிலேயே தலைவனுடைய காலமெல்லாம் செலவாகும். மற்றப் பல கடமைகளை ஆராய்ந்து திறமையோடு செய்வதற்கு வேண்டிய ஓய்வும் அமைதியும் வாய்ப்பும் இல்லாத நெருக்கடி நேரும். ஆயினும், அதைத் தடுத்துக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்றோ, எளியவனாய் இனியவனாய் நடக்கக்கூடாது என்றோ தலைவனுக்குக் கூறவில்லை; தலைவனுடைய பண்புகளாகக் கூற

வேண்டியவற்றை முன்னே கூறியவர், அவனைச் சார்ந்து பழகு கின்றவர்களுக்கே சில கடமைகளை இங்கு வற்புறுத்துகின்றார்:

தலைவனைச் சார்ந்து நடக்கின்றவர்கள் அவனிடத்தில் அளவோடு பழக வேண்டும்; அவனைவிட்டு மிக நீங்கியும் இருக்கக் கூடாது; மிக நெருங்கியும் இருக்கக்கூடாது; தீயில் குளிர்காய்கின்றவர்கள் மிக நீங்கினால் குளிரும் போகாது, மிக நெருங்கினால் சூடும் தாங்காது என்று உணர்ந்து அள வறிந்து இருப்பதுபோல், தலைவனிடம் பழக வேண்டும். இந்தத் 'தலைவர் எம்மைவிட வயதில் சிறியவர், எமக்கு இன்ன முறையில் உறவினர்' என்று தலைமைப் பதவியை மதிக்காமல் நடக்கக் கூடாது; பதவிக்கு உரிய பெருமையைப் போற்றி நடக்க வேண்டும். 'நமக்கு வேண்டியவர் அல்லரோ? நம்மிடத் தில் அவர் தனி அன்பு கொண்டவர்' என்று எண்ணி, தலைவனுக்கு வெறுப்பு உண்டாகுமாறு தலைமைப் பதவிக்குப் பொருந்தாத செயல்களைச் செய்யக் கூடாது. 'தலைவனுக்கு நாம் பழையவர்கள், நெடுங்காலமாகத் தெரிந்தவர்கள்' என்று கருதித் தகுதியல்லாதவற்றைச் செய்யக் கூடாது; உரிமை பற்றி அவ்வாறு செய்வது தீங்கு உண்டாக்கும்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (691)

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். (698)

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். (699)

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். (700)

தலைவனோடு பேசுகின்ற வாய்ப்பை நன்றாகப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமானால், அவனுடைய குறிப்பை அறிந்து, பேசுவதற்கு ஏற்ற காலத்தையும் ஆராய வேண்டும்; காலம் வாய்த்தபோது அவனுக்கு வெறுப்பு இல்லாத செய்தி களையும் விருப்பமான செய்திகளையும் அவனுடைய மனம் விரும்பும்படியாக எடுத்துச்சொல்ல வேண்டும். விருப்பமான வற்றைச் சொல்லுவதோடு பயனில்லாதவைகளை அவனாகக் கேட்டபோதிலும் எப்போதும் சொல்லாமல் விடவேண்டும்.

குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். (696)

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். (697)

பெரியோர்கள் காணும்படியாக ஒருவனோடு செவியில் நெருங்கிப் பேசுவதும், ஒருவனுடன் சேர்ந்து சிரிப்பதும் செய்யாமல் ஒழுக வேண்டும். அவர்கள் ஏதாவது மறை (ரகசியம்) பேசும்போது, எதையும் ஓர்ந்து செவி கொடுத் துக் கேட்கக் கூடாது; 'அப்புறம் என்ன?' என்று தொடர்ந்து கேட்கவும் கூடாது; அதை அவர்களே வெளிப்படுத்திச் சொல்லும்போதுதான் கேட்க வேண்டும்.

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. (694)

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. (695)

குறிப்பறிதல்

தலைவனோடு பேசவும் பழகவும் முயல்கின்றவர்களுக்கு இது கட்டாயம் வேண்டும். அன்றியும், பொதுவாக உலகத் தில் பிறரோடு பழகுகின்றவர்களுக்குக் குறிப்பறிதல் வேண்

1586/2

டும். பேசுகின்ற பேச்சும் செய்கின்ற செயலும் பிறரிடத்தில் எவ்வாறு பயன்தரும் என்று ஆராய வேண்டுமானால், பிறருடைய உள்ளக் கருத்தை உணர வேண்டும். அது ஒரு தனித்திறமையாகும். உணர்ச்சி வயமாக வாழ்க்கையைக் கழிக்கின்றவர்களுக்கு அது இயலாது ; அவர்கள் பெரும்பாலும் தம் உணர்ச்சியைப் பிறரிடம் கொட்ட விரைவார்களே அல்லாமல் பிறர் உள்ளம் எவ்வாறு இருக்கின்றது என்பதை எண்ண மாட்டார்கள். ஆனால் சிலர் மிக வல்லவர்களாய்ப் பயன்பெற்று வாழ்வதற்கெல்லாம் காரணம், அவர்கள் எப்பொழுதும் பிறர் உள்ளத்தை ஆராய்ந்து உணர்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதுதான். அப்படிப்பட்டவர்களையே உலகமும் போற்றுகின்றது. ஆகையால், வாயால் சொல்லாமலே, முகத்தாலும் கண்ணாலும் உள்ளத்தின் குறிப்பை ஐயப்படாமல் உணரவல்லவனைத் திருவள்ளுவர் புகழ்கின்றார். அவன் இந்த உலகத்திற்கே அணிகலன் என்றும், தெய்வம் போன்றவன் என்றும் கூறுகின்றார்.

T24.C73/437

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. (701)

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல். (702)

இந்த உள்ளக் குறிப்பை எவ்வாறு அறிவது ? உள்ளக் குறிப்பு வெளிப்படும் இடம் முகம்ஆகையால், முகத்தை நோக்கியே உணர வேண்டும். தன்னை அடுத்த பொருளைக் காட்டுகின்ற பளிங்குபோல், ஒருவனுடைய நெஞ்சில் மிகுந்திருக்கும் குறிப்பை அவனுடைய முகம் காட்டும். உள்ளம் உவகை உற்றாலும் காய்தல் உற்றாலும் (விரும்பினாலும் வெறுத்தாலும்) அந்த உணர்ச்சியை மற்ற உறுப்புகள் முன்னே

உணர்த்துவதில்லை ; முகமே முன்னே உணர்த்துகின்றது. முகத்தைவிட அறிவு மிகுந்தது வேறொன்று உண்டோ ? முகத்தை நோக்கினால் எல்லாம் உணரலாம்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (706)

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும். (707)

முகம் என்று பொதுவாகக் கூறினாலும், கண்ணிலேயே அந்த உள்ளக் குறிப்பு நன்றாக வெளிப்படுகின்றது. அதனால் கண்பார்வையின் வேறுபாட்டை உணரவல்லவர்களாக இருந்தால், மற்றவர்களின் கண்ணே அவர்களின் உள்ளத்தில் உள்ள பகைமையும் நட்பையும் சொல்லிவிடும். நுண்ணறிவு உடையவர்களுக்கு அளக்கும் கோலாக இருப்பதும் அவர்களுடைய கண்ணே; வேறு கருவி அன்று.

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின். (709)

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண் அல்லது இல்லை பிற. (710)

அவையறிதல்

ஒரு பொருளை எடுத்துச் சொல்வதானால், யாருக்குச் சொல்கின்றோம் என்று ஆராயாமல் பேசுவது கூடாது. அதனால் ஒரு பயனும் இல்லை. ஆகையால், சொல்லும் சொற்களின் தொகுதியை அறிந்த தூயவர்கள், மன்றத்தில் (அல்லது கூட்டத்தில்) உள்ளவர்களின் தன்மையை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றபடி ஆராய்ந்து சொல்ல வேண்டும். அதுவே எல்லாச் சொற்களையும் பயன்படுத்த அறிந்தவர்களின் கடமையாகும். சொற்களை வழங்கும் முறையை அறிந்தவர்

களுக்கும் ஒரு கடமை உண்டு: அதாவது அவர்கள் மன்றத்தில் (அல்லது ஒரு கூட்டத்தில்) உள்ளவர்களின் செவ்வியை (பொருத்தமான நேரத்தை) ஆராய்ந்து நன்றாக உணர்ந்த பிறகே பேசவேண்டும்.

அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். (711)

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். (712)

அறிவு மிக்கவர்களின்முன் தாமும் அறிவு மிகுந்தவர்களாகப் பேச வேண்டும். அறிவு குறைந்தவர்களின்முன் தாம் ஒன்றும் அறியாதவர்கள் போல் இருக்க வேண்டும். தம்மை விட அறிவு முதிர்ந்தவர்களின் கூட்டத்தில் முந்திக்கொள்ளாமல் அடக்கமாக இருக்க வேண்டும்; அது நல்ல இயல்பு என்று கூறப்பட்டவைகளுள் மிக நல்ல இயல்பாகும்.

ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். (714)

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. (715)

கற்றவர்கள் தம்மைப் போல் கற்றவர்களின் கூட்டத்தில் பேசுவது மிகவும் பயனளிக்க வல்லது. குற்றம் நீங்கச் சொற்களை ஆராய வல்ல அறிஞர்களின் கூட்டத்தில் கற்றறிந்தவர்களின் கல்வி விளக்கம் பெறும். சொல்வதை நுட்பமாக உணரவல்லவர்களின்முன் பேசுவது, தானே வளரும் பயிர் உள்ள பாத்தியில் நீர் சொரிவதைப் போன்றது; அதனால் அந்தக் கல்வி மேன்மேலும் வளர்ந்தோங்கும்.

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. (717)

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. (718)

மன்றத்திலும் மற்றக் கூட்டத்திலும் அஞ்சாமல் பேசுவது ஒரு தனித் திறமையாகும். போர்க்களத்தில் அஞ்சாமல் போர் செய்யும் திறமையைவிட, அவைக்களத்தில் அஞ்சாமல் பேசும் திறமை சிறந்தது. பகைவர்களை எதிர்த்துப் போர்க்களத்தில் சாகத் துணிந்தவர்கள் பலர் உலகத்தில் இருக்கின்றார்கள். ஆனால் அறிஞர்களின் கூட்டத்தில் அஞ்சாமல் ஒன்றைச் சொல்ல வல்லவர்கள் சிலரே. அவ்வாறு அஞ்சாமல் பேசி மறுமொழி சொல்லும் வல்லமை பெறுவதற்காகக் கற்க வேண்டிய முறைப்படி கற்கவேண்டிய அளவு அறிந்து நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு நூல்களைக் கற்ற பிறகும் நுண்ணிய அறிவுடையவர்களின் கூட்டத்தில் பேச அஞ்சினால், அந்தக் கல்வியால் பயன் இல்லை. அஞ்சாமை இல்லாதவர்களுக்கு வாளோடு தொடர்பு இல்லாததுபோல், இவர்களுக்கும் நூலோடு தொடர்பு இல்லை. பகைவர்களின் எதிரே போர்க்களத்தில் நிற்கும் பேடியின் கையில் அகப்பட்ட கூரிய வாளும், அவைக்களத்தில் அஞ்சுகின்றவன் கற்ற நூலும் ஒன்றுதான். நல்ல நூலைக் கற்றறிந்தும் அந்த நூலால் பயன் பெருக்காமல் இவ்வாறு நல்லவர்களின் கூட்டத்தைக் கண்டு அஞ்சுகின்றவர்கள், கல்லாதவர்களைவிடத் தாழ்ந்தவர்களே ஆவார்கள்.

பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சா தவர். (723)

ஆற்றின் அளவறிந்து கற்க அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. (725)

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு? நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு? (726)

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். (727)

கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார். (729)

நாடு

வாழும் மக்களுக்கு வேண்டிய உணவு, உடை முதலிய எல்லாவற்றையும் தருவதாகவும் கவலையற்று அமைதியாக வாழ்ந்து இன்புறுவதற்கு ஏற்றதாகவும் நாடு இருக்க வேண்டும். இல்லையானால் அந்த நாட்டில் நல்லரசு அமையாது; மக்கள் கூடி வாழும் வாழ்க்கை நிரம்பாது. ஆகையால் நாட்டின் இயல்பைத் திருவள்ளுவர் தனியே ஓர் அதிகாரத்தில் கூறுகின்றார்.

குறையாத விளைபொருள் வேண்டும்; அவற்றை எல்லோரும் பெற்று நுகரச் செய்யுமாறு அறத்தைப் போற்றும் அறவோர் வேண்டும்; தாழ்வு இல்லாத செல்வம் உடையவர்கள் வேண்டும்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (731)

திருவள்ளுவர் செல்வர் வேண்டும் என்று கூறியிருப்பது முடியாட்சி முறைக்கு ஏற்றவாறு செல்வர் சிலரையே குறிப்பதாக இருந்தாலும், இக்காலத்துக் குடியாட்சி முறைக்கு ஏற்ப, எல்லா மக்களையும் குறிப்பதாக நாட்டிற்குப் பொதுவாகவே கொள்ளலாம். குடியாட்சி முறையில், நாட்டின் செல்வநிலை எத்தகையது என்று கருதப்படுதலே தவிர, நாட்டில் உள்ள செல்வர் எத்தனைபேர் என்று ஆராயப்படுவது இல்லை. அன்றியும், செல்வர் சிலர் என்ற அளவிலேயே வறியவர் பலர் இருக்க நேரும்; அத்தகைய நாடு சிறந்த நாடு அன்று. வறுமை

என்பது எந்த மூலை முடுக்கிலும் இல்லாமல் எல்லாரும் செல்வராக விளங்கும் நாடே நல்ல நாடு. "வண்மை இல்லை ஓர் வறுமை இல்லையால்" என்றும், "கொள்வார் இலாமை யின் கொடுப்பாரும் இல்லை" என்றும், "எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தல்" என்றும் புலவர் கண்ட நல்ல கனவிற்கு ஏற்ப, நாட்டு மக்கள் எல்லோரும் தாழ்விலாச் செல்வராக இருப்பதாகக் கொள்ளுவது பொருந்தும். "தாழ் விலா" என்ற அடையும் இந்தக் கனவிற்கு ஏற்ற கருத்தைப் பயப்பதாகக் கொள்ளலாம். ஒரு சிலர் செல்வராக விளங்கி மற்றப் பெரும்பாலோரைச் சுரண்டி அதனால் தம் செல்வத்தை மேன்மேலும் பெருக்கிக்கொள்ளும் வாழ்வு குறை உடைய வாழ்வுதான்; தாழ்வு உடைய வாழ்வுதான். வறியவர் பெரும்பாலோராக உள்ள நாட்டில் பொருள் குவித்து வைத்திருக்கின்றவர்களைச் 'செல்வர்' என்ற சொல்லால் குறிப் பதும் பொருந்தவில்லை. அவர்களிடம் உள்ள பொருள் மற்றவர்களிடமிருந்து வந்து சேர்ந்துள்ள தொகுதியே அல்லாமல், நாட்டின் பெருமைக்கு ஏற்ற செல்வமாகக் கொள்ளத்தகாதது. ஒரு மாந்தோப்பில் எல்லா மாமரங்களிலும் மிகுதியாகக் காய்த்துக் கனிந்திருந்தால் அந்த மாந்தோப்பை வளமான தோப்பு என்று கூறலாம். ஆனால், ஆயிரம் மாமரங்கள் உடைய அந்தத் தோப்பில் மரத்திற்கு நாலைந்து கனிகளே கிடைத்து, அவற்றை எல்லாம் அறுத்து இரண்டு மரங்களின் அடியில் கொட்டிக் குவித்து வைத்திருந்தால், அந்தத் தோப்பை வளமானது என்று கூற முடியுமா? அந்த இரண்டு மரங்களின் கீழே நாலாயிரம் கனிகள் சேர்ந்து குவிந்திருப்பதைக் கண்டு, "என்ன வளமான தோப்பு!" என்று வியப்பது அறியாமையே. மற்ற மரங்களையும் பார்த்து அவைகள் ஒவ்வொன்றிலும் நூறு நூறாகக் கனிகள் இருந்தால்

"வளமான தோப்பு" என்று அதை வாயாரப் புகழலாம். இல்லையானல், அந்தத் தோப்பைப் போற்றுவதிலும் பயன் இல்லை; அந்த இரண்டு மரங்களைப் பார்த்து வியப்பதிலும் பயன் இல்லை. வாணிகக் காரணத்தால் குவித்துக் கொட்டப் பட்டுள்ள மாங்கனிகளே தவிர, அந்த இரண்டு மரங்களுக்குப் பெருமை தரும் கனிகள் அல்ல என்று உணர வேண்டும். ஒரு நாட்டின் செல்வ நிலையையும் அவ்வாறே ஆராய்ந்து போற்ற வேண்டும். வறியவர் பலரிடமிருந்து ஒரு சிலரிடம் குவிந் துள்ள செல்வம் தாழ்வுடைய செல்வமே ஆகும். எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தும் காட்சியே தாழ் விலாச் செல்வக் காட்சியாகும்.

நாட்டில் இருக்கத் தகாதவை சில உண்டு. நல்ல நாட்டில் அவை இடம் பெறக்கூடாது. அவை, மிக்க பசி, தீராத நோய், அழிக்கும் பகை என்பன. பசி வேண்டும்; பசித்தால் தான் புசிக்க வேண்டும்; ஆகையால் உழைத்து உடல்நலம் காக்கும் அளவுக்குப் பசி வேண்டும்; ஆனல் வறுமைத் தொல்லையால், உணவுப் பொருள் போதாத குறையால் வரும் பசிக்கொடுமை - வறுமையால் பட்டினி இருந்து இருந்து மிகுகின்ற பொல்லாத பசி - ஒரு நாட்டில் இருக்கக் கூடாது; அதனல்தான் பழங்காலத்துப் புலவர்கள் ஒரு நாட்டைச் சிறப்பிக்கும் போது, அதன் மாடமாளிகைகளே வருணித்து மயங்கி நிற்காமல், "பசி எனல் அறியாப் பணைபயில் இருக்கை" என்று பசி அற்ற நாட்டையே வளமான நாடாகப் போற்றிப் புகழ்ந்துவந்தனர். அடுத்தது நோய்; நோய் உடலுக்கு இயற்கை; முதுமையாலும் தளர்ச்சியாலும் சிறு சிறு நோய்கள் வந்து உடல் அழிவது இயற்கை; அவற்றைப் போக்கும் வழியும் 'மருந்து' என்னும் பகுதியில் கூறப்படுகின்றது. ஆனல் இளமையிலேயே நோய்கள் வருவதும், அவைகள்

ஓயாமல் வருத்துவதும், தீராமல் நிற்பதும், தொத்து நோய்களாகப் பரவுவதும் நாட்டின் பெருமைக்குக் குறை வாகும். அடுத்தது பகை; கருத்து வேறுபாட்டாலும் உரிமைப் போராட்டத்தாலும் எதிர்ப்பு இருப்பது இயற்கை; அத்தகைய எதிர்ப்பினுல் அறிவு வளர்ச்சியும் உண்டு, அரசியல் முற்போக்கும் உண்டு; ஆனல் கருத்து வேறுபாடும் உரிமைப் போராட்டமும் ஒருவரை ஒருவர் திருத்தி ஆக்கவேலை செய் யும் அளவில் நிற்காமல், ஒருவரை ஒருவர் கெடுக்கும் அழிவு வேலைக்குத் திரும்புமானல், அது நாட்டிற்கு இழுக்காகும். ஆகையால் மிக்க பசி, தீரா நோய், அழிக்கும் பகை இம் மூன்றும் சேராமல் இயல்வதே நாடு ஆகும்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு. (734)

நாட்டில் அழிவுவேலை செய்யும் பகை எழுந்தால், பல வகைக் கட்சிகள் வளரும்; கட்சியாளர் தம் தம் கட்சியை வலுப்படுத்தி எதிர்கட்சியை அழிக்க முயல்வார்களே அல்லா மல், நாட்டின் பொதுநன்மையைக் கவனிக்கமாட்டார்கள். வெளிப்படையாக எதிர்ப்பவர்கள் இவ்வாறு செய்வார்கள். சிலர் தந்திரத்தையே கையாண்டு, உடனிருந்தே கெடுதி செய்யும் உட்பகையாக மாறுவார்கள். இன்னும் சிலர் வாணி கம் கைத்தொழில் முதலிய துறைகளைக் கைப்பற்றியும் நிலப் பரப்புகளை வைத்துக்கொண்டும் செல்வாக்குப் பெற்று அர சாங்கத்தை அலைத்துத் தொல்லை கொடுக்கும் கூட்டமாக நிற் பார்கள்; எந்த முற்போக்கான செயலுக்கும் இடையூறு செய்துகொண்டு, அரசாங்கம் முன்னேறாதபடி பிற்போக் கிலேயே இருக்கச் செய்வார்கள். ஆகையால், பலவகைக்

கட்சிகளும், உட்பகையும், அரசாங்கத்தை ஆட்டி அலைக்கும் கூட்டத்தாரும் இல்லாத நாடே நல்ல நாடு.

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. (735)

சில நாடுகள் இயற்கை வளம் உடையவை; சில நாடுகள் இயற்கைவளம் இல்லாதவை. இயற்கைவளம் உடைய நாடுகளில் மக்கள் வருந்தாமல் பயன்பெற முடியும். மற்ற நாடுகளில் பாடுபட்டு வருந்தினால்தான் ஓரளவு பயன் கிடைக்கும். அப்படிப்பட்ட நாடு நல்ல நாடு அன்று. மக்கள் நாடிப் பாடுபடாமலே வளம் தருகின்ற நாடே நாடு என்று போற்றத் தக்கது. அப்படிப்பட்ட இயற்கை வளமும் மற்றச் சீரும் அமைந்த போதிலும், நல்ல அரசாட்சி அமையவில்லையானால், பயன் இல்லை. ஆகையால் நல்ல நாட்டிற்கு இயற்கைவளமும் மற்றச் சீரும் போல அரசாட்சியின் செம்மையும் வேண்டும்.

நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரும் நாடு. (739)

ஆங்கமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமைவு இல்லாத நாடு. (740)

திருவள்ளுவர் நாட்டைப் பற்றி மேலும் கூறும்போது, கேடில்லாத (கேடு அறியாத) நாடாக இருக்க வேண்டும் (736) என்கின்றார். பகைவரால் அழிக்க முடியாததாகப் பழங்காலத்தில் நாடு அமைத்துவந்தார்கள். அதற்காகவே நீர் அரண், நில அரண், மலை அரண், காட்டு அரண் என்னும் இயற்கை அரணும் செயற்கை அரணும் நாட்டைச் சுற்றி அமையச் செய்தார்கள். அவற்றால் பகைவர் நாட்டினுள் புகுந்து அழிக்க முடியாதபடி காத்துக்கொள்ள முடியும். ஆனால், இந்தக் காலத்தில் பகைவர்களுக்கு நிலப்படை மட்டும் அல்லாமல்,

நீர்ப்படையும் உள்ளது ; நெடுந்தொலைவிலிருந்து வானத்திலேயே வந்து மேலிருந்தே குண்டு எறிந்து அழிவுபடுத்தும் வானப்படையும் உள்ளது. நொடிப்பொழுதில் பல ஊர்களையும் நகரங்களையும் பெருநிலப் பரப்பையும் சேர்த்து ஒருங்கே அழித்துப் பாழாக்க வல்ல அணுக்குண்டுகள் தோன்றிய பிறகு, இத்தகைய அரணால் பயன் இல்லை என்பது புலனாகிவிட்டது. வளமான மருத நிலங்களும் பசும்புல் காணாத கொடிய பாலையாக மாறக் கூடிய அளவுக்கு அணுக் குண்டின் அழிவுவேலை ஆற்றல் மிக்கதாக இருக்கின்றது. ஆகையால், கேடு அறியாத நாடு, கெட்ட காலத்திலும் வளம் குன்றாத நாடு என்று இக்காலத்தில் ஒரு நாட்டை அமைத்துக் கொள்வது அரிதாகிவிட்டது. உலகமெல்லாம் ஒன்றுபட்டுப் போர்க்கருவிகளை ஒழிப்பது ஒன்றே இன்று எல்லா நாடுகளுக்கும் வேண்டிய அரணாக உள்ளது ; அந்த நாள் வரும் வரையில், தற்காப்புத் தேடிக்கொள்ளாமல், போர்க்கருவிகளைப் படைக்காமல், போர்ப் பயிற்சியும் பெறாமல், போர் செய்ய வரும் நாடுகளையும் எதிர்க்காமல் வாழ வல்ல நாடு ஒன்றுதான் அழிவுபடாமல் இருக்க முடிகின்றது ; ஆகவே நிலஅரண் முதலிய ஒருவகை அரணும் தேடிக்கொள்ளாமல் இருக்கும் நாடு அழிவுக்குத் தப்பினாலும் தப்பக் கூடும் ; மற்ற நாடுகள் போர்ப்பயிற்சி பெற்று எதிரிகளை எதிர்க்கத் தெரிந்த காரணத்தாலேயே, போரின் அழிவுகளுக்கு இரையாவது உறுதியாக உள்ளது. ஆகவே, இன்று கருதவேண்டிய அரண் அறிவாகிய அரண், எதிர்ப்பின்மையாகிய அரண், தற்காப்பு இன்மையாகிய அரண் முதலியனவே ஆகும். அறிவைச் 'செறுவார்க்கும் உள்அழிக்க லாகா அரண்' என்று திருவள்ளுவர் கூறியிருக்கின்றார் ; அதுபோன்ற மற்றக் கருத்துக்களையும் அறத்துப்பாலில் விளக்கியிருக்கின்றார். அவற்றை

ஆராய்ந்தால் ஓர் உண்மை புலனாகின்றது : மக்கள் தொடக்கத்தில் தம் தம் உடல் வலிமையையே தற்காப்புக்கு உரியதாகக் கொண்டார்கள் ; பிறகு கல் கொம்பு முதலியவைகளைத் தற்காப்புக்குத் தேடினார்கள் ; அதன்பின், இரும்பு முதலியவற்றால் செய்த வாள், வேல் முதலியவற்றைத் தேடினார்கள் ; அதற்கும் பிறகு மதில்சுவர் முதலியவற்றை அமைத்து அரண் என்றார்கள் ; அதற்குப்பின், யானை குதிரை முதலியவற்றையும் துணைக்குச் சேர்த்துக்கொண்டார்கள் ; வாள் வேல் முதலியவற்றின் இடத்தில் துப்பாக்கியும் பீரங்கியும் வந்தன ; யானை குதிரை முதலியவற்றின் இடத்தில் டாங்கி, நீர்மூழ்கி, விமானம் முதலியவை வந்தன ; வெடிமருந்துகளோடு, விஷப் புகை வளர்ந்தது ; மற்றக் குண்டுகளோடு அணுக்குண்டும் வளர்ந்தது ; ஒரு சிறிய இடத்தில் களம் அமைத்துப் போர் செய்வது போய், உலகமெல்லாம் போர்க்களமாகப் போர் செய்யும் முறை வந்தது. யாரிடமிருந்து யாரைக் காப்பாற்றுவது, எங்கிருந்து எப்பகுதியைக் காப்பாற்றுவது, எதனால் எவ்வாறு காப்பாற்றுவது என்பன அறியமுடியாத நிலை வந்துள்ளது ; அரண் என்பது எது என்றே தெரியாத நிலை வந்துள்ளது. உடல்வலிமையை நம்பித் தொடங்கிய முயற்சி, புறத்தே உள்ள சுவரையும் இரும்புக் கருவிகளையும் நம்பும் முயற்சியாய், அணுக்குண்டு வரையில் வளர்ந்து வளர்ந்து, இறுதியில் புறத்தில் உள்ள எதையும் நம்பக் கூடாமல், அகத்தில் உள்ள நட்பையும் அன்பையும் அறிவையும் நம்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நட்பால் எதிர்ப்பின்மை, அன்பால் தற்காப்பின்மை, அறிவால் அழிவின்மை என்று அரண் தேடிக்கொண்டு,

செயற்கரிய யாஉள நட்பின் ? அதுபோல்
வினைக்கரிய யாஉள காப்பு ? (781)

புறத்துறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு ? (79)

அறிவற்றம் காக்கும் கருவி ; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் (421)

என்னும் வாய்மொழிகளைப் போற்றி நடக்கவேண்டிய நிலைமை வந்துள்ளது ; இதை வல்லரசுகள் உணர நாளாகலாம் ; ஆனால் உலகத்தில் உள்ள எல்லா அறிஞரும் உணர்ந்துவிட்டார்கள். இன்னொரு வகையாக நோக்கினால், அறத்தை ஒருவாறு புறக்கணித்துப் பொருளிலேயே பொருளுக்குத் தற்காப்புத் தேட உலகம் முயன்று முயன்று தோற்றுவிட்டது. பொருளுக்கு (அரசியல் வாழ்வுக்குக்) காப்புச் செய்யவல்லது அறமே என்னும் உண்மையை உலகம் உணர வேண்டிய நிலைமை வந்துவிட்டது.

பொருள் செயல்வகை

மதிப்பு இல்லாதவர்களையும் மதிக்கத் தக்கவராகச் செய்யும் சிறப்பு உடையது பொருள். ஆகையால் அந்தப் பொருளைவிட ஈட்டத் தகுந்த பொருள் வேறு இல்லை. பொருள் இல்லாதவர்களை எல்லாரும் இகழ்வார்கள் ; பொருளுடைய செல்வரை எல்லாரும் சிறப்புச் செய்வார்கள்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள். (751)

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் ; செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. (752)

உடைமை இருவகைப்படும். அவை தனியுடைமை, பொதுவுடைமை என்பன. முடியாட்சிக் காலத்தில் தனியுடைமைப் பகுதி மிகுதியாக இருக்கும் ; பொதுவுடைமைப்

பகுதி குறைவாக இருக்கும். முடியாட்சியில் நிலம், வீடு, முதலிய பலவும் தனியுடைமையாக விளங்கும் ; தெரு, மன்றம், கோயில், குளம் முதலியவை பொதுவுடைமையாக விளங்கும். குடியாட்சியில் கோயில் குளம் முதலியவை போலவே, நிலம், வீடு முதலியவைகளும் பொதுவுடைமையாக விளங்குவது உண்டு ; ஆனால் அப்போதும் தனியுடைமைப் பகுதி ஓரளவு உண்டு. ஒருவருடைய இல்வாழ்க்கையும் அதன் தொடர்பானவைகளும் தனியுடைமைப் பகுதியாக விளங்கும் ; அவ்வாறே சமய வாழ்க்கையும் அதன் தொடர்பானவைகளும் தனியுடைமைப் பகுதியாக விளங்கும் ; இவை என்றைக்கும் பொதுவுடைமைப் பகுதியாக ஆக முடியாதவை. இன்று வாழ்க்கைத் துறைகளில் பல பொதுவுடைமையாகி நிற்கின்றன. பழங்காலத்தில் தெருவிளக்கும் வீட்டு விளக்கும் தனியுடைமைப் பகுதிகள். இன்று மின்சார நலன் பரவிய இடங்களில், எல்லா விளக்குகளுக்கும் அடிப்படையான மின்சாரம் பொதுவுடைமையாக இருக்கின்றது. நகரங்களில் எல்லா வீடுகளுக்கும் வரும் குழாய்த்தண்ணீர் பொதுவுடைமையாக இருக்கின்றது. எல்லாருக்கும் உரிய தபால், தந்தி, வானொலி முதலியவை பொதுவுடைமையாக உள்ளன. ரயில், கல்வி நிலையம் முதலியவற்றின் அடிப்படையும் பொதுவுடைமையாகவே உள்ளது. இவற்றை எனக்குத் தான் அல்லது எமக்குத்தான் என்று ஒருவரோ ஒரு சிலரோ உரிமை கொண்டாடிப் பிறர்க்கு மறுக்க முடியாது. இதுதான் காலப்போக்கில் நம்மை அறியாமல் நேர்ந்துள்ள மாறுதல். எல்லாம் அரசாங்கத்தின் செல்வம் ; ஆகவே, அரசாங்கத்தின் உறுப்பினராகிய குடிமக்கள் எல்லோருக்கும் அதை அனுபவிக்க உரிமை உண்டு ; இதுவே இந்த மாறுதலின் அடிப்படை. செல்வம் அரசாங்கத்தின் உரிமை என்று கொண்டு குடியாட்சி

யில் மக்கள் பொறுப்பு ஏற்கின்றார்கள். இந்நிலையில் பொருள் இல்லாதவர் என்று சிலரைச் சொல்ல முடியாது ; பொருள் உடையவர் என்று சிலரைச் சொல்ல முடியாது ; உடலாலோ மூளையாலோ உழைக்கும் தொழிலே பொருளாகக் கொள்ளப் படும். தொழில் உடையவர் பொருளுடையவராகக் கருதப் படுவார்கள் ; தொழில் இல்லாதவர் பொருளில்லாதவராகக் கருதப்படுவார்கள். தொழில் இல்லாதவரை எல்லாரும் எள்ளுவார்கள் ; தொழில் உடையவரை எல்லாரும் சிறப்புச் செய்வார்கள். இந்தக் குறள்மொழிகளுக்கு எதிர்காலத்தில் இத்தகைய பொருளே கொள்ளப்படும்.

ஆராய்ந்து பார்த்தால் இதில் ஒன்றும் புதுமை இல்லை. தொடக்கத்தில் இந்த நிலைமை இருந்தது. பணம் என்ற ஒன்று தோன்றாத பழங்காலத்தில், உழைத்துத் தொழில் செய்தவர்களிடத்திலேயே காய், கனி, கிழங்கு, நெல், கம்பு, உப்பு, உடை முதலிய எல்லாம் இருந்தன. இந்த உணவுப் பொருள்களும் உடை முதலிய பொருள்களுமே அந்தக் காலத்தில் பொருள் என்று போற்றப்பட்டன. மிகுதியாக உழைத்துத் தொழில் செய்தவர்களிடம் உணவுப்பொருளும் மற்றப் பொருளும் மிகுதியாக இருந்தன ; அதனால் அவர்கள் செல்வர் என்று போற்றப்பட்டார்கள். அளவோடு உழைத்தவர்களிடம் அளவாகப் பொருள் சேர்ந்திருந்தது ; அவர்கள் பிறரிடம் இரந்து கேட்காமல் வாழ்ந்தார்கள். உழைக்க வாய்ப்பு இல்லாமையால் தொழிலின்றி இருந்தவர்களிடம் உணவுப்பொருள் முதலியவை இல்லாமையால் அவர்கள் இரந்து உணவு பெற்று வாழ்ந்தார்கள் ; அவர்களைச் செல்வர் வெறுக்காமல் உதவி செய்தார்கள் ; அவ்வாறு உதவி செய்வதை அறமாகவும் கொண்டார்கள் ; அந்தக் காலத்தில் உணவுப்பொருள் முதலியவை வைத்திருந்தவர்களுக்கு மதிப்பு

இருந்தது ; இல்லாதவர்களை எல்லாரும் இகழும் நிலைமை இருந்தது. இது உழைப்பே பொருளாக இருந்த காலம்.

பண்டமாற்று வாழ்க்கைக்கு வேண்டியதாக இருந்தது. ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளை மக்கள் பெற்று வந்தார்கள். அதாவது, தம்முடைய உழைப்பின் பயனில் சிறு பகுதியை மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களுடைய உழைப்பின் பயனில் ஓரளவைத் தாம் பெற்று வந்தார்கள். ஆகவே உழைப்பே மாறி மாறிப் பயன் அளித்தது எனலாம். ஆனால், பண்டமாற்று மெல்ல மெல்லப் பண மாற்றுக்கு இடம் கொடுத்த பிறகு, உழைப்பின் மதிப்பு மாறியது. பணத்தைப் பொருளுக்கும் பொருளைப் பணத்துக்குமாக மாற்றுவதில் சிலர் வல்லவர் ஆனார்கள். இவ்வாறு மாற்றுவதன் வாயிலாகக் கொள்வதை மிகுதியாக கொண்டு, கொடுப்பதைக் குறைவாகக் கொடுக்கக் கற்றுக்கொண்டார்கள். ஆகவே, கொள்வதில் கொண்ட மிகுதிப்பொருளும், கொடுப்பதில் காத்த எஞ்சிய பொருளுமாக இரு வகையிலும் பொருள் சேர்க்கக் கற்றார்கள். உழைத்தவர்களுடைய உழைப்பின் பயனை எளிய முறையில் பெற்றார்கள் ; பணமாற்று இவர்களைப் பொருளுடையவர்களாகச் செய்தது. இவர்களே வணிகர் (வியாபாரிகள்) எனப்பட்டவர். திருவள்ளுவர் காலத்தில் பண்டமாற்றே வாணிகமாகச் செழித்திருந்தது ; இந்தப் பணமாற்று வாணிகம் (வியாபாரம்) அப்போது வளர்ச்சி பெறவில்லை. அதனால் அவர் நடுநிலைமை உடைய பண்டமாற்றை மட்டும் ஒரே ஓர் இடத்தில் - நடுநிலைமை என்ற அதிகாரத்தின் இறுதியில் - சுட்டியுள்ளார்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (120)

பிறர்பொருளையும் தம் பொருள்போல் போற்றிப் பண்டமாற்றுச் செய்தலே வாணிகம் செய்வார்க்கு வேண்டிய நடுவுநிலைமை என்று கூறியுள்ளார். அப்போதும் நடுவுநிலைமையை விளக்குவதுதான் அவர் நோக்கமே அல்லாமல், வாணிகத்தை விளக்குவது அன்று. வாணிகத்தைப் பற்றித் தம் நூலில் வேறு எங்கும் அவர் கூறவில்லை. அரசாட்சி முறை பற்றி விளக்கிப் பொருளின் திறத்தை எல்லாம் கூறுகின்ற ஆசிரியர் வாணிகத்தைப் பற்றிப் பொருட்பாலில் கூறாதது வியப்பாகத் தோன்றும். உண்மை என்ன எனில் வாணிகம் ஒரு நாட்டின் வாழ்விற்கு இன்றியமையாத சிறப்புடையது அன்று; மற்ற அறங்களைப் போற்றி மக்கள் வாழ்வார்களானால், பண்டமாற்று என்பது தானாகவே நடைபெறக் கூடியதாகும். மற்ற அறங்கள் வீழ்ச்சி அடைந்த காலத்தில்தான் பணமாற்று என்பது தலையெடுக்கும்; அப்போது, உழைத்துத் தொழில் செய்தவர்களிடத்தில் உணவுப்பொருள் முதலியவை சேர்வதில்லை. பணமாற்றுச் செய்கின்றவர்களிடத்தில் உணவுப்பொருள் முதலியவை சேர்ந்துவிடும். உழைத்துத் தொழில் செய்து விளைபொருள் உண்டாக்குகின்றவர்களுக்கு மதிப்பு இருக்காது; பணமாற்றுச் செய்து பணம் சேர்க்கின்றவர்களுக்கே மதிப்பு இருக்கும். உழைக்கின்றவர்களுக்கு அரசாங்கத்தில் செல்வாக்கு இருக்காது; உழைப்பில்லாமல் பணமாற்றுச் செய்கின்றவர்களே அரசாங்கத்தை ஆட்டிவைப்பார்கள். ஆனால் இது அறம் பிறழ்ந்த வாழ்வே ஆகும். உடல் வன்மையை நம்பித் தொடங்கிய தற்காப்புமுறை அணுக்குண்டு வரையில் வளர்ந்து மீண்டும் உடலினிடமே முடிந்து உள்ளத்துப் பண்புகளையே அரணாகத் தேடும் நிலை வரவில்லையா? அதுபோல், உழைப்பே பொருளாக இருந்த நிலைமை போய், பண்டமாற்று மெல்லப் பணமாற்றுப் பெருகும் வரையில் வளர்ந்து, மீண்டும்

உழைப்பே பொருளாகும் காலம் வரும். ஆகையால், பொருள் செயல்வகை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைக் கற்றுத் தெளியவேண்டுமானால், உழைப்பையே பொருளாகக் கருதும் கருத்து வேண்டும். இல்லையேல், எப்படியாவது பணம் சேர்த்தவர்களுக்கே உலகத்தில் மதிப்பு உண்டு என்று பொருள் தோன்றும்; அறம் ஓதிய திருவள்ளுவரே இவ்வாறு பொருளைப் பெரிதாகப் போற்றுகின்றாரே என்று முரண்பாடு தோன்றும். அது தவறு; உழைத்து அறநெறியில் வந்த பொருளைப் பற்றியே அவர் இங்குக் கூறுகின்றார்.

திருவள்ளுவர் பொருட்பாலில் பொருள் செயல்வகை ஓதும்போது அறத்தை நன்கு வற்புறுத்துகின்றார். செய்யும் திறம் அறிந்து தீமை இல்லாத வழியில் சேர்த்த பொருளாக இருக்க வேண்டும்; அந்தப் பொருள் அறம் பயக்கக் கூடியதாகவும் இன்பம் பயக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்; அருளோடும் அன்போடும் வந்த பொருளாக இருக்கவேண்டும்; அருளில்லாமல் அன்பு இல்லாமல் பொருள் சேர்ப்பது கூடாது; அவ்வாறு சேரும் பொருளை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதின்றி வந்த பொருள். (754)

அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம்
புல்லார் புரள விடல். (755)

பொருள் ஈட்டும் துறையிலே தூய்மை வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகவே, திருவள்ளுவர், இந்த அதிகாரத்தில் மட்டும் அல்லாமல், வினைத்தூய்மையிலும் இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளார். பெற்ற தாய் பசித்துன்பத்தால் வாடுவ

தாக இருந்தாலும் சான்றோர் பழிக்கும் செயலைச் செய்யக் கூடாது என்றும், பழியை மேற்கொண்டு ஆக்கம் பெறுவதை விட வறுமையே உயர்ந்தது என்றும், பிறர் வருந்தும்படியாக ஈட்டிய பொருள் எல்லாம் ஈட்டியவரே வருந்தும்படியாகப் போய்விடும் என்றும், தீவினையால் பொருள்செய்து காத்தல் பச்சை மண்கலத்துள் நீர்பெய்து அழியவைப்பது போன்றதே என்றும் விளக்கியுள்ளார்.

அருள்நெறியை மறவாமல் பொருளை ஈட்ட வேண்டும் என்றவர், அந்தப் பொருள் அருளை வளர்க்கப் பயன்பட வேண்டும் என்றும் கூறுகின்றார். அன்பு என்னும் பண்பினிடம் பிறந்து வாழ்வது அருள் என்றும், ஆகையால் அன்பு தாய் என்றும், அருள் குழந்தை என்றும், அத்தகைய குழந்தையைச் செவிலித்தாய் போல் காப்பாற்றி வளர்ப்பது பொருள் என்றும் கூறுகின்றார்.

அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (757)

ஒரு நாட்டில் உழைத்துத் தொழில் செய்கின்றவர்கள் பெருகிப் பொருள்வளத்தை மிகுதிப்படுத்தினால், பகைவர்கள் எதிர்க்கவும் முன்வரமாட்டார்கள்; செருக்கு அடங்குவார்கள். ஆகையால், பகைவருடைய செருக்கை அறுக்கும் கூர்மையான கருவி பொருள்தான்.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனின் கூரியது இல். (759)

படை

தனக்குத் தீங்கு செய்தவர்களைப் பொறுக்க வேண்டும் என்று தனி ஒருவனுக்குக் கூறி, தீங்கு செய்தவர்களைத்

தண்டிக்க வேண்டும் என்று ஆட்சித்தலைவனுக்குத் திருவள்ளுவர் பொறுக்கடமையை வற்புறுத்தியுள்ளார் அல்லவா? ஆகையால், பலருக்கு இன்னல் இழைக்கும் கூட்டம் ஒன்று உலகத்தில் இருக்கின்ற வரையில் அதை அடக்குவதற்காகப் படை என்ற ஒன்று இருந்தே தீரும். அந்தப் படையைப் போற்றிப் பயன்படுத்துவது தலைவனுடைய கடமையாக இருக்கும். அந்தப் படை முடியாட்சிக் காலத்தில் பெரும்பாலும் வெளிநாட்டோடு போர் செய்வதற்கே பயன்படுவதாகும். குடியாட்சி முறை பல நாடுகளிலும் செம்மையாக அமைந்துவிட்டால், உள்நாட்டுக் கலகங்களையும் குழப்பங்களையும் அடக்குவதற்கே பயன்படும்.

படை என்பது தனக்கு உரிய உறுப்புக்கள் எல்லாம் அமைந்ததாகவும், இடையூறுகளுக்கு அஞ்சாததாகவும், எடுத்த கடமையில் வெற்றி பெற்றுத் தருவதாகவும் இருக்க வேண்டும். அத்தகைய படையே தலைவனுடைய செல்வங்களில் சிறந்த செல்வமாகும். எமனே சினங்கொண்டு வந்தாலும் ஒற்றுமையாய்க் கூடி எதிர்நின்று வெல்லக் கூடிய ஆற்றல் அந்தப் படைக்கு இருக்க வேண்டும். நிலைத்த வீரர்கள் மிகப் பலர் இருந்தாலும் அந்தப் படைக்குத் தக்க தலைவர்களும் இருந்து வழிகாட்டி நடத்த வேண்டும். தலைமக்கள் இல்லாதபோது அந்தப் படை ஆற்றலோடு நிற்காது.

உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. (761)

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. (765)

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். (770)

இந்தப் படையில் உள்ள வீரர் ஒவ்வொருவரும் அரும் பெருஞ் செயல்களைச் செய்ய ஆவல்கொள்ள வேண்டும்; சிறு சிறு செயல்களைச் செய்து வெற்றி பெற்று மகிழ்வதைவிட, பெரிய கடமையைச் செய்ய முயன்று தோற்றுவிடுவதே நல்லது என்று எண்ண வேண்டும். காட்டில் ஓடும் முயலைக் குறி தப்பாமல் எய்து கொன்ற அம்பை ஏந்துவதைவிட, வெட்ட வெளியில் நின்ற யானைமேல் எறிந்து அது தப்பித்து ஓடுமாறு விட்டுத் தவறிய வேலை ஏந்துவதே நல்லது என்னும் எண்ணம் கொள்ள வேண்டும்.

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. (772)

பகைவரை அஞ்சாமல் தாக்கி அடக்கும் ஆற்றலைப் பெரிய ஆண்மை என்று சொல்வார்கள். ஆனால் அதே பகைவர்க்கு ஒரு துன்பம் வந்தபோது இரக்கம் கொண்டு உதவி செய்வதே அந்த ஆண்மைக்குச் சிறப்புச் செய்வதாகும். பகைவரை அழிப்பதே நோக்கம் அன்று; அவர்களுடைய தீமையை அடக்கி ஒழித்தால் போதும்; ஆகவே, அவர்களுக்குத் துன்பம் வந்தபோது இரக்கம் கொள்ளும் தன்மை சிறந்ததாகும்.

பேராண்மை என்ப தறுகணொன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. (773)

ஏதேனும் சிறந்த செயலைச் செய்து அதனால் தான் துன்புறுவதையே வீரன் தன் கடமையாகக் கொள்வான். அவ்வாறு அமையாத நாளை எல்லாம் எண்ணிப் பயன்படாமல் இழுக்கிய நாளாகவே அவன் கருதி வருந்துவான். (விழுப்புண் படுதல் இக்காலத்துப் போர் முறைக்கும் காவல் முறைக்கும் ஏலாதது. ஆகையால் சிறந்த செயல் செய்து துன்புறுதல்

என்று கொள்வது பொருந்தும்). இவ்வாறு சிறப்புடைய செயலைச் செய்து புகழ்பெறுவதையே வீரர்கள் விரும்புவார்கள் ; உயிர் வாழ்க்கையையும் பொருட்படுத்தமாட்டார்கள் ; இத்தகையவர்கள் வீரர் என முன் வருவது (கழல் கட்டுவது) அழகுடையதாகும். தலைவர்களுடைய கண்களில் கண்ணீர் மிகுமாறு அவர்கள் அரும்பெருஞ் செயல்களைச் செய்து சாகத் துணிவார்கள் ; அத்தகைய சாவும் இரந்தாவது பெற்றுக்கொள்ளக்கூடிய பெருமை உடையதாகும்.

> **விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**
> **வைக்கும்தன் நாளை எடுத்து.** (776)
>
> **சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்**
> **கழல்யாப்புக் காரிகை நீர்த்து.** (777)
>
> **புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
> **இரந்துகோள் தக்கது உடைத்து.** (780)

நட்பு

நல்லறிவுடையவர் நட்பு பிறை நிறைவதுபோல நாள்தோறும் வளர்ந்துவரும் ; அறிவில்லாதவர் நட்பு நிறைமதி குறைவதுபோல நாள்தோறும் குறைந்துபோகும். இடத்தின் தொடர்பும் பழக்கமும் இல்லாமலும் நட்பு அமையும் ; உணர்ச்சி ஒத்திருந்தால் போதும் ; அந்த ஒன்றே நட்புக்கு வேண்டிய உரிமையைத் தரும். முகம் மட்டும் மலருமாறு பழகுவது நட்பாகாது. அன்பினால் நெஞ்சமும் மலருமாறு பழகுவதே நட்பாகும். நட்புக் கொள்வது ஒருவரோடு ஒருவர் சிரித்து நகையாடுவதற்காக அன்று ; தகாதன செய்து வரம்பு மீறும்போது முந்திச்சென்று கண்டிப்பதற்காகவே ஆகும். அழிவு தரும் கெட்ட வழியிலிருந்து நீக்கி, நல்ல

வழியில் செலுத்தி, எதிர்பாராத கேடு வந்தபோது உட னிருந்து துன்பத்தை அனுபவிப்பது நட்பாகும். நண்பனுக் குத் துன்பம் வந்தபோது உதவி செய்து துன்பத்தைத் தீர்ப் பது நட்பாகும். துன்பம் வந்த அப்பொழுதே அவன் கேளா மலே விரைந்துசென்று அந்த உதவியைச் செய்ய வேண்டும்; கூட்டத்தில் ஆடை குலைந்தவனுக்குக் கை அப்போதே விரைந்து உதவி மானம் காப்பது போல் உதவி செய்ய வேண்டும்.

நிறைநீர நீரவர் கேண்மை பிறை; மதிப்
பின்நீர பேதையார் நட்பு. (782)

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். (785)

முகம்நக நட்பது நட்பன்று; நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு. (786)

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. (784)

அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. (877)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (788)

நட்பு என்பது பொழுதுபோக்கிற்காகவே என்று சிலர் கருதுகின்றார்கள். ஆகவே ஆடல் பாடல் கேளிக்கைகளுக்காகச் செல்லும்போது துணையாக வர வல்லவர்களையும், உண்பதும் தின்பதும் குடிப்பதுமாகிய சிறு செயல்களுக்குத் துணையாக இருக்க வல்லவர்களையும், புலன்களுக்கு அடிமைப்பட்டுச் செய்யும் குற்றங்களுக்குத் துணையாய் நடக்க வல்லவர்களையுமே நண்பர்கள் என்று அவர்கள் கொள்கின்றார்கள். அது நட்பு

என்று போற்றத்தக்கது அன்று என்றே கடிய வேண்டும். மக்களின் வாழ்க்கை சீர்கெட்டு இருக்கும்போது, உயர்ந்த கடமையும் பொழுதுபோக்கிற்குப் பலியாகும்; சிறந்த கலையும் பொழுதுபோக்கிற்குப் பலியாகும்; தூய நட்பும் பொழுதுபோக்கிற்குப் பலியாகும். சீர்கெட்ட காலத்தில் நட்பு அவ்வாறு பயன் குன்றுவதைக் கண்டு, அதுவே அதன் இயல்பு எனக் கொள்வது பொருந்தாது. உள்ளம் கலக்காமல் முகம் நக நட்பதையும், நகுதற்பொருட்டு நட்டலையும் திருவள்ளுவர் கடிகின்றார்; பொழுதுபோக்கிற்குத் துணையாக இருந்து கெடுக்காமல், வாழ்க்கைக்குத் துணையாக இருந்து திருத்த வல்லவர்களையே நண்பர்கள் என்று கூறுகின்றார்.

நட்பு நெஞ்சத்தில் ஊன்றியதாக இருக்க வேண்டும், உணர்வின் ஒற்றுமையால் பிறப்பதாக இருக்க வேண்டும் என்ற ஆசிரியர், அதற்குப் புறத்தே புனைதல் இருக்கக் கூடாது என்று கடிகின்றார்: "இவர் எமக்கு இவ்வளவு அன்புடையவர்; யாமும் இவரிடம் இவ்வளவு அன்பு கொண்டிருக்கிறோம்" என்று நண்பர்கள் ஒருவரை ஒருவர் புனைந்து பேசினாலும், நட்புச் சிறப்பிழந்து விடும்.

இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. (790)

நல்ல பண்புடையவரின் நட்பைத் திருவள்ளுவர் கூறும்போது மிகச் சிறந்த உவமையைக் கொண்டு விளக்குகின்றார். நல்ல நூல் கற்கக் கற்க மேன்மேலும் இனிமை தருவது போல், பண்புடையவரின் தொடர்பு பழகப் பழக மேன்மேலும் இன்பம் தரும் என்கின்றார்.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

இந்த உவமை நட்பின் பெருமையை விளக்குவதோடு நிற்காமல், இலக்கியக் கலையின் சிறப்பையும் விளக்குகின்றது. நல்ல நூல் முதல்முறை கற்றபோது தரும் இன்பத்தைவிட, பலமுறை கற்கக் கற்கச் சிறந்த இன்பம் தரும் என்னும் உண்மையையும், வாழ்க்கையில் நல்ல நண்பர் செய்யும் நன்மைகளை நல்ல நூலும் செய்ய வல்லது என்னும் உண்மையையும் புலப்படுத்துகின்றது. அறிவிலும் நெஞ்சத்திலும் தெளிவையும் அன்பையும் வளர்க்கும் நூல் போல் நண்பருடைய தொடர்பு அறிவையும் நெஞ்சத்தையும் பண்படுத்த வல்லதாக இருக்கவேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து.

நட்புக்கொள்வதற்கு முன் நன்றாக ஆராய வேண்டும். ஏன் எனில், நட்புச் செய்த பிறகு, விடுதலை இல்லை. ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்தலைப் போல் கெடுதியானது வேறொன்றும் இல்லை. நண்பருடைய நல்ல பண்புகளைப் பலமுறையும் ஆராய்ந்துகொள்ளாவிட்டால் அந்த நட்பு இறுதியாகச் சாவதற்குக் காரணமான துயரத்தைத் தரும். சிலர் நன்மை உள்ளபோது மட்டும் நெருங்கிப் பழகிக் கேடு வருங்காலத்தில் கைவிடுவார்கள். அவர்களுடைய நட்பைச் சாகுந்தறுவாயில் நினைத்தாலும், நினைத்த மனத்தையும் அது சுடும். ஆகையால், குற்றமற்றவர்களின் நட்பையே கொள்ள வேண்டும்; ஒத்த பண்பு இல்லாதவர்களின் நட்பை அவர்கள் விரும்பியதைக் கொடுத்தாவது கைவிட வேண்டும்.

நாடாது நட்டலின் கேடில்லை ; நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. (791)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும். (792)

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். (799)

மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (800)

நட்பு மேன்மேலும் வளர்ந்து நிலைக்க வேண்டுமானால், உரிமையுணர்வு வேண்டும். நட்பிற்கு உறுப்பாக இருப்பது நண்பர் உரிமையோடு நடக்கும் தன்மையே ஆகும்; அதற்கு இயைந்தவராய் இனிது இருப்பதே சான்றோர் கடமையாகும். நண்பர் வருந்தத் தக்கவற்றைச் செய்வாரானால், அதற்குக் காரணம் அறியாமை மட்டும் அன்று; மிக்க உரிமையும் காரணம் என்று உணர வேண்டும். அன்பின் வழியில் வளர்ந்த நட்பை உடையவர், தம் நண்பர் அழிவுவேலையே செய்வாரானாலும், அவரிடத்தில் கொண்ட பழைய அன்பு நீங்காமல் வாழ்வார்.

நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன். (802)

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். (805)

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். (807)

ஆனால், உரிமை பற்றிய அன்பு இல்லாமல், வேண்டுமென்றே தீங்கு செய்வார்களானால், அப்படிப்பட்டவர்களின் நட்பை ஒழிக்க வேண்டும்; உள்ளன்பு இல்லாமல் பயன் கருதி மேலுக்கு உறவாடுவார்களானால், அவர்களுடைய நட்பையும் விடவேண்டும்.

அன்பு மிகுதியால் அப்படியே பருகுகின்றவர்களைப் போல் உருக்கம் உடையவர்களாய்ப் பழகினாலும், நல்ல பண்பு இல்லாத

வர்களின் நட்பு வளர்வதைவிடத் தேய்வது நல்லது. தமக்கு ஏதாவது பயன் உள்ளபோது மட்டும் பழகி, பயன் இல்லாத போது விட்டு நீங்குகின்றவர்களின் நட்பைப் பெற்ருல் வரும் நன்மையும் இல்லை; இழந்தால் வரும் கெடுதியும் இல்லை. நட்பைப் பொருட்படுத்தாமல் கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், காதல் கொள்ளாமல் பெறும் பொருளையே கொள்ளும் பொதுமகளிரும், பிறர் நன்மையைக் கருதாமல் அவருடைய பொருளைக் கவரும் கள்வரும், ஒரே தன்மை உடையவர்கள்; ஆகையால் அந்தத் தீயநட்பு விரும்பத் தகாதது.

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது. (811)

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? (812)

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். (813)

அறிவில்லாதவனுடன் மிக நெருங்கிப் பழகும் நட்பைவிட அறிவுடையவரின் பகையே கோடி மடங்கு மேலானது. ஏன் என்ருல் அறிவுடையவர் பகையாக இருந்தாலும் தீங்கு நேராது; ஆனல் அறிவில்லாதவனுடைய நட்பு எல்லாத் தீங்கும் உண்டாக்க வல்லது. அறிவும் பண்பும் இல்லாமல் நகையாடுவதற்கு மட்டும் உரியவர்களின் நட்பைவிடப் பகைவரால் பத்துக்கோடி துன்பமே மேலாகும். செய்யக் கூடிய கடமையையும் செய்ய முடியாமல் கெடுக்க வல்லவர்களின் நட்பைச் சேர விடவேண்டும்; அதைப் பற்றி அவர்களிடமும் சொல்லாமல் விடவேண்டும்; சொல்வதானுல், அந்த நோக்கத்தையும் கெடுத்துவிடுவார்கள்.

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். (816)

நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். (817)

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். (818)

சிலர் உள்ஒன்று புறம்ஒன்றாக நடிப்பதும் உலகத்தில் உண்டு. அவர்களிடம் நட்புக் கொள்வதும் தீங்கே. செயல் வேறாகவும் சொல் வேறாகவும் உள்ளவர்களின் நட்பு, நனவில் துன்பம் தருவதோடு அல்லாமல் கனவிலும் துன்பம் தருவதாகும். தனியே வீட்டிலிருக்கும்போது நட்புக்கொண்டு பழகி, பலரோடு மன்றத்தில் இருக்கும்போது பழி கூறுகின்றவர்களின் நட்பைச் சிறிதும் நெருங்காமல் நீக்கிவிட வேண்டும்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. (819)

எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. (820)

சிலருடைய மனம் இயல்பாகவே நல்வழியில் நிலைபெறாமல் அலையும். அவர்கள் உறவுபோல் இருந்து உறவுகொள்ளாதவராய் வாழ்வார்கள். அவர்களுடைய நட்பு, நிறையில்லாத பொதுமகளிருடைய மனம்போல வேறுபடும்.

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். (822)

திருவள்ளுவர் பொதுவாக மகளிர் என்று குறித்தாலும், வேறுபடும் மனம் என்று கூறியுள்ளமையால், நிறையில்லாத மனம் என்றும் பொதுமகளிர் மனம் என்றும் கொள்ளவேண்டும்.

(நாய் நன்றி மறந்து கடிப்பது போல் என்று கூறின் வெறி பிடித்த நாய் என்று கொள்வதுபோல் இங்குப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு தெளிவாகப் பண்பு விளங்காத இடத்தில், ஒருமை மகளிரேபோல (974) என்றும், இருமனப் பெண்டிர் (920) என்றும் அவரே தெளிவாக்குதலும் காண லாம். இங்கே இருவகையாக வேறுபடும் மனம் உடைய வாழ்வுக்கு உவமையாக அமைவதால் இருமனப் பெண்டிர் என்று கொள்ள வேண்டும்).

நல்ல பண்பு இல்லாதவர்கள் பல நல்ல நூல்களைக் கற்றாலும் நல்ல மனம் உடையவர்களாக மாறுவதில்லை. ஆகையால் கல்வி மட்டும் இருந்து நல்ல மனம் இல்லாதவர்களுடன் நட்புக் கொள்ளலாகாது. சிலர் முகமலர்ந்து சிரித்து மனத்தால் பொல்லாத வஞ்சகர்களாக இருப்பார்கள். சிலர் இனிய சொற் களையே பேசி மனத்தால் பொருந்தாமலே நடப்பார்கள். இவர்களை நம்பித் தெளியக் கூடாது. பகைவர்கள் சொல்லால் வணக்கம் உடையவர்களாக இருப்பதையும் நம்பக் கூடாது; வில்லின் வணக்கம் அம்பு எய்வதற்காக வளைந்து தீமை குறிப் பதுபோல் இதுவும் தீங்கு பயக்கும் என்று விடவேண்டும். சிலர் தொழுவார்கள்; அழுவார்கள்; ஆனால் உள்ளத்தில் பகையும் வஞ்சமும் வாழும்; அவர்கள் தொழுத கையினுள் கொலைக்கருவி மறைந்திருக்கும்; அவர்கள் அழுத கண் ணீரும் அவ்வாறே தீமையை மறைத்துவைத்திருக்கும். இப்படிப்பட்ட பகைவர்கள் நண்பர்களாக நெருங்கும் காலம் வந்தால், முகத்தளவில் நட்புச்செய்து உள்ளத்தில் நட்புக் கொள்ளாமல் நீக்கிவிட வேண்டும்.

பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது. (823)

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். (824)

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று. (825)

சொல்வணக்கம்ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். (827)

தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. (828)

பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல். (830)

பேதைமை

தீமையைக் கொண்டு நன்மையைப் போக விடுவது, தகாதவைகளைச் செய்ய நாணாமலிருப்பது, தக்க கடமைகள் என்ன என்று ஆராயாமலிருப்பது, யாரிடத்திலும் அன்பு இல்லாமல் நடப்பது, போற்றத்தக்கது யாதொன்றையும் போற்றாமல் விடுவது இவைகளைப் பேதைமை (அறியாமை) என்று கூற வேண்டும். தன் ஒழுக்கத்திற்குத் தகாத ஒன்றில் அன்பு செலுத்துவது பேதைமையில் பெரிய பேதைமை யாகும். அறிவில்லாதவன் மட்டும் பேதை அல்லன் ; பல நூல்களை ஓதியும் உணர்ந்திருந்தும் பிறர்க்கு எடுத்துச் சொல்லியும் தான் மட்டும் கற்ற அறிவுக்கு ஏற்ப அடங்கி ஒழுகாதவனும் பேதையே ஆவான் ; உண்மையை ஆராய்ந்தால் அவனைப் போன்ற பேதையார் உலகத்தில் வேறு யாரும் இல்லை.

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல். (831)

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். (833)

பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல். (832)

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல். (834)

பேதையின் கையில் ஒரு பொருள் கிடைக்கப் பெற்றால், அவன் நிலைமை, முன்னமே பித்தனாக உள்ளவன் அதன்மேல் கள்ளுண்டு மயங்கியதுபோல் ஆகும். பேதை பெரிய செல்வம் பெறுவானானால், அவனோடு தொடர்பு இல்லாதவர்கள் இன்பம் அடைவார்கள்; ஆனால் அவனைச் சார்ந்தவர்கள் பசித் துன்பத்தால் வாடுவார்கள். அவனுடைய பேதைமையால் அந்தச் செல்வம் இவ்வாறு தகாத வழியில் செலவாகும்.

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின். (838)

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. (837)

செல்வம் என்று இங்கே குறிக்கப்படுவது வெறும் பொருட் செல்வம் மட்டும் அன்று; பொதுவாழ்வில் பெறும் பதவிகளும் மற்ற நல்ல வாய்ப்புக்களும் செல்வம் என்று கூறுவதில் அடங்கும். ஆகவே, பேதைக்குப் பெரிய பதவி வந்தால் அயலார் இன்பம் அடைய, சார்ந்தவர்கள் வாடி மெலிவார்கள் என்றும் பொருள் கொள்ளலாம்; மற்ற வாய்ப்புக்களையும் இவ்வாறே பேதை பயன்படுத்தத் தெரியாமல் வீணாக்குவான் என்று கொள்ளலாம்.

புல்லறிவாண்மை

ஒருவனுக்குச் செல்வம் முதலியன இல்லாத குறையைப் பெரிய குறையாக உலகத்தார் கருதமாட்டார்கள்; ஆனால் அறிவில்லாத குறையே வறுமையில் பெரிய வறுமையாகும். ஆயினும் அறிவில்லாதவன் இந்தக் குறையை உணர்வதில்லை. 'நமக்குச் சிறந்த அறிவு உள்ளது' என்று தன்னைத் தானே மதிக்கும் செருக்கு அவனிடம் இருக்கின்றது; இதுதான் புல்லறிவாகும்.

> அறிவின்மை இன்மையுள் இன்மை; பிறிதின்மை
> இன்மையா வையாது உலகு. (841)

> வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
> உடையம்யாம் என்னும் செருக்கு. (844)

அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒரு பொருளைப் பிறர்க்குக் கொடுப்பது அருமை; ஒருவேளை கொடுப்பானேயானால், அது வேறொன்றும் இல்லை, பொருளைப் பெறுகின்றவனுடைய நல்வினை என்றே கூற வேண்டும். பிறர்க்கு உதவியாக வாழ்வது இப்படி இருக்க, அறிவில்லாதவன் தனக்கு நன்மையாக வாழ்க்கையை நடத்துவதும் இல்லை. அவன் தனக்குத் தானே செய்துகொள்ளும் துன்பத்தை அவனுடைய பகைவராலும் செய்யமுடியாது. அறிஞர் தனக்கு நல்வழி சொன்னாலும் அவருடைய ஏவலின்படி செய்ய மாட்டான்; தானாகவும் செய்யத் தகுந்தது இது என்று தெளிய மாட்டான்; அவனுடைய உயிர் உடம்பிலிருந்து நீங்கும் வரையில் அவன் உலகத்திற்கு ஒரு நோய் ஆவான். உலகத்தில் உள்ள சான்றோர் உண்டு என்று சொல்கின்ற உண்மையையும் அவன் இல்லை என்று சொல்வான்; அதனால் அவன் உலகத்தில் ஒரு பேயாகக் கருதப்படுவான்.

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம். (842)

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (843)

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய். (848)

உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (850)

இகல்

தொடர்பு உடையவரிடத்தில் நட்பு நிலைத்தால் ஒற்றுமையும் ஆக்கவேலையும் பெருகும். ஆனால் வெறுப்பு மிகுந்தால் மாறுபாடும் அழிவுவேலையும் பெருகும். மாறுபாட்டிற்குக் காரணமான வெறுப்பு எண்ணத்தளவில் நிற்பதாகும்; அதுவே இகல் என்று கூறப்படும். அழிவுவேலையை வளர்க்கும் வெறுப்பே செயலளவில் மிகுவதாகும்; அது பகை என்று கூறப்படும். திருவள்ளுவர் இகலை நீக்கும் வகையில் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்றும், பகையையும் முடியுமானால் நீக்கிக்கொள்ள வேண்டும் என்றும், முடியாதபோது வென்றுவது போக்கிவிட வேண்டும் என்றும் கூறுகின்றார். செயலளவில் அழிவுவேலைக்கு முனையும் பகையைத் தாக்கி வெல்லலாம் என்று கூறுகின்றவர், எண்ணத்தளவில் உள்ள இகலை விட்டுக்கொடுத்தாவது நீக்கிவிடவேண்டும் என்று கூறுகின்றார்.

வாழ்க்கையில் மாறுபாடு கூடாது என்று திருவள்ளுவர் வற்புறுத்திக் கூறும் காரணங்கள் என்ன? உறவு இல்லாமல் வெறுத்துப் பிரிகின்ற கெட்ட இயல்பை வளர்க்கும் நோய் இந்த மாறுபாடுதான். இதுவே துன்பங்களில் பெரிய துன்பமாகும்; இந்தத் துன்பம் கெட்டால் இன்பத்தில் பெரிய

இன்பம் உண்டாகும். மற்றவர்களோடு மாறுபட்டு நிற்பதனால் மேம்பாடு உண்டாகும் என்றும், அந்த மேம்பாடே இனியது என்றும் ஒருவன் கருதி மாறுபாட்டை வளர்த்துவரலாம்; அவனுடைய வாழ்க்கை தவறுவதும் அடியோடு அழிவதும் விரைவில் நிகழ்ந்துவிடும்.

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். (851)

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். (854)

இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. (856)

உலகத்தில் எல்லா வகையாலும் ஒத்திருக்கின்ற இருவரைக் காண முடியாது. ஒரே தன்மையாய்த் தோன்றுகின்ற இரண்டு இலைகளையாவது இரண்டு மலர்களையாவது நுட்பமாக ஆராய்ந்தால் அவற்றிற்குள்ளும் வேறுபாடு காணப்படும் என்று அறிஞர் கூறுகின்றனர். வேறுபட்டுத் தோன்றுகின்ற இரு பொருள்களுக்குள் ஒற்றுமையும் உண்டு என்கின்றனர். இவ்வாறு ஒற்றுமைக்கு இடையே வேற்றுமையும், வேற்றுமைக்கு இடையே ஒற்றுமையும் இயற்கை அமைத்துள்ள பெருமை வியக்கத் தக்கதாக உள்ளது. இந்த உண்மையை உணர்ந்தால், மக்களுக்கு இடையே கருத்து ஒற்றுமை முழுதுமாக இருக்க முடியாது என்பதை உணரலாம். ஒருவர் ஒரு செயல் செய்வது போல மற்றவர் செய்யவும் முடியாது. ஆகவே கருத்தும் செயலும் வேறுபடுவது இயற்கை. இந்த வேற்றுமைக்கு இடையே ஒற்றுமையைக் கண்டு அன்புகொண்டு நட்புச் செய்வது கடமையே அல்லாமல், சிறு சிறு வேறுபாடுகளைக் கண்டு அவை காரணமாக மாறுபாடு கொண்டு பிரிந்து

பிளவுபட்டு நிற்பது நல்லது அன்று. ஆனால் உலகத்தில் நாடுகளும் குடும்பங்களும் பிரிந்து மாறுபட்டு நிற்பதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் ஒற்றுமைப் பகுதியைக் காணாமல், வேற்றுமைப் பகுதியைக் கண்டு கண்டு அதை வளர்ப்பதையே கலையாகப் போற்றுவதாகும். அதிலும் நெருங்கிப் பழகுகின்றவர்க்குள்ளேயே இந்த மாறுபாடு மிகுதியாக உள்ளது. உடன்பிறந்தார்க்குள் இருக்கும் மாறுபாடு வெளியார்க்குள் இல்லை. ஒரு நாட்டுமக்களில் இரு கட்சியார்க்கு இருக்கும் மாறுபாடு ஒரு நாட்டார்க்கும் மற்றொரு நாட்டார்க்கும் இடையே இருப்பதில்லை. இப்படி மாறுபாடு வளரும்போது, ஒருவர் அல்லது ஒருசாரார் அதைப் பொருட்படுத்தாமல் விட்டுக்கொடுத்து நடப்பார்களானால், மாறுபாடு முற்றாது; மெல்ல மெல்ல மறைந்து பழைய அன்பு வாழும்; நட்பு வளரும்; நன்மை விளையும்.

ஆகையால் இகல் (மாறுபாடு) வேண்டாம் என்று பொதுவாக அறிவுறுத்திய திருவள்ளுவர், மற்றவர்கள் நம் மேல் இகல் கொண்டால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஆராய்ந்து கூறுகின்றார்:

பிரிந்து நிற்கக் கருதி அதற்காக நட்பிற்குப் பொருந்தாதவைகளை ஒருவன் செய்தாலும், அவனோடு இகல்கொண்டு அவனுக்குத் துன்பம் செய்யாமலிருப்பதே உயர்ந்தது. மற்றவர்களின் மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளாமல் இயைந்து நடக்க வேண்டும்; அவ்வாறு சாய்ந்து ஒழுகவல்லவர்களை ஒருவரும் வெல்ல முடியாது. மாறுபாட்டுக்கு எதிரே மாறுபாடே காட்டி நிற்காமல் இயைந்து நடப்பதே நன்மையாகும்; அதைப் பொருட்படுத்தி வெல்லக் கருதினால் கேடு மிகுந்துவரும். மாறுபட்டு நடப்பதால் துன்பம் எல்லாம் உண்டாகும்; நட்புக்

கொண்டு வாழ்வதனால் நல்ல இன்ப வாழ்வு என்னும் பெருமை யான நிலை ஏற்படும்.

பகல்கருதிப் பற்று செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. (852)

இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர். (855)

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்; அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு. (858)

இகலானும் இன்னாத எல்லாம்; நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு. (860)

பகை

மாறுபாட்டைப் பாராட்டாமல் மறந்து ஒழுகுவதால் நன்மை உண்டு. ஒருவர் மாறுபாட்டையே பாராட்டி வந்தாலும், மற்றொருவர் ஒற்றுமைக்கு உரிய பகுதிகளையே பாராட்டி உறவு கொண்டாடுவதால் அந்த மாறுபாடு மறைவதும் உண்டு. ஆனால், வெறும் எண்ணத்தளவில் நிற்காமல், செயலளவில் அதை வளர்த்து அழிவுவேலை தொடங்குவோரை என்ன செய்வது? அவர்கள் செய்யும் தீமையை எத்தனை முறை பொறுப்பது? பொறுப்பதாலும் பயனில்லை என்று அனுபவத்தால் உணரும்போது வாளா இருக்க முடியுமோ? தனிவாழ்வில் அவ்வாறு பிறர் தீமை செய்யச் செய்யப் பொறுமையே மேற்கொண்டு வாழலாம்; பிறர் தீமையை ஏற்று அழியினும் அழியலாம்; இது அறத்துப்பாலில் காணும் அறநெறியாகும். ஆனால் பொதுவாழ்வில் பிறர் தீமையைப் பொறுப்பதற்கு ஓர் அளவு உண்டு; இன்னா செய்யாமல் வாழ்வதற்கு ஓர் எல்லை உண்டு; அந்த அளவு மீறின் பொறுப்பதே குற்றமாகும்;

பகையைத் தாக்கி அழிக்காமல் வளர விடுவதே குற்றமாகும். ஏன்? பொதுவாழ்வில் பலருடைய நல்வாழ்வைப் போற்றுவது அறமாகுமே அல்லாமல், தீமை செய்யும் சிலரைப் பொறுத்து அவர்களுக்கு இடம் கொடுப்பது அறம் அன்று; தீமை செய்யும் சிலரை ஒறுத்து அடக்கி வெல்ல முயல்வது அறமாகுமே அல்லாமல், அவர்களுக்கு இயைந்தாற்போல் நடந்து பலருடைய வாழ்வில் அமைதி குலைவதையும் அல்லல் மிகுவதையும் பார்த்துக்கொண்டிருப்பது அறம் அன்று. ஆகையால், இகல் வேண்டாம் என்று அறிவுறுத்திய திருவள்ளுவர், வேறு வழியில்லாமல் வளர்ந்துவிட்ட பகையை ஒழிப்பதே கடமை என்று இங்குக் கூறுகின்றார்.

அவ்வாறு பகைகொண்டு பொதுவாழ்விற்கு நன்மை செய்ய முயலும்போது, யாருடன் பகை கொள்கிறோம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். வெல்லக் கூடிய இடத்தில் மட்டுமே பகை கொள்ள வேண்டும். தம்மைவிட வலிமை மிகுந்தவர்களைப் பகைத்து எதிர்ப்பதால் நோக்கம் நிறைவேறாது; தோல்வியும் அழிவும் நேரும். ஆகையால் அவர்களை எதிர்க்காமல் இருந்து துன்புறுவதே நல்லது. வலியவர்களோடு மாறுபட்டுப் பகை கொள்வதை விடவேண்டும்; மெலியவர்களோடு பகை கொள்வதை விரும்பி மேற்கொள்ள வேண்டும். அறியாமையால் சினங்கொள்கின்றவன் பேராசையுடையவன் ஆகியவர்களை நட்பினால் திருத்த முடியாது; ஆகையால் அவர்களுடைய பகை விரும்பத் தக்கது. அடுத்துத் துணையாக இருக்கும் நிலையிலும் தீமைகளைச் செய்கின்றவனுடைய பகையைப் பொருள் கொடுத்தாவது கட்டாயம் கொள்ளவேண்டும். இவர்களோடு பகை கொண்டு அடக்கி வெல்வதே பொதுவாழ்வில் நன்மை செய்யும் வழியாகும்.

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. (861)

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். (866)

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. (867)

ஆனால், பகையைத் தாமாக விரும்பி மேற்கொள்ளக் கூடாது என்றும், இயன்ற வரையில் பகைக்கு இடம் ஏற்படாமல் அன்பைக் காப்பதே கடமை என்றும், திருவள்ளுவர் மறவாமல் வலியுறுத்துகின்றார் :

பகை என்பது நன்மை சிறிதும் இல்லாதது ; ஆகையால் அது வேடிக்கையாகவும் விரும்பத்தக்கது அன்று. ஏற்பட்டுள்ள பகையையும் இயன்ற வழியில் முயன்று நட்பாகச் செய்து கொள்ளமுடியுமானால், அத்தகைய பண்புடையவனை உலகம் போற்றும் ; அவனுடைய பெருந்தன்மையில் உலகம் பொருந்தி நிற்கும்.

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று. (871)

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. (874)

வேறு வழி இல்லாமல் பகை கொள்ள நேரிட்டாலும் எப்போதும் அறிஞர்பகையை மேற்கொள்ளாமல் காத்துக் கொள்ள வேண்டும். எண்ணமே வாழ்வாக மலர்வது ஆகையால், எண்ணங்களை வளர்த்துப் பரப்ப வல்ல அறிஞர்க்கு ஆற்றல் மிகுதி. அவர்கள் எண்ணுகின்ற எண்ணங்களைத் தடுக்கவல்ல தடை உலகத்தில் இதுவரையில் இருந்ததும் இல்லை ; இனி இருக்கப் போவதும் இல்லை. சிறைவாழ்வில்

சிக்குண்டிருந்தாலும் அவர்கள் எண்ணும் எண்ணங்கள் நாடெங்கும் பரவி மூலை முடுக்கெல்லாம் வளர்ந்து ஆற்றலோடு வேலை செய்து அவர்களுடைய நோக்கங்களை நிறைவேற்று கின்றன. ஆகையால் அவர்களை அடக்குமுறையால் அடக்கி யாள வல்லரசுகளும் அஞ்சுகின்றன. அறிஞர் வாழ்விற்குத் தடை ஏற்படுத்தி மற்ற நாடுகள் அல்லல்பட்ட கதை எல்லாம் கண்டு கண்டுதான் சில நாடுகள் அறிஞர்க்குத் துன்பம் விளைக் காமல் விளங்கிவருகின்றன. நெடுங்காலத்திற்கு முன்னமே அரசியலை ஆராயப் புகுந்த திருவள்ளுவர் இந்த உண்மையை வலியுறுத்தியுள்ளார். வில்லும் வாளும் கொண்டு உடம்பைத் தாக்கி வெல்லவல்ல வீரரைப் பகைத்துக்கொண்டாலும், எண்ணங்களையே கருவிகளாகக் கொண்டு உள்ளத்தைத் தாக்கி வெல்லவல்ல அறிஞரைப் பகைத்துக்கொள்ளலாகாது என்று அறிவித்துள்ளார்.

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை. (872)

பகையைத் தோன்றுமலே தடுத்துவிடுவது நன்மை. ஒருகால் தோன்றி வளர்ந்துவிட்டால், அது முதிரும் முன்னமே தொடக்கத்திலேயே அதை வென்று அழிக்க வேண்டும். முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே களைந்துவிடுவதுபோல் ஒழிக்க வேண்டும். இல்லையானல், அதே இளமரம் காழ்ப்பு ஏறி முதிர்ந்தபிறகு, வெட்டுவோரின் கைக்குத் துன்பம் தருவது போல் முடியும்.

இளைதாக முள்மரம் கொல்க ; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (879)

இதுவரையில் கூறியவை எல்லாம் புறத்தே வெளிப்படும் பகையைப் பற்றியவை. புறத்தே வெளிப்படையாகத் தோன்

றும் பகையைவிடப் பொல்லாதது ஒன்று உள்ளது; அது தான் உள்ளத்தில் பகைகொண்டு மேலுக்கு உறவுகொள்ளும் பகை; அதுவே உட்பகை எனப்படுவது. உட்பகை உடைய வர்களை நம்மவர் என்று போற்றிக்கொண்டு ஏமாந்திருப்பது தீமையாகும். நிழலும் இனியது; நீரும் இனியது; ஆனால் அந்த நிழலும் நீரும் உடல்நலம் காக்க உதவாமல் நோய் தருவனவாக இருந்தால், அப்போது பெறும் இனிமையைப் பொருட்படுத்தாமல் பிறகு வரும் நோயையே கருதி நீக்குவ தில்லையா? அதுபோல் சுற்றத்தாராக இருந்தாலும் இனியவர் போல் இருந்து தீமை செய்வார்களானால், அவர்களுடைய தொடர்பு தீயதே ஆகும். தவிர, வாள் போல் வெளிப்படை யாகப் பகைத்து நிற்பவர்களின் பகையைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை; ஏனெனில், அவர்களைப் பகைவர்கள் என்று அறிந்து எப்போதும் தற்காப்புச் செய்துகொள்ள முடியு மாகையால் தீமை விளைவது அருமை. உறவு போல் தோன்றி உட்பகை கொண்ட பகைவர்களின் தொடர்புக்கே அஞ்ச வேண்டும்; ஏனெனில், அவர்கள் நம்மவர்கள் என்ற எண்ணத்தால் தற்காப்பு இல்லாமல் சோர்ந்து அகப்பட்டுக் கொண்டு துன்புறுவது எளிதாகும். ஆகையால் வெளிப் படைப் பகைவர்க்கு அஞ்சவேண்டியதில்லை; உட்பகைக்கே அஞ்ச வேண்டும். அந்த உட்பகை எவ்வளவு சிறியதாக இருந் தாலும், எள்ளின் பிளவுபோல் மிகச் சிறியதாக இருந்தாலும், அதனால் கெடுதி உண்டு. அவர்கள் மனப்பொருத்தம் இல்லாத வர்கள் ஆகையால், அவர்களோடு கூடி வாழும் வாழ்க்கை ஒரு குடிசையினுள்ளே பாம்போடு உடன்வாழ்வதுபோல் எப் போதும் தீமைக்கு இரையாகும் வாழ்க்கையாகும்.

நிழல்நீரும் இன்னாத இன்னா; தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். (881)

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. (882)

எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. (889)

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று. (890)

பெரியாரைப் பிழையாமை

உலகத்தில் சிலர் அறிவும் ஆற்றலும் மிக்கவர்களாக இருக்கின்றார்கள். அவர்களை மதித்து நடக்க வேண்டும். அவர்களை அவமதித்துப் பிழை செய்வதால் வரும் இடரும் அழிவும் தாங்க முடியாதனவாக இருக்கும். ஆகையால் தற்காப்புத் தேடுவோர் செய்யும் காவல் முறைகளில் தலையானது எது என்றால், ஆற்றல் உடையவர்களின் ஆற்றலை இகழாமல் நடப்பதே ஆகும். அத்தகைய பெரியவர்களைப் போற்றாமல் நடந்தால், அவர்களால் நீங்காத துன்பம் வரும். ஆற்றல் உடையவர்களுக்கு ஆற்றல் இல்லாதவர்கள் தீமை செய்தால், அது எமனைக் கை காட்டி அழைப்பது போல் ஆகும். தீயினால் சுடப்பட்டாலும் ஒருவாறு தப்பிப் பிழைக்க முடியும்; ஆனால் பெரியோரிடம் தீமை செய்கின்றவர்கள் தப்பிப் பிழைக்க முடியாது. சிறந்த கொள்கை உடைய பெரியோர்கள் சினம் கொள்வதில்லை; ஒருகால் பொது நன்மை கருதிச் சினங் கொண்டு எதிர்க்க எழுந்தால், ஆளும் தலைவனும் இடைக் காலத்திலேயே சீரழிந்து தலைமைப் பதவி இழந்து கெடுவான்.

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை. (891)

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். (892)

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். (894)

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். (896)

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். (899)

பெரியோர் இயல்பாகவே நல்லவர்கள் ; தன்னலம் அற்றவர்கள் ; பொறுமை மிக்கவர்கள். அவர்களுக்குத் தன்னலம் இன்மையால், பிறர் தீங்கு செய்த போதும் பொறுமை இழக்க மாட்டார்கள் ; தீங்கு செய்தவர்களுக்கும் நன்மையே செய்வார்கள். ஆனால் பொதுவாழ்வில் மக்களுக்கு ஏதேனும் குறை இருக்குமானால் அதைக் களைந்து மக்களுக்குத் தொண்டு செய்ய முற்படுவார்கள் ; அப்போது ஆட்சித் தலைவனோ, அமைச்சரோ, மன்றத்தினரோ, மற்றவரோ அவர்களைத் தடுக்க முற்பட்டால், "நம் கடமையை நாம் செய்கின்றோம், இந்தப் பெரியோர் நம் கடமையில் ஏன் குறுக்கிட வேண்டும்" என்று இகழத் தொடங்கி, அது காரணமாக அவர்களுக்கு இடையூறும் செய்யத் தொடங்கினால், அப்போதுதான் அந்தப் பெரியோர் பொறுமை இழந்து எதிர்க்கத் தொடங்குவார்கள். பெரும்பாலும் பொறுமை இழக்காத அவர்கள், ஒருகால் இவ்வாறு பொறுமை இழந்து எதிர்க்கத் தொடங்கினால், எத்தகைய பதவியில் உள்ளவர்களும் அழிய வேண்டி நேரும். காரணம் என்ன ? தன்னலம் இல்லாமல் பொதுத் தொண்டு செய்ய முற்பட்ட அவர்களுக்கு ஆற்றல் மிகுதி ; மக்களின் நல்லெண்ணமும் அவர்கள் சார்பிலேயே திரளும். ஆகையால் அவர்களிடம் தவறாக நடந்துகொள்ளக் கூடாது என்று திருவள்ளுவர் அறிவுரை கூறுகின்றார்.

பெண்வழிச் சேறல்

குடும்பக் கடமை வேறு; உலகக் கடமை வேறு. குடும்பக் கடமையையும் குறைவற முடித்து உலகக் கடமையையும் நன்கு செய்ய வல்லவர் சிலர். அவர்களின் வாழ்க்கையில் போராட்டமே இல்லை. சிலருடைய வாழ்க்கையில் குடும்பக் கடமைக்கும் உலகக் கடமைக்கும் போராட்டம் ஏற்படும். அவர்களில் சிலர் குடும்பத்தைப் போற்றி உலகக் கடமையைத் துறந்துவிடுவார்கள். வேறு சிலர் உலகக் கடமையைப் போற்றிக் குடும்பத்தைத் துறந்து வெளியேறுவார்கள்; இவர்களால் பொதுவாழ்க்கையில் பெரிய தீங்கு நேர்வதில்லை.

ஆனால், குடும்பத்திலும் இருந்துகொண்டு, உலகக் கடமையையும் மேற்கொண்டு வாழ்கின்ற சிலர், குடும்பத்தின் நன்மையே பெரிதாகக் கொண்டு பொதுவாழ்க்கைக்கு இடையூறான வழியில் நடப்பார்கள். அவர்களே பொதுவாழ்க்கையில் கடமையைச் செய்யாமல், பற்று வைத்துக்கொண்டு கெடுதி இழைக்கின்றவர்கள்; குடும்ப வாழ்க்கை எப்படியாவது சிறப்புற வேண்டும் என்று நடுநிலையை மறந்து ஒரு சார்பாக நடக்கின்றவர்கள்; குடும்ப வாழ்க்கைக்கு ஆக்கம் தேடிப் பொதுத் தொண்டில் ஊக்கம் குன்றி நெருக்கடி நேரும்போது கடமையை மறந்து திரிகின்றவர்கள். (பொது நன்மையைக் கருதாமல், கையூட்டு (லஞ்சம்) வாங்கிப் பணம் குவித்துக் குடும்ப வாழ்க்கையை உயர்த்திக்கொள்கின்றவர்களும் இவர்களே). ஒருவன் இவ்வாறு செய்வதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்று ஆராய்ந்தால், அவனைப் போல் குடும்பத்தில் பொறுப்பு ஏற்றுள்ள அவனுடைய மனைவியின் தன்னலமும் காரணம் என்பதை உணரலாம். அவன் மனம்

பொதுவாழ்வில் ஈடுபட்டிருக்கும் நிலைமையை மாற்றித் தன் பக்கம் இழுத்துக் கெடுப்பது அந்தத் தன்னலமே. குடும்பக் கடமையைவிட உலகக் கடமை சிறந்தது என்று அறியாத காரணத்தால் அவள் அவனுடைய பொறுப்பை உணர்வது இல்லை. உலகம் என்பது இன்னது, நம் வாழ்க்கையின் அடிப்படையில் உலகப் பொதுவாழ்வே உள்ளது என்று அறியாத அவள் எப்படியாவது ஆடம்பரமாக வாழ வேண்டும் என்றும், குடும்பத்திற்குப் பொருளும் சிறப்பும் சேர வேண்டும் என்றும் தவறாக எண்ணுகின்றாள். இப்படிப் பல குடும்பத்தார் வாழ்ந்து உயர்நிலை பெறுவதை அவள் கண்ணால் கண்டு கண்டு, தன் கணவனும் அவ்வாறே பொது வாழ்க்கையை உறிஞ்சிக் குடும்ப வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்று தவறாக உணர்கின்றாள்; பல குடும்பத்தாரின் உயர்வுக்குக் கணவன்மார் இவ்வாறு நடப்பதே காரணம் என்று எடுத்துக்காட்டுக்கள் பல காண்பதால், இது தவறு என்பதை அவளால் எண்ணவும் முடிவதில்லை. (மற்றவர்களுக்கு இருப்பனபோல் நகைப் பெருக்கம் வேண்டும், பட்டாடைப் பெருமை வேண்டும், மாளிகை வாழ்வு வேண்டும், பல்வகைப் பொருட் சிறப்பு வேண்டும் என்றெல்லாம் மனைவியர் விழையும் விழைவே கணவன்மாரின் நடுநிலை பிறழ்வுக்கும் லஞ்சக் கொடுமைக்கும் இன்று காரணமாக உள்ளது என்பதையும் எண்ணிப் பார்க்கலாம்). அறிவும் கடமையுணர்வும் உள்ள கணவனோ, மனைவியின் விருப்பத்திற்கு இணங்க மறுக்கின்றான். பண்பட்ட மனைவியாயின் அவன் உள்ளத்தை உணர்ந்து திருந்துகின்றாள்; இல்லையாயின் போராடுகின்றாள். போராட்டத்தில் கணவன் ஈடுபடுகின்றான்; உறுதியுள்ளவனானால், அவளைப் பொருட்படுத்தாமல் பொதுக்கடமையை நடு

நிலையோடு செய்கின்றான். உறுதி குறைந்தவனானால், அன்புடைய அவள்நெஞ்சமே அவனை வெல்கின்றது; மெல்ல மெல்ல அவள் விரும்பிய வழியில் அவன் நடக்கின்றான்; இதுவே பெண்வழிச் சேறல் என்பது.

பெண் காதலியாகக் காமத்துப்பாலில் விளங்கும்போது, போர்க்களத்தில் பகைவரெல்லாம் அஞ்சத்தக்க காதலனுடைய உரத்தை எளிதில் உடைக்க வல்ல மெல்லியலாக இருக்கின்றாள்; உடன் இருக்கும்போது அவனுடைய உயிர்வாழ்வாக இருக்கின்றாள்; பிரியும்போது உயிர் உடம்பிலிருந்து நீங்கும் துன்பமாக இருக்கின்றாள். இவ்வளவு இன்றியமையாமை அந்தக் காதல் வாழ்விற்குப் பொருந்தும். அறத்துப்பாலில் அவள் மனைத்தக்க மாண்பு உடையவளாக இருக்கின்றாள்; கணவனுடைய வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளாக இருக்கின்றாள். அதனால் பெருமை பெற்று விளங்குகின்றாள். "பெண்ணின் பெருந்தக்க யா உள" என்று அவளுடைய கற்பின் திறத்தைத் திருவள்ளுவர் வியந்து வாழ்த்துகின்றார். இவ்வாறு கடமையைச் செய்து தற்காத்துத் தற்கொண்டானைப் போற்றும் வாழ்க்கைத் துணையாக இருப்பது அந்த இல்லற வாழ்விற்குத் தகும். ஆனால் கணவனுடைய வளத்திற்குத் தக்க வாழ்க்கை நடத்தாமல், தன் பெருமையும் சிறப்புமே பொருளாகக் கருதி, அவற்றிற்காகக் கணவனுடைய கடமையும் பொறுப்பும் எத்தகையவை என்று உணராமல், பொது வாழ்க்கையை உறிஞ்சித் தன்னைப் போற்ற வேண்டும் என்று விரும்புவாளானால், அவளைத் திருத்துவது கணவனுடைய கடமையாகும்; அதை மறந்து அவள் விரும்பும் வழியில் இணங்கிச் செல்லுதல் அவனுக்குக் குற்றமாகும். காமத்துப் பாலில் காதலனாக வாழ்கின்றவன், அறத்துப் பாலில் அற

வோனாக ஒழுகி, பொருட்பாலாகிய பொதுவாழ்க்கைத் துறையில் கடமை வீரனாகச் செயலாற்ற வேண்டும். இவ்வாறே காமத்துப்பாலில் காதலியாகவும் அறத்துப்பாலில் வாழ்க்கைத் துணைவியாகவும் இருக்கும் பெண் பொருட்பாலில் கணவன் ஆற்றும் பொதுக்கடமைகளுக்கு இடையூறாக நிற்காமல் உரிமை அளிப்பவளாக இருக்க வேண்டும்.

திருவள்ளுவரின் கருத்து இதுவே என்பதை ஆராயாமல், எப்போதும் ஆண் பெண்ணுக்கு இயைந்து நடத்தலாகாது என்று சிலர் கூறுவர். திருவள்ளுவர் அவ்வாறு கருதுபவர் அல்லர். காமத்துப்பாலில் பெண்ணைக் காதலனுடைய உயிராகப் போற்றிக் கூறிய ஆசிரியர், அறத்துப்பாலில் மனைத்தக்க மாண்புடையவள் என்று போற்றியவர், பொருட்பாலில் பொது வாழ்விற்கு இடையூறாக நிற்கும் போதுதான் கடிந்து கூறுகின்றார். அப்போதும் பெண்ணைக் கடிந்து கூறவில்லை என்பதையும், பெண்ணைத் திருத்த முடியாமல் அவள் விரும்பிய வழியில் நடக்கும் ஆணையே கடிகின்றார் என்பதையும், பொதுக் கடமைகளுக்கு இடையூறாகும் காரணம் பற்றியே கடிகின்றார் என்பதையும் உணர வேண்டும். 'பெண்வழிச் சேறல்' என்று கடிந்து கூறும் பத்துக் குறளில் ஏழு குறள் இதைத் தெளிவாக்குகின்றன. எவ்வாறு? மனை ஒருபுறம்—வினை மற்றொரு புறம், இல்லாள் ஒருபுறம்—நல்லார் மற்றொரு புறம், மனையாள் ஒருபுறம்—வினையாண்மை மற்றொருபுறம், நன்னுதலாள் ஒருபக்கம்—நட்டார் மற்றொரு பக்கம், பெண் ஏவல் ஒருபக்கம்—அறமும் பொருளும் மற்றொரு பக்கம், பெண் சேர்ந்த பேதைமை ஒருபக்கம்—எண் சேர்ந்த நெஞ்சம் மற்றொரு பக்கம் இவ்வாறு ஏழு குறளையும் சீர் தூக்கும் கோல்போல் அமைத்து, ஒருபகுதியில் நிற்கும்

பெண் மற்றொரு பகுதியாகிய பொதுக் கடமைக்கு இடையூறாக இருக்கும் தன்மையையே எடுத்துக்காட்டிக் கடிகின்றார். ஆகவே, "பெண்ணின் பெருந்தக்க யாஉள ?" என்று உலகத்தை வினவிய திருவள்ளுவர் பெண்ணைத் தாழ்த்தினார் என்று கூறி இந்தப் பகுதியைச் சான்றாகக் காட்டுவது பொருந்தாது.

திருவள்ளுவர் ஆணுக்கும் பெண்ணும் ஒத்த உரிமை நல்கும் சான்றோர் என்பதையும் இங்கு மறத்தல் கூடாது. ஆணுக்குப் பெண் அடங்கும் பெண்ணடிமைத் தன்மை குடும்ப முன்னேற்றத்தைக் குலைக்க வல்லது ; அதுபோலவே, பெண்ணுக்கு ஆண் அடங்கி நடக்கும் ஆணடிமைத் தன்மையும் பொதுவாழ்க்கையைக் கெடுக்க வல்லது. ஆகையால் திருவள்ளுவர் பொதுக்கடமையை மேற்கொண்ட ஆண் பெண்ணுக்கு அஞ்சி அடங்கி நடக்கும் இயல்பைக் கடிகின்றார். 'இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை', 'மனையாளை அஞ்சும் மறுமையிலாளன்', 'இல்லாளை அஞ்சுவான்', 'இல்லாள் அமைபார்தோள் அஞ்சுபவர்', 'பெண் ஏவல் செய்தொழுகும் ஆண்மை', 'பெண் ஏவல் செய்வார்' என்று ஆறு குறளில் வரும் தொடர்களை திருவள்ளுவரின் உள்ளக் கருத்தைத் தெளிவிக்கப் போதுமானவை.

மனைவியை விரும்பி அவள்வழியில் வாழ்கின்றவர்கள் சிறந்த பயனை அடையமாட்டார்கள் ; பொதுக் கடமையாகிய வினையை மேற்கொண்டவர்கள் விரும்பத் தகாதது அது. மனைவியிடம் பணிந்து நடக்கும் தீய இயல்பு எப்போதும் நல்லவர்களிடத்தில் பழகும்போது நாணம் தரும். மனைவிக்கு அஞ்சி நடக்கின்றவன் எப்போதும் நல்லவர்களுக்கு நன்மை செய்வதற்கும் அஞ்சுவான். மனைவியின் விருப்பம் போல்

வாழ்கின்றவர்கள் நண்பர்களின் குறையையும் தீர்த்து உதவ முடியாது; பொது நன்மைக்கு உரிய கடமையையும் செய்ய முடியாது. பெண்ணுக்கு ஏவல் செய்கின்றவர்களிடத்தில் அறம் பற்றிய நல்ல செயலும் காண முடியாது; பொருள் பற்றிய தக்க செயலும் காண முடியாது; இன்பம் பற்றிய இனிய செயலும் காண முடியாது; அவன் வாழ்க்கையே வீணாக முடியும். ஆகையால், கடமை எண்ணம் நிரம்பிய நெஞ்சமும் அதற்கு ஏற்ற பதவியும் உடையவர்களுக்குப் பெண்வழியில் அடங்கி நடக்கும் அறியாமை இல்லை.

> மனைவிழைவார் மாண்பயன் எய்தார்; வினைவிழைவார்
> வேண்டாப் பொருளும் அது. (901)

> இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
> நல்லாருள் நாணுத் தரும். (903)

> இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
> நல்லார்க்கு நல்ல செயல். (905)

> நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
> பெட்டாங்கு ஒழுகு பவர். (908)

> அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
> பெண்ஏவல் செய்வார்கண் இல். (909)

> எண்சேர்ந்த நெஞ்சத்து இடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
> பெண்சேர்ந்தாம் பேதைமை இல். (910)

வரைவின் மகளிர்

மன உறுதியும் அறிவுத் தெளிவும் இல்லாத மக்கள் நாடுகின்ற பொருள்கள் சில உண்டு; அவை பொதுமகளிர், கள், சூது என்பவை. பெண்வழிச் செல்கின்றவன் எவ்வாறு பொதுக் கடமையைப் புறக்கணிப்பானோ, அவ்வாறே வரை

வின் மகளிரையும் கள்ளையும் சூதையும் நாடுகின்றவன் பொதுக்கடமையைப் புறக்கணிப்பான்; மறக்கவும் மறப்பான். ஆகையால் பொருட்பாலில் பொதுவாழ்விற்கு ஏலாதன கூறும் திருவள்ளுவர் அவற்றைக் கடிந்து கூறுகின்றார். பொது மகளிரை நாடுகின்றவனும் கள்ளுண்பவனும் சூதாடுகின்ற வனும் பொதுவாழ்விற்குத் தகுதியற்றவர்கள். இவர்கள் அறத்தையும் பொறுப்பையும் போற்றிக் கடமையைச் செய்யா மல், நாடி நரம்புகளுக்கு அடிமைகளாக வாழ்ந்து அல்லல் படுவார்கள். இந்த அடிமைகள் உரிமையும் கடமையும் நிறைந்த பொதுவாழ்க்கைக்கு இடையூறானவர்கள் என்பது திருவள்ளுவர் கருத்து. அவர் காலத்தில் மருதத்திணை என்று போற்றப்படும் பகுதியில் பரத்தையராகிய பொதுமகளிர் இடம்பெற்றிருந்ததையும் மக்களுடைய அன்றாட வாழ்வில் எல்லோரும் பருகும் பொருளாகக் கள் இடம் பெற்றிருந் ததையும் அறிந்து, அகப்பொருட் பாடல்களில் பரத்தையரும் புறப்பொருட் பாடல்களில் கள்ளும் பயின்றிருப்பதையும் கண்டால், இந்த இரண்டையும் முதல்முறையாகத் தமிழ் நாட்டில் கடிந்து கூறிய பெருமகன் திருவள்ளுவரே என்பது விளங்கும். அவற்றை நோக்கினால், அவருடைய சீர்திருத்த உள்ளம் புலனாகும். இவ்வாறு அவர் கடிந்துள்ள காரணம் அறம் பற்றியதாகவும் இருந்தாலும், சிறப்பாகப் பொது வாழ்க்கை பற்றியதே ஆகும். அதனால்தான் அறத்துப்பாலில் இவற்றைக் கூறாமல் பொருட்பாலில் கூறியுள்ளார். தமக்கு முன் இருந்த எந்தப் புலவரும் கடிந்து கூறாமல் விட்ட இவற்றைத் திருவள்ளுவர் கடிந்தமையால், பொதுவாழ்க்கையைப் புறக் கணிக்கவும் மறக்கவும் இவை காரணங்களாக இருந்ததை முதல்முதலில் உணர்ந்து தெளிந்தவர் அவரே எனக் கூறலாம்.

ஒருவனுக்கு வாழ்க்கைத் துணையாய் வந்து அவனுடைய வளத்துக்குத் தக்கவளாய் வாழவேண்டிய மனைவியே பொருட் பற்றுக் கொண்டால், அவனுடைய பொதுக்கடமைக்கு இடையூறாக நிற்கக் காண்கின்றோம். அன்புகொண்ட மனைவியே அவ்வாறானால், பொருட்பற்று ஒன்றே நோக்கமாகத் தம் ஒழுக்கத்தை விற்று வாழும் வரைவின் மகளிர் (பொதுமகளிர்) ஒருவனுடைய பொதுக்கடமைக்கு எவ்வளவு தீங்கு விளைக்கக் கூடும் என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

அன்பு காரணமாக விரும்பாமல் பொருள் பெறும் காரணத் தாலேயே விரும்புகின்ற மகளிரின் இனிய சொல்லை நம்பிப் பழகக் கூடாது; அந்த இனிய சொல்லே பிறகு கேட்டைத் தரக் கூடியதாகும். ஆகையால் அதைக் கேட்டு மயங்கக் கூடாது. ஒருவனிடமிருந்து எவ்வளவு பயன் பெற முடியும் என்று ஆராய்ந்து அதைப் பெறுகின்ற வரைக்கும் பண்பான சொற் களைப் பேசுவார்கள் ; ஆனால் உண்மையில் அவர்களுக்குப் பண்பு என்பதே இல்லை ; ஆகையால் அவர்களால் பெறும் இன்பத்தை ஆராய்ந்து வெறுத்து அவர்களை அணுகாமல் விட வேண்டும்.

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். (911)

பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பில் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். (912)

அறநெறியில் நின்று அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையவர்கள், இயற்கை அறிவால் மாட்சிமைப் பட்ட கல்வியறிவுடையவர்கள், தாம்பெற்ற நன்மையை உல கெல்லாம் பரப்பும் நோக்கமுடையவர்கள் ஆகிய இவர்கள் பொதுமகளிரைத் தீண்டமாட்டார்கள். ஆனால், நெஞ்சத்தை

நிறுத்தியாளும் தன்மை (நிறை) இல்லாதவர்களும், எதையும் ஆராய்ந்து காணும் அறிவு இல்லாதவர்களும், உயர்வு சிறிதும் இல்லாத கீழ்மக்களும் பொதுமகளிரை விரும்புவார்கள்.

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். (914)

பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். (915)

தம்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். (916)

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்
பேணிப் புணர்பவர் தோள். (917)

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. (918)

வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. (919)

இவற்றைக் கற்கும் போது, பொது மகளிரை நாடுவோர் மேல் இரக்கமே உண்டாகின்றது. அருள் பற்றிய உணர்வு, அறிவு நலம் ஆகியவை அவர்களுக்கு இல்லையே என்றும், நெஞ்சை நிறுத்தும் வல்லமை இல்லாமல் நாடி நரம்புகளுக்கு அடிமைகளாக அல்லல்படுகின்றார்களே என்றும், தம் வாழ்வைப் பற்றித் தாமே ஆராய்ந்து பார்க்கவும் ஆற்றல் இல்லையே என்றும் வருந்தி நெஞ்சம் இரங்கவேண்டியுள்ளது. ஆனால் அவர்களால் பொதுவாழ்வு (அரசியல் முதலியன) கெடாமல் காக்கவேண்டியது கடமை ஆதலின், அவற்றைக் கடிகின்றார். அவர்களுக்குத் திரு (அரசியல் செல்வாக்கு) வாய்ப்பது அரிது என்றும், வாய்த்தாலும் நீங்கிவிடும் என்றும் இறுதியில் தெரிவிக்கின்றார். உள்ளத்தில் பொருள் வேட்கையும் புறத்தில்

அன்புடையார் போல் நடிக்கும் தன்மையுமாகிய இருவகைப் பட்ட மனத்தை உடைய பொதுமகளிரும், கள்ளும், சூதும் திரு இல்லாமல் நீக்கப்பட்டவர்களுக்கு (அரசியல் முதலிய வற்றில் வீழ்ச்சி உற்றவர்களுக்கு) நட்பாக வந்து அமையும்" என்கின்றார்.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. (920)

இந்த மூன்றும் ஆகாதன என்று பொருட்பாலில் திருவள்ளுவர் கடியும் காரணம் இன்னது என்பது இந்தக் குறளால் விளங்கு கின்றது.

கள்ளுண்ணாமை

திருவள்ளுவர் காலத்திற்கு முன் சமயத்தின் செல்வாக் குக் குறைவு என்றும், அவர் காலத்தில்தான் அது மிகுதியா யிற்று என்றும், அதனால் மற்றவர்கள் கடியாத கள்ளை அவர் கடியத் தொடங்கினார் என்றும் கூறுவார்கள். அது உண்மையானால், கள் குடிப்பது பாவம் என்றாவது, அறத்திற்கு மாறானது என்றாவது, நரகத்திற்குக் காரணம் என்றாவது கூறியிருக்கவேண்டும். அவ்வாறு ஒரு குறிப்பும் கூறவில்லை. பிறரிடம் மதிப்பு இழக்க நேரும் என்றும், சான்றோரின் தொடர்பு போய்விடும் என்றும், அறிவு மயங்கும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றாரே அல்லாமல், வேறு வகையால் கடிந்து அறிவுறுத்தவில்லை. ஆகையால், பரத்தையரும் சூதும் போல், கள்ளும் பொருட்பாலில் பொதுவாழ்விற்கு இடையூறு வது என்றும், பொதுக் கடமையைச் செய்வதற்கு இடரானது என்றும் உணர்ந்தே இங்கே உணர்த்தியுள்ளார். (உரையாசிரியர் பரிமேலழகரும் முதல் குறளிலேயே 'கட்காதல் கொண்டு

ஒழுகுவார்' என்னும் தொடருக்குக் 'கள்ளின்மேல் காதல் செய்து ஒழுகும் அரசர்' என்று அரசியல்நினைவு மாறுமல் எழுதுவதும் இங்குக் கருத்தத்தக்கது.)

கள்ளின் மேல் விருப்பம் கொண்டு வாழ்கின்றவர்களைக் கண்டு எப்போதும் பகைவர் அஞ்ச மாட்டார்கள்; கள்ளுண்பவர் மதிப்பையும் இழந்துவிடுவார்கள். ஆகையால் எக் காரணத்தாலும் கள் உண்ணக் கூடாது; உண்டால், சான்றோரின் உறவு போய்விடும்; சான்றோரின் நல்லெண்ணம் வேண்டாதவர்கள் உண்ணட்டும்.

உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார். (921)

உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். (922)

மகனுடைய எந்தக் குற்றமும் தாய்க்கு வெறுப்புத் தராது; ஆனல் கள்ளுண்டு மயங்குவது ஒன்றுதான் தாயின் முன்பும் வெறுப்புத் தருவதாகும்; தாய்க்கே இவ்வாருனல், மற்றச் சான்றோர் முன்பு எவ்வாறு இருக்கும்?

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி? (923)

பொருள் கொடுத்துக் கள் வாங்கிக் குடித்து அதனல் தன் உடம்பைத் தான் அறியாத நிலைமையைப் பெறுவதா? இது தான் செய்வது இன்னது என்று அறியாத அறியாமையாக இருக்கின்றது. கள்ளால் அறிவு மயங்கிக் கெடுகின்றது; நஞ்சால் அறிவு கெட்டு அடியோடு அழிகின்றது. உறங்கினவர் செத்தவரைப் போலவே தோன்றுகின்றார்கள்; மூச்சு விடுதல் தவிர, வேறு ஒன்றும் வேறுபாடு இல்லை; அதுபோலவே, அறிவு கெடுவதில் கள்ளுண்பவர் நஞ்சு உண்பவரைப்

போன்றவர்களே. மறைவாகக் கள்ளுண்டு அறிவு மயங்கித் தளர்கின்றவர்களை உள்ளூரில் வாழ்கின்றவர்கள் எப்போதும் மறைந்து ஆராய்ந்துவருவார்கள்; அதனால் கள்ளுண்டவர் உள்ளூரிலேயே இகழப்படுவார்கள்.

கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்தும்
மெய்யறி யாமை கொளல். (925)

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (926)

உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர். (927)

கள்ளுண்பவனை எல்லோரும் ஒதுக்குவார்கள்; சான்றோரும் விலக்குவார்கள். ஏன்? அவனுக்கு அறிவுரை கூறித் திருத்த முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். கள்ளுண்டு மயங்கியவனுக்குக் காரணம் காட்டி அதன் தீமையை விளக்குவது முடியாத செயல்; அது நீரின்கீழ் மூழ்கிய ஒருவனை மற்றொருவன் தீவட்டி எடுத்துக் கொண்டு துருவித் தேடுவது போல் ஆகும். நீருள் தீவட்டி செல்லாதது போலவும், தானும் அவிந்து பயன் கெடுவது போலவும், குடித்தவன் மனத்தில் காரணமும் செல்லாது; காரணம் காட்டுகின்றவனுடைய அறிவும் பயனற்றுப்போகும்.

சூது

சூதாட்டம் அறிவைக் கெடுக்காவிட்டாலும், கடமையைப் புறக்கணிக்கச் செய்ய வல்லது; அதனால் அதுவும் பொதுவாழ்வுக்கு இடையூறானது. தனி வாழ்விற்காவது நன்மையானதா என்று ஆராய்ந்தால், சூதாட்டத்தில் வெற்றி உண்டு என்று கூறலாம். ஆனால், வென்று பெறும் பொருள் மேல்வரும்

இழப்புக்கும் துன்பத்திற்கும் உள்ளாகுமாறு கெடுக்க வல்லதே அல்லாமல், உண்மையான ஊதியம் அன்று; அதன் விளைவு தூண்டில்இரும்பை இரை என்று கருதி விழுங்கிய பிறகு மீன் அல்லல்படுவது போல் ஆகும். ஆகையால் வெற்றி தருவ தானாலும் சூது ஆடுவதை விரும்பக் கூடாது. ஊதியமாக முன்னே ஒன்று பெறலாம்; ஆனால் பிறகு நூறு மடங்கு இழக்கவேண்டிவரும். இதுதான் சூதாடிகளின் வாழ்வு. இவர்கள் நன்மை பெற்று வாழ வழியே இல்லை.

வேண்டற்க வென்றிடினும் சூதினை ; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று. (931)

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு ? (932)

உருளும் கருவிகொண்டு சூதாடுவதை ஓயாமல் விரும்பினால் பொருள் வருவாய் அவனை விட்டு அகன்று வெளியே போய்விடும். பல துன்பங்களையும் செய்து உள்ள புகழையும் கெடுக்கவல்ல சூதுபோல் வறுமையைத் தரவல்லது வேறொன்று இல்லை. சூது என்பதே மூதேவிதான்; அதற்கு இரையானவர்கள் வயிறார உண்ணவும் மாட்டார்கள்; அல்லலும் படுவார்கள். உள்ள காலம் எல்லாம் சூதாடும் இடத்தில் செலவாகுமானால், பெற்றுப் பழகி வந்த செல்வத்தையும் (அரசியல் பதவி முதலியவற்றையும்) கெடுக்கும்; நல்ல பண்புகளையும் கெடுத்துவிடும். உள்ள பொருளைக் கெடுப்பது மட்டும் அல்லாமல், பொய்யை மேற்கொள்ளும்படியாகச் செய்து, அருள் நெறியையும் மறக்கச்செய்து, துன்பமுறச் செய்யும். சுருங்கச் சொன்னால், சூதாட்டத்தை விரும்பி மேற்கொண்டால், செல்வம், மதிப்பு, கல்வி, உணவு, உடை, என்னும் ஐந்தும் இழந்து துன்பப்பட வேண்டிவரும்.

உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். (933)

சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல். (934)

அகடாரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப்பட் டார். (936)

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். (937)

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. (938)

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். (939)

சூதாட்டத்தில் ஈடுபடாமல் மிக மிக விழிப்பாக இருந்து விலக வேண்டிய காரணம் ஒன்று உள்ளது; அதுதான் அதன் அளவற்ற கவர்ச்சி; துன்பம் படப்பட உடலோடு வாழும் வாழ்க்கையில் உயிருக்கு ஆசை வளர்வதுபோல், பொருளை இழக்க இழக்கச் சூது ஆடுகின்றவனுக்குச் சூதின்மேல் ஆசை வளரும்; இப்படிப்பட்ட கவர்ச்சி அதற்கு இருப்பதால் விழிப்பாக இருந்து விலக வேண்டும்.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். (940)

மருந்து

பொதுவாழ்விற்குக் கருவியாக உள்ளத்தின் உறுதியும் அறிவின் தெளிவும் கெடாமல் காத்துக்கொள்ள வேண்டும். வரைவின் மகளிர், கள், சூது என்பன போல் உடம்பிற்கு வரும் நோயும் உள்ளத்தின் உறுதியையும் அறிவின் தெளிவை

யும் கெடுக்கவல்லதாகும். ஆதலின் பொதுவாழ்வில் ஈடுபட்டோர் நோயற்றவராக வாழவேண்டும் என்றும், நோய் வந்தாலும் உடனே தீர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் திருவள்ளுவர் இங்குக் கூறுகின்றார். முதல் ஏழு குறளில் நோயில்லாமல் வாழ இயற்கை வழியைக் கூறிப் பிறகு மூன்று குறளில் நோய் வந்தபின் மருந்தால் அதைத் தீர்த்துக் கொள்ளும் முறையைக் கூறுகின்றார். அதிகாரத்திற்கு 'மருந்து' என்ற தலைப்பையே கொடுத்திருந்தும் ஏழுகுறளில் மருந்து வேண்டாத வாழ்வையே அறிவுறுத்துகின்றார்; ஒரு குறளில் வெளிப்படையாகவே 'மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கு' என்றும் தெளிவிக்கின்றார். ஆனால் இந்த நெறி மிக மிக அரிய நெறி என்றும், எல்லோராலும் எல்லாக் காலத்திலும் இயலாதது என்றும் உணர்ந்து, தவறி நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருந்தால் தீர்க்கும் முறையை மூன்று குறளால் அறிவிக்கின்றார்.

பழங்காலத்து மருத்துவ முறைப்படி ஒருவனுடைய கையில் நாடி பார்த்து அவன் உற்ற நோய் இன்னது என்று காண முடியும். அவ்வாறு காணும்போது உடம்பில் வாதம் பித்தம் சிலேத்துமம் என்னும் மூன்றும் மிகாமலும் குறையாமலும் இயற்கையான அளவில் இருந்தால் நோயற்ற நிலை என்று கூறுவார்கள். இந்த மூன்றில் ஒன்றோ இரண்டோ மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும்.

> **மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
> **வளிமுதலா எண்ணிய மூன்று.** (941)

வாதம் பித்தம் சிலேத்துமம் ஆகிய மூன்றும் மிகாமலும் குறையாமலும் தம் அளவில் நிற்க வேண்டுமானால் என்ன செய்வது? வாதம் மிகுந்தால் வாயுப் பொருளை உண்ணாமல்

விடுதல், பித்தம் மிகுந்தால் பித்தப் பொருளை உண்ணாமல் விடுதல், சிலேத்துமம் மிகுந்தால் கபம் உண்டாக்கும் ஈரப் பொருளை உண்ணாமல் விடுதல், இவ்வாறே ஒன்று குறைந்தால் அதை ஈடு செய்யும் பொருளைத் தேடி உண்ணுதல் ஆகிய இந்த முறையைச் சிலர் கையாள்வது உண்டு. இது அவ்வளவு சிறந்த முறை அன்று. ஏன்? உண்கின்ற உணவுக்கு ஏற்ப வாதம் முதலியவை ஏற்படுகின்றன என்பது மட்டும் முழு உண்மை அன்று; உண்கின்ற உணவைச் செரிக்கச் செய்து ஏற்றுக்கொள்ளும் வயிற்றையும் பொறுத்தே அவை ஏற்படுகின்றன. ஒருவர் உடம்பில் இனிப்பு (சர்க்கரை) மிகுதியாவதாக வைத்துக்கொள்வோம். அவர் இனிப்பற்ற உணவையே தேடி உண்டாலும், எல்லாவற்றையும் இனிப்பாகவே மாற்றிக் கொள்ளும் ஆற்றல் வயிற்றுக்கு உள்ளது. ஆகையால் இனிப்புப் பொருளை மட்டும் விட்டுவிடுவதால் பயன் ஏற்படுவதில்லை. அவ்வாறே புளிப்பு உடம்பில் மிகுந்துவிட்ட போது, புளிப்பான பொருள்களை விட்டுவிடுவதால் பயன் விளைவது குறைவே; புளிப்பற்ற பொருள்களையே தேடி உண்டாலும் அவற்றை எல்லாம் புளிக்கவைத்துப் புளிப்பாக மாற்றிக் கொள்ளும் ஆற்றல் வயிற்றுக்கு உள்ளது. மற்றச் சுவைகளுக்கும் இவ்வாறே காணலாம். சுவைகளை ஒட்டியே வாதம் முதலியனவும் அமைந்துள்ளன என்று வகுப்பார்கள். அந்த முறைப்படி சுவைப் பொருள்களை மாற்றி மாற்றி உண்பதால் வாதம் முதலியவற்றின் மாறுபாட்டால் வந்த நோய் தீர்ந்துவிடும் என்று நம்புவார்கள். அது தவறு. விலங்குகளும் பறவைகளும் இயற்கையாகவே தம் உடலுக்கு ஏற்ற உணவையும் அதன் அளவையும் அறிந்து தின்கின்றன. அவற்றின் நாக்கு அளவறிந்து உண்ணும் கருவியாக அமைந்

துள்ளது. மக்கள் நாக்கும் தொடக்கத்தில் அந்த ஆற்றல் பெற்றிருந்தது. ஆனால் பகுத்தறிவும் எண்ணும்ஆற்றலும் வளர வளர, புலன்களின் இயற்கை ஆற்றல் குன்றிவிட்டது. அன்றியும், சமைத்து உண்ணும் செயற்கை முறை வேரூன்றி விட்ட பிறகு, இயற்கை ஆற்றல் அழிவுபட்டது. ஆகையால், இன்று ஏற்ற உணவையும் ஏலாத உணவையும் உணர்ந்து அறிவிக்கும் ஆற்றல் நாக்கிற்கு இல்லை. இன்றும் குழந்தைகளிடத்திலும் சிலவகை நோயாளிகளிடத்திலும் அந்த ஆற்றல் ஒருவாறு அமைந்திருந்ததலை உய்த்துணரலாம். உடலுக்கு ஏலாத சில பொருள்களை அவர்கள் காரணமில்லாமலே விலக்கு கின்றார்கள். ஆயினும், உடலுக்கு ஏலாத சில பொருள்களை விரும்பவும் விரும்புகின்றார்கள்; உடல் கெடும் என்று பிறர் சொன்னாலும் கேளாமல் விரும்புகின்றார்கள்; அதனால் அந்த இயற்கைஆற்றல் இன்று நாக்கிற்கு உள்ள அளவு போதாது; நம்பத் தகாததாகவும் உள்ளது. இன்று நாக்கு இயற்கை உணர்வினால் ஆளப்படும் தன்மை குறைந்து, மனிதனுடைய விருப்பு வெறுப்பினால் ஆளப்படும் தன்மை மிகுந்துள்ளது. ஆயினும் இன்றும் உடம்பில் மற்றோர் உறுப்பு அந்த ஆற்றலை இழக்காமல் காத்துவருகின்றது; அது மனிதனுடைய விருப்பு வெறுப்புக்குக் கட்டுப்படாமல் வேலை செய்து வருகின்றது; அதுதான் வயிறு. அது ஒன்றே இன்றும் நம்பத் தக்கதாக உள்ளது. தக்க உணவை நன்கு செரித்து, தகாத உணவை நன்கு செரிக்காமல் தள்ளுகின்றது; மனிதன் ஆசை வயப்பட்டவனாய்த் தகாத உணவையே திணித்து வற்புறுத்துவானானால், அதற்காக அந்த வயிறு மாறி அமைவதில்லை; மனிதனுக்கு அடிமையாவதில்லை; வேலை செய்ய மறுக்கின்றது; திணிப்பும் வற்புறுத்தலும் மேலும் மிகுமானால்

(செரிப்புக்கு மருந்து முதலியவை உண்டு வற்புறுத்தினால்) மறுக்கும் நிலைமையும் கடந்து மானமுள்ளவர்போல் தானே கெட்டு அழிகின்றது. ஆகவே, அது நன்றாக வேலை செய்கின்றதா, செரிப்பு வேலை சீராக நடைபெறுகின்றதா என்று ஆராயக் கற்றுக்கொண்டால், உடல் நலத்தைக் காத்துக் கொள்வது எளிதாகும். இந்த ஆராய்ச்சியை ஜெர்மனியில் வாழ்ந்த டாக்டர் லூயி கூன் முதலான அறிஞர் பலர் விளக்கிப் பல நூல்கள் எழுதியுள்ளனர். இதையே பல நூற்றாண்டு களுக்கு முன் தமிழ்நாட்டில் வாழ்ந்த திருவள்ளுவரும் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார் :

முன் உண்ட உணவு எவ்வாறு அற்றது (சீரணமானது) என்பதை ஆராய்ந்து அறிந்து, அந்த அறிவைக் கடைப் பிடித்துப் போற்றிப் பிறகு அடுத்த வேளை உணவை உண்ண வேண்டும் ; அவ்வாறு உண்டால், உடம்பிற்கு மருந்து என்று ஒன்று வேண்டியதில்லை. முன் உண்ட உணவு அற்ற பிறகு, உண்ண வேண்டியதை இன்ன அளவு வேண்டும் என்று அறிந்து உண்பதே கடமை. அதுவே உடம்பைப் பெற்றவன் அந்த உடம்பை நெடுங்காலம் காத்துச் செல்லும் வழியாகும். முன் உண்டது எவ்வாறு செரித்தது என்று செரித்த தன்மையை ஆராய்ந்து அதனால் அறிந்த உண்மையைக் கடைப்பிடித்து, மாறுகொள்ளாத (உடம்புக்கு ஒத்துக்கொள்கின்ற) உணவை உண்ணவேண்டும் ; அதையும் நன்றாகப் பசித்த பிறகே உண்ண வேண்டும். இவ்வாறு மாறுபாடு இல்லாத உணவையும் தன் மனம் விரும்பும் அளவு உண்ண மறுத்து உடலுக்குத் தேவையான அளவே உண்ண வேண்டும் ; அவ்வாறு உண்டால் உயிர்வாழ்க்கைக்கு நோயால் வரும் இடையூறு இல்லையாகும். உடலுக்குத் தேவையான

உணவை ஆராய்ந்து குறைந்த அளவு இன்னது என்று அறிந்து உண்கின்றவனிடம் இன்பம் (உடல் நலம்) நிற்கும்; அதுபோல, மனத்தின் விருப்பத்திற்கு இயைந்து அளவு மீறி மிகுதியாக உண்கின்றவனிடம் நோய் நிற்கும். பசித்தீயின் அளவிற்கு ஏற்றவாறு உண்ணுமல் ஒன்றையும் ஆராயாமல் அளவு மீறி மிகுதியாக உண்டால், நோயும் அளவு கடந்து வரும்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (942)

அற்ருல் அளவறிந்து உண்க ; அஃதுஉடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு. (943)

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. (944)

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (945)

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். (946)

தீயளவு இன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோய்அள வின்றிப் படும். (947)

ஒருகால் நோய் வந்தால், வந்த நோயைத் தீர்க்க என்ன செய்ய வேண்டும் ? அது என்ன நோய் என்று ஆராய்ந்து, அந்த நோய் என்ன காரணத்தால் வந்தது என்று நாடி, அதைத் தணிக்கும் வழி என்ன என்று அறிந்து, பொருத்தமான முறையில் முயற்சி செய்ய வேண்டும். மருத்துவன் உதவி செய்வதற்குமுன் நோயாளியின் உடல்நிலைமை, வலிமை, வயது முதலியவைகளையும், நோயின் தன்மையையும், தீர்ப்பதற்கு உரிய காலத்தின் வாய்ப்பையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். (949)

குடிமை

நல்ல குடியில் பிறந்தவர்களுக்கு உயர்ந்த பண்புகள் இருப்பதைச் சான்றோர் கண்டார்கள். அதனால் குடிப்பிறப்புக்கே தனிச் சிறப்புத் தந்து போற்றினார்கள். இக்காலத்திலும் இது ஓரளவு காணப்படும். ஆனால், பண்டைக்காலம் போல் இப்போது இது மாறாத உண்மையாக விளங்கவில்லை. இக்காலத்தில் உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம் இழிந்த இயல்புகளையும் காணலாம். உயர்வு இல்லாத குடியில் பிறந்தவர்களிடம் உயர்ந்த பண்புகள் இருப்பதையும் காணலாம். இவ்வாறு நிலைமை மாறியதற்குக் காரணமும் உண்டு.

பண்டைக்காலத்தில் உலகம் ஒரு குடும்பம் போல் நெருங்கிய உறவு கொண்டு வாழவில்லை. சிற்றூர்களில் சிறு சிறு குடும்பங்களே ஒன்றோடொன்று பழகி உறவுகொள்ள முடிந்தது. அதனால் குடிவழியாகச் சிறந்த பண்புகள் வளர்ந்துவந்தன. தந்தை பாட்டன் முதலானோரின் ஆண்மை, வண்மை, பொறுமை முதலிய பண்புகள் ஒருவனிடம் இயல்பாக அமைந்திருந்தன. பண்பு என்பது குடிப்பிறப்பால் அமையும் ஒன்று என்று உணரும் நிலைமை இருந்தது. இன்றும் நகரங்களில் மிகுதியாகப் பழகாமல் நாட்டுப்புறங்களிலேயே கொள்வன, கொடுப்பன, கல்வி, தொழில் முதலிய எல்லாவற்றையும் வரையறைப்படுத்திக்கொண்டு வாழ்க்கையை நடத்தும் குடும்பங்களில் இவ்வாறு குடிப்பண்பு என்பது உண்மையாக இருப்

பதைக் காணலாம். நாட்டுப்புறங்களிலிருந்துகொண்டு நகரங்களில் பழகும் குடும்பங்களிலோ, நகரங்களிலேயே வாழும் குடும்பங்களிலோ, இந்தக் குடிப்பண்பைக் காண்பது அரிதாகி வருகின்றது. குடிப்பண்பு அடியோடு இல்லை என்று சொல்லி விட முடியாது; ஆனால் அதனோடு இனப்பண்பும் சேர்ந்து, எந்தப் பண்பு எதன் செல்வாக்கால் அமைந்தது என்று பிரித்தறிய முடியாமல் கலந்துவிடுகின்றது. சில இடங்களில் குடியின் செல்வாக்கு மிக மிகக் குறைந்து, சேரும் இனத்தின் செல்வாக்கே மிகுதியாக விளங்கவும் காண்கின்றோம். இன்னும் சில இடங்களில் குடிப்பண்புக்கு நேர்மாறான மக்கள் பிறந்து வாழ்தலையும் காண்கின்றோம். மிகப் பழங்காலத்திலும் குடிப்பண்புக்கு முற்றிலும் முரண்பட்ட மக்கள் பிறந்து வாழ்ந்தது உண்டு; அவர்களை அக்காலத்துப் புலவர்கள் கடிந்து திருத்த முயன்றதும் உண்டு; அதைப் புறநானூறு முதலான நூல்களில் காணலாம். ஆனால் பழங்காலத்தில் இவ்வாறு குடிப்பண்புக்கு மாறுபடுதல் மிக மிக அருகியிருந்தது. இக்காலத்தில் இது பெருகிவருகின்றது. காரணம் என்ன?

சேரும் இனத்திற்கு ஏற்றபடி அறிவு திரியும் என்று (சிற்றினம் சேராமை என்னும் அதிகாரத்தில்) திருவள்ளுவரும் இனத்தின் செல்வாக்கை விளக்கியுள்ளார். இந்த இனம் என்பது பழங்காலத்தில் மிக மிகக் குறுகிய வரையறை உடையது. ஆகையால் திருவள்ளுவர் அதைவிடக் 'குடிமை'யைப் பெரிதாகப் போற்றியுள்ளார். அக்காலத்தில் இனம் என்பது ஒருவன் ஓரிடத்தில் பழகும் கூட்டத்தையே குறித்து வந்தது. இக்காலத்தில் போக்குவரவும், செய்தித்தாள்களும், நூல்களும், வானொலி முதலியனவும், கட்சி கழகம் முதலிய

அமைப்புக்களும் பெருகியுள்ளன. ஆகையால் ஒருவன் பழகும் பழக்கம் வரையறையின்றி விரிவு பெற்றுவிட்டது. நகரத்தில் வாழும் ஒருவன் பிறப்பது ஒரு குடும்பத்தில்; விளையாடி வளர்வது பலவேறு குடும்பத்துச் சிறுவர்களுடன்; கல்வி பயில்வது வெவ்வேறு பண்புகளோடு வெவ்வேறு இடங்களிலிருந்து வந்து கற்கும் பிள்ளைகளுடன்; பொழுது போக்குவதும் இவ்வாறே வேறு வேறு இளைஞர்களுடன்; கல்லூரி முதலியவற்றில் கற்பதோ, நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் வரும் பல்வேறு பழக்க வழக்கமுடைய மாணவர்களுடன்; கற்கும் நூல்களோ எங்கெங்கோ வாழ்ந்து எவ்வெவ்வாறோ உணர்ந்த ஆசிரியர்களின் கருத்துக்கள்; காணும் காட்சிகளோ உலகத்தின் பல்வேறு நாகரிகப் போக்குகள்; செய்தித்தாள்களிலும் வானொலியிலும் கற்றும் கேட்டும் அறியும் செய்திகளோ உலகம் முழுவதிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றியவை; இவை எல்லாவற்றையும்விட, நேரில் காண்பது போல் படக்காட்சிகளின் வாயிலாக உலகத்தில் பல்வேறு வாழ்க்கைப் பகுதிகளையும் கண்டு அறியும் வாய்ப்பு வேறே உள்ளது. இவை இத்தனைக்கும் இடையே பெற்றோருடைய பண்பும் நெஞ்சத்தில் ஒரு சிறு மூலையில் இடம் பெறுவது என்றால், குடிப்பண்புக்குச் செல்வாக்கு ஏது? தவிர, பண்பு அமைவது ஒருவருடைய இளமையில்தான்; பால் உணர்ச்சிக்கு உரிய இளமைப் பகுதியில்தான் பண்பு வேரூன்றுகின்றது. பதினைந்து வயது வரையில் மிக நல்ல பண்போடு இருந்து வந்த ஒருவனோ ஒருத்தியோ, அதற்குப் பிறகு கெட்டவனாகவும் கெட்டவளாகவும் மாற இடம் உண்டு. அவ்வாறே பொல்லாதவர்களாக இருந்து வந்தவர்கள் உற்ற வயதில் நல்லவர்களாக மாறுவதற்கும் இடமுண்டு. அந்த

வயதில் உரிமை நண்பர்களாக வாய்ப்பவர்கள் நல்லவர்களாக இருந்தால், கெட்டவர்களும் நல்லவர்களாகலாம்; நல்லவர்கள் கெடாமல் வாழலாம். ஆனால் உற்ற வயதில் பழகும் நண்பர்கள் கெட்டவர்களாக வாய்த்தால், நல்லவர்களும் கெட இடம் ஏற்படுகின்றது. திருத்தவும் கெடுக்கவும் வல்ல ஆற்றல் நண்பர்களுக்கு உண்டு. உற்ற வயதில்—பால் உணர்ச்சிக்கு உரிய வயதில்—கற்கும் நூல்களுக்கும் இந்த ஆற்றல் உண்டு; பார்க்கும் படக்காட்சிகளுக்கும் இந்த ஆற்றல் உண்டு; சேரும் கழகம் கட்சி முதலியவற்றிற்கும் இந்த ஆற்றல் உண்டு. இவை எல்லாம் பரவியதால் இந்தக் காலத்தில் குடிப்பண்பு வேரூன்ற முடியவில்லை; இவை இல்லாத பழங்காலத்தில் ஒரு சிற்றூரில் இளமையில் ஒருவன் பழகும் பழக்கம் பெரும்பாலும் பெற்றோரோடும் உடன்பிறந்தாரோடும் குடும்பச் சுற்றத்தாரோடும் அமையும்; சிறுபான்மை அந்தச் சிற்றூரில் ஒரு சில நண்பர்களோடு அமையும்; அந்த நண்பர்களும் குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவே இருத்தல் உண்டு. இவர்களைத் தவிர, மற்றொரு செல்வாக்கு உண்டு என்றால், அது கற்பிக்கும் ஆசிரியருடைய வாழ்க்கையால் ஏற்படுவது ஆகும். உயர்ந்த பண்புகள் உடையவர்களையே சிற்றூர்களில் ஆசிரியர்களாகக் கொள்ளும் பழக்கம் இருந்த காலம் ஆகையால், அவர்களுடைய செல்வாக்கு எவ்வகையாலும் குடிப்பண்பைக் கெடுக்கவல்லதாக இருந்ததில்லை. இந்தக் காலத்திலோ கல்விக்கூடம் என்பது யந்திரசாலை போல் நடைபெறும் ஒன்று ஆகையால், பெரும்பாலும் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் உறவு குறைவு; உடன் கற்கும் மாணவ நண்பர்களின் தொடர்புக்கே செல்வாக்கு உண்டு; பாட நூல்களை விடப் பொழுதுபோக்கிற்காகக் கற்கப்படும் நூல்களுக்கே செல்

வாக்கு மிகுதி; வீட்டையும் கல்விக்கூடத்தையும் விட வெளியுலகத்திற்கே செல்வாக்கு மிகுதி; சுருங்கக் கூறினால், குடும்பத்தைச் சார்ந்தவர்களை விட வெளியாருக்கே செல்வாக்கு மிகுதி. ஆகையால் இளமையில் குடிப்பண்பு வேரூன்றுவதை விட, உள்ளம் விரும்பி நாடும் உலகப் பண்பே வேரூன்று கின்றது; தான் விரும்பும் உலகப் பகுதி நல்ல பண்பு உடைய தானால் நல்லவனாகின்றான்; அந்த உலகப் பகுதி தீய பண்பு உடையதானால் தீயவனாகின்றான்.

காட்டில் இயல்பாகப் பறந்து திரியும் கிளி கூட்டில் வளர்க்கப்பட்டால் அதன் இயற்கைப் பண்பில் மாறுதல் ஏற்படுகின்றது; அதுவே உயிர்க்காட்சிச் சாலையில் வைக்கப் பட்டால், வருவார் போவார்க்கு அஞ்சாத இயல்பைப் பெறு கின்றது. சிற்றூர்களில் குடையைக் கண்டால் மருண்டு ஓடும் இயல்புடைய பசு சென்னையில் மக்கள் நெருக்கம் மிகுந்த கடைத் தெருவில் பழகினால் குடை பிடித்துப் போவார்மேல் உராய்ந்துகொண்டு செல்கின்றது. மருளுவதே இயல்பாக வாழும் மானும் உயிர்க்காட்சிச் சாலையில் மருளாமல் நெருங்கி வந்து மக்கள் கொடுப்பதைப் பெற்றுத் தின்கின்றது. அறிவு வளர்ச்சி இல்லாத பறவை விலங்குகளின் வாழ்க்கையிலும் பலருடன் பழகுவதால் இந்த மாறுதல் ஏற்படுமானால் காலத் திற்கும் இடத்திற்கும் நிலைமைக்கும் ஏற்றபடி வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் ஆற்றலும் அதற்குத் தக்க அறிவு வளர்ச்சியும் உடைய மக்களின் பண்பு மாறுவது மிக எளிது அன்றோ?

ஆகையால், திருவள்ளுவருடைய கருத்துக்களைக் 'குடிமை' யில் கற்கும்போது, அக்காலத்தில் குடிப்பிறப் புக்கு இருந்த செல்வாக்கை எண்ணிக் கற்க வேண்டும். இப்

போது ஒருவன் பழகும் பரந்த உலகப் பகுதியே காட்சியாலும் கருத்தாலும் உறவுடையதாய்க் குடும்பம் போல் அமைந்து நிற்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். குறுகிய எல்லையில் பழகும் குடும்பங்களில்மட்டும் இன்றும் குடிப்பண்பு ஓரளவு அமைந்திருத்தலையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நேர்மையும் நாணமும் ஒரு சேர இயற்கையாக அமைந்திருப்பது நல்ல குடியில் பிறந்தவர்களிடத்தில்தான்; மற்றவர்களிடத்தில் அன்று. நல்ல குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், உண்மை, நாணம் ஆகிய மூன்று பண்புகளும் தவறாமல் பெற்றிருப்பார்கள். முகமலர்ச்சி, ஈகை, இன்சொல், ஒருவரையும் இகழாமை ஆகிய நான்கும் உண்மையான நல்ல குடியில் பிறந்தவர்களின் பண்புகளாகும். பல கோடிப் பொருள் பெறுவதாக இருந்தாலும், நல்ல குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. (951)

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (952)

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (953)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (954)

மானம்

வாழ்க்கையே போராட்டமானது. மற்ற உயிர்களும் போராடிப் போராடி வாழ்கின்றன; மக்களும் போராடிப் போராடியே வாழ்க்கையை நடத்துகின்றார்கள். மற்ற உயிர்

களின் வாழ்க்கைப் போராட்டத்தில் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு உணவு தேடுவதும், துணை நாடுவதும், பகையிடமிருந்து தற்காப்புத் தேடுவதுமே காணப்படுகின்றன. பறவைகளும் விலங்குகளும் இவ்வாறே வாழ்க்கையைக் கழிக்கின்றன; போட்டியிட்டு உணவு தேடுகின்றன; ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் நாடுகின்றன; வலிய பகையிடமிருந்து தப்பி ஓடி மெலிய பகையைத் துரத்தி அழிக்கின்றன; இவ்வளவே மற்ற உயிர்களின் வாழ்க்கைப் போராட்டம். ஆனால், மக்கள் வாழ்க்கையில் போராட்டம் இவ்வளவில் நிற்பதில்லை. அறிவும் உணர்வும் குறைந்த ஒரு பகுதியார்க்கு உணவு, துணை, பகை என்னும் அளவில் போராட்டம் நின்றுவிட்டாலும், மற்றொரு பகுதியார்க்கு இந்த எல்லையைக் கடந்த வாழ்க்கைப் போராட்டமே பெரிதாக இருக்கின்றது. அது என்ன போராட்டம்? வாழ்க்கையில் உயர்ந்த குறிக்கோள்களை வைத்துக்கொண்டு அவற்றைப் போற்றி வாழப் போராடுவதே ஆகும். அவர்களுக்கு உணவு முதலிய வாழ்க்கைத் தேவைகளைவிட, உயர்ந்த கொள்கைகளே பெரியவை என்று தோன்றும். அதனால், போராட்டம் முதிர்ந்தபோது உணவு முதலிய தேவைகளையும் பொருட்படுத்தாமல் கொள்கைகளைப் போற்ற முற்படுவார்கள்; அதாவது, உயிர் வாழ்க்கையின் அடிப்படை கெடுவதாக இருந்தாலும், உயிர் நீங்குவதாக இருந்தாலும், உயர்ந்த நெறியிலிருந்து பிறழமாட்டார்கள். உயர்ந்த கொள்கைகளை இழக்கும் நிலை வந்தால், அந்தக் கொள்கைகளை வாழவைத்து, உயிரை விட்டுவிடுவார்கள்; அவ்வாறு செய்வதால் போராட்டத்தில் வெற்றியே பெற்றதாக மகிழ்வார்கள். இத்தகைய உணர்ச்சிக்கே மானம் என்று பெயர். இந்த உணர்ச்சி உலகத்

தில் சிலருக்காவது இருப்பதால்தான், உயர்ந்த கொள்கைகள் உலகத்தில் வாழ முடிகின்றது. இல்லையானால், மக்களின் வாழ்க்கையும் பறவை விலங்குகளின் வாழ்க்கைபோல், உணவுக்கும் மற்றவைகளுக்குமாகப் போராடி அழிகின்ற காட்டு வாழ்க்கையாக-அநாகரிக வாழ்க்கையாகவே-நின்று தேங்கும். அவ்வாறு இல்லாமல், மானம் உடையவர்கள் தம் உயிர் வாழ்வைப் பொருளாகக் கருதாமல், உயர்ந்த கொள்கைகளைப் போற்றி ஒழுகுவதால், மக்கள்வாழ்க்கை பெருமையுடையதாக விளங்குகின்றது ; உணவு முதலியன பற்றிய விலங்குப் போராட்டத்திற்கு இடையே நாகரிகமும் வாழ்ந்துவருகின்றது. மக்கள் பலர் கூடிவாழும் பொதுவாழ்க்கை சிறந்து ஓங்கி நாகரிகமாக விளங்கவேண்டுமானால், உணவு முதலிய சிறுமைப் போராட்டத்தைக் கடந்து ஒளிர வேண்டுமானால், குடிமக்களுக்கு மான உணர்ச்சி வேண்டும் என்றே திருவள்ளுவர் இங்கே மானத்தைப் பற்றிக் கூறுகின்றார் ; மானம் உடையவர்களிடத்தில் விளங்கும் பெருந்தன்மை, சான்றாண்மை, பண்புடைமை, நாணுடைமை முதலிய உயர்ந்த தன்மைகளை அடுத்துத் தொடரும் அதிகாரங்களில் கூறுகின்றார்.

திருவள்ளுவர் 'மானம்' என்னும் பண்பைப் பற்றிக் கூறும் கருத்துக்கள் மிகச் சிறந்தவை. அவற்றை அறிவதற்கு முன் மானம் என்னும் சொல் இக்காலத்தில் தரும் பொருளையும் கண்டு வேறுபாடு உணர வேண்டும். இக்காலத்தில் ஆடை உடுத்துவது மானத்தை மறைப்பதற்காக என்பார்கள் ; மானத்தைக் காப்பதற்காக என்றும் கூறுவார்கள். இழிவான நிலைக்கு ஆளாகாமல் காத்தல் என்ற பொருள் அந்தப் பேச்சுவழக்கில் உண்டு என்றாலும், இங்குக் கூறும் மானம் என்பது வேறு. ஆடை கொண்டு உடலை மறைக்கும்

செயலைத் திருவள்ளுவர் ‘ அற்றம் மறைத்தல் ’ (846) என்று குறிக்கின்றார் ; அது வேறு.

மற்றொரு வகை உணர்ச்சியையும் இக்காலத்தில் மானம் என்று கூறுவது உண்டு. “ அவன் என்னைப் பழித்தான், அது எனக்கு மானமாக இருக்கின்றது ” என்பார்கள் ; “ அவன் என்னை இப்படிக் கேட்டான் ; இப்படி என் மானத்தைக் கெடுத்தான் ” என்பார்கள் ; “ அவன் என்னை உதைத்தான் ; அதனால் எனக்கு மானம் போகின்றது ” என்பார்கள்; இவ்வாறெல்லாம் கூறும்போது, மானம் என்பது இழிவைப் போக்கிக்கொள்ளுதல் என்ற கருத்து உடையதாக இருந்தாலும், அது உயர்ந்த கொள்கையைப் போற்றும் மானம் அன்று. தன் தவறு பற்றித் தன் நெஞ்சமே வருத்த, அதனால் உண்டாகும் உணர்ச்சியே சிறந்த மானமாகும் ; பிறன் பழித்தான், உதைத்தான் என்று அதனால் உண்டாகும் மானம் சிறந்த மானம் அன்று. தவிர, பிறன்பழி உதை முதலியவற்றையும் பொறுக்கும் பண்பே மானம் சிறந்தவர்களிடம் காணப்படுகின்றதே அல்லாமல், பிறர் செய்வதற்கெல்லாம் கொதித்துத் தீமை செய்ய எழும் தன்மை காணப்படவில்லை. அன்றியும், மானம் உடையவர் தன்னலம் குறைந்தவராக விளங்க வேண்டுமே அல்லாமல், தன்னலம் கருதிப் பிறர்மேல் சினமும் பகையும் கொண்டு பதிலுக்குப் பதில் தீமை செய்யக் கூடாது ; அதனால் அந்தத் தன்னல உணர்ச்சியை மானம் என்று கூறுவதும் பொருந்தாது. இன்னும் ஆராய்ந்தால், மானம் என்பது தன் குடி, தன் நாடு முதலியவற்றின் பெருமையையும், உலக வாழ்க்கைக்கு அடிப்படையான உயர்ந்த கொள்கைகளின் பெருமையையும் காக்கப் பயன்படுவதே அல்லாமல், தன்னல அடிப்படை

கொண்ட தன் பழி, தன் புகழ், தன் ஆக்கம், தன் கேடு என்பவற்றைப் பொருளாகக் கொள்வது அன்று. தன்னை விடத் தன் குடி பெரியது, அதைவிட நாடு பெரியது, அதை விட உலகம் பெரியது, அதைவிட உலக வாழ்விற்கு அடிப் படையான ஒப்புரவு பெரியது என்று எண்ணுவதே மான மாகும்; அவ்வாறு உயர்வகையான மானமுடையவர்கள் செழித்தோங்குவதை எந்த நாட்டிலும் காணலாம்; ஒப்புரவு, நாடு, குடி என்பவற்றை மறந்து தன்னலம் கொண்டு, தன் பழி தன் புகழ் என்னும் குறுகிய எல்லையில் மான உணர்வைக் கொண்டவர்கள் நாளுக்குநாள் தேய்ந்து அழிவதை எந்த நாட்டிலும் காணலாம். இந்த உண்மையை உணர்ந்தே திருவள்ளுவர் பொதுவாழ்வைக் கூறும் பொருட்பாலில் மானத்தைப் பற்றி விளக்கியுள்ளார். (பொதுவாழ்க்கையில் மானத்தைச் சிறந்த பண்பாக விளக்கும் ஆசிரியர் தனி வாழ்க்கையைக் கூறும்போது, பொறுமை தீவினை அஞ்சுதல் இன்னாசெய்யாமை முதலியவற்றை வலியுறுத்தலையும் இங்குக் கருத வேண்டும்.)

எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்பது பலருக்கு நோக்கமாக இருந்தாலும், மானம் உடையவர்கள் அதைப் பொருட்படுத்தக் கூடாது. இன்றியமையாத சிறப்பை உடையவைகளாக இருந்தாலும், மானம் குன்றும்படியான செயல்களைச் செய்யாமல் விடவேண்டும்.

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். (961)

எப்படியாவது ஒரு நல்ல நிலையை அடையப் பாடுபட வேண்டும் என்றும், அதுவரையில் தகாத செயல் செய் தேனும் முன்னேற வேண்டும் என்றும், முன்னேறி நல்ல நிலை அடைந்த பிறகு தகாத செயல் செய்த குறையைத் தீர்த்து

விடலாம் என்றும், உலகம் அப்படி முன்னுக்கு வந்தவர்களைப் பாராட்டுகின்றது என்றும் சிலர் கருதுகின்றார்கள். அதனால் அவர்கள் தீய வழியிலும் பொருள் சேர்த்துப் பெருஞ் செல்வராக விளங்கி, அதன் பிறகு அந்தக் குற்றத்தை மறைக்கப் பொருளை வாரி இறைப்பார்கள்; சில நற்செயல் செய்து புகழ் பெறுவார்கள். இவ்வாறே சிலர் தகாதவை செய்தாவது சிறந்த பதவியைப் பெற முயல்வார்கள்; பதவி பெற்ற பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று துணிந்து தீமை செய்வார்கள்; பதவி கிடைத்தபிறகு, அந்தப் பழியைப் போக்கிக்கொள்ள நற்செயல்களைச் செய்வார்கள். உலகம் அவர்களையும் போற்றும். ஆனால், திருவள்ளுவர் அவர்களுடைய போக்கைக் கடிகின்றார். சீர் பெற வேண்டும் என்பதற்காகவும் தகாதவற்றைச் செய்யக் கூடாது என்றும், உண்மையான சிறப்பையும் மானத்தையும் விரும்புகின்றவர்கள் அவ்வாறு ஒழுகுவார்கள் என்றும் தெளிவுபடுத்துகின்றார்.

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். (962)

எல்லாரும் மதிக்கும் நிலைமை வந்தபோது அந்த மதிப்பு இல்லாததுபோல் நடந்துகொள்ள வேண்டும். அப்போது அந்த மதிப்பைப் பொருட்படுத்தி உயர்வோடு நடந்து கொண்டால் அது செருக்காகக் கொள்ளப்படும். ஆனால், மதிப்புக்கு உரிய நிலை இல்லாதபோது, தாழ்ந்து நடக்கவும் கூடாது; உரிமையும் மதிப்பும் உடையவர் போல் நடந்துகொள்ள வேண்டும். ஆகையால் வாழ்வு பெருகியபோது பணிவு வேண்டும்; சுருங்கியபோது உயர்வு வேண்டும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (963)

தன்னோடு பொருந்தாமல் பிரிந்து வாழ்கின்றவர்களைத் தானே நாடி அவர்களின் பின் சென்று உயிர் வாழ்வதை விட, அவ்வாறு செய்ய முடியாமல் மானத்தால் இறந்தான் என்று உலகம் சொல்லுமாறு அழிவதே நல்லது. மானம் இழந்தும் உயிர் வாழலாம்; ஆனால் அப்படியாவது சாகா நிலை பெற முடியுமா? முடியாதே. ஆதலால் மானமும் அழிந்து உயிரும் அழிவதால் பயன் என்ன? ஏதேனும் ஒன்றைக் காக்க வேண்டும். உயிரை நெடுங்காலம் காக்க முடியாது. அதனால் அதை இழந்தாவது மானத்தைக் காக்க வேண்டும். உடம்பை எப்படியாவது ஓம்ப வேண்டும் என்று மானம் இழந்து வாழும் வாழ்க்கை, சாகாமல் இருப்பதற்கு மருந்தாகப் பயன்படாது என்பதை உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்தவர்கள் மானத்தைக் காப்பதற்காக உயிர்விட வேண்டிய நிலைமை வந்தால், மயிர் நீங்கிய பின் உயிர் வாழாத கவரிமானைப் போல உயிர்விடுவார்கள். இழிநிலை வந்தபோது உயிர்வாழாமல் இறந்த மானமுடையவர்களின் சிறப்பை உலகம் தொழுது வாழ்த்தும்.

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. (967)

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து? (968)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (969)

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. (970)

பெருமை

எல்லா உயிர்க்கும் பிறப்பியல்பு ஒத்திருக்கிறது; பிறப்பால் பெருமை சிறுமை இல்லை; செய்கின்ற தொழில்வேறு

பாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை. நல்ல தொழில் செய்கின்றவர்கள் குற்றமான தொழில் செய்கின்றவர்களை விட மேலானவர்கள். அரிய பெரிய தொழில் செய்கின்றவர்கள் சிறு சிறு தொழில்களைச் செய்கின்றவர்களை விட உயர்ந்தவர்கள்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

ஒருமைப்பட்ட பெண்கள் தம்மைத் தாம் காத்துக் கொண்டு நிறை உடையவர்களாக வாழ்வதால் சிறப்பு அடைகின்றார்கள். அதுபோல் பெருமை என்னும் பண்பும் தன்னைத் தான் காத்து ஒழுகுகின்றவனிடமே காணப்படுவதாகும்.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (974)

பெருமை உடையவர்கள் சிறப்பான நிலைமை உள்ள போதும் செருக்கு இல்லாமல் பணிவாக நடப்பார்கள்; சிறுமை உடையவர்களோ சிறப்பு இல்லாத போதும் தம்மைத் தாமே வியந்து பாராட்டிக்கொள்வார்கள்.

பணியுமாம் என்றும் பெருமை ; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. (978)

பெருமைக்கு உரியவர்கள் மற்றவர்களின் நன்மையைப் பாராட்டிக் குற்றங் குறைகளை மறைப்பார்கள்; சிறுமைக் குணம் உடையவர்கள் மற்றவர்களின் நன்மையை மறைத்துக் குற்றங்களையே கூறிவிடுவார்கள்.

அற்றம் மறைக்கும் பெருமை ; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (980)

சான்றாண்மை

சார்ந்தவரிடத்தில் கொள்ளும் அன்பு, பழிபாவங்களுக்கு நாணும் நாணம், எல்லோர்க்கும் உதவியாக ஒழுகும் ஒப்புரவு,

பழகியவர்களிடத்தில் செலுத்தும் கண்ணோட்டம், உள்ளொன்று புறமொன்று இல்லாத உண்மை ஆகிய இந்த ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தாங்கும் தூண்களாகும். கொல்லாமை என்னும் அறத்தைச் சிறப்பாக உடையது தவம்; அதுபோல் பிறர்குற்றத்தை எடுத்துச் சொல்லாத பண்பைச் சிறப்பாக உடையது சால்பு ஆகும்.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (983)

கொல்லா நலத்தது நோன்மை ; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (984)

ஒருவருக்கும் பணியாமல் செருக்கோடு நடப்பதே ஆற்றலுக்கு அறிகுறி என்று பலரும் எண்ணுகின்றார்கள். ஆனால் சான்றோரின் ஆற்றலுக்கு அது அடிப்படை அன்று. எதையும் செய்து முடிக்கவல்ல சான்றோரின் ஆற்றல் பணிவாக நடப்பதே ஆகும். இந்தத் தன்மையே சான்றோர்க்குத் தம் பகைவரையும் மாற்றவல்ல படையாக இருக்கின்றது. தம்மைவிடத் தாழ்ந்தவர்களிடத்திலும் தோல்வியடைந்து பணிவாக நடக்கும் பண்பே சால்புக்கு உரைகல்லாக விளங்குகின்றது.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. (985)

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (986)

உலகத் தலைவர்களாகப் புகழ்பெற்ற சான்றோரின் வரலாறுகளை ஆராய்ந்தால் பணிவாக நடத்தலும், தோல்விக்குத் தயங்காமையும் அவர்களின் வாழ்க்கையில் அடிக்கடி காணலாம். தம்மைவிடத் தாழ்ந்தவர் என்று அவர்கள் ஒருவரையும் எண்ணியதாகத் தெரியவில்லை. அதனால்தான் யாரிடமும் தம் தவறுகளை ஒப்புக்கொண்டு பணிவோடு நடந்து

வந்திருக்கின்றார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் என்ன? தம் பெருமையை மறந்து எல்லோரையும் அன்போடு போற்றி, தவறு செய்ய நாணி, பலர்க்கும் உதவியாகவும் உண்மையாகவும் வாழ்ந்த பெருவாழ்வுதான். அதனால் அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்தையும் சால்புக்குத் தூண்களாகக் கூறியுள்ளார். இந்தச் சான்றோர் பொதுக் கடமையைப் பெரிதாக மதிப்பார்களே அல்லாமல், தம் புகழையும் மதிப்பையும் பொருட்படுத்துவதே இல்லை. தம் புகழையும் மதிப்பையும் மறந்த வாழ்வில்தான் பணிவு காணப்படும். பொதுக்கடமை நிறைவேற வேண்டும், பொதுவாழ்வு ஓங்க வேண்டும் என்ற பரந்த எண்ணத்தால் தாழ்ந்தவரிடமும் தயங்காமல் தோல்வியை ஒப்புக்கொள்ளும் பண்பு காணப்படும்; எண்பது வயதுடைய சான்றோராயினும் பத்து வயதுள்ள சிறுவன் கடிந்து அறிவுரை கூறினால் அன்போடு கேட்டுத் திருந்த முயல்வதும் காணப்படும்.

இவ்வாறு தம் மதிப்பும் புகழும் மறந்து தொண்டு செய்யும் சான்றோர் தம் நலமும் மறந்து வாழ்வார்கள். தமக்கு ஒருவன் தீங்கு செய்தாலும் இன்னவனால் நேர்ந்த தீங்கு என்று அவனைப் பற்றி வெறுப்போடு எண்ணாமல், அவனுக்கும் நன்மை செய்யவே முற்படுவார்கள். நன்மை தீமை என்பவற்றையும் பலருக்கும் பொதுவாகக் காணப் பயின்றவர்கள் ஆகையால், தமக்கு உரிய நன்மை தமக்கு உற்ற தீமை என்ற எண்ணங்கள் இல்லாமல் எல்லோர்க்கும் நன்மை செய்வார்கள். சிறப்பாக, தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்வார்கள். இதுவே சால்பின் பயனாகும்.

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு? (987)

வாழ்க்கையில் வரும் குறைகளும் இவர்களைத் தாக்குவதில்லை. வறுமையாலும் இவர்கள் வாடுவதில்லை. பொது நலம் நாடித் தன்னலம் மறந்த சால்பே இதற்குக் காரணம். இந்தச் சால்பே இவர்களுக்குத் திண்மை தருகின்றது. அதனால் வறுமை வந்தபோதும் அவர்கள் இழிவு அடைவதில்லை. ஊழிக் காலத்து மாறுதல் போன்றவை நேர்ந்தாலும் அப்போதும் இவர்கள் தம் நிலைமையில் மாறுவதில்லை. சால்பு என்னும் கடல் போன்ற பண்பிற்கு இவர்கள் கரைபோல் அமைந்திருப்பார்கள். ஒருகால், இவர்களும் தம் சால்பு குன்றுவார்களானால், பிறழ்ந்து நடப்பார்களானால், இந்த நிலவுலகமும் நிலை கலங்கும் என்றே சொல்ல வேண்டும். அவ்வளவு உறுதியான கலங்காத வாழ்வை இவர்களிடம் காணலாம்.

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். (988)

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். (989)

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. (990)

பண்புடைமை

கை கால் முதலிய உறுப்புக்களால் மக்களைப் போல் இருப்பது பொருந்திய ஒப்புமை அன்று; அமையத் தக்க பண்பினால் ஒத்திருப்பதே பொருந்திய ஒப்புமை ஆகும். அவ்வாறு அமையாமல், தோற்றத்தால் மட்டும் மக்களைப் போல் இருப்பதால் ஒரு சிறப்பும் இல்லை. அரத்தின் கூர்மை போல் கூரிய அறிவு பெற்றிருந்தாலும் மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர்கள் மரம் போன்றவர்களே. மண்ணில் ஒரு பகுதி

மரமாய் வளர்ந்ததைப் போல் மற்றொரு பகுதி மூளையாய் வளர்ந்ததாகவே கருதப்படும்.

> உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் ; வெறுத்தக்க
> பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. (993)
>
> அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர். (997)

மக்கட் பண்பு என்றால் என்ன ? நீதியையும் அறத்தையும் விரும்பும் தன்மை ஆகும். இவற்றை விரும்புகின்றவர்களே உலகத்திற்குப் பயன்படுவார்கள். அவர்களுடைய பண்பையே உலகமும் பாராட்டும். அவர்கள் இருப்பதால்தான் உலக வாழ்க்கை உண்டு என்று சொல்லக் கூடியதாய் நடைபெறு கின்றது. இல்லையானால் உலகம் வெறுமண்ணாய் நின்று அழியக் கூடியதாகும்.

> நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
> பண்புபா ராட்டும் உலகு. (994)
>
> பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் ; அதுஇன்றேல்
> மண்புக்கு மாய்வது மன். (996)

உலகம் தோற்றத்தால் மண்ணும் கல்லுமாக இருக்கின்றது. மற்றப் பூதங்கள் இருந்தாலும் மண்ணே அதன் புறத்தோற் றத்திற்குக் காரணமாக இருக்கின்றது. மற்றப் பூதங்கள் இருப்பதைவிட, மற்ற உயிர்கள் இருப்பதைவிட, மக்கள் வாழ்வதே மண்ணுலகத்தின் சிறப்புக்குக் காரணம். மக்கட் பண்பு இல்லாமல், விலங்குகளைப் போல், மரங்களைப் போல் மக்கள் வாழ்க்கை நடத்தினால், ஒருவரை ஒருவர் கொன்று அழித்துவிட, இறுதியில் வெறு மண்ணுலகமாய்த் தோன்றி அழிந்துவிடும். உலகம் என்பது என்ன ? வெறு மண்ணா ? மண் ணில் கலந்துள்ள மற்றப் பூதங்களா ? மரம் செடி கொடியாக

உள்ள மண்ணோ? எலும்பாகவும் தசையாகவும் உள்ள மண்ணோ? மூளையாகவும் நரம்பாகவும் உள்ள மண்ணோ? பண்பு என்ற ஒன்று இல்லையானால், இந்த உலகம் எவ்வாறு தோன்றும்? மண்ணில் வளர்ந்த புழுக்களுள் மக்கள் உடல்கள் பெருவகைப் புழுக்களாய்த் தோன்றும். அந்தப் பெருவகைப் புழுக்கள் தம்மைவிட மெலிந்த (மக்கட்) புழுக்களை வருத்தியும் பொருதும் கொன்றும் வாழ்வதாகத் தோன்றும். இன்னும் கூர்ந்து ஆராய்ந்தால், மண்ணில் சில பகுதிகள் அசைவும் எழுச்சியும் பெற்று ஒன்று மற்றொன்றைத் தாக்கி மண்ணாய் மாய்வதாகத் தோன்றும் அன்றோ? அவ்வாறு வெறு மண்ணாகவோ, நரம்பு மூளை முதலிய உயர்வகை மண்ணாகவோ தோன்றாமல் உண்மைப் பெருமையுடைய உலகமாகத் தோன்றச் செய்வது நெஞ்சப் பண்பு ஒன்றே ஆகும். அத்தகைய நெஞ்சப் பண்பு உடையவர்கள் ஒரு சிலரே ஆயினும் அவர்களால்தான் உலகம் உலகமாய் உள்ளது என்பது திருவள்ளுவர் கருத்து.

ஒருவரை ஒருவர் இகழ்ந்து அன்பில்லாமல் நடப்பது விளையாட்டிலும் தீமையானது; துன்பமானது. அதற்கு நேர்மாறாக, பண்புடையவர்கள் பகை உள்ள இடத்திலும் பண்போடு நடப்பதைக் காணலாம். நண்பர்களாக இல்லாமல் தீங்கு செய்து வாழும் மற்றவர்களிடத்திலும் அவர்கள் பண்பு தவறாமல் நடப்பார்கள். அறிவுடையவர்கள் இந்தப் பண்பைத் துறந்து வாழ்வது பெரிய குறையாகும். ஏன்? ஒருவரோடு ஒருவர் பழகும்போது மனம் கலந்து மகிழ வேண்டும். இந்த மகிழ்ச்சி அடைய முடியாதவர்கள் உலகத்தில் வாழ்ந்து பயன் என்ன? பரந்த பெரிய உலகம் அவர்களுக்குப் பகலிலும் இருண்டு தோன்றும். உலக வாழ்க்கைக்கு அவர்கள் தகுதியற்றவர்களாகவே இருப்பார்கள்.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி ; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. (995)

நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை. (998)

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். (999)

நன்றியில் செல்வம்

வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியவைகளையே மக்கள் தேடிச் சேர்க்கத் தொடங்கினார்கள். அப்படிச் சேர்த்து வைத்தவைகளுக்கே 'பொருள்' என்றும், 'செல்வம்' என்றும் பெயர் கொடுத்து வழங்கினார்கள். முதல்முதலில் உணவுப் பொருளைச் சேர்த்துவைக்கும் பழக்கம் மிகுதியாக இருந்தது. அதனால் அது 'கூழ்' என்று கூறப்பட்டது. திருவள்ளுவரும் உணவுப் பொருளையே செல்வமாக மதித்து, அரசாட்சிக்கு உரிய ஆறு அங்கங்களுள் 'கூழ்' ஒன்றாகக் கூறியுள்ளார். உழவைத் தொழிலாகக் கொள்ளாமல் ஆடுமாடுகளை மேய்க்கும் தொழிலை வாழ்வுக்கு உரியதாகச் சிலர் கொண்டார்கள் ; அவர்கள் அவற்றைப் பொருளாகக் கொண்டார்கள்; அதனால் 'மாடு' செல்வம் என்று வழங்கியது. நாளடைவில் பள பளப்பான உலோகங்களும் கற்களும் மற்றக் கைத்தொழிற் பொருள்களும் செல்வம் என்று மதிக்கப்பட்டன. இன்று நிதிநிலைய (பாங்கி) முறை அமைந்திருப்பதால், காகிதப் பணம் (நோட்டு) முதலியனவும் செல்வமாக மதிக்கப்படு கின்றன. அவ்வாறே செல்வாக்கு உள்ள அரசியல் பதவி முதலியனவும் செல்வமாகவே கொள்ளத்தக்கவை. ஆனால் எல்லாவற்றிற்கும் மதிப்பு உயர்வதும் குறைவதும் உணவுப் பொருளின் பெருக்கத்தையும் சுருக்கத்தையும் பொறுத்தே

நிற்கின்றன. அதனால் இன்றும் அடிப்படையான மதிப்பு உணவுப் பொருளுக்கே உண்டு என்பது தெளிவாகின்றது. காரணம் என்ன ? உணவுப் பொருளே நாள்தோறும் தேவையாய் இருப்பது ; வேளைக்கு வேளை பயனளிப்பது ; உடை முதலிய கைத்தொழில் பொருள்கள் அதற்கு அடுத்தபடி பயன்படக் கூடியவை ; பளபளப்பான உலோகங்களும் கற்களும் ஆடம்பரத்தை ஒட்டியவை ; நேரான பயன் இல்லாதவை. இந்த உண்மையை ஆராய்ந்தால், செல்வம் என்பது பயனை ஒட்டியே மதிக்கப்படுவது என்பது விளங்கும். ஆகையால் திருவள்ளுவர், செல்வத்தைப் பெற்றவர்கள் அதைப் பயன்படுத்தாவிட்டால் அது வீணாகும் என்று கூறி, அத்தகைய செல்வத்தை நன்மையற்ற செல்வம் (நன்றியில் செல்வம்) என்று கடிகின்றார் ; பயன்படுத்தாத செல்வமுடையவர்களையே - உலோபிகளையே - அதன் வாயிலாகக் கடிந்துரைக்கின்றார்.

ஒருவன் தன் வீடெல்லாம் நிறையும்படியான பெரும் பொருளைச் சேர்த்து வைத்தான்; அதைத் தானும் அனுபவிக்காமல் சேர்த்து வைத்துக் காப்பாற்றினான் ; அப்படிப்பட்டவன் உயிருடன் இருந்தும் செத்தவனுக்கு நிகரே ஆகும் ; ஏன் என்றால், அவன் உரிமையோடு அந்தச் செல்வத்தைக் குறித்துச் செய்யக்கூடியது ஒன்றும் இல்லையே ! பொருளால் எல்லாம் உண்டாகும் என்ற அறிவே இதற்குக் காரணம். ஆனால் அதற்காக அதைச் சேர்த்து ஒருவருக்கும் உதவாமல் பற்றுள்ளம் (உலோபம்) செய்கின்ற மயக்கம் கூடாது. அந்த மயக்கம் - அந்த அறியாமைதான் - தாழ்வான பிறப்புக்குக் காரணமாகும். பொருள் சேர்த்து வைப்பதையே விரும்பி, புகழை விரும்பாமல் வாழ்கின்ற மக்களின் பிறப்பு வீண்

பிறப்பே ஆகும் ; அவர்கள் பிறந்ததால் நிலத்திற்குப் பார மானதே அல்லாமல் பயன் ஒன்றும் இல்லை.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருளஃ துண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல். (1001)

பொருளானாம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு. (1002)

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. (1003)

பொருளைப் பிறர்க்குக் கொடுத்து உதவினால்தான் அன்பை வளர்க்க முடியும் ; அதனால் புகழும் வளரும். இப்படி உதவி செய்யாதவன் உலகத்தில் ஒருவராலும் விரும்பப்படமாட்டான் ; அவன் தனக்குப் பிறகு உலகத்தில் எஞ்சி நிற்கும் புகழ் இல்லையே என்பதையும் எண்ணமாட்டானே ? இறந்த பிறகு தனது என்று ஒன்றை விட்டுவிட்டுச் செல்ல எளிய மக்களின் மனமும் விரும்புமே ! இவன் எதை அவ்வாறு விட்டுச் செல்ல எண்ணுவானோ ?

எச்சமென்று என்எண் ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன் ? (1004)

பொருளால் அடையத் தக்க பயன் என்ன ? பிறர்க்குக் கொடுத்து அன்பைப் பெறலாம் ; தான் அனுபவித்து இன்பத்தைப் பெறலாம். இந்த இரண்டும் பெறமுடியாதபோது பொருள் இருந்தாலும் ஒன்றுதான் ; இல்லாவிட்டாலும் ஒன்றுதான். ஆகையால் பிறர்க்குக் கொடுப்பதும் தான் அனுபவிப்பதும் ஆகிய இரண்டும் இல்லாதவர்களுக்குப் பல கோடிப் பொருள் இருந்தாலும் பயன் இல்லை. இன்னும் ஆராய்ந்தால், தானும் அனுபவிக்காமல் தக்கவர்களுக்கும் ஒன்று ஈயாமல் வாழ்கின்றவன் அந்தப் பெருஞ்செல்வத்திற்கே

ஒரு நோய் போன்றவன். பலரிடமும் சென்று பலர்க்கும் பயன்படக்கூடிய நல்ல செல்வத்தை எங்கும் செல்லாமல் முடக்கி வைத்திருப்பதால் அவன் அந்தச் செல்வத்திற்குத் தீங்கு - ஏதம் - ஆகின்றான். இவ்வாறு சுற்றியுள்ள ஒருவராலும் விரும்பப்படாமல் உதவியற்றவனாய் வாழ்கின்றவனுக்குச் செல்வம் சேர்வது, ஊர்நடுவே நச்சுமரம் பழுத்துப் பழம் நிறைந்திருப்பதுபோல் ஆகும். பிறர்க்கு உதவாமையால் அன்பையும் ஒழித்து, அனுபவிக்காமையால் தன்னையும் அழித்து, எப்படியாவது சேர்க்க வேண்டும் என்ற ஆசையால் அறத்தையும் ஆராயாமல் விட்டுச் சேர்த்துவைத்த சிறந்த பொருள் ஒருவனிடம் இருந்தால், அதை அயலாரே கொண்டுபோவார்கள்; அயலாரே பயன்படுத்திக்கொள்வார்கள்.

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். (1005)

ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான். (1006)

நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று. (1008)

அன்பொரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். (1009)

பிறர்க்கு உதவியாக வாழ்கின்ற நல்ல செல்வர்களுக்குச் செல்வம் குறைந்து சிறிது வறுமையும் வரலாம். ஆனால் அந்த வறுமை அவர்களைத் தாக்காது. அவர்கள் செல்வம் மிகுந்தபோது பிறர்க்குப் பயன்பட வேண்டும் என்றே அதைப் போற்றுவார்கள்; செல்வம் குறைந்தபோதும், பிறர்க்குப் பயன்படுதல் குறைகின்றதே என்று வருந்துவார்களே

அல்லாமல், தாம் எதையோ இழந்துவிட்டதாக வருந்தமாட்டார்கள். அவர்களின் வறுமை உலகத்தைக் காக்கும் மழை வளம் குன்றியதைப் போன்றதாகும்.

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து. (1010)

நாணுடைமை

பொதுவாழ்க்கையில் தகாதன செய்வது குற்றமாகும். அதனால் பலர்க்குத் துன்பம் நேரும். ஆகையால் தகாதன செய்ய நாணுகின்ற தன்மை இயல்பாக அமைய வேண்டும்.

மனம் மொழி மெய் என்பவை ஒடுங்குவதால் வரும் நாணம் வேறு; தகாத செயல் செய்ய முடியாதவாறு தடுக்கும் நாணம் வேறு. முன் சொன்னவை பெண்களுக்கு இயல்பாக வரும் நாணம்; மற்றது நன்மக்கள் பொதுவாழ்வில் கொள்ள வேண்டிய நாணம். இந்த நாணமே மக்களுக்குச் சிறப்புத் தருவது; உணவும் உடையும் மற்றவைகளும் எல்லாருக்கும் பொதுவே அல்லாமல் சிறப்பு அல்ல. இந்த நாணமே சான்றோர்க்கு அணிகலன்; இது இல்லையானால், நடையில் மட்டும் விளங்கும் பெருமிதம் ஒரு நோய் என்றே கொள்ள வேண்டும்.

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. (1011)

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல;
நாணுடைமை மாந்தர் சிறப்பு. (1012)

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு? அஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை? (1014)

பொதுவாழ்க்கையில் தமக்கு வரும் பழிக்கு மட்டும் நாணுவதால் பயனில்லை; பிறர்பழிக்காகவும் நாணுதல்

வேண்டும். இவ்வாறு பிறர்பழியும் தம்பழியும் ஒப்ப மதித்து நாணுகின்றவர்களே நாணத்திற்கு உறைவிடம் என்று உலகம் மதிக்கும். மேலோர் இத்தகைய நாணத்தை வேலியாகக் கொள்ளாமல் உலகத்தின் பொதுவாழ்க்கையை விரும்பமாட்டார்கள். நாணத்திற்கும் உயிர்வாழ்க்கைக்கும் போராட்டம் ஏற்படும் காலத்திலும் அவர்கள் நாணத்தை விடாமல் காத்து உயிரை விடுவார்களே அல்லாமல், உயிரின் பொருட்டு நாணத்தைத் துறக்க மாட்டார்கள்.

> நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
> பேணலர் மேலா யவர். (1016)

> நாணால் உயிரைத் துறப்பர் ; உயிர்ப்பொருட்டால்
> நாண்துறவார் நாணாள் பவர். (1017)

மற்றவர்கள் நாணத்தக்க செயலைத் தான் நாணாமல் செய்வானானால், அப்படிப்பட்டவனைக் கண்டு அறம் நாணும் ; அவனுடைய வாழ்க்கை அத்தகைய குற்றமுடைய வாழ்க்கையாகும். உள்ளத்தில் நாணம் இல்லாத மக்கள் உயிரோடு இயங்கும் தன்மை, மரத்தால் செய்த பாவை கயிற்றினால் இயங்குவது போன்றது ; இது பயனற்ற வாழ்க்கையாகையால், உயிரில்லாத வாழ்க்கைக்கு ஒப்பாகும்.

> பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
> அறம்நாணத் தக்கது உடைத்து. (1018)

> நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
> நாணால் உயிர்மருட்டி யற்று. (1020)

குடிசெயல்வகை

உழவன் ஒருவன் தனக்கு வேண்டிய எல்லா உணவுப் பொருள்களையும் காய்கறிகளையும் தன் நிலத்தில் விளைத்துக் கொள்கின்றான். அவற்றோடு ஒரு பகுதியில் சிறிது பருத்தி

யும் பயிரிடுகின்றான். ஓய்வுநேரத்தில் அதில் விளையும் பருத்தியை எடுத்துப் பதப்படுத்தி வைத்துக்கொண்டு நூல் நூற்று வருகின்றான். அதற்கு உரிய இராட்டினமும் அவன் கையால் செய்ததே. அவ்வாறே மரங்களையும் மூங்கில்களையும் அடுத்துள்ள காட்டில் வெட்டிவந்து கைத்தறி ஒன்று செய்துகொள்கின்றான். தான் நூற்றுச் சேர்த்த நூலைக்கொண்டு பாவு எடுத்து நெய்து சில ஆடைகளையும் புடவைகளையும் தன் கைத்திறமையால் நெய்துகொள்கின்றான். குடும்பத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களோடு உடை வகையையும் உண்டாக்கிக்கொண்டு கவலை இல்லாமல் வாழ்கின்றான். அவன் தன் வாழ்வுக்குத் தன் கையையே நம்பியிருக்கின்றான். தன் கடமையைச் செய்தால் வாழ்வுக்குக் குறை இல்லை என்று உணர்கின்றான். மற்றவர்களின் உதவி இல்லாமலே பெரும்பாலும் வாழ்க்கை நடத்துகின்றான். இதுதான் பழங்காலத்து வாழ்க்கை முறை.

இன்று உள்ள உழவன் ஒருவன் நெல் பயிரிடுகின்றான்; கம்பு கேழ்வரகு முதலியவற்றையும் விளைவிக்கின்றான். ஆனால் காய்கறி முதலியவற்றிற்கு அயலாரை அல்லது வெளியூராரை நம்பியிருக்கின்றான். அவற்றையும் தோட்டத்தில் விளைத்தாலும், மிளகாய் முதலியவற்றிற்குக் கடையை நாடுகின்றான். உடை முதலியவற்றை இவன் உண்டாக்குவதில்லை. ஒருகால் பருத்தி பயிரிட்டாலும், பருத்தியை அப்படியே விற்றுவிடுகின்றான்; தானே நூல் நூற்பதில்லை. கையால் நூற்கின்றவர்கள் மிகச் சிலரே. அவர்களும் நெய்வதில்லை; நெய்வோரிடம் கொடுத்து ஆடை பெறுகின்றார்கள்; அல்லது அதற்கு உரிய கடைகளில் நூற்ற நூலை விற்றுவிடுகின்றார்கள். நெய்வோரின் கதையும் இவ்வாறே. அவர்கள் எங்கிருந்தோ நூலை வாங்கி நெய்கின்றார்கள். நெய்தவற்றைத் தாம் பயன்

படுத்துவதில்லை. கடைக்காரருக்கு விற்றுவிடுகின்றார்கள். விற்ற பணத்தைக்கொண்டு, யாரோ உழுது விளைவித்த உணவுப்பொருள்களை வாங்கி உண்கின்றார்கள். நூல் நூற்கும் பஞ்சாலைகள் உண்டு. அங்கே யாரோ பயிரிட்டு உண்டாக்கிய பஞ்சு வந்துசேரும். ஆலைகள் அந்தப் பஞ்சைப் பதப்படுத்தி நூலை உண்டாக்கும். சில ஆலைகளில் அந்த நூலை ஆடையாக்கும் இயந்திரங்களும் உண்டு. சில நூலாலைகளாகவே இருக்கும். அவை நூலை மட்டும் உண்டாக்கி நெசவாலைகளுக்கு அனுப்பிவிடும். அந்த ஆலைகளில் உள்ள தொழிலாளர்களோ எவரும் முழு ஆடையை உண்டாக்குவதில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதியான கடமையைச் செய்ய, அவ்வாறே தொகுதியான உழைப்பால் ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆடை உண்டாக்கப்படும். ஆகவே உழவன், நூற்போன், நெய்வோன், யந்திரத் தொழிலாளி ஆகிய ஒவ்வொருவரும் தம் தம் உழைப்பை மட்டும் நம்பி வாழமுடியாமல், பிறர் உழைப்பையும் நம்பி வாழவேண்டியிருக்கின்றது. பருத்தி விளைவிக்கும் உழவன் 'என் கடமையைச் செய்வேன்' என்று செய்து முடித்தால் ஆடை கிடைத்துவிடாது. நூற்கும் ஆலையில் உள்ள தொழிலாளி அவ்வாறு இருந்துவிட்டாலும், ஆடை கிடைத்துவிடாது. 'எனக்குத் தேவையான ஆடை இவ்வளவுதான். ஆகவே அந்த அளவுக்குமேல் நான் ஏன் நூல் உண்டாக்கவேண்டும்' என்று பழங்காலத்து உழவனைப்போல் நூற்பதை அளவுபடுத்திக்கொண்டால், அவனுக்கு வாழ்வு இல்லை. ஒவ்வொருவரும் தம் தம் பொறுப்பைப் பொதுவாக உணர்ந்து கடமையைச் செய்தால்தான், எல்லாருக்கும் எல்லாப் பொருளும் கிடைக்கக்கூடிய நிலைமை உண்டு. இதுவே இக்காலத்து வாழ்க்கைமுறை.

பழங்காலத்து முறையில் ஒவ்வொருவருடைய வாழ்வும் தனித்தனியே முழுமை அடைந்திருந்தது. இக்காலத்து முறையில் எவருடைய வாழ்வும் தனியே முழுமை அடைந் திருக்கவில்லை; எல்லோருடைய வாழ்வும் சேர்ந்தால்தான் எல்லோருக்கும் வாழ்வு நிரம்புகின்றது. உணவு உடை முதலிய தேவைகளைப் பொறுத்த வரையிலும் இது உண்மை யாக இருப்பதுபோலவே, அரசியலிலும் இது உண்மையாக விளங்குகின்றது. பழங்காலத்தில் ஒவ்வொருவரும் தம் தம் குடும்பத்தைக் காத்து உயர்த்திக்கொண்டால் போதும்; நாடு முழுதும் வாழ வழி இருந்தது. பழங்காலத்தில் ஒவ்வொரு வரும் தமக்கு வேண்டிய பருத்தி விளைவித்து நூல் நூற்று ஆடை நெய்துகொண்டால், நாட்டில் உடைப்பஞ்சம் இல்லா மல் காக்கமுடிந்தது அல்லவா? அதுபோல் தனித்தனியே குடும்பக் கடமையைச் செய்துமுடித்தால் நாட்டில் நல்வாழ்வு நிலவ இடமிருந்தது. இன்று, ஒரு குடும்பம் என்ன பாடுபட் டாலும், கடமையைக் குறைவறச் செய்தாலும், உலகப் பஞ்சம் அதைத் தாக்காமல் விடாது. அதுபோலவே, ஒரு குடும்பம் உயர்நிலை பெறுவதற்கு என்ன முயற்சி செய்தாலும், உலகத் தின் குறை அதை விடாது; அதையும் தாக்கித் தீரும்; தாழ் வும் இடையூறும் வந்து தீரும். இந்த உண்மையை உள்ளத்தில் கொண்டே ‘குடிசெயல்வகை’ கற்க வேண்டும். கற்கும்போது, திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் சிற்றூர்கள் சிற்சில குடிக ளின் அமைப்புக்களாகத் தனித்தனியே இருந்துவந்த நிலைமை மாறி இப்போது ஒரு நாடு முழுதும் நெருங்கிக் கலந்து ஒரு குடியாய் வாழும் நிலைமை வந்திருப்பதை உணர வேண்டும்; உலகம் முழுவதும் ஒரு குடும்பமாய் நெருங்கிச் சுருங்கி வரு வதையும் உணர வேண்டும். உணர்ந்தபின், ‘குடிசெயல்வகை’ என்பதற்கு ஈடாக ‘நாடுசெயல்வகை’ என்று பொருள்

கொண்டு கற்றால் இந்த அதிகாரம் இக்காலத்தார்க்கும் சிறந்த கருத்துக்களை உணர்த்த வல்லதாய் விளங்கக் காணலாம்.

என் கடமையாகிய தொழிலைச் செய்வதற்கு நான் தளர மாட்டேன் என்னும் முயற்சிப் பெருமையைப் போல் சிறப் புடையது வேறு இல்லை. முயற்சி, நிறைந்த அறிவு என்ற இரண்டாலும் இடையறாமல் தொழில் செய்துவந்தால் குடி (நாடு) உயர்வு பெறும். என் குடியை (நாட்டை) முன்னேறச் செய்வேன் என்று கடமை உணர்ந்து தொழில் செய்யும் ஒரு வனுக்கு ஊழ்வினையும் விரைந்து முன்வந்து துணைபுரியும். குற்றம் இல்லாதவனாய்த் தன் குடியின் (நாட்டின்) கடமை யைச் செய்து வாழ்கின்ற ஒருவனை உலகம் தானே சுற்றமாகச் சூழ்ந்துகொள்ளும்.

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல். (1021)

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. (1022)

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். (1023)

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (1025)

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது எது? அடிமையாய் வாழும் வாழ்வைப் போக்கிப் பகையை அழித்துவிடுவது மட்டும் ஆண்மை அன்று; அதனோடு ஆக்க வேலையிலும் ஆண்மை விளங்க வேண்டும். ஆகவே, நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது பிறந்த குடியை (நாட்டை) ஆளும் தன்மையைத் தனக்கு உரியதாக்கிக் கொள்வதே ஆகும் (ஒவ்வொருவனும் ஆட்சிமுறையில் பொறுப்பை ஏற்றுக் கடமையைச் செய்து உரிமையோடு விளங்குவதே ஆகும்).

போர்க்களத்தில் போர்வீரர் பலர் இருந்தாலும் அஞ்சாமை உடைய சிலரே போரைத் தாங்கி நடத்துவது போல, குடியைச் சார்ந்த சுற்றத்தாரை (நாட்டுமக்களைக்) காக்கும் வகையிலும் தாங்க வல்லவர்களின்மேல்தான் பொறுப்பு வந்துசேரும்.

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். (1026)

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. (1027)

இவ்வாறு பொதுக்கடமையை ஏற்றுச் செய்கின்றவர்கள் சோம்பலாகவும் இருக்கக் கூடாது ; தம் மானத்தையும் பொருட்படுத்தக் கூடாது. குடி (நாடு) உயரவேண்டும் என்று கடமையைச் செய்கின்றவர்களுக்கு அதற்கு உரிய காலம் என்று ஒன்று இல்லை ; அவர்கள் அந்தக் கடமையை எப்போதும் செய்யலாம். காலம் நோக்கிச் சோம்பலாக இருந்து, மானத்தையும் எண்ணுவார்களானால், குடி (நாடு) கெட்டுவிடும்.

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் ; மடிசெய்து
மானம் கருதக் கெடும். (1028)

மானம் வேண்டும் என்று முன் கூறிய திருவள்ளுவர் இங்கு அதைக் கருதக் கூடாது என்கின்றார். இதில் ஒன்றும் முரண்பாடு இல்லை. முன் வேண்டும் என்றது பொதுவாழ்விற்கு வேண்டிய நல்லுணர்ச்சி பற்றிய மானமாகும். இங்கு வேண்டா என்று கடிந்தது பொதுவாழ்விற்குத் தகாத தனி மானமாகும். தனி ஒருவன் தன் மானத்தைக் கருதுவானானால் அவனுக்குப் பொதுவாழ்வில் இடம் இல்லை ; இடம் இருப்பின் பொதுக்கடமையே கெடும். ஓர் அமைச்சனை ஒருவன் தெருவில் பழித்துக் கூறுகின்றான் என்று வைத்துக்கொள்ள

லாம்; அதைப் பொருட்படுத்தாமல் மறந்து தன் கடமையைச் செய்கின்றவனே நல்ல அமைச்சன்; இதுவே தனி மானத்தைக் கருதாத நல்ல பண்பு. இதற்கு மாறாக, அந்த அமைச்சனுடைய நாட்டையோ அல்லது ஆட்சிமுறையையோ அல்லது நாட்டுமக்களையோ ஒருவன் பழிக்கின்றான் என்று வைத்துக்கொள்ளலாம்; "நம் பெயரைச் சொல்லி அவன் ஒன்றும் பழிக்கவில்லை; அதனால் நமக்குக் கவலை இல்லை. நாட்டைப் பழித்தால் நமக்கு என்ன? ஆட்சிமுறையைத்தான் பழித்தால் நமக்கு என்ன? மக்களைப் பழித்தாலும் நமக்கு என்ன?" என்று அமைச்சன் எண்ணுவானானால் அவன் நல்ல மான உணர்ச்சி இல்லாதவன்; பொதுவாழ்விற்கு இந்த மானம் வேண்டும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். தனி மான உணர்ச்சி உள்ள மக்கள் நாளுக்குநாள் அழிந்து மறைவதையும், குறுகிய இனம் பற்றியோ பரந்த நாடு பற்றியோ மான உணர்ச்சி கொண்ட மக்கள் ஆக்கம் பெற்று முன்னேறுவதையும் உலக வரலாற்றில் பலமுறை காணலாம்.

தன் குடி (நாடு) குறையுறாமல் காக்க முயல்கின்றவனைக் கண்டால் இரக்கமும் தோன்றும். மேன்மேலும் துன்பங்களே வந்து அவனை வாட்டுவது உண்டு. அப்போது, "இவனுடைய உடம்பு துன்பத்திற்கே இடமானதோ" என்று எண்ணத் தோன்றும். ஆனால் இத்தகைய நல்ல ஆள் இல்லாத குடி(நாடு) முன்னேறாது; துன்பம் வெட்டி வெட்டிச் சாய்க்க அந்தக் குடி (நாடு) தாங்குவார் இல்லாததாய் விழுந்து அழியும்.

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு? (1029)

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. (1030)

உழவு

திருவள்ளுவரின் 'உழவு' என்னும் அதிகாரத்தைக் கற்கும் போது, இக்காலத்து உழவர்களின் நிலைமை நினைந்து நினைந்து வருந்த வேண்டியுள்ளது. இன்று வறுமையின் எல்லையைக் காணவேண்டுமானால், கடன் சுமையின் தொல்லையைக் காண வேண்டுமானால், அறியாமையின் முழுமையைக் காணவேண்டு மானால், நோய்களின் ஆட்சியைக் காணவேண்டுமானால், இன்னல்களின் இருப்பைக் காணவேண்டுமானால், ஏய்ப்பும் ஏமாற்றமும் குறைவறப் பலிக்கும் இடத்தைக் காணவேண்டு மானால், சுரண்டுவோரின் திறமை செல்லும் இடத்தைக் காணவேண்டுமானால், புறக்கணிப்பின் பொல்லாங்கைக் காண வேண்டுமானால், உழவர்களின் வாழ்வையே காணவேண்டும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகியும் வழி வழியாக முன்னேறா மல் என்றும் வறியவர்களாகவும் அடிமைகளாகவும் அல்லல் படுவோர் உழவர்களே. கந்தலாடையும், பொத்தல் குடிசையும், கால்வயிற்றுக் கஞ்சியும் தவிர நம் வாழ்வில் வேறு ஒன்றும் காண முடியாது என்று துன்பக்கடலிலும் அமைதி பெற்று விட்டவர்கள் உழவர்களே. ஒரு கிராமத்தில் புகுந்து குடிசை களையும் கண்டு, ஓரளவு நன்றாக அமைந்த வீடுகளையும் கண் டால், குடிசைகளில் வாழ்கின்றவர்கள் தலைமுறை தலைமுறை யாக உழவுத்தொழில் செய்கின்றவர்கள் என்றும், மற்றச் சிறு வீடுகளில் வாழ்கின்றவர்கள் இரண்டொரு தலைமுறைக்கு முன்பே உழவோடு நிற்காமல் வேறு தொழிலும் செய்யக் கற்றவர்கள் என்றும் உணரலாம். பெரிய வீடுகளில் வாழ்கின்ற வர்கள் யார்? தாம் உழைக்காமல் பரப்பான நிலங்களை வைத் துக்கொண்டு பிறர் உழுது பயன் தருமாறு வாழ்கின்றவர்கள் அல்லது, சில தலைமுறைகளுக்கு முன்னமே ஏரும் எருதும்

தொடாமல் உழவைக் கைவிட்டு வேறு தொழில் ஏற்றவர்கள் என்று கூறிவிடலாம். நிலத்தில் உழைக்கும் உழவு ஒன்றே வாழ்வுக்கு வழி என்று கொண்ட குடும்பத்திற்குப் பெண் கொடுக்க மற்றவர்கள் முன்வராத நிலையும், உழவன் தன் மகளை உழவு தவிர வேறு வகையான தொழில் செய்து வாழும் குடும்பத்திற்கே கொடுக்க விரைந்து முன்வரும் நிலையும் எங்கும் காணலாம். உழவு உற்ற இழிநிலை இத்தகையது.

இதற்குக் காரணம் என்ன? உழவர்கள் ஒருவரோடு ஒருவர் பண்டமாற்றுச் செய்துகொண்டு வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் பெற்றுக் கவலையில்லாமல் வாழ்ந்த காலம் போய்விட்டது. உழவின் வளம் எல்லாவற்றையும் சேர்த்து உறிஞ்சி வாழும் பணமாற்று வாணிகம் ஓங்கிவிட்டது. உழவர்களுக்கிடையே இருந்து நன்மை எல்லாவற்றையும் இதுவே விழுங்கிவருகின்றது. அதனால் உழைத்த உழைப்பின் பயனை முழுதுமாகப் பெறமுடியாமல் வாடுவது உழவர்களின் வாழ்க்கையாயிற்று. ‘ஏர்ப்பின்னது உலகம்’ ‘உழுவார் உலகத்தார்க்கு ஆணி’ ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ ‘பலகுடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர்’ என்னும் மொழிகள் இன்று உண்மையாகத் தோன்றவில்லை. ‘வாணிகத்தின் பின்னது உலகம்’ ‘வணிகர் உலகத்தார்க்கு ஆணி’ ‘வாணிகம் செய்வாரே வாழ்வார்’ ‘பலகுடை நீழலும் தம் கணக்கின்கீழ்க் காண்பர்’ என்றெல்லாம் சொல்லத் தோன்றுகின்றது. இன்று பெரிய வாணிகம் செய்வோரே அரசாங்கத்தையும் ஆட்டிவைக்க வல்லவர்களாக இருக்கின்றார்கள். ஆயினும் இது எக்காலத்திலும் நிற்கக் கூடிய நிலைமை அன்று. பண்டைக்காலத்தில் இந்த நிலைமை இல்லை; இத்தகைய வாணிகமும் இல்லை; எதிர்காலத்திலும் இந்த நிலைமை இருக்கப்போவதில்லை. இப்போதே ஐரோப்பாவிலும் மற்ற

நாடுகளிலும் உழவர்கள் உறிஞ்சுதலுக்கு இடம் தராமல் தற்காப்புச் செய்துகொள்கின்றார்கள் ; தமக்குள் கூட்டுறவு முறை ஏற்படுத்திக்கொண்டு மற்றவர்கள் தம் உழைப்பின் பயனை உறிஞ்சிக்கொள்ளாதபடி காத்துக்கொண்டு முன்னேறி வருகின்றார்கள். இந்த நாட்டிலும் அந்த நிலைமை ஏற்படுவது திண்ணம். கூட்டுறவு முறை புதியதாகத் தோன்றினாலும், அதன் அடிப்படை பழையதே. பழங்காலத்தில் தனித்தனியே அவரவர் செய்துவந்த பண்டமாற்றை இப்போது எல்லாரும் ஒன்றுசேர்ந்து தொகுதியாக நின்று பண்டங்களை மாற்றி விற்றும் வாங்கியும் வாழ்வதே கூட்டுறவு முறையாகும். அத்தகைய முறை ஏற்பட்டுவிட்டால் பழையபடி 'ஏர்ப்பின்னது உலகம்' 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்னும் மொழிகள் உண்மையாக விளங்கும்.

மற்றொன்றும் இங்கே ஆராய வேண்டும். திருவள்ளுவர் காலத்திலும், அதற்குமுன்னும், அதற்குப்பின் ஏறக்குறையச் சென்ற நூற்றாண்டு வரையிலும் நாட்டில் உழவு ஒன்றே மிகப் பெரும்பாலோரின் தொழிலாக இருந்துவந்தது. இன்றும் பெரும்பாலோரின் தொழில் அதுவே. மற்றவர்கள் ஏதேனும் ஒரு கைத்தொழிலை வாழ்வுக்கு உரிய தொழிலாக ஏற்படுத்திக்கொண்டுள்ளார்கள். விஞ்ஞான முற்போக்கு ஏற்பட ஏற்பட, பெரும்பாலோர் செய்யும் உழவைச் சிறுபான்மையோர் செய்து முடிக்க முடியும். அதனால் உழைப்பைப் பலருக்கும் பங்கிட்டுக் குறைக்க நேரும். அப்போது ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தொழில் செய்வோரே நாட்டில் பெரும்பாலோராக விளங்குவார்கள். இப்போதே வெளிநாடுகளில் இந்த நிலைமை காணப்படுகின்றது. அங்கெல்லாம் உழவர்கள் சிறுபான்மையோராக இருக்கின்றார்கள் ; பெரிய பெரிய நிலப்பரப்புகளை எல்லாம் சிற்சிலர் இருந்து உழுது பயிரிட முடிகின்றது. அந்த நிலைமை இந்த

நாட்டிலும் வந்த பிறகு, உழவர்க்கு உரிய சிறப்பு மற்றத் தொழிலாளர்க்கும் ஏற்படும். வாழ்வுக்கு மிக மிக இன்றியமையாததான உணவுப்பொருளை உண்டாக்கும் பெருமை உழவர்க்கு இருந்தாலும், அடுத்தபடி தேவையான பொருள்களை உண்டாக்கும் பெருமை மற்றத் தொழிலாளர்க்கு இருக்கும். அப்போது உழவும் மற்றத் தொழிலும் ஒரு நிகராகக் கருதப் படலாம். உழவு என்பது உடம்பால் உழைத்துத் தொழில் செய்யும் வாழ்வுக்கு அறிகுறியாக நிற்கும். உடம்பால் உழைத்துத் தொழில் செய்வோரையே உலகம் நாடி நிற்கும் என்றும், அவர்களை உலகத்தார்க்கு ஆணி என்றும், அவர்கள் வாழ்வே நல்ல வாழ்வு என்றும், அரசாட்சியும் அவர்களுடைய உழைப்பைப் பொறுத்ததே என்றும் எல்லாக் கைத்தொழிலையும் புகழும் நிலைமை வரும். ஆகவே, உழவு என்னும் இந்த அதிகாரம் சிறப்புப் பற்றி நிலத்தில் உழுது பாடுபடும் தொழிலைப் போற்றுவதாக இருந்தாலும், உடம்பால் உழைத்துப் பாடுபடும் எல்லாத் தொழிலையும் போற்றுவதாகக் கொண்டால், காலத்திற்கு ஏற்ற முறையில் பொருள் விளக்க வல்லதாகும்.

வேறு எந்த எந்த வழிகளில் சுழன்றாலும் உலகம் முடிவில் ஏர்த்தொழிலின்பின் நிற்கின்றது ; ஏரினால் விளையும் பொருளையே எதிர்பார்த்து நிற்கின்றது ; அதனால், துன்பமுற்றாலும் உழவே தலையான தொழில். உழவு செய்வது உடல் வருத்தும் தொழில் என்று அதைச் செய்ய முடியாமல் வேறு வழியில் வாழ்க்கை நடத்துகின்றவர்களையும் தாங்கிக் காப்பாற்றுகின்றவர்கள் உழவர்களே ; ஆகையால், அவர்களே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள். உழவு செய்து அதனால் தாமும் உண்டு வாழ்கின்றவர்களே உரிமையோடு வாழ்கின்றவர்கள் ; மற்றவர்கள் பிறரைத் தொழுது வழிபட்டு

அதனால் வயிறு வளர்த்து உரிமை இல்லாமல் அவர்களின் பின் செல்கின்றவர்கள்.

சுழன்றுமேர்ப் பின்னது உலகம் ; அதனால்
உழந்தும் உழவே தலை. (1031)

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. (1032)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (1033)

தம் கையால் உழைத்துத் தொழில் செய்து அதனால் கிடைத்ததை உண்டு வாழும் தன்மை உடையவர்கள் பிறரிடம் சென்று இரக்க மாட்டார்கள் ; தம்மிடம் வந்து இரப்பவர்களுக்கு அவர்கள் கேட்ட பொருளைக் கொடுத்து உதவுவார்கள்.

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். (1035)

உழவர்வாழ்க்கை மிக மிகச் சீர்கெட்டுள்ள இந்தக் காலத்திலும் பிறர்க்கு உதவும் பண்பை அவர்களிடம் காணலாம். அறுவடைக் காலத்தில் நெல்லையோ மற்றப் பொருளையோ இரண்டு கையாலும் வாரி வழங்குகின்றார்கள் ; கூழுக்குத் திண்டாடும் காலத்திலும் தாம் குடிக்கும் கூழில் ஒரு பகுதியைக் கேட்டவர்களுக்குக் கொடுத்துப் பசி தீர்க்கின்றார்கள். எதிர்காலத்தைப் பற்றிக் கவலை இல்லாமல், சேர்த்து வைக்கும் சிக்கனம் இல்லாமல் உதவி செய்யும் தன்மை இன்னும் அவர்களிடம் உள்ளது. அதனால் கைத்தொழில் செய்து வாழும் தொழிலாளர் உலகமே இரத்தலை (பிச்சையெடுத்தலை) ஒழிக்க வல்லது என்பது திருவள்ளுவர் கருத்தாகும்.

உழவர்களின் கை தொழில் செய்யாமல் மடங்கினால் எவரும் வாழமுடியாது ; ஒரு பொருளை மனத்தால் விரும்பும்

தன்மையையும் விட்டுவிட்டோம் என்று கூறும் துறவிகளுக்கும் அப்போது வாழ்வு இல்லை; அவர்களும் துறவறத்தில் நிற்க முடியாது.

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை. (1036)

ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகின்ற வரைக்கும் நிலத்தைக் காயவிட வேண்டும்; அவ்வாறு காயவிட்டால், ஒரு பிடி எருவும் இல்லாமலே பயிர் நன்றாகச் செழித்து விளையும். ஏர் உழுவதைவிட எரு இடுவது நல்லது; களை கட்ட பிறகு, நீர் பாய்ச்சுவதைவிடக் காவல் காத்தல் நல்லது; ஆகையால் இவை எல்லாவற்றையும் விடாமல் செய்வதே உழவன் கடமை. நிலத்திற்கு உரிய உழவன் நாள்தோறும் போய் நிலத்தைப் பார்த்து வேண்டியதைச் செய்யவேண்டும்; அவ்வாறு செய்யாமல் சோம்பலாக இருந்தால், (புறக்கணிக்கும் காலத்தில் ஊடுகின்ற) அவனுடைய மனைவியைப் போல அந்த நிலம் அவனை வெறுத்து ஊடிவிடும்; எதிர்பார்த்த பயனைத் தராது. நிலம் உழைக்க உழைக்கப் பயன் தரவல்லது. அதனால், நாம் வறுமையுற்று வருந்துகிறோம் என்று எண்ணித் தொழில் செய்யாமல் இருப்பவரைக் கண்டால், நிலமகள் தன்னுள்ளே சிரிப்பாள்.

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். (1037)

ஏரினும் நன்றால் எருஇடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. (1038)

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். (1039)

இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும். (1040)

நல்குரவு

குடிமக்களுக்கு வேண்டிய பல நல்ல இயல்புகளையும் கூறி, கையால் தொழில் செய்து வாழும் சிறப்பையும் கூறிய திருவள்ளுவர், அவர்கள் வாழ்வில் இருக்கத் தகாதன இவை என்று கூறத் தொடங்குகின்றார். நல்ல அரசியல் நடை பெற வேண்டுமானால், குடிமக்களிடம் வறுமை இருக்கக் கூடாது, இரந்து வயிறு வளர்க்கும் வாழ்க்கை இருக்கக் கூடாது, இரந்து வாழ அஞ்சுகின்ற அச்சம் இருக்க வேண்டும், கீழ்ப்பட்ட தன்மை-மக்கட் பண்புக்கு மாறான தன்மை - இருக்கக் கூடாது என்று இவற்றை அறிவிக்கின்றார்; நல்குரவு, இரவு, இரவச்சம், கயமை என்னும் நான்கு அதிகாரங்களைப் பொருட்பாலின் இறுதியில் வைத்துக் குடி மக்களுக்குத் தகாதவற்றை எடுத்துக்கூறிக் கடிகின்றார். அவற்றுள்ளும் வறுமையே இரவுக்கும் கயமைக்கும் பெரும்பாலும் காரணமாகையால், 'நல்குரவு' என்னும் இந்த அதிகாரத்தில் வறியவர்களின் வாழ்வை நினைந்து உருகிய உணர்வோடு வறுமையின் கொடுமையைப் புலப்படுத்துகின்றார். திருவள்ளுவர் பிறந்து வாழ்ந்து நூலெழுதி இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த பிறகும், அந்த வறுமை இன்னும் அதே நிலையில் அல்லது அதைவிடக் கொடிய நிலையில் இருந்துவருகின்றது. திருக்குறளைக் கற்கும்போதெல்லாம், அது இன்னும் கொடுமை செய்து வருகின்றதே, இன்னும் ஒழியவில்லையே என்று நினைந்து வருந்தவேண்டியுள்ளது. திருவள்ளுவர் கருதிய வாறு, இந்த வறுமை ஒழிய வேண்டும் என்றும், ஒழிந்தால் தான் பொதுவாழ்வு சீர்ப்படும் என்றும் எண்ணவேண்டிய நிலைமை இன்றும் உள்ளது.

வறுமை போல் பொல்லாதது எது என்று கேட்டால், வறுமை போல் பொல்லாதது வறுமையே தவிர வேறொன்றும்

இல்லை என்றுதான் கூற வேண்டும். வறுமை என்கின்ற பாவி வந்து சேர்ந்தால், அதனால் மறுமை வாழ்வும் கெடுகின்றது ; இம்மை வாழ்வும் கெடுகின்றது ; இரண்டையும் கெடுக்கும் வகையிலே வறுமை வந்து சேர்கின்றது. வறுமையால் ஆசை வளர்கின்றது ; அது பழைய குடிப்பண்பையும் புகழையும் ஒருசேரக் கெடுத்துவிடுகின்றது. நல்ல குடியில் பிறந்த மக்களையும் வறுமை கெடுத்துவிட வல்லது ; அவர்களிடத்திலும் இழிவான பழி பிறப்பதற்குக் காரணமான சோர்வை அது ஏற்படுத்திவிடும். வறுமை என்று ஒரு துன்பம் வந்தால் போதும் ; அதனுள் பலவகைத் துன்பங்கள் சேர்ந்து விளையும்.

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. (1041)

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். (1042)

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை. (1043)

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும். (1044)

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குறைத்
துன்பங்கள் சென்று படும். (1045)

வறியவர்கள் பேசுவதை அன்போடு கேட்டு உணர்கின்றவர்கள் இல்லை. அதனால் அவர்கள் நல்ல கருத்தைத் தெளிவாக உணர்ந்து சொன்னபோதிலும், அந்தச் சொல்லும் பொருளும் கேட்பாரற்றுப் பயன்படாமல் போகும். அது மட்டும் அன்று ; அறத்தோடு பொருந்தாத வறுமை வந்த காலத்தில், ஒருவன் பெற்ற தாயாலும் அயலான் போல் புறக்கணிக்கப்படுவான்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். (1046)

அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். (1047)

பெற்ற தாய் எந்த நிலையிலும் ஈன்ற மகனை வெறுப்பது இல்லை. கள்ளுண்டு மயங்கித் திரியும்போது அத்தகைய வெறுப்பு அந்தத் தாய்க்கும் ஏற்படுவதாகத் திருவள்ளுவர் கூறியுள்ளார். தாய் மகனைப் புறக்கணிப்பதும் அருமையே. ஆனால் வறுமை வந்தபோது ஒருவன் அறநெறியிலிருந்தும் வழுவ நேரும்; வறுமைத் துன்பம் நல்ல வாழ்வையும் கெடுக்கக் கூடும்; அப்படி வாழ்வு கெட்டபோது அந்தத் தாயும் புறக்கணிக்கக் கூடும் என்று திருவள்ளுவர் வறுமையின் கொடுமையைப் புலப்படுத்துகின்றார். தாயாலும் புறக்கணிக்கப் படும் நிலைமை நேருமானால், மற்றவர்களின் புறக்கணிப்பைப் பற்றிக் கூறவேண்டியதே இல்லை.

வறுமையில் வாடுகின்ற மக்களைப் பற்றித் திருவள்ளுவர் எண்ணி எண்ணி அந்த உணர்வாகவே நின்றார்; அவர்கள் படும் துன்பத்தைத் தாம் படுவதாகவே உணர்ந்தார்; உணர்ந்து அவர்கள் உருகி எண்ணும் எண்ணமாக, அவர்கள்சொல் லாலேயே வெளியிடுகின்றார் :—“ நேற்றும் வந்தது அந்த வறுமை ; கொலை செய்வதுபோல் வந்து வருத்தியது ; அந்த வறுமை இன்றைக்கும் வருமோ ? வந்தால் நான் என்ன செய் வேன் ? ஐயோ ! நெருப்பில் படுத்து உறங்கினாலும் உறங்க முடியும் ; இந்த வறுமைத் துன்பத்திற்கிடையே கண்மூடி உறங்க முடியவில்லையே ” என்று வறியவன் ஒருவன் உள்ளம் உடைந்து துன்புறுவதாகக் கூறுகின்றார்.

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு ? (1048)

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் ; நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. (1049)